


# பார்புகழும்பதி பன்னாலை





## திருநாவுக்கரசு சிவபாக்கியம்

## பவளவிழா வெளியீடு

**2005.09.05**

# பார்புகழும்பதி பன்னாலை

36867

பன்னாலை

திருநாவுக்கரசு சிவபாக்கியம்

பவளவிழா வெளியீடு

2005.09.05

உ
சிவமயம்

# பவள விழாச் சபை

1) திரு. சி. வேலாயுதம் (இளைப்பாறிய பிரதம எழுதுநர்)
2) அரிமா திரு. ச. ஆறுமுகநாதன்
3) திரு. ச. சிவகுமார் (கிராம அலுவலர்)
4) திரு. சு. ஏழூர்நாயகம் (இளைப்பாறிய நிருவாக அலுவலர்)
5) திரு. க. விக்னேஸ்வரன் (செயலாளர் சனசமூக நிலையம், பன்னாலை)
6) திரு. ம. அருட்சோதி (கணக்காளர் இ.போ.ச)
7) திருமதி சரஸ்வதி ஜெயராசா (ஆசிரியை)
8) திரு. தி. செந்தில்குமரன் (பொறியியலாளர்)

# நூலாக்கக் குழு

1) சைவப்புலவர் சு. செல்லத்துரை (தலைவர்)
2) திரு. சொ. சண்முகலிங்கம் (சட்டத்தரணி)
3) திரு. க. நடராஜர் (இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர்)
4) திருமதி அமிர்தயோகேஸ்வரி முத்துக்குமாரசாமி (இளைப்பாறிய அதிபர்)
5) பண்டிதர் சி. அப்புத்துரை

அச்சம் தவிர். - *மகாகவி பாரதியார்*

உ
சிவமயம்

# பதிப்புரை

'எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே' புறநானூறு

என்பது ஔவையார் வாக்கு. கல்வி அறிவு ஒழுக்க விழுமியங்களில் மேம்பட்ட மக்களின் வாழ்வில்தான் அவர்கள் வாழும் ஊரின் பெருமை தங்கியுள்ளது என்பது இதன் பொருள் ஆகும்.

தெல்லிப்பழைப் பிரதேசத்தைச் சேர்ந்த பன்னாலைக் கிராமத்தில் வாழும் மேன்மக்கள் வரிசையில் வைத்து எண்ணப்படத்தக்கவர் ஓய்வுபெற்ற அதிபர் திரு. கந்தையா திருநாவுக்கரசு B.A. அவர்கள். அவர் தான் மட்டுமன்றித் தன் சகோதரர்கள், பிள்ளைகள் அனைவரையுமே கல்வி அறிவு ஒழுக்க விழுமியங்களில் மேம்பாடடையச் செய்த பெருமைக்குரியவர். ஊருக்கு அணிகலனாய், உபகாரியாய் வாழ்பவர்.

அதனால் இவருக்கு 75 வயது நிறையும் இவ்வேளையில் பவளவிழா செய்து மகிழவேண்டும் எனும் எண்ணம் இவரது நண்பர்களுக்கும், குடும்பத்தினர்க்கும் ஊரவர்களுக்கும் உதித்தது. இக்கருத்தை அவருக்குக் கூறியபோது 'எனது ஊருக்குப் பெருமை சேர்க்கும் விழாவாக இது அமைய வேண்டும். ஆதலால் பார்புகழும் பன்னாலைப்பதியின் சென்ற காலத்தின் பழுதிலாத் திறத்தையும் இன்றைய சிறப்பையும் எடுத்துக் காட்டும் வகையில் ஒரு தொகுப்பு நூல் வெளியிடுவது நல்லது எனக் கூறினார்.

பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலத் திருநாவுக்கரசு சிவபாக்கியம் தம்பதிகளின் பவளவிழா **'பார்புகழும் பதி பன்னாலை'** நூல்வெளியீட்டு விழாவாக மலர்ந்துள்ளது.

ஈழப்போர் அனர்த்தங்களாலும், இடப்பெயர்வுகளாலும் ஊரின் இருப்புகள் குலைந்து ஆவணங்கள் தொலைந்து, நிலம் கூட அதியுயர் பாதுகாப்பு வலய இராணுவ வேலியால் பறிக்கப்பட்டிருக்கும் இவ்வேளையில் பன்னாலையின் பெருமைகளை ஆவணப்படுத்தி ஒரு நூல் வெளியிட வேண்டும் எனும் விழாநாயகரின் எண்ணம் செயல்வடிவுபெற்றுள்ளது.

அவர் கடந்த சில மாதங்களாக ஓய்வுறக்கமின்றிப் பன்னாலையைப் பற்றிய தகவல்களைத் திரட்டுவதற்குத் தக்கவர்களைத் தேடித் தொடர்புகொண்டு எழுத்துமூலமும் வாய் மூலமும், வெளியீடுகள் மூலமும் பெற்ற தகவல்களையெல்லாம் தன்சொந்த அனுபவமும் அறிவுங்கொண்டு தொகுத்து நூலாக்கித் தந்துள்ளார்.

காலத்தினாற் செய்த இந்த நன்றியைப் போற்றாதிருக்க முடியாது. இந்த நூலில் பன்னாலையின் வரைபடத்துடன் நிலவளம், கல்வி வளம், கலை வளம், தொழில் வளம், அருள் வளம், மேன்மக்கள் வளம் முதலான எல்லா வளங்களையும் அன்று முதல் இன்று வரை நாம் தரிசிக்கக் கூடியதாயுள்ளது.

வரலாற்று நூல்களை நூறு வீதம் நிறைவாகச் செய்வது கடினம். அதிலும் போர் அழிவுகளுக்கு உட்பட்டிருக்கும் இவ்வேளையில் கடினத்திலும் கடினம் என்றே கூறவேண்டும்.

அரும்பாடுபட்டு ஆக்கிய இந்த நூலை அவரது பவள விழா வெளியீடாக வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

இதில் இன்னும் நிறைவுசெய்ய வேண்டிய தகவல்கள் இருப்பின் அன்பர்கள் அவற்றைத் தந்துதவினால் அடுத்துவரும் பதிப்புகளில் நிறைவு செய்யலாம்.

**நூல் ஆக்கக் குழுவினர்.**

பன்னாலை.

இளைத்தல் இகழ்ச்சி. - *மகாகவி பாரதியார்*

## விழா நாயகர்கள்



திருநாவுக்கரசு சிவபாக்கியம்

விழா நாயகர்கள்



திருநாவுக்கரசு சிவபாக்கியம்

# பவளவிழா வாழ்த்துக்கள்

1. **நீடு வாழ்க**
   சித்தாந்த ஆசிரியர் வி. சங்கரப்பிள்ளை

2. **பல்லாண்டு வாழ்க**
   கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

3. **மேலும் சிறந்த சேவையாற்றி வாழ்க**
   லயன்ஸ் ச. ஆறுமுகநாதன்

4. **ஊருணியாகி வாழ்க**
   ராஜராஜஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள்

5. **அஷ்ட ஐஸ்வரியங்களுடனும் வாழ்க**
   மஹாராஜஸ்ரீ சு. து. சண்முகநாதக் குருக்கள்

6. **நூற்றாண்டு விழாவும் கண்டு வாழ்க**
   சிவஸ்ரீ இ. சபாரத்தினக் குருக்கள்

7. **பார்புகழ் பண்பாளன் வாழ்க**
   சிவஸ்ரீ ப. மகேந்திரசர்மா

8. **பூமிதனில் நீநீடு வாழி வாழி**
   கலாபூஷணம் பண்டிதர் சி. அப்புத்துரை

9. **பவளவிழாக் காணும் அரசு வாழி**
   சைவப்புலவர் க. நித்தியதசீதரன்.

ஔகிழ்வது அருளின். - *மகாகவி பாரதியார்*

# நீடு வாழ்க

ஓம் சிவாய நம

நாவுக்கரசனே

நல்லாசிரியனே

சமய சமூக சேவையாளனே

பன்னாலை நலன் விரும்பிகளுள்

முன்னோடியாக விளங்குபவனே

உன் எழுபத்தைந்தாவது

அகவை நிகழ்வை

அறிந்து மகழ்ச்சியுறுகிறேன்

உன் நாமத்து

**முதற்கண் அமைந்த திரு**

உன்னையும்

உன்குடும்பத்தையும்

வாழ்விக்கின்றது.

அத்திருவருளால்

சமய சமூகசேவையாளனாக

நீடு வாழ்வாயாக.

அன்புநெறி
**வி. சங்கரப்பிள்ளை**
சைவசித்தாந்த ஆசிரியர்

பன்னாலை.

உ
சிவமயம்

# பல்லாண்டு வாழ்க

தெல்லிப்பழை பன்னாலையை வசிப்பிடமாகக் கொண்ட வரும் பவளவிழா நாயகருமாகிய பெரியார் திருநாவுக்கரசு அவர்களை வாழ்த்துவதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

ஈழத்தின் பல பாகங்களிலும் ஆசிரியப் பணிபூண்டு ஓய்வுபெற்றவர் இவர். மக்கள் பணி செய்யும் சனசமூக நிலையங்களிலும் பணியாற்றிப் பெருமை பெற்றவர். மக்கள் பணியே மகேஸ்வரன் பணியாகக் கருதிச் சேவை செய்த சிறப்பு இவருக்கு உண்டு.

இன்று பவளவிழாக்காணும் இப்பெரியார் பன்னாலைக் கிராமத்தைச் சிறப்படையச் செய்தவர். எனவே இவர்களுக்கு ஆசி கூறி வாழ்த்துவது எம் போன்றாருடைய கடமையாகும். பெரியார் திருநாவுக்கரசு அவர்கள் இன்னும் பல்லாண்டு காலம் தேகநலத்துடன் வாழ்ந்து நற்பணிபுரிய வேண்டும் என்று துர்க்கையம்பாளைப் பிரார்த்திக்கின்றேன்.

**கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**

தலைவர்,
துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பளை.

உ
சிவமயம்

# மேலும் சிறந்த சேவை ஆற்றி வாழ்க

தெல்லிப்பழையில் பன்னாலைக் கிராமம் பல்வேறு சிறப்புக்களைக் கொண்டது. திரு. க. திருநாவுக்கரசு ஆசிரியர் பன்னாலையில் 1930ம் ஆண்டு பிறந்தார். இவர் தமது இளமைக் காலத்தில் நல்ல கல்வியைக் கற்று ஆசிரியராக, அதிபராகப் பதவி உயர்வு பெற்றார். நாட்டில் உள்ள பல பாடசாலைகளில் கல்விப் பணியாற்றி அதிபராகக் கல்வித் தொண்டு புரிந்துள்ளார். இதனால் இவரைக் கல்விச் சமூகம் பாராட்டி நிற்கிறது.

அதிபர் அவர்கள் சமயப் பணிகளிலும், சமூகப் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். பிரபல ஆலயங்களிலெல்லாம் மகேஸ்வர பணியாகிய அன்னதானப் பணிக்குப் பெரும் தொண்டாற்றிக் கொண்டு இருக்கிறார். அத்துடன் பல கோயில்களில் திருப்பணி வேலைகளில் பெரும் பணியாற்றியுள்ள பெருமையுமுடையவர்.

அதிபர் திரு. க. திருநாவுக்கரசு ஆசிரியர் சமய, சமூகப்பணிகளில் மேலும் மேலும் ஈடுபட்டுச் சிறந்த சேவையாற்ற வேண்டும் என்று எங்கள் தெல்லிப்பழை மல்லாகம் அரிமாக் கழகத்தின் சார்பாக வாழ்த்துகின்றோம். இறைவனையும் பிரார்த்திக்கின்றோம்.

**லயன்ஸ் ச. ஆறுமுகநாதன்**
தலைவர்

அரிமாக் கழகம்,
தெல்லிப்பழை மல்லாகம்.
2005.07.05

உ
சிவமயம்

# ஊருணியாகி வாழ்க

பன்னாலை திருநாவுக்கரசு சிவபாக்கியம் தம்பதியர் பவளவிழாக் காண்பதறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். இருவரும் இணைபிரியாது இயற்றிய நல்லறமாகிய இல்லறவாழ்வு இந்த உலகிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைகிறது. மங்கலமான மண்மாட்சியும், நன்கலமான நன்மக்கட் பேறும், தானம், தருமம் தவறாத வாழ்வும், தெய்வப் பணியைச் சிரமேற்கொள்ளும் புண்ணியப் பேறும் எல்லார்க்கும் வாய்ப்பதில்லை.

இவர்களது முன்னோர்கள் செய்துவைத்த அறப்பணிகள் இவர்களை வாழ்வாங்கு வாழ வைத்துள்ளன. தமது முன்னோர் வழிநின்று இத்தம்பதியர் இருவரும் செய்துவரும் தெய்வசேவையும், சமூக சேவையும் எண்ணிலடங்கா.

நகுலேஸ்வரத் திருப்பணிகளுக்கு இருவரும் மனமுவந்து செய்துவரும் பங்களிப்புகளும், விழாக் காலங்களில்இருவருமே வந்து நின்று அன்னதானப் பணிக்கும் உடலாலும், பொருளாலும் நிறைவான பணிகளைப் பல்லாண்டு காலமாக இடையீடின்றிச் செய்து வருவதும், ஆலயத்தின் விழாக்காலச் செயற்பாடுகளுக்கு எனக்கு வலது கரமாக நின்றுதவுவதும் இவர்களது பெருமைக்கு எடுத்துக்காட்டாகும்.

பன்னாலைக் கோயில்கள் பலவற்றின் திருப்பணிகளுக்கும், மகாகும்பாபிஷேகங்களுக்கும் முன்நின்றுழைத்த பெருமைக்கு உரியவர்கள்.

திருவாளர் திருநாவுக்கரசு அவர்கள் **பணிவுடையன் இன்சொலனாதல் ஒருவற்கு அணி** என்ற வள்ளுவர் வாக்கிற்கு இலக்கியமாக வாழ்பவர். அவரது பணிவும் இன்சொல்லும் எவரையும் கவரவல்லன. சிறந்த நல்லாசிரியராக, உயர்ந்த அதிபராக, பெருமைக்குரிய சமூக சேவையாளனாக, எல்லோர்க்கும் உபகாரியாக வாழும் இவரும், இவரது மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் அனைவரும் நல்ல குடும்பமாகப் பல்கலைக்கழகம் எனும் பொன்மொழிக்கு இலக்காக வாழ்கின்றார்கள்.

வாழ் வாங்கு வாழும் இத்தம்பதியர் பவள விழாக் காண்பது எல்லோர்க்கும் மகிழ்வைத் தருவது மட்டுமன்றி மற்றவர்களையும் இவ்வழியில்வாழவைப்பதற்கு உபகாரமான செயலுமாகும்.

பவளவிழாவை முன்னிட்டுப் பன்னாலையின் முன்னாளைய வரலாற்றையும், இன்னாளைய சிறப்புக்களையும் ஆவணப்படுத்தவல்ல ஒரு நூலைப் பவள விழாப் பரிசாக இவர்கள் வெளியிடும் செயல் மெச்சத்தக்கது. ஊருணி போல ஊருக்கு உபகாரிகளாக வாழும் இவர்கள் வாழ்வுக்கு இச் செயல் பொன்மலர் மணம் பெற்றது போன்ற பெருமைக்குரியதாகும். வாழ்க பல்லாண்டென இத்தம்பதியரை வாழ்த்துவோம்.

**ராஜராஜஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள்**
நகுலேஸ்வர தேவஸ்தானப் பிரதம குருவும்
அதீனகர்த்தாவும்.

கீரிமலை.

**எண்ணுவது உயர்வு.** - *மகாகவி பாரதியார்*

உ
சிவமயம்

# அஷ்ட ஐஸ்வரியங்களுடனும் வாழ்க

'இல்வாழ்வுக்குச் சிறந்தபேறு மக்கட் பேறாகும்.' மக்கட் பேறுபெற்ற குடும்பம் நாட்டின் உயிர்நாடியாகவே விளங்கும். கவலைகளின்றி, இடர்களின்றி, இன்ப துன்பங்களின்றி பிறதாக்கங்களின்றிச், சதா பேருவகை தரவல்லதே மக்கட் செல்வம்.

**'மக்கட் பேற்றின் மாண்பினை பெறுமவற்றுள் யாமறிவதில்லை**
**அறிவறிந்த மக்கட் பேறல்ல பிற'** - *திருக்குறள்*

என்று திருக்குறளும்,

**'கல்லா மழலைக் கனியூறல் கலந்துகொஞ்சும்,**
**சொல்லால் உருக்கி அழுதோடித் தொடர்ந்து பற்றி**
**மல்லார் புயத்தில் விளையாடு மகிழ்ச்சி மைந்தர்.**
**இல்லாதவர்க்கு மனை வாழ்வி னினிமை என்னாம்**

**மெய்தானம் வண்மை விரதந்தழல் வேள்வி நாளும்**
**செய்தாலும் ஞாலத் தவர் நற்கதி சென்று சேரார்**
**மைதாழ் தடங்கண் மகவின்முக மன்னு பார்வை**
**எய்தா தொழிபிற் பெறுமின்பம் எவனுமில்லை.**

*(மகாபாரதம்)*

என்று மகாபாரதமும் அறியத்தருகின்றன.

மக்கட் பேற்றால் திருச்செல்வங்களைப் பெறக்கூடிய அதிர்ஷ்டங்களும் கூட நிற்கும். அதிர்ஷ்டங்கள் கூடச் சான்றோராற் கற்பிக்கப்படும் துறைகளில் ஈடுபட்டு அத்துறைகளில் எழும் பலன்கள் மூலம்தான் திருச்செல்வங்கள் வந்தடையுமென உபநிஷதங்கள் போதிக்கின்றன. சான்றோரைக் காணும் இயல்பு மாதாவில்தான்

பெறப்பெடுக்கின்றது. மாதாவின் அருட்பார்வைதான் மக்களைச் சான்றோனாக்கும். இக்கருத்தினை

**'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக்கேட்ட தாய்'** - *திருக்குறள்*

தவத்தாற் பெற்ற இராமர் சீதாபிராட்டியை வஷிஷ்டர் அவர்களது பெருமையைத் தசரதனுக்குக் கூறுகையில்

**'மண்ணினு நல்லன்: மலர்மகள் தன்னிலும் கலையூர்**
**பெண்ணினும் நல்லன்: பெரும் பெயர்ச் சனகியோ நல்லாள்**
**கண்ணினும் நல்லாள் கற்றவர் கற்றிலாதவரும்**
**உண்ணு நீரினும் உயிரினும் அவனையே உவப்பர்'**

இதனைக்கேட்ட தசரதன் ஆயிரம்பிறை கண்ட பேருவகை பெற்றானாம். எனவே ஓர் நாட்டின் கீர்த்திக்கும், பூமி திருவருள் பூமியாக மாற்றங் கொள்வதற்கும், சிவதர்மங்களது வளர்ச்சிக்கும், இவ்வளர்ச்சியால் மானிடம்பெறும் பேரின்பங்களும் இவ்வின்பங்களை உற்றெடுத்துவிடும். சமய அனுஷ்டானங்கள், ஆலய சேவைகள் என்பன வளர்ச்சி பெறுவதற்கும், 'சான்றோன்' என்ற இலக்கண வரம்பிற்குங் கிடைக்கும். இத்தகைய சான்றோர் மஹேஸ்வரனுக்கும் சமமாவார். தவச்செயல்கள்தான் 'சான்றோன்' எனப்படும் மக்களையும் தர உதவும் என்பது திண்ணம்.

இவ்வகையில்தான் பன்னாலை திரு கந்தையா திருநாவுக்கரசு அவர்களைச் சான்றோனாக சைவமக்கள் பாராட்டுமளவிற்கு அவரது தந்தை செய்து வைத்த அறமே துணை. உளவாரத்திருப்பணிக்கு மகுடமிடப்பட்ட திருநாவுக்கரசு சுவாமிகளது பெயரையே தந்தை கந்தையா இம்மகவுக்கு நாமஞ்சூட்டினார். பாக்கியங்கள் பல்வேறாகப் பெறுமளவில் பெருகி நாடு உயர்ச்சிபெற வேண்டுமென்பதற்காக இத்திருமகனுக்குச் சிவபாக்கியம் அவர்களைக் கிருகஸ்தாச்சிரமத்துக்குள் இணைய

இறைவனும் துணை செய்துள்ளார். இதற்கெல்லாம். பூர்வபுண்ணிய பலனும் வேண்டும். பெயர்களிலேயே அதிர்ஷ்டம் இணைந்துவிட்டது. யாழ்ப்பாணத்தின் அணிகலனாகவே திரு திருநாவுக்கரசும் அவரது குடும்பமும் விளங்குகின்றன. இவர்களைத் தம்பதி சமேதராக ஆலயங்களில் எங்கும் காண்பதும் ஓர் அதிர்ஷ்டமே. நல்லதைப் பேசி, நல்லனவற்றைத் தாங்கி, நல்லறிவுரைகளால் மக்களை வளர்த்தும், நல்லறங்களின் சார்பாக, உதயராணி, உதயகுமார், அகிலகுமாரன், செந்தில் குமரன், நாமங்களிட்ட மக்களை இவ்வுலகிற்குத் தந்து அவர்களும் அவர்தாம் சார்ந்த துறைகளில் பாண்டித்தியம் பெற்று நிற்பதைப் பார்க்கும் பெற்றோர். பரசுராமரது வில்லை இராமர் துண்டித்தபோது தசரதர் எவ்வாறு மூவுலக இன்பங்களைப் பெற்றாரோ அதேபோல் இப்போ சான்றோரான மக்கட் செல்வங்களது உயர்வைக் கண்டு பேருவகை பெற்று நிற்கின்றனர்.

மக்கள் சான்றோராக மிளிரவேண்டுமென்ற அன்னையின் விரததாபங்களையும் மக்கள் பூர்த்தி செய்துள்ளனர். இப்பிரபஞ்சத்தின் பிறப்பின் மகிமையும் இதுவேதானென்று உலகிற்குக் காட்டியுள்ளனர்.

அருமையான பண்பும், இருப்பதைக் கொண்டு ஆற்றும் சிவதர்மங்களும், நாடுசிவபூமியாக மலர வேண்டுமென்ற சிந்தனைக்கு வலுவூட்டும் தர்மகைங்கரியங்களும், மக்கள் எதுவித கஷ்டங்களுமின்றி இனிதேவாழ வேண்டுமென்ற சிந்தனைக்கேற்ப ஆற்றும் பரோபகார்யங்களையும் அவதானிப்போர் ஏற்றிப் புகழ்ந்து போற்றுவது போன்று யானும் போற்றுகின்றேன்.

வீமன்காமம் மகா வித்தியாலய அதிபராகச் சேவையிலமர்ந்து ஆற்றிய சேவைகள், மாணவ மாணவிகளைத் தம்பிள்ளைகளைப் போன்று அவர்கட்கேற்றவகையில் அறம்செய்ய விரும்பு என்ற உபதேசங்கள் வாயிலாகச் சீலர்களாக வளர்த்தெடுத்த செயற்பாடுகளும் குறிப்பிடத்தக்கன. மாவைக் கந்தசுவாமியாரிலும் அதிகபற்றும் பாசமுடனும் ஆலய சேவைகளிலும் இவரும் இவரது தர்மபத்தினியும் இணைந்து ஆற்றிவரும் தொண்டுகளும் என்றும்

நிலைத்துநிற்கும். எமது ஆலய விக்கிரகங்கள் யுத்தம் சார்பாகச் சில காணாமற் போனதை நினைந்து மனமுடைந்த வேளை, திருநாவுக்கரசு சிவபாக்கியம் குடும்பத்தினர் தங்களது குடும்ப உபயமாக மீனாட்சி, சுந்தரரேஸ்வரர் விக்கிரகங்களைத் தமது உபயமாகத் தர்மசாதனம் செய்ததும் அவர்களது பூர்வ புண்ணிய ஏவலாகும். உலகம் உய்ய வேண்டுமாயின் திருநாவுக்கரசு சிவபாக்கியம் தம்பதிகள் போன்று யாவரும் வாழ முற்பட வேண்டும்.

அஷ்ட ஐஸ்வர்யங்களோடும், நீண்ட ஆயுளோடும் திருநாவுக்கரசு சிவபாக்கியம் குடும்பம் வாழ வேண்டுமென யாம் மாவைக்கந்தனிடம் வேண்டி அவரது திருப் பாதங்களில் இவர்கள் சார்பாக மலரஞ்சலிகளையும் சாத்துகின்றேன்.

**மஹாராஜஸ்ரீ சு.து. ஷண்முகநாதக் குருக்கள்**

பிரதம குரு,
மாவையாதீனகர்த்தா,
தெல்லிப்பழை.

உ
சிவமயம்

# நூற்றாண்டு விழாவுங் கண்டு வாழ்க

தெல்லிப்பழை மேற்கில் சைவச்சான்றோர்களையும், கல்விமான்களையும் தனவந்தர்களையும், இயற்கை வனப்பையும் தன்னகத்தே கொண்ட பன்னாலைக் கிராமத்தில் தண்டிகைக் கனகராயர் மரபினர் பிரபல்யமானவர்கள். இத்தகைய பாரம்பரிய வழித்தோன்றல் திருவாளர் கந்தையா திருநாவுக்கரசு அதிபர் அவர்கள் தனது பவளவிழாவினை 2005.09.05இல் கொண்டாடுவதனை அறிந்து அளவிலா மகிழ்ச்சி அடைகின்றேன்.

திருவாளர் திருநாவுக்கரசு அவர்களின் ஜென்ம நக்ஷத்திரம் திருவோணம். திருவோணம் ஒரு கோணம் ஆளும் என்ற ஜோதிடக் கூற்றின் பிரகாரம், இவர் பாரிய அழகிய இல்லத்தில் சகல வசதிகளுடன் பதினாறு பேறுகளும் ஒருங்கே பெற்றுப்பலரும் மதிக்க வாழ்வது அனைவரும் அறிந்த விஷயமாகும். இவருக்கு வாய்த்த ஒத்தபண்பு, ஒத்த அன்பு, ஒத்த அறிவு, ஒத்த போக்குடைய தர்மபத்தினி பத்தாவிற்கு ஏற்ற பதிவிரதையாகிய சிவபாக்கியம் அம்மையாராவர். இவருக்கு இவர் இல்லாளாக அமைந்தது ஓர் பெரும் பாக்கியம் எனலாம்.

திருநாவுக்கரசு அதிபர் அவர்கள் ஆலயப்பணி அறப்பணி ஆகியவற்றிலும் மிகுந்த ஈடுபாடுகொண்டவர். வரத்தலம் கற்பக விநாயகர் தேவஸ்தானப் பரிவாரத்தில் தனது உபயமாக முருகனுக்கு அழகிய ஆலயம் அமைத்து அத்துடன் வசந்தமண்டபத்தில் உற்சவ மூர்த்தியாகிய வள்ளி, தெய்வயானை சமேத சுப்பிரமணியப் பெருமான் விக்கிரகத்தையும் 2004.07.04இல் பிரதிஷ்டைசெய்வித்து நித்திய நைமித்தியங்களைக் கிரமமாகப் பக்தி சிரத்தையுடன் நடாத்தி வருவது குறிப்பிடற்பாலதாகும். அத்துடன் மேற்படி தேவஸ்தான அன்னதான சபைத் தலைவர் ஆகவும் அரும்பணி ஆற்றுகின்றார்.

இன்று பவளவிழாக்கொண்டாடும் அதிபர் திருநாவுக்கரசு அவர்கள் இன்னும் பல்லாண்டு நீடூழி வாழ்ந்து மேலும் சமய, சமூகப் பணிகள் பற்பல சிறப்பாகப்புரிந்து மனைவி, மக்கள், மருமக்கள், பேரர்களுடன் பெறற்கரும் செல்வப் பேறுபெற்று, நூற்றாண்டு விழாவும் காண வேண்டுமென வரத்தலம் கற்பக விநாயகப் பெருமானைத் தொழுது எனது நல்லாசிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். மங்களம் சுப மங்களம் ஜெயமங்களம்!

**சிவஸ்ரீ இ. சபாரத்தினக் குருக்கள்**

ஆதீனகர்த்தா,
பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலயம்.

ஔடதம் குறை. - *மகாகவி பாரதியார்*

உ
சிவமயம்

# பார்புகழ் பண்பாளன் வாழ்க.

எமது பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய பவள விழா நாயகன் திரு. க. திருநாவுக்கரசு அவர்களின் பவள விழா மலருக்கு ஆசிச் செய்தி அளிப்பதில் யாம் அகமகிழ்ச்சி அடைகிறோம்.

மனித வாழ்வில் இருபத்தைந்து ஐம்பது, அறுபது எழுபத்தைந்து வயதெல்லையைத் தாண்டியோர் திருமண வாழ்க்கையையும் அவ்வாறே கொண்டு கணவன் மனைவி இருவரையும் வைத்து விழா எடுப்பது மரபு. அந்த வகையில் திரு. க. திருநாவுக்கரசு சிவபாக்கியம் தம்பதிகள் பவள விழா எடுப்பது சாலப் பொருந்தும்.

'திரு' வைத் தனது நாமத்தின் முன்கொண்டு செல்லும் திருநாவுக்கரசு அவர்கள் தூய வெள்ளை உள்ளம் படைத்தவர். அவரது சாந்தமான போக்கும், தூய்மையான சிந்தனையும் உறுதியான செயற்பாடுகளும் எவரையும் கவரும் தன்மை வாய்ந்தவை. இத்தனை சிறப்புக்களுக்கும் உறுதுணையாக இருந்தவர் இவரது மனைவி என்றால் அது மிகையாகாது.

நாற்பத்தைந்து வருடத் திருமண வாழ்க்கையில் இவர்கள் ஒருவருக்கொருவர் உறுதுணையாக இருந்து இல்லறமாக நல்லறத்தை இனிது பேணி வாழ்ந்தவர்கள். அந்நல்லறத்தின் பயனாக நன்மக்களைப் பெற்று நானிலம் போற்ற வாழ்கிறார்கள்.

திரு. க. திருநாவுக்கரசு அவர்கள் பல பாடசாலைகளில் ஆசிரியராக, உப அதிபராக, அதிபராகப் பதவி ஏற்று அப்பதவிகளுக்குப் பெருமை சேர்த்தவர். அதுமட்டுமல்ல, அவர் தமது கிராம முன்னேற்றத்திற்கும் அரும்பாடுபட்டவர். பன்னாலைக் கிராமத்திற்கு மின் இணைப்பு, பேருந்து போக்குவரத்து வீதி அகட்டுதல் போன்ற பணிகளில் முன்னின்று உழைத்தவர். பன்னாலையிலுள்ள எல்லாச் சங்கங்களிலும் பதவி வகித்தவர். கோவில் திருப்பணிச் சபை அன்னதானசபை போன்ற தாபனங்களிலும் பணிபுரிந்தவர் இவரது பவளவிழா சிறப்புற யாம் எல்லோரும் வாழ்த்துகிறோம். இவரது பணி தொடர எல்லாம் வல்ல கற்பக விநாயகப் பெருமான் இவருக்கு உடல்நலமும் நீண்ட ஆயுளும் நல்கவேண்டுமெனப் பிரார்த்திக்கிறோம்.

ம. மகேந்திர சர்மா
ஆதீனகர்த்தா,
வரத்தலம் கற்பகவிநாயகர் ஆலயம்

பன்னாலை
தெல்லிப்பழை.

கற்றது ஒழுகு. - மகாகவி பாரதியார்

உ
சிவமயம்

# பூமிதனில் நீநீடு வாழி வாழி

கலாபூஷணம் பண்டிதர் சி. அப்புத்துரை

திருவளருந் திருநாவுக் கரசு தேர்ந்த
திருமகளார் சிவபாக்யத் துணைவி யோடே
பெருமைபெறு பவளவிழா அழகை ஆர்ந்தாய்
பிஞ்ஞகனார் பெருந்திருவைத் தொழுது பெற்ற
அருமருந்தாங் குழவியரோ டமைந்த வாழ்வை
அணைந்தின்பம் அனுபவித்து நெறியில் நின்றாய்
வருசதமும் காணுதற்காம் வழியில் வேண்டும்
வளங்களெலாம் உடனாகி வாழி வாழி. 1

பார்புகழும் பன்னாலைப் பதியில் வந்தோய்
பவளவிழாச் சிறப்பினையும் பற்றி நின்றோய்
கார்காத்த பெருமைமிகு குலத்து தித்த
கந்தையா சிவகாமிப் பிள்ளை பெற்ற
சீர்பெறுநற் திருநாவுக் கரசு நல்லோய்
செழுமைசெயு மாசிரியப் பணியை யார்ந்தோய்
ஆர்வலனாய் அதிபர்திரு அணைந்தாய் ஆன்ற
அறிஞர்குழாம் வாழ்த்தநின்றாய் வாழி வாழி. 2

பல்லாண்டு கூறுகின்றோம் பாரில் நீவிர்
பலநலமும் பல்வளமும் பெற்று நீடு
இல்லாளும் மனைவியொடு மக்கள் சுற்றம்
இனிமைபெறு தலைமையினை ஏற்று நிற்ப
நல்லநினை திருநாவுக் கரசு மேலோய்
நலம்நினைந்து செயற்படுத்தி நிற்ப எல்லாம்
வல்லவனை மனத்திருத்தி வழுத்தி வாழ்த்தி
வையத்து உயர்ந்து நிற்பாய் வாழி வாழி. 3

கற்பகத்துக் குஞ்சரத்தை வழுத்து சேயே
கலைகளெலாம் கவின்பெறவே செழித்தல் கண்டோம்
மற்புயத்தை அணைந்தசிவ பாக்கி யத்தின்
மகிமைபெறு சேவையினை மதிப்பைக் கண்டோம்
அற்புதனாந் திருநாவுக் கரசு பெற்ற
அருமகவு போற்றுதலை அகத்து ணர்ந்தோம்
சுற்றியுள மக்களினம் தோய்ந்து வாழ்த்தும்
தூய்மையுட னாகினம்யாம் வாழி வாழி. 4

திகழ்கின்றாய் சிவமயத்துக் கோலம் முற்றிச்
செய்கின்றாய் சிறுவர்தம தறிவை ஊக்கி
நிகழ்கின்ற செய்கைகளை நெறிப்படுத்தி
நேரிதென நினைபவற்றை நிகழ வைத்து
மகிழ்கின்றாய் திருநாவுக் கரசு ஐய
மற்றவர்தம் வாழ்வினையே மதித்தல் கண்டு
புகழ்கின்றார் பொன்மனத்தைப் போற்று கின்றார்
பூமிதனில் நீடு 'வாழி வாழி. 5

தேனனைய திருநாவுக் கரசு வாழி
திகழ்சிவபாக் கியஅம்மை யுடனாய் வாழி
பானல்மொழி மகவினர்தம் பணிவும் வாழி
பற்றுமிகு சுற்றத்தோர் அன்பும் வாழி
ஏனல்விளை உழவர்தம தூக்கம் வாழி
ஏய்ந்தகூட் டுறவினரை இணைந்து வாழி
நாநிலத்துப் பன்னாலை உயர்ந்து வாழி
நலம்நிறைந்து எவருமிங்கு வாழி வாழி.

உ
சிவமயம்

# பவளவிழாக் காணும் அரசு வாழி

ஈழமணித் திருநாட்டில் சைவத்தின் செழுமை பூத்த நித்தில இரத்தினச் சிவபூமிதன்னின் வடபால் செழுங்கலைபூத்த யாழ்ப்பாணத்தின் வலி வடக்கு பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றாய் பூரிப்பாய் மிளிரும் வீணாகானபுரத்து நகுலேஸ்வரத்து அருள் நாடிய முனி பரம்பரைகள் சைவச்சான்றோர் அருளாளர் சித்தர் குடிகொள் புண்ணியப்பதியாம் பன்னாலை தன்னில் சைவ வேளாளர் குலம் தளைத்திட அகத்திய முனிவர் பரம்பரையென்றிட வாழ்ந்திட்ட கல்விச் சான்றோர் வழிதனில் ஆசிரியராய், வைத்தியனாய், உலக சமநீதி பேணியோனாக இவ்வாறு பல விடயங்களை அன்று அகத்திய முனிவர் செய்தார் இன்று பெரியோர் கூறிய அச்சான்றோர் வழியில் வாழ்ந்தும் வாழ்வித்தும் வரும் திருவளர்சான்றோர் திருநாவுக்கரசர் என்றதும் என்கடன் பணிசெய்துகிடப்பதே என்ற மகுட வாசகத்திற்கு இணங்கி வாழ்வுகாட்டிய பெருந்தகையாக விளங்குகின்றார்.

விவசாயம் எங்கள் மகிழ்வான வாழ்வு என்ற போதிலும் கல்வி என்றும் தனசெல்வம் நிறை மனிதனாய் வாழ வழிவகுக்கும் என்ற இலக்குடன் வாழ்ந்து உயர் இலச்சிய புருஷனாய் பன்னாலையம்பதிக்கு மாசிலாத ஆசானாய் வீமன்காமம் முதலாகப் பல பாடசாலை ஆசிரியராய் உபஅதிபராய் அதிபராய்ப் பணியாற்றி நல்ல தலைமைத்துவம் கொண்ட அறிவாளனாய் செயல் வீரனாய் நகுலேஸ்வரம் வரத்தலம் கற்பகப்பிள்ளையார், வைரவர் சன்னிதானம் முதலாகப் பொறுப்புடன் கருமங்களை ஆற்றிய நாவரசராகத் திகழ்கின்றார். அவருடைய உள்ளத்து நலமான செயலுக்கு உகந்த தெய்வீகம் நிறைந்த புனிதவதியார்போல் மனையாளோடு இவ்வையக வாழ்விற்கு அத்திவாரமாய் விளங்கினார்.

**'தம்மிற்றம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து**
**மன்னுயிர்க் கெல்லா மினிது'**

என்ற வள்ளுவன் காட்டிய குறள்வழி வாழ்ந்து 'பண்புடையாப் பட்டுண்டு உலகு' என்ற பான்மையோடு வாழ்ந்த மனநிறைவு கண்டு ஆலய தரிசனத்துடன் கந்தன் புகழ்பாடிச் திருச்செந்தூர்ப் புராணம் பாடிஅல்லல் தீர்த்து அருள் வேண்டும் அன்பனாய் பார்போற்றும் உத்தமனாய் வாழ்ந்துவரும் இப்பெரியார் மனமென்னும் கோயிலில் நலமான

நினைவுகளை ஏந்திய நிலையில் நலமான பல விடயங்களைப் பெற்றுக்கொள்ளும் இப்பெரியார் இப்பொழுதும் அவ் இன்பத்தில் திளைத்திருக்கும் நிலையில் மனத்தில் நல்லதால் மறுமையிலும் இன்பம் பெருகும்.

**‘மனநலத்தின் ஆகும் மறுமைமற் றஃதும்**
**இனநலத்தின் ஏமாப்புடைத்து’**

என்ற வள்ளுவப் பெரியார் வாக்குக்கு மட்டுமல்ல நல்லதை நினைப்பார் மனம் கோயில்தான்; ‘நினைப்பவர் மனங் கோயிலாக் கொண்டவன்’ என நாவுக்கரசரே கூறுகிறார். ஆனால் அருணகிரிநாதர்

**‘மருவுமடியார்கள் மனதில் விளையாடு**
**மரகத மயூரப் பெருமாள்காண்’**

என்ற பாடலில் அடிகள் வாயிலாக அன்றைய நாவலர் போல் என்றும் இப்பெரியாரின் அருமையான வழிகள் தாடியர்மடம் என்ற மடத்துச் சுவாமி பரம்பரைகள் முதலாக எல்லோரும் வாழ்த்த பவளவிழாவோடு நூற்றாண்டு விழாக்காணும் காலம்வரை வளமான மனதோடு கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்று வாழ்ந்த பெரியார் வழிவாழ வையகம் அனைத்தும் வழமாக வாழ உளமார வாழ்த்துகிறேன்.

‘திருநாவுக்கரசு திருத்தாள் போற்றி’

**உளமார வாழ்த்துபவர்**
**செஞ்சொல்வேந்தர் சைவப்புலவர் க. நித்தியதசீதரன்**
**பன்னாலையம்பதி**

# விழாநாயகர் வாழ்க்கை வளம்


1. **விழா நாயகர் திரு. கந்தையா திருநாவுக்கரசு அவர்கள் வாழ்க்கை வளம்.**
   கந்தையா சண்முகலிங்கம்

2. **கல்வியிற் கலங்கரை விளக்கம் - மனிதருள் மாணிக்கம்**
   மாவை சேனாதிராசா

3. **பன்னாலைக் கிராமத்தில் ஒரு பண்பாளர்**
   சி. சிவமகாராசா

உ
சிவமயம்

# விழாநாயகர் திரு. கந்தையா திருநாவுக்கரசு அவர்கள் வாழ்க்கைவரலாறு

இலங்காபுரியின் வடபால் திகழ்வது யாழ்ப்பாண மாநகரம். இன்னும் வடக்கே பல்வளம் கொளிக்கும் பூமியாகக் காணப்படுவது தெல்லிப்பளைக் கோவில்பற்று. இதன் தென்மேலுறை பொற்பதி பன்னாலை. கலைஞர்களும், கல்விமான்களும், பக்தகோடிகளும் மலிந்து விளங்கும் இக்கிராமத்தில் கல்வி கேள்விகளிற் சிறந்து காணப்படுவது தண்டிகைக் கனகராய முதலியார் குடும்பம். அக்குடும்ப வழித்தோன்றலான இலகுப்பிள்ளை கந்தையா அவர்களுக்கும் அம்பலவாணர் குடும்பத்தைச் சார்ந்த இராசசிங்கம் மகள் சிவகாமிப்பிள்ளை அவர்களுக்கும் 1930.09.05இல் ஓர் ஆண்குழந்தை பிறந்தது. பெற்றோர் தம்பிள்ளைக்கு '**நாவுக்கு அரசராக**' இருக்கத் திருநாவுக்கரசு எனும் நாமம் இட்டனர். அப்பிள்ளையும் அவ்வாறே வளர்ந்து வந்தது. பள்ளிப் பருவம் எய்திய இவருக்குப் பன்னாலை சேர்கனகசபை வித்தியாசாலையில் ஆரம்பக் கல்வியை ஊட்டிவைத்தனர். தம்பிள்ளைக்கு ஆங்கிலக் கல்வி ஊட்டவேண்டும் எனும் அவாவினால் 1939இல் அன்று உதவிநன்கொடை பெறும் பாடசாலையாக இருந்த தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் கட்டணம் செலுத்திப் படிக்க வைத்தனர். விவசாயக் குடும்பத்தில் பிறந்த இவர் தமது தந்தைக்குத் தோட்ட வேலைகளில் உதவிசெய்து கல்வியிலும் முன்னிலை வகித்தார். 1949இல் சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் ஐந்து திறமைச் சித்தியுடன் எல்லாப் பாடங்களிலும் சித்திபெற்றார். உயர்தர வகுப்பிலும் சில காலம் கற்றார். அக்காலத்தில் இவருக்குக் கல்வியில் போதிய வழிகாட்டல் இல்லாமையால் 1952இல் இவர் கண்டி உடத்தலவின்னை அரசினர் ஆண்கள் தமிழ்ப் பாடசாலையில் ஆங்கில உதவியாசிரியராக நியமனம் பெற்றார். சில வருடங்கள் கல்விகற்பித்த இவருக்கு மேற்படிப்புப் படிக்க வேண்டும் எனும் ஆசை பிறந்தது. எனவே மாவை முருகன் ஆலயத்திற் பூக்கட்டிவைத்துப் பார்த்து 1955இற் சென்னைப் பல்கலைக்கழகத்தோடு இணைந்த

லோயலாக் கல்லூரியிற் பயின்று 1959இற் கலைமாணிப் பட்டப் படிப்பை நிறைவு செய்தார். இவர் தனது கல்விச் சேவையைக் கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் 1962இல் ஆரம்பித்துச் 'சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலும் தெல்லிப்பழை வீமன்காமம் மகா வித்தியாலயத்திலும் உபஅதிபர், அதிபராகச் சேவையாற்றி இறுதியில் அளவெட்டிச் சீனன்கலட்டி ஞானோதய வித்தியாசாலையில் அதிபராகப் பணிபுரிந்து 1990.09.04இல் தமது சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார். இவர் கற்பித்த பாடசாலை மாணவர்கள் பெற்றோர்கள், கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகள் ஆகியோரின் நன்மதிப்பையும் பாராட்டையும் பெற்றிருந்தார்.

இவருக்கு நால்வர் உடன் பிறந்தோர் மூத்த சகோதரர் காலஞ்சென்ற திரு. சுப்பிரமணியம் மலேசியாவில் சாற்ரேட் வங்கியில் (Chartered Bank) பணிபுரிந்தவர். சகோதரி திருமதி சரஸ்வதி அம்மா விநாயகமூர்த்தி நல்ல இல்லாளாகத் திகழ்ந்தவர். இவருடைய தம்பி காலஞ்சென்ற திரு. இராசநாயகம் சிறந்த கணித ஆசிரியராக ஸ்கந்தவரோதயக் கல்லூரி, தூய ஹென்றியரசர் கழகம் (இளவாலை) ஆகிய பிரபல பாடசாலைகளில் கடமையாற்றியவர். இளையதம்பியார் திரு. ஜீவரத்தினம் யாழ். கல்வித் திணைக்கழத்தில் நிதி உதவியாள்ராகப் (Financial Assistant) பணிபுரிந்து இளைப்பாறியுளார்.

திரு. திருநாவுக்கரசு அவர்கள் 1960ம் ஆண்டில் தனது ஊரில் வசிக்கும் திரு வ. கனகசபை தங்கப்பிள்ளை தம்பதியரின் புதல்வி சிவபாக்கியம் அவர்களைத் திருமணம் செய்து இல்லறமாம் இனிய நல்லறத்தைப் பேணிப் பூவும் மணமும் போல ஒருவரையொருவர் அநுசரித்து வாழ்ந்தார்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள்.

இவர்களுக்கு நால்வர் பிள்ளைச் செல்வங்களாகத் திகழ்கின்றார்கள். மகள் உதயராணி கொழும்புப் பல்கலைக்கழகத்து மருத்துவ பீடத்தில் பயின்று வைத்திய கலாநிதிப் பட்டம் பெற்றவர். இவர் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திரு. ஜெயசிங்கம் ஜெயலட்சுமி தம்பதியரின் புதல்வர் குணதயாளன் பொறியியலாளர் அவர்களைத்

திருமணம் புரிந்து சீரும் சிறப்புடன் கனடாவில் வாழ்கின்றார். இவர்களுக்குத் துஷீலன், தீபிகா ஆகியோர் மழலைச் செல்வமாகத் திகழ்கிறார்கள்.

மூத்த மகன் உதயகுமார் பொறியியலாளர். ஜெயவர்தன பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டம்பெற்றவர். இவர் கைதடியைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. செல்வஸ்கந்தநாதன் இராசலட்சுமி தம்பதியரின் புதல்வி இந்துமதியைத் திருமணம் புரிந்தவர். யதூஷன் எனும் மழலையைப் பெற்றுப் புகழுடன் வாழ்கிறார்கள். உதயகுமார் அவர்கள் இலங்கை கட்டளை நிறுவனத்தில் மேற்பார்வையாளராகப் பணிபுரிந்து வருகிறார்.

அடுத்த மகன் அகிலகுமாரன் (Mechanic) எந்திரவல்லுநர். இவர் தற்பொழுது இலங்கை போக்குவரத்துச் சபை வவுனியாக்கிளையிற் பணிபுரிந்து வருகிறார். இவருக்கு மாதகலைச் சேர்ந்த திரு. இராமநாதன் (முன்னைநாள் நிலஅளவையாளர்) விஜயலட்சுமி தம்பதியரின் புதல்வி வாசுகி (ஆசிரியை) அவர்களைத் திருமணம் செய்து வைத்தனர். இவர்கள் துஷாயினி, சதுர்ஜனன் ஆகியோரைப் பிள்ளைச் செல்வங்களாகக் கொண்டு இனிது வாழ்கின்றனர். வாசுகி மாதகல் கனிஷ்ட வித்தியாலயத்தில் ஆசிரியப் பணிபுரிந்துவருகிறார்.

இளைய மகன் செந்தில்குமரன் ஒரு பொறியியலாளர், கணக்காளர், கணனியியலிலும் தேர்ச்சிபெற்றவர். இவருக்கு மானிப்பாயை வசிப்பிடமாகக் கொண்ட புலோலி ஊரைச் சார்ந்த திரு. T. கிருஸ்ணமூர்த்தி (பிரபல வர்த்தகர்) இந்துராணி தம்பதியரின் இளைய புதல்வி ஜனனி (B.Com) வர்த்தகப் பட்டதாரி அவர்களைத் திருமணம் செய்து வைத்தனர். அபிதேஸ் எனும் பெயர்கொண்ட மழலை இவர்களுக்குக் கிடைத்த பிள்ளைப் பாக்கியம். செந்தில்குமரன் கொழும்பிலும் சிங்கப்பூரிலும் கணனி நிறுவனங்களில் பணிபுரிந்தவர். இப்பொழுது அவுஸ்திரேலியாவிற் பணிபுரிந்து வருகின்றார்.

திரு. க. திருநாவுக்கரசு அவர்கள் சமய சேவைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இவர் கீரிமலை நகுலேஸ்வர தேவஸ்தான அன்னதான சபையில் 1980ம் ஆண்டு

தொடக்கம் உதவியாளராகிப் பணிபுரிந்துவருகிறார். வரத்தலம் கற்பக விநாயகர் ஆலய அன்னதான சபையில் 1980 - 92 வரை செயலாளராகவும் 2004இல் இருந்து தலைவராகவும் பணிபுரிந்து வருகின்றார். பொற்கலந்தம்பை அருள்மிகு ஞான வயிரவர் ஆலய திருப்பணிச்சபையில் (1974 - 1985 வரை) பொருளாளராகப் பணிபுரிந்தவர். அவ்வாலயத் திருப்பணி வேலைகளைக் கண்ணும் கருத்துமாக இருந்து மேற்பார்வை செய்தவர்.

சமூகசேவையிலும் இவரது பங்களிப்பு மெச்சத்தக்கது. இவர் பன்னாலைக் கணேச சனசமூக நிலையத்தில் 1978-1982 வரையுள்ள காலப் பகுதியிற் செயலாளராகப் பணிபுரிந்தவர். தெல்லிப்பழை தென்மேற்குக் கிராம அபிவிருத்திச் சங்கத்திலும் இவர் செயற்குழு உறுப்பினராக 1970 களில் கடமை ஆற்றியிருக்கிறார். அத்துடன் தெல்லிப்பழை தென்மேற்குக் குடும்ப நலன்புரிச் சங்கத்திலும் 1978இல் தலைவராக இருந்து சேவை ஆற்றியிருக்கிறார். அரசியல்துறையிலும் இவருக்கு ஈடுபாடு உண்டு. 1970 - 1985 வரை இவர் தெல்லிப்பழை தென்மேற்குத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கிளைத் தலைவராகவும் பணிபுரிந்துள்ளார். தற்பொழுது வலிவடக்கு ஓய்வூதியர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கத்தில் உபசெயல்ாளராகப் பணிபுரிந்து வருகிறார். மல்லாகம் தெல்லிப்பழை அரிமாக்கழகத்திலும் இவர் அங்கம் வகிக்கிறார்.

இவர் ஆற்றிய செயற்பாடுகளுக்கெல்லாம் உறுதுணையாக இருந்தவர் இவரது மனைவி சிவபாக்கியம் என்றால் அது மிகையாகாது. இல்லற வாழ்க்கையை இனிது நடாத்தி, நன்மக்களைப் பெற்றுத் தக்கோராக்கி நாநிலம் போற்ற வையத்து வாழ்வாங்கு வாழ்ந்த இக் குடும்பம் எல்லோருக்கும் வழிகாட்டியாக அமைகிறது. இவர் குடும்பம் இன்னும் பல ஆண்டுகள் சேவைபுரிய வேண்டி வாழ்த்துகின்றோம்.

செய்தித்தொகுப்பு : **கந்தையா சண்முகலிங்கம்.**

**கைத்தொழில் போற்று.** - *மகாகவி பாரதியார்*



அகிலகுமாரன் (மகன்), வாசுகி (மருமகள்), துஷாயினி (பேத்தி), சதூர்ஜனன் (பேரன்)



உதயகுமார் (மகன்), இந்துமதி (மருமகள்), யதூஷன் (பேரன்)



உதயராணி (மகள்), குணதயாளன் (மருமகன்), தீபிகா (பேத்தி), துஷீலன் (பேரன்)



செந்தில்குமரன் (மகன்), ஜனனி (மருமகள்), அமிதேஷ் (பேரன்)

உ
சிவமயம்

# கல்வியிற் கலங்கரை விளக்கம்
# மனிதருள் மாணிக்கம் அதிபர் திருநாவுக்கரசு

பன்னாலைப் பழம்பெரும் பேரூர் பெற்றெடுத்த செல்வம் கந்தையா திருநாவுக்கரசு ஆசிரியருக்கு எழுபத்தைந்து அகவை ஆகிவிட்டது என்ற பொழுது ஆச்சரியமாயிருந்தது. இப்பொழுது அவர் பார்வைக்கும், பழக்கத்துக்கும், செயலாற்றலுக்கும் இளந்தாரி மனிதராய் வாழ்ந்து வருகிறார் என்பது பேருவகையே.

இளமையிற் கல்வி சிலையிலெழுத்து என்பதுபோல, பொருள் வளங்குறைந்த குடும்பத்திலும் உயர் கல்வி பயில வேண்டுமெனும் ஆர்வம் அவர் உள்ளத்தில் பொங்கிநின்றுள்ளது மட்டுமல்லாமல் அன்றைய பாரம்பரியத்திலும், சூழலிலும் கற்ற கல்வி இன்றும் அவருள்ளத்தில் ஒளிர்வதைப்பார்க்க முடியும். அந்த அடித்தளத்திலிருந்து இந்தியாவில் புகழ்பூத்த லோயலா கல்லூரி, பச்சையப்பன் பல்கலைக்கழகம் வரை சென்று உயர்கல்வி பெற்று, உயர்ந்து நின்றிருக்கிறார். தான்பெற்ற கல்வியைத் தான் சார்ந்த தமிழ்ச் சமுதாயத்தையும், ஏன் கொழும்பு சாகிராக் கல்லூரி சார்ந்த முஸ்லிம் மாணவ சமுதாயத்தையும் கட்டியெழுப்பி ஓர் உயர்ந்த கல்விச் சமூகத்தையும் தலைமைத்துவத்தையும் உருவாக்கப் பயன்படுத்திப் பெருமை சேர்த்தவர். திருநாவுக்கரசர் எனும் ஆசிரியமணி கல்வித்துறையிலிருந்து அதிபராகவே ஓய்வுபெற்றார். அதன் பின்னும் ஓய்வில்லா மனிதராய் சமூகத்தில் உழைக்கின்றார். ஆசிரியர் தன் ஊரின் முன்னேற்றத்தின் பொருட்டுச் சமூகத் தொண்டிலும், திருத்தொண்டிலும் மட்டுமல்லாமல் கூட்டுறவுத் துறையின் வளர்ச்சியிலும் தன்னை அர்ப்பணித்து உழைத்தார்.

ஆசிரியரை நான் முதலில் சந்தித்தமை என்நெஞ்சில் இன்றும் பசுமையாய்ப் பதிந்துள்ளது. நான்கு தசாப்தங்களுக்கு மேலாகிவிட்டது; தந்தை செல்வா அவர்களில்லத்தில் ஆசிரியரை தந்தை அவர்களே அறிமுகம் செய்தார். அப்பொழுது முதல் ஆசிரியர் ஒரு இளம் கல்வியாளராய் இருந்த பொழுதும் 1950களின் பின்

(1954) தந்தை செல்வாவுடன் தமிழரசுக் கட்சியின் ஓர் இளந்தலைவனாய் கொள்கைவாதியாய், இலட்சிய வீரனாய், தமிழ்ச் தேச மக்களின் விடுதலைக்கு உழைக்கும் பற்றாளனாய், பங்காளியாய் தன்னை அர்ப்பணித்து வந்துள்ளார் என்பதை உவகையுடன் ஒப்படைக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

எழுபத்தைந்து ஆண்டுகள் அகவை என்றபொழுதும் அன்றுபார்த்த அதே முகம், அதே உணர்ச்சி, அதே உணர்வு, அதே உள்ளம் அதே இலட்சியப் பற்றுடன் ஆனால் பழுத்த அனுபவம் மிக்க மனிதராய் மக்களிடையே ஒரு கலங்கரை விளக்காய் இன்றுவரை திகழ்கின்றார்.

அன்பும், பண்பும் மாற்றாரும் அகமகிழும் கனிந்த பேச்சும், விருந்தோம்பலும், தமிழர் பண்பாட்டின் சின்னமாய் பன்னாலைப் பேரூருக்கு மட்டுமல்ல தமிழ்த் தேசத்திற்கும் ஒரு மாணிக்கமாய் மனிதருள் வாழ்ந்து விளங்குகின்றார்.

ஆசிரியருக்கு மனையாளாய் வாய்த்த மச்சாள், ஆசிரியர் உயர்வுக்கும் நீண்ட வாழ்வுக்கும் உறுதுணையாய் நின்று பெருமை சேர்த்திட்ட மங்கை நல்லாள்.

ஆசிரியர் தான் பெற்ற கல்விச்செல்வத்தைப் பெற்றெடுத்த பிள்ளைச் செல்வங் களும் பயனுறவும் மேலாகப் பல்துறையிலும் பட்டங்கள் பெற்று வாழ்ந்திடவும் வைத்துச் சமுதாயத்தில் ஒரு முழு மனிதனாய் வாழ்ந்து எடுத்துக்காட்டாய் உயர்ந்து நிற்கின்றார்.

அவர் இன்னும் மேலோங்கி மாண்புற்று மானிடத்தில் நூறாண்டு வாழ்ந்து பேராசானாய்ப் பெரும்புகழ் சேர்த்து வாழ்க என வாழ்த்தி நிற்கின்றேன்.


**மாவை. சேனாதிராசா**

யாழ் மாவட்ட உறுப்பினர்,
பாராளுமன்றம்,
ஸ்ரீலங்கா.



விழா நாயகர் சீனன் கலட்டி ஞானோதய வித்தியாலய பரிசளிப்பு விழாவில் (1989) அதிபர் அறிக்கை சமர்ப்பிக்கின்றார்.

## பவளவிழா நாயகரும் பிள்ளைகளும்



இடமிருந்து வலம் - அகிலகுமாரன் (மகன்), செந்தில்குமரன்(மகன்), சிவபாக்கியம் (விழா நாயகி), உதயராணி குணதயாளன் (மகள்), திருநாவுக்எகரசு (விழா நாயகன்), உதயகுமார் (மகன்)


நல்லதோர் குடும்பம்

உ
சிவமயம்

# பன்னாலைக் கிராமத்தில் ஒரு பண்பாளர்

பன்னாலை பழம்பெருமை மிக்க ஒரு கிராமம். பல பெரியவர்கள் வாழ்ந்து வளம் சேர்த்தார்கள். விவசாயம், கல்வி, வைத்தியம், எனப் பல்வேறு துறைகளிற் சாதனை படைத்தவர்களை எண்ணிப்பார்க்கிறோம். அந்த வரிசையில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் திரு. க. திருநாவுக்கரசு அவர்கள் பல்துறைச் சேவைகளைச் செய்து பவளவிழாக் காணவிருக்கிறார்.

திரு. க. திருநாவுக்கரசு ஆசிரியர் அவர்களை ஒரு சிறந்த விவசாயியாக, நல்லாசிரியராக, அதிபராக, சிறந்த சமூகசேவையாளராக, கூட்டுறவாளராக, உயர்ந்த தலைமைத்துவப் பண்புகள் மிக்கவராகக் காண்கிறோம்.

பன்னாலைக் கிராமத்தில் உள்ள சமய, சமூக, அரசியல் அமைப்புக்கள் அனைத்திலும், அவருடைய பங்குபற்றுதலைக் காணுகின்றோம், குறிப்பாகப் பன்னாலை விளைபொருள் சங்கம், கிராம அபிவிருத்திச் சங்கம், கூட்டுறவுச் சங்கம், ஆலயத் திருப்பணிச்சபை, அன்னதானச்சபை, எனப்பல அமைப்புக்களில் முன்னின்று பாடுபடுகின்ற ஒரு பெரியார் திரு. க. திருநாவுக்கரசு அவர்கள்.

பன்னாலை திரு. க. திருநாவுக்கரசு அவர்களைப் பல ஆண்டுகளாக நன்கு அறிவேன். தந்தைசெல்வா அவர்களின் தமிழரசுக் கட்சிப் பாசறையில் வளர்ந்தவர். பன்னாலைக், கிராமத்தில் பல பெரியார்கள் தமிழரசுக் கட்சியின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர்கள். அந்த வரிசையில் அமரர் விஸ்வநாதர் (விச்சுப்பரியாரியார்) தபால் அதிபர் அமரர் சின்னத்தம்பு, அமரர் ந. சொக்கலிங்கம், அமரர் சு. மாணிக்கம் போன்ற பெரியவர்கள் வரிசையிலே திரு. க. திருநாவுக்கரசு அவர்களும் திகழ்கிறார்கள்.

பன்னாலையில் வெங்காயச் சங்கம் என்று சொல்லப்பட்ட தெல்லிப்பழை தென்மேற்குப் பல நோக்குக்கூட்டுறவுச் சங்கம் தற்பொழுது தெல்லிப்பழைப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 5வது கிளையாகத் திகழ்கின்றது. இந்தச் சங்கத்திற்குக் காணி

வாங்கிக் கட்டிடம்அமைத்து அந்தக் கட்டிடத்தில் நெசவு சாலை ஆரம்பித்து நடத்திப் பன்னாலைக் கிராமத்தின் கிராமிய பொருளாதார வளம் பெருக்கப் பாடுபட்டவர்களில் திரு. க. திருநாவுக்கரசு அவர்கள் குறிப்பிடத்தக்கவர்.

பன்னாலைக் கிராமத்தில் அமைந்துள்ள தெல்லிப்பழைப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழுவில் ஒருவராக இருந்து அரும்பாடுபட்டவர். ஒருமுறை கிளைக்குழுத்தெரிவில் கடும் போட்டி ஏற்பட்டது. அப்பொழுது அக்கிளைத் தேர்தலில் பெருவெற்றி பெற்றுத்தந்தவர்களில் திரு. க. திருநாவுக்கரசு அவர்கள் குறிப்பிடத்தக்கவர்.

இவ்வாறு பன்னாலையம்பதியின் வளர்ச்சிக்கு, உயர்ச்சிக்கு, அபிவிருத்திக்குப் பாடுபட்ட முன்னோடிகளில் திரு. க. திருநாவுக்கரசு அவர்கள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவர் என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாகும்.

அறிவு, ஆளுமை, மிக்க திரு. க. திருநாவுக்கரசு அவர்கள் பவளவிழாக் காணும் இவ்வேளையில் அவரையும், அவரது குடும்பத்தாரையும், சேவைக்காகப் பாராட்டி வாழ்த்தி மகிழ்கிறோம். சேவைக்கு ஒரு எடுத்துக்காட்டாக வாழ்ந்து வரும் திரு. க. திருநாவுக்கரசு அவர்களையும் அவர்களது குடும்பத்தாரையும் வாழ்த்துகிறோம். வாழ்க பல்லாண்டு, வளர்க பணிகள், பன்னாலை புகழ் பூத்துப்பொலிக.


தெல்லிப்பளை பல.நோ.கூ.சங்கம்,
தெல்லிப்பளை.

**சி. சிவமகாராசா**
தலைவர்.

# பார்புகழும்பதி பன்னாலை


1. பார் புகழும் பதி பன்னாலை.
   கந்தையா சோமசுந்தரம்
2. அரச அங்கீகாரம் பெற்ற பன்னாலை
   கனகசபை நடராசர்
3. பன்னாலை சேர் கனகசபை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை
   வை. பொன்னையா அதிபர்
4. பன்னாலைக் கணேச சனசமூக நிலையம்
   செயலாளர் தி.சு. விக்நேஸ்வரன்
5. பன்னாலைக் கூட்டுறவுச் சங்கம்
   கந்தையா சண்முகலிங்கம்
6. பன்னாலை மக்களின் தேவைகளும் எதிர்பார்ப்புக்களும்
   திருநாவுக்கரசு உதயகுமார்
7. பயின்றோர் படர்நிலம்
   திருமதி வானதி காண்டீபன்
8. பன்னாலைக் கிராம அபிவிருத்திச் சங்கம்
9. மாதர் அபிவிருத்திச் சங்கம்
10. பன்னாலைக் கணேச விளையாட்டுக் கழகம்
11. முன்பள்ளி
12. பன்னாலை விவசாய சம்மேளனம்
    ந. திருலோகநாதன்
13. ஐக்கிய நாணய சங்கம்
14. பன்னாலையில் மடாலயம்
15. பன்னாலை திருவெம்பாவைக் கூட்டுப்பிரார்த்தனைச் சபை
    சி. வேலாயுதம்
16. பன்னாலையில் நடைபெற்ற விழாக்கள்
    சித்தாந்த ஆசிரியர் வி. சங்கரப்பிள்ளை
17. மீள் குடியேற்றத்தின் பின் பன்னாலை
    செல்லையா சிவபாலன்
18. பன்னாலையயல் ஆகிவந்த நூல்கள்

# பன்னாலை கிராமம் ~ வரைபடம்



உ
சிவமயம்

# பார்புகழும்பதி பன்னாலை

கந்தையா சோமசுந்தரம்

இந்து மா சமுத்திரத்தில் மாங்காய் வடிவில் அமைந்து காணப்படும் நாடு இலங்கை. இதற்கு மகுடமாக விளங்குவது யாழ்ப்பாணக் குடாநாடு. இதன் வடபால் தெல்லிப்பளைக் கோவிற்பற்றின் தென்மேற்கே பல்வளம் கொளிக்கும் பன்னாலைக் கிராமத்தைப் பார்க்கலாம். குறுகிய நிலப்பரப்பைக் கொண்ட இக்கிராமம் சகல வசதிகளையும் பெற்றுத் தன்னிறைவு காண்கிறது.

பன்னாலை எனும் பெயர் இக்கிராமத்திற்கு எவ்வாறு வந்தது என்பதைச் சற்று நோக்குவோம் பண்படுத்தப்பட்ட நிலத்தைக் கொண்ட பூமி பண்+ஆலை = பண்ணலை எனும் சொல் மருவிப் பன்னாலை எனப் பெயர் பெற்றிருக்கலாம். பருத்தி விளைந்த பூமியாக பருத்தியோலை எனும் குறிச்சி இங்கு காணப்படுவதால் பஞ்சு + ஆலை கொண்ட பிரதேசம் பஞ்சு + ஆலை = பஞ்சாலை பன்னாலையாக மருவி வந்திருக்கலாம். இன்னும் உடுவில் முத்துக்குமாரகவிராயர் அவர்கள் நாமாந்திரிகை எனும் பிரகேளிக்கை வகை அமைந்துள்ள பாடலில் **பன்னாலையான் மிக உருத்தனன்** எனும் தொடரில் பன்னாலையான் என்பது கரும்பு வில்லை உடைய மன்மதனைக் குறிப்பதாக அமைகிறது. இதன் பிரகாரம் இக்கிராமம் முற்காலத்தில் கரும்புத் தோட்டங்களையும், கரும்பு ஆலைகளையும் கொண்டதாக இருந்திருக்க வேண்டும். ஆகவே பல ஆலைகளைக் கொண்ட இப்பிரதேசம் பன்னாலை என அழைக்கப்படுவது சாலப்பொருந்தும்.

சமய ரீதியாகப் பார்க்கும் பொழுது இக்கிராமத்தில் வசிப்பவர்கள் யாவரும் சைவ சமயத்தவர்கள். பல கோவில்களைக் கொண்ட இக்கிராமத்தில் மணியோசை எந்நேரமும் ஒலித்த வண்ணம் இருக்கும். நாட்டு நிலைமை சரியாக இருந்த காலத்தில் பூசைகள், வருடாந்தத் திருவிழாக்கள் உற்சவங்கள் எல்லாக் கோவில்களிலும் சிறப்பாக நடைபெறும். கூட்டுப்பிரார்த்தனைச் சபையால், திருவெம்பாவை, திருப்பள்ளி எழுச்சி, திருமுறைகள்

மார்கழி மாதத் திருவெம்பாக் காலத்தில் மக்கள் குடியிருக்கும் வீதிகளில் அதிகாலை பாடப்படும். திருவிழாக் காலங்களில் கோவில்களில் கூட்டுப் பிரார்த்தனை சிறப்பாக நடைபெறும். சித்திகள் பல செய்த முத்திரிஷியும், கதிர்காம உற்சவ காலத்தில் தெய்வானை அம்மன் வாசல் பூசை ஆண்டு தோறும் செய்து வந்த பஞ்சையரும் பன்னாலை வாசிகளாகும்.

தேவாலயம், வித்தியாலயம் மடாலயம் மூன்றும் கொண்டது பன்னாலை எனும் பதி. இங்கு காலம் சென்ற சைவசீலர் இளையதம்பி அவர்கள் ஆரம்பித்த மடத்தில் சமயச் சொற்பொழிவு சைவசித்தாந்த வகுப்புக்கள், சிவதீட்சை, புராணபடனம் நாயன்மார் குருபூசைகள் ஆகியவை ஒழுங்காக நடைபெற்று வந்தன. ஆனால் பிற்காலத்தில் இராணுவ நடவடிக்கைப் பிரகாரம் செயற்பாடுகள் சற்றுத் தளர்ச்சி அடைந்தன.

இக்கிராமத்து மக்கள் பெரும்பாலும் விவசாயிகளே. பயிர்த்தொழிலை உயர் தொழிலாகக் கொண்டு மாடும் கலப்பையும், பட்டையும் கொடியும் கையில் ஏந்தி இவர்கள் அதிகாலையில் எழுந்து அம்பனை வயலுக்குச் செல்வார்கள். நெற்றி வியர்வை நிலத்திற் சொட்ட அரும்பாடுபட்டு உழைப்பவர்கள். காலப்போக்கில் இவை யாவும் மறைந்து விவசாயம் இயந்திரமயமாக, நடைபெற்றுவருகிறது.

இக்கிராமத்தில் பலா, மா, வாழை, தென்னை ஆகிய பயிர்கள் ஓங்கி வளர்கின்றன. வர்த்தகப் பயிர்களான வெங்காயம், புகையிலை, மிளகாய்ச் செடி, கறற், பீற்றூட், செய்கைபண்ணப்பட்டு வருகின்றன. தானிய வகையிற் குரக்கன், சாமை, பயறு ஆகிய பயிர்கள் விளைவிக்கப்பட்டு வருகின்றன. உணவுப் பஞ்சம் கிடையாது. விவசாய விளைபொருட்கள் உள் ஊரிலும் கொழும்பிலும் சந்தைப்படுத்தப்படுகின்றன.

கல்வித் துறையிலும் இக்கிராமம் நல்ல முன்னேற்றத்தைக் கண்டுளது. பன்னாலை சேர் கனகசபை வித்தியாசாலையில் அக்காலத்தில் கல்விகற்ற மாணவர்கள் ஆசிரியர்களாகவும் வைத்தியர்களாகவும் பெரும் பதவி வகிக்கிறார்கள். சனசமூக நிலையமும் சிறுவர் பாடசாலையும் (முன்பள்ளி) அரிய சேவை ஆற்றிவருகின்றன. அருகே அமைந்துள்ள மகாஜனாக் கல்லூரி இக்கிராம மக்களின் கல்வி வளர்ச்சிக்குப்

பேருதவிபுரிவதாக இருக்கின்றது. மாணவர்கள் சேர் கனகசபை வித்தியாசாலையில் கல்வி கற்றோர் மகாஜனாக் கல்லூரிக்குச் சென்று உயர் கல்வி பயின்றனர். அங்கு கல்வி பயின்ற மாணவர்கள் வைத்திய கலாநிதிகளாகவும், பொறியியலாளர்களாகவும், பட்டதாரிகளாகவும் அரசில் உயர் பதவி வகிக்கின்றனர். அன்று விவசாயக் குடும்பமாக இருந்த பன்னாலையில் வீட்டுக்கொரு பட்டதாரி காணப்படுகிறார்.

இக்கிராம மக்கள் கலை கலாச்சாரம், பண்பாடு ஆகிய துறைகளிலும் மேம்பட்டு வாழ்கின்றனர். காலம் சென்ற திரு. பொன் முத்துக்குமாரு, பொன் தெய்வேந்திரன், திருமதி சரஸ்வதி கோபாலசாமி போன்ற இசை வல்லுநர் பல விருதுகளைப்பெற்று அத்துறையில் அரிய சேவை புரிந்துள்ளனர். நடனத்துறையில் திருமதி கனகேஸ்வரி தேர்ச்சிபெற்றுச் சிறுவர் சிறுமிகளுக்கு நடனப் பயிற்சி அளித்து வந்துளார். திருவருள் விஜயசிங்கம் நாடகத்துறையில் தேர்ச்சிபெற்றவர். இவர் இன்று தமிழ் நாட்டில் சினிமாப்பட இயக்குநராகச் செயற்பட்டு வருகிறார்.

இக்கிராம மக்கள் வேலை நிமித்தம், மலேசியா, சிங்கப்பூர், இந்தியா, பர்மா போன்ற வெளிநாடு களுக்கு 1930 தொடக்கம் சென்றனர். அவர்கள் ஓய்வுபெற்று நல்ல வசதிக ளுடன் இங்கு வாழ்ந்தார்கள். மாடிக்கட்டிடம் அமைத்து உல்லாச வாழ்க்கை வாழ்ந் தார்கள் 1960 வரை இக்கிராமம் காவற்றுறையினரைக் கண்டதில்லை. அவ்வளவிற்கு மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்தார்கள். சிறுச்சிறு பிணக்குகள் ஏற்பட்டாலும் அவை இணக்கமாக முதியோர்களால் தீர்க்கப்படும்.

1992இல் இராணுவ நடவடிக்கையாற் சற்றுத் தளர்ச்சி உற்றது இக்கிராமம். எனினும் 1998இல் மீள்குடியேற்றம் ஆரம்பமான காலத்திலிருந்து புனருத்தாரணவேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கோவில்களும், சனசமூகநிலையமும் புனரமைக்கப்பட்டு இயங்குகின்றன. மக்களும் குடியேறி வாழ முன்வந்துளர். பன்னாலையில் ஒரு பகுதி உயர்பாதுகாப்பு வலயத்தில் இருக்கிறது. கல்வித்துறையில் பெரிதும் முன்னேறிய இக்கிராமம் ஏனைய கிராமங்களுக்கு முன்மாதிரியாக அமையுமென்பது திண்ணம். வாழ்க இக்கிராமம் வளம்பல ஓங்கி.

உ
சிவமயம்

# அரச அங்கீகாரம் பெற்ற பன்னாலை

கனகசபை நடராசர்

இக்கிராமத்திற்கு எவ்வாறு, எப்போது இப்பெயர் சூட்டப்பட்டது என்பது பற்றி ஆராய்ந்து அரச அங்கீகரம் எப்பொழுது கிடைத்தது எனச் சிந்திப்பதற்காக இதனை எழுதுகிறேன்.

யாழ். மாவட்டத்தின் வட பகுதியில் அமைந்திருப்பதுதான் தற்போது வலிகாமம் வடக்குப் பிரதேச செயலகம் என அழைக்கப்படும் யாழ். மாவட்ட செயலாளரின் நிருவாகத்திற்குட்பட்ட அலுவலகமாகும். கீரிமலையிலிருந்து காங்கேயன்துறை ஊடாக மயிலிட்டி வரை உள்ள கடல் இதன் வடக்கு எல்லையாகும். தெற்கு எல்லையாகத் தாவடிக் கிராமம் வரை இவ்வலுவலக நிருவாகம் 1965ம் ஆண்டு வரை இருந்தது. அவ்வாண்டுவரை இந்த அலுவலகம் வலிகாமம் வடக்குப் பிரிவு இறைவரி உத்தியோகத்தர் பிரிவு (office of the Divisional Revenul Officer, Valikamam North) என இருந்தது. அப்போது இவ்வலுவலகம் இருபத்திரண்டு கிராமத் தலைமைக்காரர் பிரிவுகளைக் கொண்டிருந்தது.

முன்னைய காலத்தில் பிரதேச இறைவரி உத்தியோகத்தர் அலுவலகம் எனவும் (office of the Divisional Revenue Officer), 1973ஆம் ஆண்டிற்குப் பின் பிரதேச உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் எனவும் (Office of the Divisional Assistant Government Agent), தற்போது பிரதேச செயலகம் எனவும் (Divisional Secretarial) அழைக்கப்படுவதும் இவ்வலுவலகத்திற்கு ஏற்பட்ட பெயர் மற்றங்களாம். அதேபோன்று ஆங்கிலலேயர் ஆட்சிக் காலத்தில் உண்டாக்கப்பட்ட Village Headman என்னும் பதவி **கிராம தலைமைக்காரன்** எனவும் சிங்கள மொழியில் கிராம நிலதாரி எனவும் பெயர் சூட்டப்பட்டிருக்கும் பதவிப் பெயர் தமிழில் **கிராம அலுவலர்** என மொழிபெயர்க்கப்பட்டுப் பாவனை வழக்கத்தில் உள்ளது. இப்பதவிப்

பெயருடையோர் ஊர் மக்களின் பணி புரிபவர்களாக இருப்பதனால் இவர்களை **ஊர்ப்பணி அலுவலர்** என அழைப்பது சாலப் பொருத்தமாக இருக்குமெனக் கருதப்படுகிறது.

பதினைந்து கிராம தலைமைக்காரர் பிரிவுகளைக் கொண்ட வலிகாமம் வடக்கு இறைவரி உத்தியோகத்தர் அலுவலகம், உதவி அரசாங்க அதிபர் அலுவலகமாக 1973ஆம் ஆண்டு தரம் உயர்த்தப்பட்ட பின்னர், 1982ம் ஆண்டளவில் விசேட சேவை உத்தியோகத்தர்களென (Special Services Officer) நியமனம் பெற்றவர்களுள் எண்மர் வலிகாமம் வடக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் கடமையேற்றனர். ஆரம்பத்தில் ஒவ்வொரு விசேட சேவை உத்தியோகத்தரும் இரு கிராம அலுவலர் நியமிக்கப்பட்டுப் பின்னர் கிராம அலுவலர் சேவைக்குள் உள்ளீர்க்கப்பட்டனர். இதன் காரணமாக வலிகாமம் வடக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் கிராம அலுவலர் பிரிவு எண்ணிக்கை பதினைந்திலிருந்து இருபத்து நான்காக அதிகரித்தது.

இவ்வெண்ணிக்கை அதிகரிப்பின் காரணமாகத் தெல்லிப்பழை தென்மேற்குக் கிராம தலைமைக்காரன் பிரிவிலிருந்து கருகம்பனை, மயிலங்கூடல் ஆகிய இரு கிராமங்கள் முழுமையாகவும், கொல்லன்கலட்டிக் கிராமத்தின் ஒரு பகுதியும் நீக்கப்பட்டுப், பூகோள ரீதியில் ஒன்றுடன் ஒன்று அண்மித்திருந்த கிராமங்களான பன்னாலை, விழிசிட்டி, தையிட்டிப் புலம் ஆகிய கிராமங்கள் முழுமையாகவும் கொல்லன் கலட்டியின் மிகுதிப் பகுதியும் ஒன்றிணைக்கப்பட்டுப் 'பன்னாலை' கிராம அலுவலர் பிரிவு (ஜெ64) என ஒரு கிராம அலுவலர் பிரிவு உண்டாக்கப்பட்டது.

அரச சேவையில் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களாக (Cultivetion Officer) நியமனம் பெற்றவர்கள் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்கு மாற்றப்பட்டனர். 1989ஆம் ஆண்டளவில் இப்பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களும் கிராம அலுவலர் சேவைக்குள் உள்ளீர்க்கப்பட்டனர். இதனால் வலிகாமம் வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருபத்து நான்கு பிரிவுகளாக இருந்த கிராம அலுவலர் பிரிவு நாற்பத்தைந்து ஆகியதுடன் சனத்தொகை, இடப்பரப்பு ஆகியவை காரணமாக புதிய

கிராம அலுவலர் பிரிவுகள் உண்டாக்கப்பட்டதுடன் அவற்றின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டதோடு எல்லைகளும் வரையப்பட்டு நிர்ணயிக்கப்பட்டன.

ஏலவே பன்னாலைக் கிராம அலுவலர் பிரிவு (ஜெ64)ல் உள்ளடக்கப்பட்டிருந்த விழிசிட்டி, தையிட்டிப் புலம் அவற்றோடிணைந்த குறிச்சிகள் ஒன்றாக்கப்பட்டு அங்கு வாழும் மக்களின் கோரிக்கைக்கிணங்க அப்பிரிவு 'வித்தகபுரம்' (J223) எனவும் எஞ்சிய பகுதி பன்னாலை (J224) கிராம அலுவலர் பிரிவு எனவும் தொடர்ந்து இயங்க யாழ் அரச அதிபர் அனுமதி வழங்கினார்.

இவ்வாறு பிரித்தெடுக்கப்பட்ட 'பன்னாலைக் (J224)' கிராம அலுவலர் பிரிவு வேறு சிறு கிராமங்களை உள்ளடக்காத சிறிய கிராமம் ஆகும். இதன் உட்பிரிவு அங்குள்ள காணிப்பெயர்களைக் கொண்டவையாக உள்ளன. உதாரணம் அறனானை, வியாழியக் கடவை, களனை, வல்லுவத்தை, சித்திலாவத்தை, தச்சன்புலன், மயிலப்பை, பங்கிலிட்டி, கஞ்சிட்டி, நெருங்சிலலை, பருத்தியோலை, தம்மழை, நாவலடி, போக்கத்தை, குண்ணாவத்தை, வரத்தலம், கூத்தன்சீமா, எருப்பிட்டி, குமகடை, கயிலாப்புலம் போன்றவை.

இப்பிரிவில் அமைந்துள்ள பாடசாலை நூற்று நாற்பது (140) வருடங்கள் பழமைவாய்ந்தது. இப்பாடசாலை ஆரம்பத்தில் விழிசிட்டிக் கிராமத்தில் அமைந்திருந்தது. பின்னர் இப்பாடசாலை பன்னாலைக்கு மாற்றப்பட்டு 'சிவஞான வித்தியாசாலை' எனப் பெயரிடப்பட்டிருந்தது. பின்னர் 'சேர் கனகசபை வித்தியாசாலை' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு 1960ஆம் ஆண்டு அரசாங்கத்திற்குக் கையளிக்கப்பட்டதோடு, அன்றிலிருந்து 'பன்னாலை சேர் கனகசபை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை'யெனக் கல்வித்திணைக்களம் அங்கீகரித்திருந்தது. இக்கிராமத்தவரும் அயல் கிராமங்களில் வசித்தவர்களில் 99 வீதமானோரும் தமது ஆரம்பக்கல்வியை இங்கேயே பெற்றதோடு அக்காலத்தில் பல்துறைகளிலும் உயர் பதவியை வகிப்பதற்கான அடித்தளக் கல்வியையும் ஒழுக்க நெறியையும் இப்பாடசாலையில் பெற்றனர். தற்போது லண்டன் மாநகரில் சிறந்த வைத்திய கலாநிதியாக விழங்கும் திரு. வயிரவப்பிள்ளை சிவஞானவேல்,

இலங்கை நிருவாக சேவை முதலாம் வகுப்பின் உச்சச் சம்பளத்தைப் பெற்று மத்திய அமைச்சின் மேலதிக செயலாளர் பதவியிலிருந்து இளைப்பாறிய திரு. கந்தையா சண்முகலிங்கம் ஆகியோரை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

இங்கு வசித்த, வசிக்கும் விவசாயிகளால் இப்பிரிவின் மண் வளத்திற்கேற்ப பல்வேறு பயிர்கள் செய்கை பண்ணப்பட்டன. சவர்த்தன்மை வாய்ந்த களனை, வல்லுவத்தை, தச்சன்புலம், சித்திலாவத்தைப் பகுதிகளில் வெற்றிலைச் செய்கையும், சிறு கற்களுடன் சேர்ந்த மண் கொண்ட மந்துக்காடு, இயக்காவளை, குயிலாளனை, நவக்கீரி ஆகிய பகுதிகளில் கொடிமுந்திரியும் ஏனைய பகுதிகளில் அவ்வவ் மண் வளத்திற்கேற்ப வாழை, வெங்காயம், மிளகாய், புகையிலைச் செடி போன்றவையும் பணவருவாயைக் கருத்திற்கொண்டு பயிரிடப்பட்டு வருகின்றன.

மலையாளக் கம்பனி இயங்கிய காலத்தில் அக்கம்பனி மூலம் புகையிலை ஏற்றுமதி செய்தோர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 'கதிரேசு மக்கள்' எனச் செல்லமாக அழைக்கப்படும் கதிரேசு கார்த்திகேசு, கதிரேசு வைத்திலிங்கம், கதிரேசு சண்முகம், கதிரேசு சுந்தரமூர்த்தி மற்றும் கந்தையா முருகையா, கந்தையா திருநாவுக்கரசு ஆகியோராவர். இத்தொழில் 1990ஆம் ஆண்டிற்குப் பின் முற்றாக் இக்கிராமத்தில் நடைபெறுவதில்லை.

விவசாயிகள் பலர் தற்போது தேடிப் பெறமுடியாத தானியங்களான வரகு, குரக்கன், சாமை போன்ற பயிர்ச்செய்கைகளில் ஈடுபட்டனர். பனம் பழத்தை ஒடியல் மாவைப் பயன்படுத்தித் தாமும், தம்சுற்றத்தவர்கள் அயலவர்ளும் சலரோக நோயின் தாக்கத்தி லிருந்து தப்பினர்.

விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்துவதற்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் உட்கட்டமைப்பாவன போக்குவரத்து வசதியும் விற்பனை நிலையமுமாகும். அக்காலத்தில் இயங்கிய தெல்லிப்பழைக் கிராமசபை கூத்தன்சீமா என்றழைக்கப்படும் பகுதியில் ஒரு சிறிய தினச் சந்தையை ஏற்படுத்திக் கொடுத்துதவியது. உள்ளூரில் உற்பத்திசெய்யப்பட்ட மரக்கறி வகைகளை இச்சந்தையில் விற்பனை செய்ததன் மூலம் உற்பத்தியாளர்களும் அவற்றை நுகர்வோரும் விற்றும்

வாங்கியும் பயனடைந்தனர். பல வருடங்களாக மக்கள் இடம்பெயர்வு காரணமாக இயங்காதிருந்த இச்சந்தை ஐந்து வருடங்களுக்கு முன் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் அவர்களாற் புனரமைக்கப்பட்டிருந்தும் புதிய சந்தைக் கட்டிடம் இன்றுவரை பாவனைப்படுத்தப்படவில்லை. இக்கிராமத்தில் இயங்கும் கணேசா சனசமூக நிலையமும், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமுமிணைந்து மக்கள் நலன் கருதி இச்சந்தையை இயங்கச் செய்தல் வேண்டும்.

இக்கிராமம் விவசாயத்துறையில் ஏற்பட்ட முன்னேற்றம் காரணமாக உற்பத்திப் பொருள்களைச் சுன்னாகம் சந்தைக்கும் பிற இடங்களுக்கும் சந்தைப்படுத்தும் நோக்கோடு கொண்டு செல்லும் தேவை ஏற்பட்டது. அக்காலத்தில் இக்கிராமத்ினூடாகக் கீரிமலை செல்வதற்கு ஒரு சிறிய வீதி தெல்லிப்பழை கிராமசபையால் நடாத்தப்பட்டு வந்தது. பேரூந்து செல்லக்கூடியதாக இச்சிறு வீதி மக்கள் பங்களிப்புடன் இருமருங்கிலும் அகலமாக்கப்பட்டுப் பெருந்தெருக்கள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இவ்வீதிக்கு அம்பனை - பன்னாலை - கீரிமலை வீதியெனப் பெயர் சூட்டப்பட்டு வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் பராமரிக்கப்படுகிறது. வீதி திருப்திகரமாக அமைக் கப்பட்டதனால் இலங்கைப் போக்குவரத்துச் சபை வழிப்பாதை 795 என கீரிமலையிலிருந்து பன்னாலை தெல்லிப்பழை ஊடாக யாழ்ப்பாணம் வரை பேரூந்துச் சேவை நடத்தியது. அக்காலத்தில் கீரிமலையிலிருந்து அதிகாலை 4.00 மணிக்கு ஆரம்பமாகிய பேரூந்துச்சேவை அனைவருக்கும் குறிப்பாக விவசாயிகளுக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருந்தது. போர்ச்சூழல் காரணமாக இச்சேவையும் பாதிப் படைந்துள்ளது.

1950ம் ஆண்டளவில் இக்கிராமத்தில் ஓர் உப அஞ்சல் அலுவலகம் இக்கிராமப் பெயருடன் நிறுவுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. 'பன்னல' என்னும் பெயருடன் குருநாகல் மாவட்டத்தில் ஓர் அஞ்சல் அலுவலகம் நிறுவப்பட்டதனால் இங்கு நிறுவப்பட்ட உப அஞ்சல் அலுவலகத்திற்குத் 'தெல்லிப்பழை மேற்கு' எனப் பெயரிடப்பட்டது. முன்னர் அம்பனை கொல்லன்கலட்டி வீதியில் அமைந்திருந்த இந்த அஞ்சல் அலுவலகம் நாட்டில் நிலவிய போர்ச் சூழல் காரணமாக இங்குள்ள பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக் கிளைக் கட்டிடத்தில் தற்காலிகமாக இயங்குகிறது.

இங்கு அமைந்துள்ள ஆலயங்களுள் மிகப் பழமை வாய்ந்த சரித்திரப்பிரசித்தி பெற்ற ஆலயம் 'வரத்தலம் கற்பக விநாயகர்' ஆகும். இது மாவை முருகன் ஆலயத்தை ஸ்தாபித்த மாருதப்புரவீகவல்லி அவர்களால் நிறுவப்பட்ட பல விநாயகர் ஆலயங்களுள் ஒன்றெனவும் கருதப்படுகிறது. இங்கு வேறோர்கருத்தும் நிலவுகிறது. அதாவது 'கற்பகம்' என்பவரால் வரத்தலம் புலம் என்னும் காணியில் நிறுவப்பட்டதால் இது 'வரத்தலம் கற்பக விநாயகர்' ஆலயம் எனப்படுகிறது எனக் கூறுபவர்களும் உள்ளனர். இங்குள்ள பாலசுப்பிரமணியர் ஆலய அமைப்பும் அங்குள்ள சிவன் விக்கிரகமும் பிரசித்தி வாய்ந்தவையாகும். அத்துடன் சிவபூதராயர் ஆலயமும், இரு வைரவர் ஆலயங்களும், வீரபத்திரர் ஆலயமும் இங்கு உள்ளன.

அளவெட்டி வடக்கில் அமைந்துள்ள அம்பாள் ஆலயம் இப்போது இக்கிராம சேவகர் பிரிவுள் அடங்குகிறது. கேணிப்பிட்டி இடுகாடும் அப்படியே.

யா/ மகாஜனக் கல்லூரி இக்கிராமத்தின் கிழக்கெல்லைக்கு அருகாமையில் நிறுவப்பட்டுள்ளது. இக்கல்லூரி அகில இலங்கை ரீதியில் கல்வி, விளையாட்டு, நாடகம் ஆகிய துறைகளில் புகழ் பெற்றிருந்தது. அக்கல்லூரியில் கல்வி கற்ற இக்கிராம மாணவர்கள் பல்துறையிலும் இன்றும் புகழுடன் திகழுவதை இலங்கை வாழ் மக்கள் அனைவரும் நன்கு அறிவர்.

எமது கிராமப்பெயர் 1960ம் ஆண்டில் 'சேர் கனகசபை வித்தியாசாலை' அரசாங்கத்திற்கு கையளிக்கப்பட்டபின் 'பன்னாலை சேர் கனகசபை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை' என கல்வித் திணைக்களம் அங்கீகரித்தமையால் 1960ஆம் ஆண்டே இக்கிராமப் பெயர் அரச அங்கீகாரம் பெற்றதெனக் கொள்ளலாம். இதன் காரணமாக முன்னைய கிராமத் தலைமைக்காரர் பிரிவிலிருந்து 1982ம் ஆண்டு பிரித்தெடுக்கப்பட்ட பொழுது 'பன்னாலை' கிராம அலுவலர் பிரிவு மீண்டும் அரசாங் கத்தால் அங்கீகரிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

உ
சிவமயம்

காங்கேயன் கல்வி மலரில் இருந்து பெற்ற பாடசாலை வரலாறு

# பன்னாலை சேர் கனகசபை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை

வை. பொன்னையா
அதிபர்.

ஏறக்குறைய நூற்றுமுப்பது (1855) ஆண்டுகளுக்கு முன்னர் விழிசிட்டியிலே நிறுவப்பட்ட இப்பாடசாலை பின்னர் பன்னாலையில் இன்றுள்ள இடத்திற்கு மாற்றப்பட்டது.

இப்பாடசாலையைக் கல்வியறிவு ஒழுக்கங்களிற் சிறந்தவரும் அம்பலவாணச் சட்டம்பியார் என அழைக்கப்பட்டவருமான அம்பலவாண உபாத்தியாயர் அவர்கள் ஆரம்பித்தார். அம்பலவாண உபாத்தியாயர் தேகவியோகமடைந்த பின் அவரது மாணாக்கருள் ஒருவராகிய அருணாசல உபாத்தியாயர் அவர்கள் பாடசாலையைச் செவ்வனே நடத்திவந்தனர். அவர்கள் அகால மரணமடைய இப்பாடசாலை சிறிது தளர்ச்சியுற்றது.

அக்காலத்தில் சைவாபிமானியும் பரோபகாரியுமாய் விளங்கிய பன்னாலை சங்கரநாதர் கனகசபைப்பிள்ளை அவர்கள் தமிழ்ச் சிறார்களின் கல்வியபிவிருத்தியை அவாவி அப்பாடசாலைச் சொந்தக்காரருடைய சம்மதத்தோடு முகாமையையேற்று பாடசாலையை இன்றுள்ள இடத்திலே நிறுவி நடத்திவந்தார். இப்பாடசாலை 1869[2] ஆம் ஆண்டு உதவி நன்கொடை பெறும் பாடசாலையாகப் பதிவுசெய்யப்பட்டது. முதன் முதலில் தெல்லிப்பழைக் கிராமத்தில் இவ்வாறு பதிவுசெய்யப்பட்ட சைவப் பாடசாலை இதுவே. 1916 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ஒரு பாடசாலை விடுகைச் சான்றிதழில் இப்பாடசாலையின் பெயர் விழிசிட்டி ஆண்கள் தமிழ்ப் பாடசாலை (Viliciddy Boys Vernacular School) என எழுதப்பட்டுள்ளது. எனவே, இக்காலத்தில் இது ஆண்கள் பாடசாலையாகவே இயங்கியது என்று அறிய முடிகிறது.

சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவரிடம் பல ஆண்டுகள் முறைப்படி தமிழ் பயின்ற பண்டிதர் சி. கதிர்ப்பிள்ளை அவர்கள் தமது சகோதரர் திரு. சி. விசுவநாதர் அவர்களுடன் இணைந்து விழிசிட்டியில் ஒரு பாடசாலையை நடத்திவந்தார். 1920

ஆம் ஆண்டில் இவ்விரு ஆசிரியர்களுடைய இணக்கத்துடன் இப்பாடசாலையைப் பன்னாலையில் இயங்கி வந்த பாடசாலை முகாமையாளர் தமது பாடசாலையுடன் இணைத்தார். இருவரும் அப்பாடசாலை ஆசிரியராயினர். இணைந்த பாடசாலையில் பெண்களும் இருந்ததால் அது விழிசிட்டித் தனியார் தமிழ்க் கலவன் பாடசாலை (Viliciddy Private Tamil Mixed School) என்ற பெயருடன் இயங்கி வந்தது.

சங்கரநாதர் கனகசபைப்பிள்ளை[3] அவர்களின் பின்பு அவரது மருகரும் நியாயதுரந்தரருமாகிய திரு. அ. சம்பந்தர் அவர்கள் முகாமையாளரானார். பின் பிள்ளையவர்களின் சிரேட்ட புத்திரரும் நியாயவாதியுமாகிய திரு. க. மாணிக்கத்தியாகேசர் அவர்கள் முகாமையாளரானார். பின் பிள்ளையவர்களின் மருகருள் ஒருவரும் சமாதான நீதிபதியும் நியாயதுரந்தரருமாகிய திரு. வ. அப்பர்சுவாமி அவர்கள் முகாமையாளரானார். பின்னர் பிள்ளையவர்களின் மருகருள் ஒருவராய நீதிபதியும் சமாதான நீதிபதியுமாகிய திரு. பூ. வைத்தியலிங்கம் அவர்கள் முகாமையை ஏற்றார். இறுதியில் பிள்ளையவர்களின் இளைய புதல்வர் திரு. க. ஸ்ரீசுந்தரமூர்த்தி 1935இல் முகாமையாளராகி 1.11.1960 இல் பாடசாலை கல்விப் பணிப்பாளர் முகாமையுள் வரும்வரை பதவி வகித்தார்.

1934 முதல் 1954 வரையிலான இருபது வருடங்களை இப்பாசடாலையின் பொற்காலம் எனப் பாராட்டுவது இப்பாடசாலையோடு நெருங்கிய தொடர்புடையோரிடை நிலவுவதொரு மரபு. இக்காலத்தில் இப் பாடசாலையின் தலைமையாசிரியராக அமர்ந்து பாடசாலையைச் சகல துறைகளிலும் முன்னேற்றுவதற்காக அரும் பணியாற்றிய அமரர் பண்டிதர் சி. கதிர்ப்பிள்ளை அவர்களின் தன்னலமற்ற சேவை என்றென்றும் நினைவு கூருவதற்குரியதாகும். அவர் காலத்திலே உதவியாசிரியர்களாகப் பணிபுரிந்தோரும் பாராட்டிற்குரியவரேயாவர். இவர்களிற் பலர் பண்டிதர் அவர்களின் மாணவரேயென்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இக்காலப் பகுதியிலே முகாமையாளராயிருந்து பாடசாலை வளர்ச்சியிற் கண்ணும் கருத்துமாக இருந்தவர் திரு. க. சிறீசுந்தரமூர்த்தி அவர்கள்.

1924 ஆம் ஆண்டுவரை 5ஆம் வகுப்பு வரை கொண்டிருந்த இப்பாசடாலை படிப்படியாக உயர்ந்தது. 1930 ஆம் ஆண்டு இப்பாடசாலையில் சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திர வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. 1931ஆம் ஆண்டு முதன் முறையாக 5 மாணவர் சி.பா.த.ப. தேர்வுக்குத் தோற்றினர். 1935இல் விளையாட்டுப்போட்டி முதன் முதலாக நடத்தப்பட்டது. 1937இல் கோப்பாய்த் தொகுதி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. கு. வன்னியசிங்கம் அவர்களால் வித்தியாசாலைப் பெற்றோர் ஆசிரியர் சங்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. தெல்லிப்பழைப் பகுதியில் முதலில் ஆரம்பிக்கப்பட்ட பெற்றோர் ஆசிரியர் சங்கம் இதுவேயாகும்.

1935ஆம் ஆண்டு நவம்பர் 28ஆம் திகதி முதல் முகாமையாளரின் வேண்டுகோட்படி முன்னாள் முகாமையாளர் பெயரில் விழிசிட்டி கனகசபை தமிழ்க் கலவன் பாடசாலை எனப் பெயர் மாற்றப்பட்டது. தமிழ்ச் சமூகத்தின் சட்டசபை உறுப்பினராகிப் புகழ்பெற்ற சேர் அம்பலவாணர் கனகசபை அவர்களின் நினைவாக 15.1.1947இல் இப் பாடசாலைப்பெயர் சேர். கனகசபை வித்தியாசாலை, விழிசிட்டி எனப் பெயர் மாற்றப்பட்டது. 15.9.1956 முதல் பாடசாலைப் பெயர் சேர் கனகசபை வித்தியாசாலை, பன்னாலை, தெல்லிப்பழை என வழங்க அனுமதிக்கப்பட்டது. 1964/65 ஆம் ஆண்டுக்குரிய வருடாந்தத் திரட்டில் முதன் முறையாகப் பன்னாலை சேர் கனகசபை வித்தியாசாலை என்ற பெயர் இடம்பெற்றுள்ளது.

பாடசாலைகளை அரசு பொறுப்பேற்கும் திட்டம் வெளியிடப்பட்டபோது இப்பாடசாலை முகாமையாளர் 1.11.1960 முதல் அரசாங்கத்திடம் தாமாகவே முன்வந்து பாடசாலையை அரசிடம் ஒப்படைத்தார்.

இப்பாடசாலையிலே தலைமையாசிரியர்களாகப் பிரம்மஸ்ரீ இ. முத்துக்குமாரசுவாமிக் குருக்கள், திரு. ஆ. வேதவனம், திரு. தி. அருளப்பு, திரு. ஆ. சரவணமுத்து, திரு. அ. பரமசாமி, திரு. ம. சிற்றம்பலம், திரு. க. கந்தையா, பண்டிதர் சி. கதிரிப்பிள்ளை (ஆறுமுகம்; 12.9.52 - 24.8.54), பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை (1.9.54 - 59), திரு. கா. கதிர்காமத்தம்பி (59 - 31.12.70), திரு. செ. பூலோகேந்திரன் (1.1.71 - 31.8.73), சைவப்புலவர் வ. செல்லையா (7.11.73 - 1.5.78) ஆகியோர் கடமையாற்றினர்.

15.9.1978 முதல் இப்பாடசாலையின் பெருமைக்குரிய பழைய மாணவர்களுள் ஒருவரான திரு. வை. பொன்னையா அவர்கள் அதிபராகப் பணியாற்றி வருகிறார். இங்கு பயிற்றும் ஆசிரியர்களுட் பலரும் பாடசாலையின் பழைய மாணவர்களே. இப்போது பாடசாலையில் 13 ஆசிரியர்களும் 257 மாணவர்களும் உள்ளனர்.

கல்விப் பெறுபேறுகள் மிகச் சிறப்பாக அமைந்துள்ளன. 1980, 1981 ஆம் அண்டுகளில் 15, 17 வயதுப் பிரிவுகளுக்குரிய பெண்கள் குழுக்கள் தாச்சிப் போட்டியில் முதலிடம் பெற்று விருதைப் பெற்றனர். மெய்வல்லுநர் போட்டியிலும் சங்கீதப் போட்டியிலும் மாணவர்கள் மாவட்டப் போட்டிகளுக்குத் தெரிவுசெய்யப்பட்டனர். மாணவரிடையே ஒழுங்கும் அமைதியும் நிலவுகிறது. இவை இப்பாடசாலையின் எதிர்காலம் பற்றிப் புது நம்பிக்கை ஊட்டுகின்றன. எதிர்கால உயர்வு என்ற நம்பிக்கை ஒளியை நோக்கிப் பாடசாலை அடிஎடுத்து வைத்துள்ளது. இதற்குப் பாடசாலைச் சமூகத்தைச் சேர்ந்த அனைவரும் ஒத்துழைப்பு நல்கிவருகின்றனர்.

அடிக்குறிப்புக்கள் :

1. இப்பாசடாலை விழிசிட்டி சிவஞான வித்தியாசாலை என்ற பெயரோடு ஆரம்பிக்கப்பட்டது. உதவி நன்கொடைபெறும் பாடசாலையான பின் காலத்துக்குக் காலம் பல பெயர்களைப் பெற்றது. விழிசிட்டி சிவஞான வித்தியாசாலை என்ற பெயர் பாடசாலைக் கட்டிடமொன்றில் நிலையாகச் செதுக்கப்பட்டிருந்தது.

2. இப்பாடசாலை 1840 ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்டதாக விழிசிட்டி சனசமூக நிலயத்தினர் எழுதியனுப்பிய கட்டுரை கூறுகிறது. தெல்லிப்பழையிற் கல்வி என்ற பேராதனைப் பல்கலைக்கழக டிப்ளோமா ஆய்வேடு இது 1855, 1857 இல் ஆரம்பிக்கப்பட்டதாகக் கூறுகிறது.

இப்பாடசாலை 1865ஆம் ஆண்டு உதவி நன்கொடை பெறும் பாடசாலையாகப் பதிவுசெய்யப்பட்டதாக இதன் தாது வருடம் ஐப்பசி மாதம் 10ஆம் திகதிப் பரிசளிப்பு விழாவில் தலைமையாசிரியர் பண்டிதர் சி. கதிர்ப்பிள்ளை அவர்களால் படிக்கப்பட்ட அறிக்கை கூறுகிறது.

1865இல் ஆரம்பிக்கப்பட்டதென்றும் 1869இல் பதிவுசெய்யப்பட்டதென்றும் பாடசாலை நூற்றாண்டு விழாத் (1965.08.01) தலைமையாசிரியர் (கா. கதிர்காமத்தம்பி அவர்களின்) அறிக்கை கூறுகிறது.

3. விழிசிட்டியில் பாடசாலை நடைபெற்ற காலத்தில் முகாமையாளராக இருந்தவர் சங்கரநாதர் கனகசபையின் சகோதரர் ச. வைத்தியலிங்கம் எனத் தாது வருட (1936) அறிக்கை கூறுகிறது.

அருணாசல உபாத்தியாயர் மறைவுக்குப் பின் சங்கரநாதர் கனகசபை பாடசாலையைப் பொறுப்பேற்றதாகத் தாது வருட அறிக்கை கூறுகிறது.

கனகசபை அவர்களைத் தொடர்ந்து வி. அப்பர்சுவாமி பூ. வைத்தியலிங்கம், வி. அப்பர்சுவாமி, க. ஸ்ரீசுந்தரமூர்த்தி ஆகியோர் முறையே முகாமையாளர்களாக இருந்ததாகத் தாது வருட அறிக்கை கூறுகிறது.

- பதிப்பாளர்

உ
சிவமயம்

# பன்னாலைக் கணேச சனசமூக நிலையம்

செயலாளர் : **தி.சு. விக்நேஸ்வரன்.**

கிராம மக்களின் முன்னேற்றம் கருதி இங்குள்ள பெரியார்களும் இளைஞர்களும் எடுத்த நன்முயற்சியால் 1950.12.28இல் இங்கு கணேச சனசமூகநிலையம் தாபிக்கப்பட்டது. ஆரம்ப காலத்தில் ஓலைக்குடிசையில் இயங்கிய இந்நிலையம், தனக்கென நிலமோ, நிரந்தர கட்டிடமோ இன்றி இருந்து வந்தது.

எமது சனசமூக நிலையம் நிலையான ஓர் இடத்தில் அமையவேண்டும் எனும் நல்லெண்ணம் கொண்ட பெரியார்களில் ஒருவரான திரு. வி.எஸ்.சி. சிங்கம் அவர்கள் நான்கு பரப்புக் காணியை இலவசமாக எம் நிலையத்திற்கு அன்பளிப்புச் செய்தார். அவர்களுக்கு எம் நிலையம் என்றென்றும் கடப்பாடுடையதாக இருக்கும். அன்பளிப்புச் செய்யப்பட்ட இக்காணிக்குத் தர்மகர்த்தாக்களும் நியமிக்கப்பட்டனர். அவர்களில் திரு. வி.எஸ்.சி. சிங்கம், திரு. ச. தம்பு கனகரத்தினம், திரு. வே. சண்முகம் ஆகியோர் காலமாகியுளர். திரு. வி. சங்கரப்பிள்ளை மாத்திரம் இன்றும் இயங்கி வருகிறார்.

நிலத்தை அன்பளிப்பாகப் பெற்றதும், நிலையான கட்டிடம் ஒன்றை அமைக்க வேண்டும் எனும் எண்ணம் மக்கள் மனதில் உருவெடுத்தது. கிராம மக்களதும் வெளியூர் வாசிகளதும் பொருளுதவி கிடைத்தது. இளைஞர்களதும் பெரியோர்களதும் விடாமுயற்சியால் ஒரு வடிவமைப்பான கட்டிடம் உருவாக்கப்பட்டது. இக்கட்டிடத்தை முன்னைநாள் தலதாபன கௌரவ அமைச்சர் ஆர். பிரேமதாசா அவர்கள் 31.01.1970இல் திறந்துவைத்தார். எமது அரசியற் பேரவை உறுப்பினர் திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்கள். 1975 யூன் மாதம் எமது நிலையம் வெள்ளி விழாவை மிக விமரிசையாகக் கொண்டாடியது. ஆனித் திங்கள் 21, 22, 23இல் மூன்று நாடகம் ஆகிய முத்தமிழில் அமைந்த நிகழ்ச்சிகள் கோலாகலமாக நடைபெற்றன.

இக்கிராம மக்கள் உடல்வளமும் உளவளமும் பெற்று யாதும் ஊரே யாவரும் கேளிர் எனும் உயர்ந்த தத்துவத்திற்கு அமைய ஒற்றுமையாக வாழ்தல், இயல் இசை நாடகம் எனும் முத்தமிழை வளர்த்தல் ஆகிய உன்னத இலக்கைக் கொண்டது எமது

சங்கம். விளையாட்டுப் போட்டிகள், கருத்தரங்குகள் நாடக சங்கீத விழாக்கள். அறிஞர்களின் அறிவுரைகள் காலத்துக்குக் காலம் நடாத்தப்பட்டு இந்நிலையம் அரிய சேவை புரிந்துவருகிறது. தற்பொழுது விளையாட்டுத் துறையைப் பன்னாலை கணேச விளையாட்டுக் கழகம் பொறுப்பேற்றுச் சிறப்பாக இயங்குகிறது. எமது கிராமத்தைச் சுத்தமாக வைப்பதற்குக் கோவில் வீதிகள் தெருவீதிகள் மற்றும் பொதுநிலையங்களைச் சிரமதான அடிப்படையில் மக்கள் சுத்திகரித்து வருகிறார்கள் இந்நிலையத்தில் வாசிகசாலையும் அமைந்துளது. மக்கள் தமது நேரத்தைப் புதினப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் அறிவுசார்ந்த நூல்களை வாசித்துத் தமது ஓய்வுநேரத்தை நல்ல முறையில் பயன்படுத்துகின்றனர். அது மட்டுமின்றிச் சிறுவர்கள் கல்வி பயில முன்பள்ளியும் இந்நிலையத்தில் அமைத்துளார்கள். இவ்வாறு பல சிறப்பான செயற்பாடுகளில் ஈடுபாடுகொண்டு இந்நிலையம் வலிவடக்கில் முன்னிலை வகிக்கிறது.

பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், கல்விமான்களாகிய உள்நாட்டு அறிஞர்களும், இங்கிலாந்துப் பிரதிநிதி சேர். சிசில் செயன், லேடி செயன் திரு. ஆர்.டி. வோல், திரு. ஏ.எஸ்.பி. கிம்பிறி போன்ற வெளிநாட்டு அறிஞர்களும் அடிக்கடி வந்து அறிவு புகட்டி வருகிறார்கள். உள்ளூராட்சி உத்தியோகத்தர்கள் நிலையத்திற்கு வேண்டிய உதவிகளைப் புரிந்து வருகின்றனர். முன்னைநாள் சுகாதாரப் போதனாசிரியர் திரு. க. பாலசுப்பிரமணியம் அவர்கள் 25.02.69இலும் 29.08.70இலும் சுகாதாரப் படக்காட்சிகளை நடாத்தி மக்கள் சுகாதார வழிமுறைகளைக் கடைப்பிடிக்க வழிவகுத்தார். க.பொ.த. (சாதாரணம்) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குப் படித்த வாலிபர்களால் இலவசக் கல்வி ஊட்டப்படுகிறது.

1992இல் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையால் இந்நிலையக் கட்டிடம் இடிபட்டிருந்தது. மக்களும் இடம்பெயர்ந்து சென்றுவிட்டனர். அக்காலத்தில் நிலையம் இயங்காதநிலையில் இருந்தது. எனினும் 1998இன் பின்னர் மக்கள் மீள்குடியேறிவந்தனர். இந்நிலையமும் புனர்வாழ்வு புனருத்தாரண அமைச்சின் உதவியாலும் பாராளுமன்ற யாழ்ப்பாண மாவட்டப் பிரதிநிதிகளின் உதவியாலும், புனரமைக்கப்பட்டு வழமைபோல் இயங்கிவருகின்றது. இந்நிலையம் இத்துணைச் சிறப்புடன் இயங்க உறுதுணையாக இருந்தவர்கள் நிலையத்தலைவர், திரு. சி. சிவபாலன் அவர்களும் தி. க.விக்னேஸ்வரன் (செயலாளர்) அவர்களும் திரு. சி. வேலாயுதம் அவர்களும் மற்றைய பன்னாலை வாழ் இளைஞர்களும் என்றால் அதுமிகையாகாது. இந்நிலையம் மேன்மேலும் வளர எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

**ஞிமிறென இன்புறு.** - *மகாகவி பாரதியார்*

உ
சிவமயம்

# பன்னாலைக் கூட்டுறவுச் சங்கம்

கந்தையா சண்முகலிங்கம்.

'கூட்டுறவு நாட்டுயர்வை நல்கும்' எனும் சுலோகத்தை நன்குணர்ந்த பன்னாலை மக்கள் ஐக்கிய வளர்ச்சிக்கு ஏங்கிக் கொண்டிருக்கும்வேளை 1940இல் கூட்டுறவுச் சங்கம் தோற்றம் எடுத்தது. அமரர்கள் வை. விசுவநாதர் (விச்சுப்பரிகாரி) கா. கதிர்காமத்தம்பி ந. சொக்கலிங்கம், சி. சின்னத்தம்பு ஆகியோரின் விடாமுயற்சியால் இச்சங்கம் தாபிக்கப்பட்டது.

பன்னாலை மக்கள் மத்தியில் ஒற்றுமையையும், பரஸ்பர நல்லெண்ணத்தையும் வளர்ப்பதே இச்சங்கத்தின் தலையாய நோக்காகும். ஆரம்பத்தில் ஐக்கிய பண்டகசாலையாக ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனம் படிப்படியாக வளர்ந்து தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கிளை ஐந்தாக இயங்குகிறது. பல நோக்கில் பணிபுரியும் இச்சங்கம் அளப்பரிய சேவையைப் புரிந்து வருகிறது. மக்களுக்குத் தேவையான அன்றாட நுகர் பொருட்களை மலிந்த விலைக்கு வழங்கிவருகிறது. அத்துடன் விவசாயிகளின் விளைபொருட்களுக்கு நல்ல விலை கொடுத்து வாங்கி அவற்றைச் சந்தைப்படுத்துவதிலும் முன்னின்று உதவுகிறது. 1970களில் அமரர் சு. மாணிக்கம் அவர்கள் இச் சங்கத்திற்குத் தலைமை வகித்த காலத்தில் அம்பனையிலும் எம் ஊரிலும் அறுவடை செய்யப்பட்ட வெங்காயம் அனைத்தும், கூடைகளில் நிரப்பிக் கயிற்றுச் சாக்கில் இட்டுப், புகைவண்டி மூலமும் தனியார் லொறிகள் மூலமும் ஏற்றப்பட்டுக் கொழும்புச் சந்தையில் நல்ல விலைக்கு விற்கப்பட்டது. ஏனைய நுகர்பொருட்களான செத்தல்மிளகாய், கத்தரிக்காய், பூசினிக்காய், பீற்றூட், கறட், வாழைக்குலை போன்ற பொருள்களும் கொழும்புச் சந்தைக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இக்காலம் விவசாயிகளுக்கு நல்ல வருவாயைக் கொடுத்த பொற்காலமாகும்.

பன்னாலைச் சங்கத்திற்கெனத் தனிநிலம் வாங்கப்பட்டுச் சங்கத்திற்கான கட்டிடம் நெசவு நிலையம் மற்றும் விவசாய விளைபொருட் சேகரிப்பு நிலையம் ஆகிய பல

வசதிகளோடு இயங்கிவருகிறது; ஒரு காலத்தில் முன்பள்ளியும் இங்கேயே இயங்கிவந்தது. நெசவுசாலை ஒன்று இச்சங்கத்துடன் இணைந்து செயற்பட்டது. இந்நெசவுசாலை கிராம யுவதிகளுக்கு வேலை வாய்ப்பை வழங்கியதுடன், சங்கத்திற்கு நல்ல வருவாயையும் ஈட்டிக்கொடுத்தது. நாட்டில் ஏற்பட்ட குழப்பம் காரணமாகவும் மக்கள் வேறிடம் செல்லத் தள்ளப்பட்டமையால் இந்நெசவு நிலையம் 1992இல் இருந்து இயங்கா நிலையில் காணப்படுகிறது. தெல்லிப்பளை மேற்கு உபதபால் நிலையம் தற்பொழுது சங்கக் கட்டிடத்தில் இயங்கிவருகிறது.

இக்கூட்டுறவுச் சங்கத்தைத் தழுவிப் பல சங்கங்கள் பன்னாலையில் தோன்றின. 1950இல் முன்னைநாள் அதிபர் அமரர் கா. கதிர்காமத்தம்பி அவர்களின் தலைமையிலும் இளைப்பாறிய ஆசிரியர் அமரர் தம்பு அவர்கள் தலைமையிலும் இரு ஐக்கிய நாணய சங்கங்கள் தாபிக்கப்பட்டன. விவசாயிகளுக்கும் ஏழைமக்களுக்கும் கடன் வழங்கிச் சிக்கனமான வாழ்க்கையை அவர்கள் கையாள உதவின.

1998இல் மாதர் முன்னேற்றச் சங்கம் மாதர் ஐக்கிய நாணய சங்கம் என இருசங்கங்கள் செல்வி உமாராணி சங்கரப்பிள்ளை அவர்களால் நிறுவப்பட்டு இவை மாதர் முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்றன. U.N.H.C.R. சமுர்த்தி நிறுவனம் போன்ற தாபனங்கள் சுயதொழில் அபிவிருத்திக்கு நிதி உதவி வழங்கி வருகின்றன.

1998இல் மக்கள் மீளக்கூடியேறிய பின்னர் ப.நோ.கூட்டுறவுச் சங்கம் தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளை 5A எனும் பெயருடன் இயங்கி வருகிறது. இச்சங்கங்கள் பன்னாலை மக்களுக்கு அரிய சேவை புரிந்து வருகின்றன.

உ
சிவமயம்

# பன்னாலை மக்களின் தேவைகளும் எதிர்பார்ப்புக்களும்

திருநாவுக்கரசு உதயகுமார்.

## 1. முகவுரை

பன்னாலை மக்களின் மேம்பாட்டிற்கு இக்கட்டுரை மிகவும் முக்கியம் வாய்ந்ததாக இருக்கவேண்டும் என்ற நோக்கில் எழுதப்படுகிறது. எம் மூதாதையர் காலத்தில் பன்னாலை மக்களின் தேவைகளும் எதிர்பார்ப்புக்களும் எவ்வாறு இருந்தன? பின்னர் இதில் ஏற்பட்ட மாறுதல்களுக்கான சில காரணங்கள் தொழில்நுட்ப வளர்ச்சி, உலகமயமாக்கலினால் ஏற்பட்ட தேவைகளின் எதிர்பார்ப்புகளில் ஏற்பட்ட மாற்றங்கள், போர்ச் சூழ்நிலையினால் ஏற்பட்ட தாக்கங்கள் என்பனவாகும்.

இப்படியான காரணங்களினால் இக்கிராமத்து மக்களிற் பலர் தமது வீடுகளிலிருந்து வெளியேறி வேறுவேறு இடங்களில் வாழ்ந்துள்ளார்கள். இவர்கள் தமது முயற்சியின் காரணமாக முன்றேற்றம் அடைந்துள்ளார்கள். இதனால் சமுதாயத்தின் அபிவிருத்தியில் தொடர்ந்து இக்கிராமத்து வளங்களை உபயோகித்து மக்களுக்கு வழிகாட்ட இவர்களால் முடியவில்லை.

## 2. மூதாதையரின் தேவைகளும் எதிர்பார்ப்புக்களும்

எமது மூதாதையரின் உணவுத் தேவைகளையும் எதிர்பார்ப்புக்களையும் இவர்கள் உற்பத்தி செய்த குரக்கன், சாமி, மரவள்ளி என்பவையே பூர்த்தி செய்தன. இம்மக்களினது தேவைகள் எல்லாம் பூர்த்திசெய்வதற்குத் தொழில்நுட்ப வளம் இருக்கவில்லை. மனிதவளத்தின் மூலமே இவர்களது தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டன. மனித வளத் தொழிலின் திறமைக்கு ஏற்ப என்ன என்ன தேவைகள் யார் யாரால் பூர்த்தி செய்யமுடியும் என்பதற்கு அமையத் தொழில்கள் ஒழுங்கு படுத்தப்பட்டன.

உதாரணமாக விவசாயத் தொழிலில் திறமையடைந்தவர்களுக்கு விவசாயத் தொழிலும், சலவைத் தொழிலில் திறமையடைந்தவருக்குச் சலவைத் தொழிலிலும்,

பனைத்தொழில் திறமையடைந்தவர்களுக்குப் பனைத் தொழிலிலும் ஒழுங்கு செய்யப்பட்டன. இது பரம்பரையாகச் சில காலங்கள் இருந்தன.

தொழில் ரீதியாக வேறுபாடு இருந்தாலும் இவர்கள் ஒற்றுமையாகவே இருந்தார்கள். தமது தொழில்சார் உதவிகளை மற்றையவர்களுக்குச் செய்வதில் பின்நிற்பதில்லை. தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் உலகமயமாக்கலின் காரணமாக (உதாரணமாகத் தச்சுத்தொழில், வீடுகட்டும் தொழில்) மனித வளத்தொழிலுக்கு ஏற்பட்ட கிராக்கி போர்ச் சூழல் காரணமாக ஏற்பட்ட இடப்பெயர்வுகள் என்பவற்றின் காரணமாகத் தேவைகள், எதிர்பார்ப்புகள் பூர்த்திசெய்யும் விதத்தில் மாறுதல்கள் ஏற்பட்டன.

### 3. தேவைகளும் எதிர்பார்ப்புகளும்

இன்றைய மக்களின் தேவைகளும் எதிர்பார்ப்புகளும் எதிர்பார்க்கமுடியாத அளவுக்கு அதிகரித்துள்ளன. உதாரணமாக எம் மூதாதையருக்குப் பல்லுத் துலக்குவதற்கு வேப்பங்குச்சி மட்டும் போதுமானதாக இருந்தது. ஆனால் இப்பொழுது பற்பசை, பல்துலக்கி என்பனவும் இவற்றைத் தயார்செய்வதற்குத் தொழில்நுட்ப அறிவு, இயந்திரம், மூலவளம், முதலீடு என்பனவும் தேவைப்படுகின்றன.

### 4. தரத்தின் (பொருட்களின்/ சேவைகளின் தேவைகள்/ எதிர்பார்ப்புகளின் முக்கியத்துவம்)

தற்பொழுது பலவிதமான பொருட்கள் எம்மக்களின் எதிர்பார்ப்புகளையும் தேவைகளையும் பூர்த்திசெய்யத் தேவைப்படுகின்றன. இவை பொருட்கள் சம்பந்தமான தேவைகள். மக்களின் அபிலாசைகளைப் பூர்த்திசெய்வதற்கு இதே மாதிரியாகச் சேவை சம்பந்தமான ஸ்தாபனங்களும் ஏராளமாக உள்ளன. இவ்வாறு தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் பூர்த்தி செய்யும் ஸ்தாபனங்களைப் பாரிய, நடுத்தர, சிறிய தொழிற்சாலைகள் என வகைப்படுத்தலாம். எமது மக்கள் இவ்வகைத் தொழிற்சாலைகளில் தொழில்புரியலாம் அல்லது தனித்தொழில் செய்பவராக இருக்கலாம். எவ்வாறு இருப்பினும் அவர்கள் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்கள் சேவைகளின் தரம் (அதாவது இப்பொருட்கள் சேவைகள் எவ்வாறு மக்களின் எதிர்பார்ப்புகளையும் தேவைகளையும் பூர்த்திசெய்ய முடியும்) என்பது பற்றிய அறிவு கொண்டவர்களாக இருக்கவேண்டும். தரமான பொருட்களுக்குச் சேவைகளுக்கு எப்பொழுதும் சந்தையில் கிராக்கி உண்டு.

## 5. தரத்தினை மேம்படுத்தல்

எமது மக்கள் தமது உற்பத்தியில் எவ்வாறு தரத்தினை மேம்படுத்த முடியும்? உதாரணமாக எம் மக்களின் விவசாயத்துறையில் நெல் உற்பத்தியை எடுத்துக் கொண்டால் நெல் உற்பத்தியிற் பல்வேறு செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. இச்செயற்பாடுகளிற் சில நெல் விதைத்தல், மண் பதப்படுத்தல், நாற்று நடுதல், நீர்ப்பாய்ச்சல், களை அகற்றுதல், அறுவடை என வகைப்படுத்தலாம். தரமான நெல் உற்பத்திக்கு ஒவ்வொரு செயலும் தரமானதாக அமையவேண்டும். அப்பொழுதுதான் இறுதிப் பொருள் சேவைகளின் தரமும் தரமானதாக இருக்கும். அதேநேரம் இச் செயல்பாடுகளின் (தரக்குறைவினால் அல்லது பயன்பாடற்றவை என்பவற்றால்) ஏற்படும் விரயத்தைக் குறைத்துக் கொள்வதன் மூலம் உற்பத்திச் செலவைக் குறைத்துக்கொள்ள முடியும். இதன் மூலம் சந்தை வாய்ப்பை அதிகரித்துக்கொள்ள முடியும். தொழில் நுட்பத் துறையை எடுத்துக்கொண்டால் தொழில்நுட்பத் துறை மூலம், மூலப்பொருள் விரயம், நேரவிரயம் என்பவற்றைக் குறைத்துக் கொள்ளலாம். உதாரணமாக வெங்காயச் செய்கையின் போது தற்பொழுது பயன்படும் நீரின் விரயம் நுண் நீர்ப்பாய்ச்சல் முறை மூலம் (நீர்க்குழாய்களும், நீர் விசிறிகளும் உபயோகிப்பதன் மூலம் குறைக்கக் கூடியதாக இருக்கும்)

தரமான செயற்பாடு

செயலுக்கான ஆரம்பப் பொருள் —— செயல் —— செயலின் விளைவுப்பொருள் சேவை

செயல்படுத்துநர்

ஒரு செயலின் விளைவுப்பொருள் இன்னொரு செயலின் ஆரம்பப்பொருளாக அமையலாம். தரமான இறுதிப் பொருளுக்கு சேவைக்குத் தரமான ஆரம்பப் பொருள், விளைவுப் பொருள் ஒவ்வொரு செயற்பாட்டிலும் உறுதிப்படுத்தல் வேண்டும். செயல்படுத்துநர் எவ்வாறான தகவல்களை உபயோகிப்பதன் மூலம் அல்லது திறமைகளை வளர்ப்பதன் மூலம் செயற்பாட்டின் தரத்தினை (அதாவது விளைவுப் பொருளின் தரத்தினை) மேம்படுத்த முடியும் என விளைவுப் பொருளின் தரத்தினை ஆராய்ச்சி செய்வதன் மூலமும் தகவல்களைப் பெற்று உபயோகிக்க முடியும்.

## 6. தேவைகளையும் எதிர்பார்ப்புக்களையும் அறிந்துகொள்ளல்.

ஒரு மனிதன் தனது தொழிலைத் திறம்படச் செய்வதற்கு அவனது படிப்புத் தரம் மட்டும் போதாது. படிப்புத் தரத்திற்கு மேலாக, தமது தொழில்களின் விளைபொருட்கள் சென்றடையும் மக்களின் தேவைகளும் எதிர்பார்ப்புகளும் சம்பந்தமான தகவல்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கவேண்டும். இதற்கு அவர் வாடிக்கையாளர்களுடன் நெருக்கமாகப் பழகும் போது தான் தேவைகள், எதிர்பார்ப்புகள் சம்பந்தமான தகவல்களைப் பெற முடியும். வாடிக்கையாளர்களின் தகவல்கள் மட்டும் தரமான பொருள் சேவை உருவாக்கத்திற்குப் போதாது. நாம் செயல் தொடர்பான தகவல்களை அச்செயல்களில் அனுபவம் உள்ளவர்கள் மூலமும் பெற்றுக்கொள்ள முடியும்.

## 7. மாணவர்களின் தேவைகளும் எதிர்பார்ப்புக்களும்

இக்கிராமத்தில் கல்வித்துறையில் பல மாணவர்கள் முன்னேற்றம் அடைந்துள்ளனர். இங்கு ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் மாணவர்களை எவ்வாறு ஊக்குவிக்க முடியுமோ அவ்வளவு தூரத்திற்கு ஊக்குவித்துள்ளார்கள். நான் கணிதத்துறையில் மிகவும் சிறந்த மாணவனாக வருவதற்குக் காரணம் திரு. க. இராசநாயகமும், திரு. த.பூ. முருகையா ஆசிரியருமாவார். இவர்கள் எனக்கு முதலில் கணக்குகளை நானாகவே செய்வதற்குத் தருவார்கள். எனக்கு இயலாவிடில்தான் அவர்கள் எவ்வாறு செய்யமுடியும் என்று கற்பிப்பார்கள். இதன் மூலம் நாம் எமது தவறுகளை உணர்ந்து சரிப்படுத்துவதோடு எமது சிந்திக்கும் ஆற்றலையும் மேம்படுத்த உதவியது. அதேநேரம் புதுப்புதுக் கணக்குகளைச் செய்ய வேண்டும் என்று ஊக்கமளித்து க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் பரிசில்களைப் பெற உதவியது. இவ்வாறு எமது முயற்சியில் ஏற்பட்ட முன்னேற்றம், இப்பொழுது தொழில்துறையிலும் புதுப்புது வழிகளைக் கையாண்டு இலகுவாக தாம் சம்பந்தமான துறையில் புகழை ஈட்டிகொடுத்திருக்கின்றது.

## 8. சமூகத்தின் தேவைகளும் எதிர்பார்ப்புக்களும்

சமூகத்தில் இருக்கும் மக்களைப் பல்வேறு பிரிவுகளாகப் பிரிக்கலாம். உதாரணமாகக் குழந்தையர்கள், வாலிபர்கள், வயோதிபர்கள் இவர்களின் தேவைகளும் எதிர்பார்ப்புகளும் வேறுபடுகிறது. சில பிரிவினர் தாமாகவே தமது தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் பூர்த்திசெய்ய முடியாதவர்கள். இவர்களுக்குச் சமுதாயத்தில்

உள்ள ஏனையோரின் உதவி தேவை. இதே மாதிரியாக ஒரு தனிமனிதனை எல்லாச் செயல்களிலும் திறமை மிக்கவனாக இருக்கச்செய்வது மிகவும் கடினம். இத்தகைய சூழலில் ஒருவரின் உதவி இன்னொருவருக்குத் தேவைப்படுகிறது. உதவி பெறுவோர் ஏனையோரிடமிருந்து உதவிகள் பெற்றுக் கொள்பவர்கள்; உதவி செய்பவர்கள் தம்மால் முடிந்த உதவியை ஏனையோருக்குச் செய்பவர்கள்.

பன்னாலை மக்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் தம்மால் முடிந்தவரை கூடுதலான உதவிகளைச் செய்ய விரும்புகிறவர்கள். உதவி முடிந்தவரை பெறாமல் தாமாகவே செய்யவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்.

## 9. முடிவுரை

இன்றைய உலகமயமாக்கலில் சிலர் பணம் சம்பாதிப்பதில் மாத்திரம் கண்ணும் கருத்துமுள்ளவர்களாக இருக்கின்றனர். என்ன தொழில் செய்வதாயினும் பரவா யில்லை. வெகு சீக்கிரமாகப் பணம் சம்பாதிக்கவேண்டும். இவர்கள் தேவைகளிலும் எதிர்பார்ப்புகளிலும் கவனம் செலுத்துவது குறைவு. இதனால் முன்னெப்போதும் இல்லாதவாறு சமுதாயம் பின்தங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறது. இவர்கள்உற்பத்திசெய்யும் பொருட்கள் சேவைகள் அல்லது விற்பனை செய்யும் பொருள்கள் சேவைகள் மக்களின் நலனைப் பாதிக்கக் கூடிய வகையில் இருக்கும்.

பன்னாலை மக்கள் ஆரம்பித்த நெசவாலை, (பன்னாலை சங்கக் கடைக்கு அருகாமையில்) தொடர்ந்தும் இயங்க முடியாத நிலை, இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது இடத்திற்கு வந்து அபிவிருத்திக்கான பாதையை வகுக்கத் தயங்கும் நிலை, தமது உற்பத்திப் பொருட்களை உடனுக்குடன் தென்பகுதிக்கு அனுப்பமுடியாத நிலை (பிரத்தியேகமான பழ வகைகள்) உலகம் சுருங்கிவிட்டது. இப்பொழுது நாடுகள் கிராமங்கள் ஆகின்றன என்கிறார்கள் இது உண்மையா?

பணம் மட்டும் எமது தேவையைப் பூர்த்திசெய்யுமா? எமது சிறுவர் பராயத்தில் பணந்தானா எமக்கு உதவியளித்தது? நாம் எமது தேவைகள் எதிர்பார்ப்புகள் எல்லாவற்றையும் பணத்தின் மூலம் தீர்த்துக்கொள்ள முடியுமா? பணத்தில் நாட்டம் கொண்டவர்கள் தமது தேவைகள் எதிர்பார்ப்புகள் எல்லாவற்றையும் பணத்தால் அடைந்துவிட்டார்களா?

உ
சிவமயம்

# பயின்றோர் பட்ர்நிலம்

**திருமதி வானதி காண்டீபன்.**

ஈழமணித் திருநாட்டின் சிரசாகத் திகழ்கின்ற சிறப்புக்குரிய பிரதேசமாக விளங்குவது வலிகாமம் வடக்குப் பிரதேசமாகும். இப்பிரதேசத்தில் உள்ளடங்குகின்ற கிராமங்களுள் பன்னாலை என்ற கிராமம் நில அமைப்பு ரீதியாக மிகவுஞ் சிறியது; கலை கலாசார, பொருளாதார, கல்வி ரீதியாக மிகவுஞ் சிறந்து விளங்குகின்ற கிராமங்களுள் இதுவும் ஒன்று.

இக்கட்டுரை பன்னாலை வாழ் பெருமக்கள் அதாவது கல்வியால் மேம்பட்டவர்களை வெளிக்கொணர்வதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. மற்றைய கிராமங்களுக்கில்லாத கல்விப் பெருமை இக்கிராமத்துக்கு இருந்துள்ளது; இருக்கின்றது. இக் கட்டுரை இரண்டு பிரதான தலைப்புகளின் கீழ் நோக்கப்படுகின்றது

1. மகாஜனாக் கல்லூரியை நிறுவுவதற்கு முற்பட்ட காலம்
2. மகாஜனக் கல்லூரியை நிறுவியதற்குப் பிற்பட்ட காலம்.

இவ்வாறு பகுத்து நோக்குவதற்குக் காரணமொன்றுண்டு. மகாஜனக் கல்லூரி ஸ்தாபிக்கப்படுவதற்கு முன் அப்பிரதேசத்தின் கல்வி ஒருசில குடும்பங்களுக்கு மட்டுமே உரிமை பூண்டிருந்துள்ளது. அதாவது கல்வி மட்டுப்படுத்தப்பட்ட பொருளாகவே இருந்துள்ளது. ஆனாற், மகாஜனக் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் கல்வி பொதுமையாக்கப்பட்ட ஒன்றாக மாற்றமுற்றது.

### 1. மகாஜனக் கல்லூரியை நிறுவுவதற்கு முற்பட்ட காலத்துக் கல்விப் பின்னணி

போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தின் முன் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் கோயில்களே கல்வியைப் பரப்பும் மையங்களாக விளங்கியுள்ளன. புராணபடனம், பிரசங்கங்கள் வாயிலாக மக்கள் தமிழ், சைவ அறிவை விருத்திசெய்துகொண்டனர். போர்த்துக்கேயர் ஆட்சியுடனேயே ஒழுங்குபடுத்தப்பட்ட பாடசாலை முறைமை யாழ்ப்பாணத்திலும்

அறிமுகமாகியது; வலிகாமம் வடக்கில் கோயிற்பற்றுப் பாடசாலைகள் இருந்தமையை வரலாறு மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

ஒல்லாந்தர் ஆட்சியில் யாழ்ப்பாணத்தில் கல்வி வாய்ப்பு சற்றே விரிவடைந்தது. கிறிஸ்தவ சமயப் போதனையே அக்காலக் கல்வியின் இலக்காக அமைந்திருந்தது.

வலிகாமம் வடக்கில் தற்போது உள்ள அனைத்துப் பாடசாலைகளும் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் ஸ்தாபிக்கப்பட்டவையே. அக்காலத்தில் கிறிஸ்தவ மதப் பணிகளுக்குரிய மையமாகத் தெல்லிப்பளைக் கிராமத்தைத் தேர்ந்தெடுத்தனர். இதன் காரணமாக அப்பிரதேசம் கல்வியால் பெருமைபெறுவதற்கான வாய்ப்புப் பெருகியது.

ஒருபுறம் கிறிஸ்தவ மதத்தின் செல்வாக்குக்கு ஆட்பட்டு ஆங்கிலமொழி மூலம் கல்வி பயின்று அரச உயர் பதவிகளில் பலர் இருந்துள்ளனர். மறுபுறம் தமிழை மரபு ரீதியாகப்பயின்று தக்க தொழில்களில் சைவத்தமிழ் மக்களாகச் சீவித்திருந்தனர். புராணங் களுக்கு உரைசொல்லத் தெரிந்தவர்கள் கல்வி பயின்றவர்களாக மதிக்கப்பட்டுள்ளனர்.

பன்னாலையும் இவ்வாறான கல்விப் பின்னணிக்கு ஆட்பட்ட ஒன்றாகவே இருந்துள்ளது. பாவலர் தெ. துரையப்பாபிள்ளை மகாஜனக் கல்லூரியை நிறுவுவதற்கு முன் விழிசிட்டிச் சிவஞான வித்தியாசாலை என்றழைக்கப்பட்ட பன்னாலை சேர். கனகசபை வித்தியாசாலை பன்னாலை மக்களுக்கு ஆரம்பக் கல்வியை வழங்கியமையை மறுக்கவோ மறக்கவோ முடியாது. ஆரம்பகாலங்களில் தமிழ், சமயம், எண்கணிதம் ஆகிய பாடங்கள் இங்கு கற்பிக்கப்பட்டன. பிற்பட்ட காலத்தில் ஆங்கிலமும் கற்பிக்கப்பட்டது. பன்னாலை யைச் சேர்ந்த இன்று உயர்தொழில் புரிகின்ற பலருக்கு ஆரம்பக் கல்வியை ஊட்டிய பெருமை இப் பாடசாலைக்கே உரித்தாகின்றது. இற்றைக்கு நான்கு ஐந்து தலை முறைகளுக்கு முன்னர் இக்கிராமத்துப் பெண்கள் கல்வியால் உயர்ந்திருந்தனர் என்பதற்கு ஆதாரங்கள் இல்லை. கல்வி, பொருளாதாரப் பின்னணிகொண்ட குடும்பத்தவர்கள் இந்தியாவரை சென்று மேற்கல்வி கற்றுள்ளனர்.

பன்னாலைக் கிராமத்தின் கல்விநிலை என்று நோக்கும்போது அக்கிராமத்தில் வாழ்ந்த, வாழ்கின்ற கல்வியால் மேநிலை எய்தியவர்களைப் பற்றிக் கூறுமுகமாகவே எடுத்துக் காட்டப்படமுடியும். இருபதாம் நூற்றாண்டுக்குப் பின் வாழ்ந்த, வாழ்கின்றவர்களைப் பற்றி எழுதப்போனால் அதுவே தனியொரு நூலாகிவிடும். இச்சிறு கட்டுரை அதற்கு

இடமளிக்காமையினால் இருபதாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட காலம் மேலெழுந்த வாரியாகவே நோக்கப்படுகின்றது.

வலிகாமம் வடக்கில் அங்கீகாரம் பெற்ற முதலாவது பிறக்கிராசியும் பிரசித்த நொத்தாரிசுமாக விளங்கியவர் திரு. சின்னக்குட்டி என்பவர் ஆவார். சட்டக்கல்லூரி ஆரம்பிக்கப்படுவதற்கு முன் அப்புக்காத்துவாகவோ அல்லது பிறக்கிராசியாவோ பிரசித்த நொத்தாரிசாகவோ தொழில்புரிய விரும்பியவர்கள் அங்கீகரிக்கப்பட்ட பிரபல அப்புக்காத்து மாரிடமோ அல்லது பிறக்கிராசி நொத்தாரிசிடமோ குறிப்பிட்ட காலம் பயிலுநராக இருந்து பயின்று தனிப்பட்ட முறையில் தொழில் புரிவதற்கான அங்கீகாரம் பெற்றவர்களாக இருக்கவேண்டும். அவ்வாறே பயிலுநராக இருந்து பிறக்கிராசியாகவும் பிரசித்த நொத்தாரிசாகவும் தொழில்செய்யும் அங்கீகாரம் பெற்றவர் சின்னக்குட்டியார். இவரது காலம் இன்றைக்கு ஐந்து தலைமுறைக்கு முந்தியது. பிற்காலத்தில் இவரது கண்பார்வை குறைவடைந்த காரணத்தினாற் பன்னாலையார் இவரைக் குருட்டுப் பிறக்கிராசி என்பர்.

சின்னக்குட்டியாரின் மகன் பொன்னம்பலமும் தந்தையாரைப் போன்று அங்கீகரிக்கப்பட்ட பிறக்கிராசியாகவும் நொத்தாரிசாகவும் தொழில் செய்தவர்.

மூன்றாவது தலைமுறை சேர் அம்பலவாணர் கனகசபையின் காலமாகும். இவர் இலங்கையிலே முன்னணி வகித்த சிறந்த ஒரு அப்புக்காத்துவாக விளங்கியவர். Legislative Council, Executive Council இரண்டிலும் அங்கத்தவராக இருந்தவர் இவர் ஒருவரே. சேர் பொன். இராமநாதன், சேர் பொன். அருணாசலம் அவர்களின் சமகால அரசியல்வாதி. இவர்கள் இருவருக்கும் சேர் பட்டம் கொடுத்துக் கௌரவிக்கும் முன்னர் அம்பலவாணர் கனகசபை அவர்களுக்குச் சேர் பட்டம் கொடுத்து ஆங்கில அரசு இவரைக் கௌரவித்ததென்றால், இவர் இலங்கை அரசின் கவனத்தை எத்துணை தூரம் தம்பால் ஈர்த்திருந்தார் என்பது கவனத்திற்கொள்ளத்தக்கது. இவர் கல்வியில் கொண்டிருந்த ஈடுபாட்டை அறிந்த தேசாதிபதி Legislative Council, Executive Council ஆகியவற்றின் கல்விக் குழுவிலேயே இவரை அமர்த்தி, இவரின் சேவையை நாடுபெற வகைசெய்தார். தமிழும் சைவமும் நன்கு கற்ற இவர் அக்கால அறிஞர்களாற் பெரிதும் மதிக்கப்பட்டவர். மயிலாப்பூரில் நடந்த சைவசித்தாந்த மகாநாட்டில் தலைமைதாங்கி அவர் நிகழ்த்திய உரை, சைவப் பேரறிஞர் பலரின் பாராட்டுகளைப் பெற்றது. 1922.12.27இல் யாழ்ப்பாணத்தில் முதன் முலாகத் தமிழ் இலக்கிய மகாநாடு றிஜ்வே

மண்டபத்தில் நடைபெற்றது. சென்னை, சர்வகலாசாலை வரலாற்றுத்துறைப் பேராசிரியர் டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார் சென்னைச் சட்டக் கல்லூரி விரிவுரையாளர் கா. சுப்பிரமணியபிள்ளை, தமிழறிஞர் பா.வே. மாணிக்கநாயகம் ஆகியோர் பங்குபற்றிய இம்மகாநாட்டுக்குத் தலைமை தாங்கியவர் சேர். அ. கனகசபை அவர்களே.

1922இல் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கத்தை ஸ்தாபிக்க முயற்சி எடுத்ததோடு அதன் முதற்றலைவராகவும் விளங்கியவர். அச்சமயத்தில் அதன் செயலாளராகப் பள்ளிக்கூட இன்ஸ்பெக்டர் சி. சதாசிவ ஐயரும் செயற்குழு உறுப்பினர் களாகப் பாவலர் தெ.அ. துரையப்பாபிள்ளையும், க.சு. நவநீதகிருஷ்ண பாரதியும் இருந்துள்ளனர்.

சென்னைச் சட்டக் கல்லூரியில் பகுதிநேர விரிவுரையாளராகவும் பரீட்சகராகவும் விளங்கியவர். சட்டக் கல்லூரி நிறுவப்பாடுபட்ட முதலாமவர் இவரே. இலங்கையில் ஒரு சட்டக் கல்லூரி இருக்கவேண்டியதன் அவசியத்தை உணர்த்தி, Legislative Council இல் பலமுறை அழுத்தம் கொடுத்ததன் காரணமாக அன்றைய ஆங்கில அரசு அதனை ஏற்று, சேர் பொன். இராமநாதன் அவர்களை அப்பணியை நிறைவேற்றும்படி பணித்தது. சட்டக்கல்லூரி ஆரம்பமான காலம் முதல் சில ஆண்டுகள் விரிவுரையாளராகவும் பரீட்சகராகவும் பணிபுரிந்தார். தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் அதற்கு அரச அங்கீகாரம் பெற உதவியவர் இவரே. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் அதன் இயக்குனர் சபைத் தலைவராக, இறக்கும்வரை இவர் இருந்துள்ளார். தெல்லிப்பளைத் தபால் நிலையமும் இவரின் முயற்சியாலேயே நிறுவப்பட்டன.

இலங்கை தேசியக் காங்கிரசின் (இதுவே இலங்கையில் தோன்றிய முதல் அரசியல் அமைப்பு) முதலாண்டுத் தலைவராக ஏகமனதாகத் தெரிவாகியிருந்த சேர் பொன். அருணாசலம் சிங்கள அரசியல்வாதிகளுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் தனது பதவியைத் துறந்து, யாழ்ப்பாணம் வந்து, 'யாழ்ப்பாணம் இளைஞர் காங்கிரசின்' கூட்டமொன்றில் 'இலங்கை அரசியலில் தமிழர் நிலைமை' என்ற பொருளில் பேசிய அன்று, அந்தக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கி, தலைமைப் பேருரை நிகழ்த்தியவர் சேர் அ. கனகசபை. இவர் தனது தலைமைப் பேருரையில் பல்லின மக்கள் வாழும் இலங்கை போன்ற நாட்டுக்கு உகந்த அரசியலமைப்பு சமஸ்டி முறையே என்று

கூறியதோடு சமஸ்டி அரசமைப்பைப் பற்றி விரிவான விளக்கத்தையும் கொடுத்திருந்தார். ஆங்கிலத்தில் இவராற்றிய உரை Hindu Ogan பத்திரிகையில் வெளிவந்தது. அன்று அந்தப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்தவர் தெ.அ. துரையப்பாபிள்ளை அவர்கள். இந்நிகழ்வு 1921ஆம் ஆண்டு நிகழ்ந்தது. 1949இல் தமிழரசுக்கட்சியை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய எஸ்.ஜே.வி. செல்வநாயகம், சேர். அ. கனகசபையின் உரை வெளியாகியிருந்த Hindu Ofgan பத்திரிகையில் வந்திருந்த அந்தப் பேச்சு முழுவதையும் சபையினருக்கு வாசித்து, 'தமிழரின் விடிவுக்குச் சமஸ்டி அரசமைப்பே சிறந்தது' என்ற கருத்தை முதலிற் கூறியவர் சேர். கனகசபையே' என்றும் அந்தக் கருத்தை 28 ஆண்டுகள் நாம் பொருட்படுத்தாமல் இருந்துவிட்டோம் என்றும் கூறிக்கவலைப்பட்டார்.

சென்னைச் சர்வகலாசாலை வரலாற்றுத்துறைப் பேராசிரியர் டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்கள் 'சென்னைச் சர்வகலாசாலைத் தோற்றமும் வளர்ச்சியும் ஒரு கண்ணோட்டம்' என்ற தமது நூலில் சேர் அ. கனகசபை அவர்களைப் பற்றிக் கூறியிருப்பவற்றை ஈண்டு நோக்குதல் சாலப்பொருந்தும்.

'ஆறுமுகநாவலர் பிறந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் கௌரவ ஏ. கனகசபை அவர்கள். கல்கத்தா, சென்னை சர்வகலாசாலைகளின் பி.ஏ. பட்டதாரி. இலங்கையிலும் சென்னையிலும் நீதிமன்றங்களில் வழக்காடும் அங்கீகாரம் பெற்றவர். தமிழ் இலக்கியம், சைவசாஸ்திரம் இவைகளில் சிறந்த அறிஞர் கல்கத்தா சர்வகலாசாலையில் ஆறு ஆண்டுகளும் சென்னை சர்வகலாசாலையில் எட்டு ஆண்டுகளும் பரீட்சைக் குழுவில் ஒருவராக இருந்ததோடு, சென்னைச் சர்வகலாசாலையிற் பரீட்சைக் குழுவில் இருந்த இறுதி இரண்டு ஆண்டுகளும் அதன் தலைவராகவும் இருந்தவர். சர்வகலாசாலைப் பேராசிரியராக இல்லாதிருந்த கௌரவ கனகசபை இந்தப் பதவிகளில் அமர்த்தப்பட்டது அவரின் சிறந்த அறிவையும், அதனை இவ்விரு பல்கலைக்கழங்களும் மதிப்புடன் அங்கீகரித்தமையையும் எடுத்துக் காட்டுகின்றன. இவரின் பின் பல்கலைக்கழகம் சாராத எவரும் இத்தகைய பதவிகளில் அமர்த்தப்பட்டதில்லை. சென்னை சட்டக் கல்லூரிப் பரீட்சைக் குழுவிலும் இவர் அங்கம் வகித்தது இவரின் சட்ட அறிவுக்கு இந்தியா அளித்த அங்கீகாரம் எனலாம். இங்கும் இவருக்குப் பின்னர் இந்தியர் அல்லாத ஒருவர் இந்தப் பதவியை வகித்ததில்லை.

இவர் சென்னையில் தங்கியிருந்த நாள்களில் எல்லாம் இவரின் உரையைக் கேட்பதற்கு நிகழ்வுகளை ஒழுங்குசெய்து, கல்லூரிப் பேராசிரியர்களும் அறிஞர்களும் கலந்து இன்புறுவர்' என்று விரிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்ததாக இங்கு குறிப்பிடப்படவேண்டிய மகான் முத்துக்குமாரசாமிக் குருக்கள் என்று குறிக்கப்படும் முத்துரிஷி ஆவார். இவர் பன்னாலை வரத்தலம் கற்பகவிநாயகர் ஆலய பூசகர். இவர் அந்நாள்களில் கல்விக்குப் பெருந்தொண்டாற்றியிருக்கிறார்; பன்னாலையிற் குறிப்பிட்டதொகையினருக்கு ஆரம்பக் கல்வியை வழங்குவதற்காகத் தனிமனிதனாக இருந்து முயற்சித்துள்ளார். எவரிடமும் எதையும் எதிர்பாராத இவரது சமூக நலன் வியந்து போற்றுதற்குரியது. மாணவர்கள் ஐந்தாம் வகுப்புவரை இவரிடம் ஆங்கிலமும் தமிழும் பயின்றுள்ளனர். இவரது கல்விச்சாலையில் பயின்றவர்களுள் நீதிபதி பூ. வைத்திலிங்கம் ஒருவராவார். இவ்வுதாரணம் ஒன்றே முத்துரிஷி அவர்களின் சேவைக்கு ஓரெடுத்துக்காட்டு. பிற்காலத்தில் இவர் ஒரு சித்தராக வாழ்ந்ததாகக் கூறப்படுகின்றது.

சேர் அ. கனகசபை அவரக்ளின் மைத்துனர்களுள் ஒருவர் சம்பந்தர் மற்றையவர் மாணிக்கர். இவர்கள் இருவரும் அப்புக்காத்துமாராகத் தொழில்புரிந்தவர்கள். இவரின் சகலர் (மனைவியின் மைத்துனர்) ஒரு பிறக்கிராசியார்; பெயர் அப்பர். இங்குள்ளவிசேடம் என்னவெனில் ஒரே வீட்டில், ஒரே சமயத்தில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று அப்புக்காத்துமாரும் பிறக்கிராசி ஒருவரும் தொழில்புரிந்து கொண்டிருந்தமை. இலங்கையில் வேறெங்கும் காணமுடியாத ஒரு நிகழ்வென்று அக்காலத்துப் பத்திரிகையான Times of Ceylonஇல் ஒரு குறிப்பு வெளியாகியிருந்தது.

அலன் ட்றிபேக் (Alan Drieburg) என்பார் மாதந்தோறும் எழுதும் Unbeliviable true events என்ற தலைப்பின் கீழ் சேர் அ. கனகசபையின் மைத்துனர் ஒருவர் திரு. க. சிறீசுந்தரமூர்த்தி (ஆரூரர்) ஆவர். சேர் சி.பி. இராமசாமி ஐயர் அவர்கள் திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் திவானாக இருந்த சமயம் (Diwan of Travancore) அவரின் செயலாளராகக் கடமையாற்றிய பெருமையுடையவர். திரு. க. சரவணமுத்துப்பிள்ளை அவர்கள் சென்னை உயர்நீதிமன்ற நீதியரசராக இருந்த காலத்தில் அவரது செயலாளராகவும் திரு. சுந்தரமூர்த்தி விளங்கியுள்ளார்.

திரு. க. சிறிசுந்தரமூர்த்தி அவர்களின் மைத்துனர் திரு. பூ. வைத்தியலிங்கம் கல்கத்தாச் சர்வகலாசாலைப் பட்டதாரியான இவர் இலங்கைச் சட்டக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு உள்வாங்கப்பட்ட முதல்தொகுதி மாணவர்களுள் ஒருவர். சட்டப் படிப்பு இறுதிஆண்டுப் பரீட்சையில் முதன் மாணாக்கனாகத் தேறிய இவர் Crown Counsel ஆக நியமனம் பெற்றார். சில ஆண்டுகளின் பின்னர் நீதிபதியானார். இவர் அவிசாவளையில் மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றும் போது டாக்டர் நாகலிங்கம் என்பவருக்கு எதிராக ஆங்கிலேயர் ஒருவர் தாக்கல் செய்த வழங்கை விசாரிக்க வேண்டி ஏற்பட்டது. இலங்கையில் அன்று இருந்த தேசாதிபதியின் (ஆங்கிலேயர்) சகோதரர் தான் வழக்காளி. வழக்காளியின் அரச செல்வாக்கைக் கருத்தில் கொண்டு, சிரேஷ்ட நீதிபதிகள் (ஆங்கிலேயரும் இலங்கையரும்) இந்த வழக்கை விசாரணைக்கு ஏற்க மறுப்புத் தெரிவித்த நிலையில் மிகவும் கனிஷ்ட தரத்தினராகிய நீதிபதி வைத்தியலிங்கம் அந்த வழக்கை விசாரிக்க முன்வந்தார். விசாரணை முடிவில் ஆங்கில வழக்காளியின் வழக்கைத் தள்ளுபடி செய்ததோடமையாது ஆங்கிலேய வழக்காளி, எதிரியான டாக்டர் நாகலிங்கம் என்பவருக்கு நஷ்டஈடாக ஒரு தொகை கொடுக்க வேண்டும் என்றும் ஒரு துணிகரமான தீர்ப்பினை எழுதினார். இந்தத் தீர்ப்புக்கு எதிரான மேன்முறையீடு பலபடிகளைத் தாண்டி இங்கிலாந்திலுள்ள பிறிவி கவுன்சிலின் (Privy Council) முன் வாதிடப்பட்டது. பிறிவி கவுன்சில் நீதியரசர்கள் திரு. வைத்தியலிங்கத்தின் தீர்ப்பினை ஏற்றதோடு நிற்காது **'இந்த வழக்கின் ஆரம்பத் தீர்ப்பை வாசிக்கும் போது, அதனை எழுதிய நீதிபதி பிறிவி கவுன்சிலில் நீதியரசராகக் கடமையாற்ற வேண்டிய ஒருவர் என்பதை அவதானிக்கிறோம்'** என்ற ஒரு குறிப்பையும் எழுதியிருந்தனர். இலங்கையின் நீதித்துறை வரலாற்றில் இப்படியான ஒரு அவதானிப்பை பிறிவிகவுன்சில் நீதியரசர்களிடமிருந்து பெற்றவர் வைத்தியலிங்கம் ஒருவரே என்று சில மாதங்களுக்கு முன்னர் சட்டத்தரணி திரு. K.G. ஜோன் அவர்கள் சட்டம் சம்பந்தமான ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார்.

இதற்கு அடுத்த காலப் பகுதியில் சிங்கப்பூர் உத்தியோகம் பன்னாலை மக்கள் பலரையும் ஈர்த்திருந்தது. ஆங்கிலம் கற்ற பலர் அங்கு சென்று பல பதவிகளை வகித்துள்ளனர். திரு. சின்னத்துரை என்பவர் மலேஷியாவிலே அரச பதவி வகித்து இளைப்பாறும் போது உதவிச் செயலாளராக (Assistant Secretry) உயர் பதவியில்

இருந்துள்ளார். அரச பதவியில் இது மிகவும் உயர்ந்த மூன்றாவது பதவிநிலை. (1. Governer, 2. Chief Secretary, 3. Asst. Secretary) அதனோடமையாது அங்கு நடைபெறும் தமிழ் இலக்கிய மகாநாடுகளிலும் சைவசிந்தாந்த மகாநாடுகளிலும் தலைமை வகிப்பதற்காகப் பலராலும் அழைக்கப்படுபவர் இவர். இந்தியாவில் திருப்பனந்தாளில் நடைபெற்ற சைவசித்தாந்த மகாநாட்டில் முதலாம் நாள் நிகழ்வுக்கு இவரே தலைமை தாங்கினார். சேர் பொன். இராமநாதன் அவர்கள் இரண்டாம் நாள் நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார். இருவரும் இலங்கையர். ஒருவர் இங்கிருந்து சென்றவர்; மற்றையவர் பன்னாலையைப் பிறப்பிடமாகக் கொண்டு மலேசியாவிலிருந்து சென்றவர். அடுத்தவர் திரு. அருளம்பலம் என்பவர். இவர் மலேஷியாவில் உத்தியோகம் புரிந்தவர். தமிழ் சைவப்பற்று நிறைந்தவர். சைவர்கள் இறக்கும்போது அவர்களைத் தகனம் செய்வதற்குக் கோலாலம்பூரில் தனியான சுடுகாடு வேண்டும் என்று அன்றைய மலேஷிய நாட்டு ஆங்கில அரசுக்குப் பலவழிகளில் விண்ணப்பித்தும் அழுத்தம் கொடுத்தும் அதில் வெற்றிகண்டவர். இவரின் முயற்சியாற் கோலாலம்பூரில் உள்ள சுடுகாட்டில் சைவர்களைத் தகனம் செய்வதற்குத் தனியிடம் ஒதுக்கப்பட்டது; அது இன்றுவரை இருக்கிறது. ஒதுக்கப்பட்ட இந்த இடத்தில் தகனம் செய்யப்பட்ட முதல் ஆள் திரு. அருளம்பலம் அவர்களே என்பதுதான் இதில் உள்ள விசேடம். கோலாலம்பூரில் சைவர்கள் இருக்கும்வரை அருளம்பலத்தின் பெயரும் இருக்கும்.

**2. மகாஜனக் கல்லூரியை நிறுவியதற்குப் பிற்பட்டகாலத்துக் கல்விநிலை:**

1910ஆம் ஆண்டு தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களால் நிறுவப்பட்டது. இதன்பின்னர் கல்வி சாதாரண மக்களுக்கும் திறந்துவிடப்பட்ட பொருளாயிற்று. பாவலர் அவர்கள் அதனை நிறுவுவதற்கும் நடத்துவதற்கும் தொடர்ந்து பாடுபட்டார். அவர் காலத்தை மகாஜனாவின் வளர்ச்சிக் காலம் என்றால் தெ.து. ஜெயரட்ணம் அவர்களின் காலம் எழுச்சிக் காலம் என்று கூறமுடியும். பன்னாலை வாழ் மக்கள் மட்டுமன்றி நாடளாவிய ரீதியில் பல்வேறு பிரதேசங்களில் இருந்தும் மாணவர்கள் வந்து கல்வி பயின்ற பொற்காலம் ஜெயரட்ணம் அதிபர் காலம் ஆகும். குறிப்பிட்ட ஒரு காலம் வரை மகாஜனாவின் பணி அரச எழுதுவினைஞர்கள் ஆவதற்குத் தகுதியுடைய மாணவர்களை உருவாக்குவதாக அமைந்திருந்தது. 1950இன் பின்னர் ஆங்கில மொழி மூலம், தமிழ் மொழி மூலம்

கல்வி பயின்ற பெருந்தொகையான பன்னாலை மக்கள் இன்று உயர் பதவிகளில் இருக்கின்றனர். கீழே தரப்படும் அட்டவணை, பன்னாலை வாழ் பெருமக்கள் கல்வியில் எவ்வளவுதூரம் சிறந்து விளங்கினர் என்பதனை எடுத்துக்காட்டுகிறது.

1. முதலாவது பிறக்கிராசி திரு. சின்னக்குட்டியார்.
2. முதலாவது அப்புக்காத்து சேர் அ. கனகசபை
3. முதலாவது வைத்தியர் திரு. சிவஞானவேல்
   பெண் திருமதி சிவபாக்கியம்
4. முதலாவது பொறியியலாளர் திரு. வேலுப்பிள்ளை நந்தீஸ்வரன் (பொறியியல் துறைக்கு இவருக்கு முன் வயிரவப்பிள்ளை என்பவர் எடுபட்டார்; ஆனால் கல்வியைப் பூர்த்திசெய்யவில்லை.)
5. கலாநிதிப் பட்டம் பெற்ற முதலாமவர் திரு. தில்லைநாயகம் வேலாயுதம் (கல்வி உளவியலில் கலாநிதிப் பட்டம் பெற்றவர்)
6. முதலாவது விஞ்ஞானப் பட்டதாரி திருமதி சுந்தரலிங்கம் சிவபூரணம்
7. முதலாவது கலைப்பட்டதாரி திரு. ச. சண்முகலிங்கம் (இவரே SLAS இலங்கை நிர்வாக சேவைத் தரத்தை முதலிற் பெற்றவர்)
8. முதலாவது பல் வைத்தியர் திருமதி சிவராஜா கலாதேவி
9. முதலாவது மிருக வைத்தியர் திருமதி ரவிச்சந்திரன் ஆனந்தரூபி
10. முதலாவது விவசாயத்துறைப் பட்டதாரி திரு. ந. சிவபாலன்

குறிப்பு : ஒவ்வொரு துறையிலும் முதலாவதாக வெளியேறிய நபர்களைக் குறிப்பிட்டு எழுதுவதற்குப் போதிய தகவல்கள் கட்டுரையாசியருக்குக் கிடைக்காமையால் கிடைத்த தகவல்களை மட்டும் வைத்து, குறிப்பாகப் பல்கலைக்கழக மட்டத்தில் கல்வி பயின்ற மக்களை வைத்து இவ்வட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது.

1970, 80 களின் பின்னர் கல்வித்துறை மிகவேகமாக வளர்ச்சிபெற்றது. பன்னாலையில் இருந்து பல்கலைக்கழகம் செல்வோர் தொகை அதிகரித்தது. இன்று 21ஆம் நூற்றாண்டின் சவால்களுக்கு முகங்கொடுக்கத்தக்க வகையில் பல்வேறு துறைகளில் மாணவர்கள் கல்வி பயின்று கொண்டிருக்கின்றனர்.

பன்னாலை ஒரு விவசாய பூமி. இங்குள்ளவர்களின் பிரதான தொழிலாக விளங்கியது விவசாயமே. பிற்காலங்களிற் சமூகமாற்றம் காரணமாக இந்நிலைமை நெகிழ்வுற்றது. இன்று, பன்னாலையை நாம் கல்விப் பூமி என்று கூறமுடியும். பரம்பரைத் தொழிலான

விவசாயத்தினின்றும் விடுபட்டு மக்கள் இன்று பல்வேறு துறைகளில் காலூன்றி ஊருக்குப் பெருமைதேடித் தந்துள்ளனர். இந்நிலைமைக்குப் பிரதான காரணம் மகாஜனா வழங்கிய சேவையே என்பதை யாரும் மறக்க முடியாது.

இன்றைய தலைமுறையினர், வைத்தியர், பல் வைத்தியர், மிருக வைத்தியர், சித்த வைத்தியர், விவசாய விஞ்ஞானப் பட்டதாரிகள், விஞ்ஞானமாணிப் பட்டதாரிகள், பொறியியலாளர், வர்த்தகப் பட்டதாரிகள், முகாமைத்துவப் பட்டதாரிகள், கலைப் பட்டதாரிகள், சட்டத்தரணி, வங்கி அலுவலர்கள், அரச நிர்வாக உத்தியோகத்தர்கள், கணனித் துறை நிபுணர்கள், தனியார் துறை உத்தியோகத்தர்கள், அதிபர், ஆசிரியர்கள் என்று இன்னோரன்ன துறைகளில் திறம்படப் பணியாற்றி வருகின்றனர்.

நாட்டில் மூண்டபோர் எமது அழகிய பண்பட்ட கிராமத்தைச் சின்னாபின்னமாக்கியது. மக்கள் உயிரைப் பாதுகாக்கும் பொருட்டுப் பிறந்த மண்ணைவிட்டு ஊரூராகப் புலம்பெயர்ந்து சென்றனர். 1990 ஆம் ஆண்டுவரை பல்துறைகளிலும் செழிப்புற்று வளர்ச்சியுற்றிருந்த எமது கிராமம் போரென்ற கொடிய அரக்கன் கைகளில் சிக்குண்டது. பத்து வருடங்களின் பின் 2000ஆம் ஆண்டில் மக்கள் இப்பிரதேசத்தில் மீளக் குடியமர்த்தப்பட்டனர். பன்னாலையில் 154 குடும்பங்களே வாழ்ந்துவருகின்றன. (கிராம அலுவலர் தகவல்திரட்டு 2000-2001 வலிகாமம் வடக்குப்பிரதேசமலர்) பன்னாலையைப் பூர்வீகமாகக் கொண்ட பலர் இன்று உலகெங்கும் பரந்து வாழ்கின்றனர். இவர்கள் பன்னாலையால் சிறப்புற்றவர்கள்.

நாடோ, காடோ, மேடோ, பள்ளமோ எதுவானாலும் எங்கு நல்ல மக்கள் உள்ளனரோ அந்த நிலம் நல்ல நிலமேயன்றி நிலத்துக்கென்று ஒரு குணமில்லை என்கிறது புறநானூறு.

'நாடாகொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவ ராடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே' - புறம் 187

பன்னாலை நிலனும் பயின்றோரால் பண்பட்டு விளங்குகின்றது என்பதில் ஐயமில்லை.

உ
சிவமயம்

# பன்னாலைக் கிராம அபிவிருத்திச் சங்கம்

பன்னாலை வாழ் மக்களுட் பெரும்பாலோர் விவசாயிகள். மிக மந்தமான பொருளாதார நிலையில் வாழ்ந்த இம்மக்களுக்குக் கிராம அபிவிருத்திச் சங்கம் அத்தியாவசியம் என்பதை உணர்ந்த பெரியோர்கள் ஒன்றுகூடித் திரு. சேர் அம்பலவாணர் (C.A.S) அவர்கள் தலைமையில் 1960இற் கிராம அபிவிருத்திச் சங்கம் ஒன்றைத் தாபித்தனர்.

மக்களின் வறுமையை ஒழித்தல். மக்களிடையே கல்வி, கலை, கலாசாரப் பண்பாட்டினை வளர்த்தல் சுகாதார நலன் பேணுதல், போக்குவரத்து வசதிகளைப் பெருக்குதல் போன்ற அரிய சேவைகளைக் கண்காணித்து இக்கிராமத்தை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்வதே இதன் தலையாய நோக்காகும். இதன் பிரகாரம் பல ஏழைக் குடும்பங்களுக்கு மலசலகூடம் அமைக்க ஆவன செய்யப்பட்டது. பேருந்துப் போக்குவரத்து வீதி அகட்டப்பட்டுத் தடைகள் அகற்றப்பட்டன. அந்தியகாலச் சகாயநிதி பல ஏழைக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது. வைத்திய கலாநிதி கந்தையா நாகலிங்கம் அவர்கள் (M.O.H) தெல்லிப்பழையில் காரியாலயம் வைத்திருந்த காலத்தில் இக்கிராமத்தில் இலவச மருந்தகம் அமைக்கப்பட்டு இயங்கியது.

1992இன் பின்னர் இராணுவ நடவடிக்கையால் இச்சங்கத்தின் செயற்பாடுகள் சற்றுத் தளர்ச்சி அடைந்துவிட்டன. இக்கிராம இளைஞர்கள் வளர்ச்சிப்படிகளை அமைக்க முன்வரவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம்.

# மாதர் அபிவிருத்திச் சங்கம்

மாதர் அபிவிருத்தி தொடர்பாக மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் மகளிர் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம் மகளிர் ஐக்கிய சனசமூக நிலையம் போன்ற தாபனங்கள் நிறுவப்பட்டன. இவற்றின் ஊடாக U.N.H.C.R., U.N.D.P. ஆகிய நிறுவனங்கள் கிராமத்து மக்களுக்குச் சுயமுயற்சிக்காகக் கடன் வழங்குகின்றன.

உ
சிவமயம்

# பன்னாலை கணேச விளையாட்டுக் கழகம்

இக்கழகம் பன்னாலை கணேச சனசமூக நிலையத்துடன் இணைந்து வலி வடக்கில் தனக்கென ஒரு தனி இடத்தைப் பிடித்து முன்னிலையில் இயங்கி வருகிறது. ஆரம்பகாலம் (1960இல்) தொடக்கம் பிரதேச சபை நடாத்திய (கிளித்தட்டு) தாச்சி விளையாட்டுப் போட்டி, கரப்பந்தாட்டம், ஓட்டப்போட்டிகள் யாவற்றிலும் பங்குகொண்டுளது. தாச்சி விளையாட்டுப் போட்டியில் பல ஆண்டுகள் முன்னிலை வகித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

வலி வடக்குப் பிரதேசசபை நடாத்திய மெய்வல்லுநர் போட்டியில் கடந்த மூன்று வருடங்களும் 2ம் இடத்தைப்பெற்று வருகிறது. கரப்பந்தாட்டத்தில் மூன்று வருடங்களும் தொடர்ச்சியாக முதலிடத்தைப் பிடித்துத் திகழ்கிறது. சென்ற வருடம் தென்கொரியாவில் நடந்த மெய்வல்லுநர் போட்டியில் எமது கழகத்தைச் சேர்ந்த சிவகுமார் (கிராமசேவகர் J/224) மகன் கமலமோகன் அவர்கள் 2.2 மீற்றர் உயரம் பாய்ந்து சாதனையும் புரிந்தார். அன்னாருக்கு வலி வடக்குப் பிரதேசத்தில் கௌரவிப்பு விழாவும் நடாத்தப்பட்டது. பன்னாலைக் கிராமத்திற்குப் புகழ்ஈட்டிக் கொடுத்த இக்கழகம் தொடர்ந்து நற்பணிபுரிய வாழ்த்துகிறோம்.

## முன்பள்ளி

பன்னாலை முன்பள்ளி ஆரம்பத்தில் தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கத்தில் ஆரம்பித்துத் திறம்பட நடைபெற்றது. பின்னர் ஏற்பட்ட நாட்டுக் குழப்பங்கள் காரணமாக இடைநிறுத்தப்பட்டது.

பன்னாலையில் மீள் குடியேற்றத்தின் பின் மீண்டும் பன்னாலை மகளிர் ஐக்கிய சனசமூக நிலயத்தினால் 2000ஆம் ஆண்டு பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

பாடசாலையில் இயங்கிய முன்பள்ளி 2002ல் கணேச சனசமூக நிலையத்தின் கீழ் நடாத்தப்பட்டு வருகின்றது.

இப்பள்ளியில் 20 மாணவர்கள் வரை கல்வி பயில்கின்றனர். விளையாட்டுப் போட்டிகள் கலை நிகழ்ச்சிகள் என்பன ஒழுங்காக நடைபெறுகின்றன.

நூலினைப் பகுத்துணர். - *மகாகவி பாரதியார்*

உ
சிவமயம்

# பன்னாலை விவசாய சம்மேளனம்

பன்னாலை வாழ் மக்கள் இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்தபோது மக்களில் எழுபத்தைந்து (75%) வீதமானோர் விவசாயத்தையே முழுநேரத் தொழிலாகக் கொண்டிருந்தமையால் அவர்களின் வாழ்க்கையை வழமைநிலைக்குக் கொண்டுவர வேண்டுமென்ற நல்நோக்கத்திற்காகப் பன்னாலை வர்த்தலம் பிள்ளையார் ஆலயத்திற் கிராம உத்தியோகத்தர், விவசாய உத்தியோகத்தர்கள் போன்ற அரச அதிகாரிகளாற் பன்னாலை விவசாய சம்மேளனம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுக் கமநலசேவைத் தலைமைப் பணிமனையிற் பதிவுசெய்யப்பட்டுள்ளது. சம்மேளனம் இவ் ஆண்டுடன் ஐந்து ஆண்டுகளை நிறைவுசெய்து மக்கள் சேவையே மகேசன் சேவையெனத் தலைவர் நா. திருபாலசிங்கம், உபதலைவர் ச. சிவசுப்பிரமணியம், செயலாளர் ந. திருலோகநாதன், ஆரம்பபொருளாளராக ந. அப்புத்துரையும், தற்சமய பொருளாளராக ச. வெற்றிவேலும் சக நிர்வாக உறுப்பினர்களாக மு. சிவஞானம், க. சிவலிங்கம், மா. தேவராசா ஆகியோர் சம்மேளன வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு ஏனைய சம்மேளனங்கள் மாதிரியல்லாது தலைவரின் அறிவுரைப் பிரகாரம் சம்மேளனப் போக்குவரத்துச் செலவுகளுக்கோ, பிறசெலவுகளுக்கோ சம்மேளன நிதியில் பயன்பெறாது கடந்த ஐந்தாண்டுகள் தன்னலமற்ற சேவைசெய்து சம்மேளனம் (75%) தன்னிறைவு காணும் நிலைக்கு வழிவகுத்துள்ளனர்.

விவசாயிகளுக்குத் தேவையான நிதி உதவிகள், உள்ளீடுகள், நீர் இறைக்கும் இயந்திரத் தெளிகருவி உதவிகள், அவர்களின் விவசாயப் பிரச்சினைகளுக்கான அறிவுரைகள் அரச, அரச சார்பற்ற நிறுவன உதவிகள் பிரதேச செயலக மட்டத்தில் நடைபெறும் மாதாந்தக் கூட்டங்களில் தலைவர் தவறாது பங்குகொண்டும் விவசாய சேவை நிலையத்தில் நடைபெறும் மாதாந்த விவசாயக் கூட்டத்தில் செயலாளர் பொருளாளர் தவறாது பங்குகொண்டும் விவசாயப் பெருமக்களின் அச்சாணித் தேவைகளை ஆவன செய்கின்றனர். தற்சமயம் 130 அங்கத்தவர்களைக் கொண்ட சம்மேளனமாக இருப்பதுடன் குறைந்த வாடகை அடிப்படையில்நீர் இறைக்கும் இயந்திரம் தெளிகருவி சேவைகளும் சீடா நிறுவனம் சம்மேளனங்களுக்கு மாதாந்த அடிப்படையில் பணம் செலுத்தும் திட்டத்தில் சம்மேளன இருபத்தைந்து (25) விவசாயிகள் நீர் இறைக்கும் இயந்திரங்களைச் சம்மேளனச் சிபார்சுடன் பெற்று அதனைப் பூரணமாக முழுப்பணம் செலுத்தித் தங்கள் உரிமையாக்கிக் கொண்டுள்ளார்கள். பயிர்ச் செய்கைக்காக இலங்கை வங்கி காங்கேசன்துறையில் 2002ம் ஆண்டு ஒன்பது லட்சம் ரூபாவும் 9,00,000/- 2003ம் ஆண்டு ஆறு லட்சம் ரூபாவும் 6,00,000/- 2004ம் ஆண்டு சம்மேளன விவசாயிகள் 54 பேருக்குப் பதினாறு லட்சத்து எழுபதினாயிரம் (16,70,000/-) ரூபாவும் சம்மேளன பெரும்பாக உத்தியோகத்தர் சிபார்சின் பிரகாரம் கடன்பெற்றுத் திரும்பவும் குறித்த காலத்தில் மீளவும் செலுத்தி ஒத்துழைப்பு நல்கி வருகிறார்கள் என்பதைப் பெருமையுடன் தெரியப்படுத்துகிறோம். பன்னாலை விவசாயப் பெருமக்களின் தன்னிறைவே சம்மேளனத்தின் தாகமாகும். நன்றி.

செயலாளர் : **ந. திருலோகநாதன்.**

நெற்றி சுருக்கிடேல். - மகாகவி பாரதியார்

உ
சிவமயம்

# ஐக்கிய நாணய சங்கம்

பன்னாலையில் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பித்த காலத்தில் ஐக்கிய நாணய சங்கமும் ஆரம்பிக்கப்பட்டது. 1950இல் கமக்காரரின் வறுமைத்துயரைப் போக்கும் நோக்குடன் காலம்சென்ற திரு. கா. கதிர்காமத்தம்பி அவர்களால் ஐக்கிய நாணய சங்கம் தாபிக்கப்பட்டுப் பதிவுசெய்யப்பட்டது. வங்கி மூலம் விவசாயிகள் கடன்பெற்று மீளச் செலுத்தும் முறையை ஐக்கிய நாணய சங்கம் பொறுப்பேற்று நடாத்தி வந்தது. இம்முறை ஏழை விவசாயிகளுக்கு ஒருவரப்பிரசாதமாக அமைந்துளது. 1960இல் ஒரு ஐக்கிய நாணய சங்கம் காலம்சென்ற திரு. தம்பு ஆசிரியர் அவர்களால் தாபிக்கப்பட்டது. இரு ஐக்கிய நாணய சங்கங்களும் நல்லமுறையில் இயங்கின. 1989இல் இன்னும் ஒரு மாதர் ஐக்கிய நாணய சங்கம் செல்வி உமாராணி சங்கரப்பிள்ளை அவர்களால் தாபிக்கப்பட்டது. மாதர் பொருளாதார வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு இச்சங்கம் தாபிக்கப்பட்டது. இச்சங்கங்கள் யாவும் நல்ல முறையில் இயங்கி மக்கள் பொருளாதார வளர்ச்சிக்கு உந்துசக்தியாக விளங்கின.

# பன்னாலையில் மடாலயம்

இம் மடம் சித்தர் முத்திருஷி அவர்களது காலத்தில் (1940) திருஷீச்சரம் பாலசுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு அருகாமையில் தாபிக்கப்பட்டது. இம்மடத்தில் நடராசப் பெருமானின் உருவச்சிலை கொண்ட வழிபாட்டு அறை, தியான அறை எனச் சில அறைகளைக் கொண்ட நாற்சார அமைப்பில் கட்டப்பட்டது. இது சைவசீலர் திரு. இளயதம்பி பெயரில் இயங்கிவந்தது. அவர் காலமாகியதும் அவருக்குப்பின் ஒரு நம்பிக்கைச் சபை இம்மடத்தை ஏற்று நடாத்தியது. அந் நம்பிக்கைச் சபையில் திரு. வி. சங்கரப்பிள்ளை, திரு. சி. இளையகுட்டி, திரு. எஸ். சிவபாதசுந்தரம், திரு. வை. பொன்னையா ஆகியோர் அங்கம் வகித்தனர். திரு. வி. சங்கரப்பிள்ளை தவிர ஏனையோர் காலமாகிவிட்டனர்.

இங்கு சமயச் சொற்பொழிவுகள், சைவ சித்தாந்த வகுப்புக்கள், சிவதீட்சை, புராண படனம் நாயன்மார் குருபூசைகள் ஒழுங்காக நடைபெற்று வந்தன. 1992இன் பின்னர் நாட்டில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து சென்றதால் இம் மடம் இடிபாடுகளைக்கொண்டு இயங்காநிலையில் காணப்படுகிறது.

உ
சிவமயம்

# பன்னாலை திருவெம்பாவைக் கூட்டுப்பிரார்த்தனைச்சபை

1938ஆம் ஆண்டு திருத்தல யாத்திரைக்காகத் தென்இந்தியா சென்ற ஆசிரியமணி திரு. கா. கதிர்காமத்தம்பி அவர்கள் சிதம்பரத்தில் தங்கியிருந்த சமயம் திருவெம்பாவை நாட்களில் அங்கு நடைபெறும் வீதிப் பஜனையைக் கண்டார்கள். இப்படி ஒரு வழிபாட்டினை எங்கள் கிராமத்திலும் நடத்தினால் என்ன என்றொரு நல்லெண்ணம் அவர் மனதில் உண்டாயிற்று அவர் நாடு திரும்பியதும் ஆசிரியர்கள் திரு. வி. சங்கரப்பிள்ளை, திரு. வை. பொன்னையா ஆகியோரின் அனுசரணையுடன் இளைஞர்களையும், மாணவர்களையும் ஒருங்கிணைத்து எமது பன்னாலைத் திருவெம்பாவைக் கூட்டுப்பிரார்த்தனைச் சபையை உருவாக்கினார்.

1939ஆம் ஆண்டு மார்கழிமாதம் திருவெம்பாவைக் காலம் கூட்டு வழிபாட்டினை ஆரம்பித்து வைத்தார். பன்னாலைக் கிராமத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் கற்பகவிநாயகர், சிவபூதவராயர், சுப்பிரமணியர், ஞானவைரவர், வீரபத்திரர் ஆகிய தெய்வங்கள் எழுந்தருளியிருக்கும் கோயில்களின் வீதி வழியாக இக் கூட்டுப் பிரார்த்தனை நடைபெறுகிறது. கூட்டுப் பிரார்த்தனையில் பங்குபற்றும் அடியார்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிப்பதற்காகக் கிராமத்தவர்கள் ஒழுங்கு முறையில் தேநீர் சிற்றுண்டி வழங்குவார்கள். அத்துடன் இச்சபை திறம்படச் செயற்படுவதற்குப் பொருளுதவியும் புரிவார்கள். இச்சபை ஆசிரியமணி திரு. கா. கதிர்காமத்தம்பி அவர்களின் தலைமையில் மிகவும் சிறப்பாக இயங்கி 1989ஆம் வருடம் பொன் விழாவையும் 1999ஆம் ஆண்டு வைரவிழாவையும் மிகவும் சிறப்பாக நடத்தியது. திரு. கா. கதிர்காமத்தம்பி அவர்களின் பின் திரு. வை. பொன்னையா, திரு. செ. சிவபாலன், திரு. சி. சிவபாலசுப்பிரமணியம் ஆகியோரின் தலைமையிலும் தற்சமயம் திரு. சி. வேலாயுதம் தலைமையிலும் இயங்கி வருகின்றது.

ஆன்மீக ஈடுபாடு கொண்ட ஓர் சமுதாயத்தை உருவாக்கும் நோக்கில் வருடம் தோறும் இச்சபையினரால் சமய அறிவுப் போட்டிப் பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. பாலர் முதல் உயர்தரம் வரையுள்ள மாணவர்கள் பங்குகொள்ளத்தக்க வகையில் பாலர் பிரிவு கீழ்ப்பிரிவு மத்திய பிரிவு மேற்பிரிவு என நான்கு பிரிவுகளை ஏற்படுத்திப் பரீட்சைகள் நடைபெறும். ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்குச் சான்றிதழ்களுடன் பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படும். பரிசில்களுக்கான பண உதவியைக் கிராம மக்கள் தந்துதவுவார்கள்.

வருடம் தோறும் திருவெம்பாவை இறுதி நாளன்று எமது கிராம மத்தியிலிருக்கும் சிவபூதவராயர் ஆலயத்தில் அதிகாலை விசேட அபிசேகமும் அதனைத் தொடர்ந்து சமயச் சொற்பொழிவாற்றலும் பரிசில்கள் வழங்கலும் நடைபெறும்.

இச்சபையின் ஓர் அங்கமாக அறநெறிப் பாடசாலையும் இயங்குகின்றது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் சிவபூதவராயர் ஆலயத்தில் கூட்டுப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து பாடசாலையும் நடைபெறும். பாடசாலையில் சுமார் நாற்பது பிள்ளைகள் வரை சமயக் கல்வி பெறுகிறார்கள். இரு ஆசிரியர்கள் இலவசமாகச் சேவை செய்கிறார்கள்.

**சி. வேலாயுதம்**

உ
சிவமயம்

# பன்னாலையில் நடைபெற்ற விழாக்கள்

1. மெய்கண்டார் விழா : இது தான் எமது கிராமத்தில் நடந்த முதல் விழா.
இதற்குத் தலைமை வகித்தவர் சு. சிவபாதசுந்தரம்

பேச்சாளர்கள் :

1. அருளாநந்தசிவம், ஏழாலை.
2. Dr. பொன்னையா Doctor பட்டம். சைவசித்தாந்தத்தில்
Organising : வி. சங்கரப்பிள்ளை, தலைவர்
சி. சுப்பிரமணியம் , காரியதரிசி

2. சனசமூக நிலையத்திற்கு மந்திரி P. Premadasa வருகை தரல் : 1968
3. கணேச சனசமூக நிலைய வெள்ளி விழா 1975
3 நாட்கள். நிலையத்தலைவர் சி. சின்னத்தம்பி
விழாவுக்குத் தலைமை 1. க. நல்லைநாதன் ACLG
2. க. சண்முகலிங்கம் ACCD
3. வி. பொன்னம்பலம் அளவெட்டி
4). S.J.V. Chelvanagam
4. சேக்கிழார் விழா : வெள்ளிக்கிழமை தோறும் நாயன்மார் சரித்திரம் சொற்பொழிவு ஒவ்வொரு கோவிலிலும் நடைபெற்றது. அனேகநாள்கள் வைரவர்கோவிலில் இறுதி யாக நிகழ்ச்சியாக 'சேக்கிழார்விழா ஒருநாள்
காலை தலைவர் : ஏழாலை மட ஆலய தலைவர் திரு. மு. ஞானப்பிரகாசம்
மதியம் தலைவர் : T.T. Jayaratnam அத்துடன் மகேஸ்வர பூசை
மாலை தலைவர் : Sir Kandiah Vaithyanathan திருக்கேதீஸ்வரம்
முன்னின்று நடத்தியோர்
திரு. இ. இராமநாதன்
திரு. சி. சுப்பிரமணியம்
சேக்கிழார் படம் : சவாரி கீறியது. ஊர்வலமாகப் பாலசுப்பிரமணியர் கோவிலிலிருந்து எடுத்துவரப்பட்டுப் பாடசாலையைச் சென்றடைந்தது. சேக்கிழாருக்கு முதல் விழா எடுத்தது; N.K. Pathmanathan நாதஸ்வர வித்துவான் பட்டம் வழங்கிக் கௌவரக்கப்பட்டார்.
5. சேர் கனகசபை வித்தியாசாலை நூற்றாண்டு விழா 1965
தலைமை Director of Education தணிகாசலம்
விருந்தினர்கள் : Minister மு. திருச்செல்வம்
S.J.V. Chelvanayagam
பாடசாலை அதிபர். கா. கதிர்காமத்தம்பி
8. திருவெம்பாவை : பொன்விழா 1989
வைர விழா 1999.

தகவல் தந்தவர் : **சித்தாந்த ஆசிரியர் வி. சங்கரப்பிள்ளை**

நொந்தது சாகும். - மகாகவி பாரதியார்

உ
சிவமயம்

# மீள்குடியேற்றத்தின் பின்னர் பன்னாலை

1992இல் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையாற் பன்னாலைக் கிராமத்தில் ஏற்பட்ட பொருட்சேதங்கள் அழிவுகள் எழுத்தில் அடங்கா. எனினும் திருவாளர் சுவாமிநாதர் ஸ்ரீபாஸ்கரன் போன்ற பிரமுகர்களின் விடாமுயற்சியால் இக்கிராமத்தில் மீள்குடியேற்ற ஒழுங்குகள் 1998இல் நடைமுறைப்படுத்தப்பட்டன. இக்கிராமத்தில் ஒரு பகுதி இன்றும் உயர் பாதுகாப்பு வலயத்துள் அமைந்துளது. கிராமசேவையாளர்கள் திருவாளர்கள் சிவகுமார், தவராசா இல. J/224, இல. J/223 ஆகியோரின் ஒத்துழைப்புடன் இம் மீள்குடியேற்றம் நடைமுறைக்கு வந்தது. வீதிகள் ஒழுங்கைகள் விஸ்தரிக்கப்பட்டுப் புனரமைக்கப்பட்டன. இப்பணி பிரதேச சபைத் தொண்டர்களாற் செயற்படுத்தப்பட்டது. கோவில்கள், பாடசாலை சனசமூக நிலையம் போன்ற நிறுவனங்கள் பிரமுகர்களின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்டன. நீர் நிலைகள் சுத்திகரிக்கப்பட்டன. சங்கங்கள் புதுப்பிக்கப்பட்டு இயங்கின. பேரூந்துச் சேவை, மின்சார சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. உபதபால் அலுவலகம் திறக்கப்பட்டு இயங்கியது. விவசாய சம்மேளனம் புதிதாக ஆரம்பிக்கப்பட்டது.

இவையாவும் சிறப்புற இயங்க உறுதுணையாக இருந்தவர்கள் கீழ்க்காணும் அந்தணப் பெருமக்களும் கிராமவாசிகளுமாவர். அவர்களில் ஒருசிலரின் பெயர்கள் இங்கு குறிப்பிடல் பொருந்தும்.

அந்தணப் பெருமக்கள்

1) சிவஸ்ரீ இ. சபாரத்தினக் குருக்கள்
2) சிவஸ்ரீ நா. பத்மநாதக் குருக்கள்
3) சிவஸ்ரீ சண்முகநாதக் குருக்கள்
4) சிவஸ்ரீ சற்குணராஜசர்மா
5) சிவஸ்ரீ ம. மகேந்திரசர்மா
6) சிவஸ்ரீ சி. சந்திரசர்மா

பொதுமக்கள்

| | | |
|---|---|---|
| திரு. செ. சிவபாலன் | திரு. சி. முருகானந்தன் | திரு. க. முத்துக்குமாரசாமி |
| திரு. செ. ஜெயபவான் | திரு. சி. வேலாயுதம் | திரு. க. சிவபாலன் |
| திரு. நா. கிருபாலசிங்கம் | திரு. த. குறிஞ்சிக்குமரன் | திரு. ச. கணேசன் |
| திரு. ஏ. லகிதரன் | திரு. க. விக்னேஸ்வரன் | திரு. ச. ஸ்ரீஸ்கந்தராசா |
| திரு. க. திருநாவுக்கரசு | திருமதி கு. அருள்மொழி | திரு. வி. அம்பலவாணர் |
| திருமதி க. கமலாதேவி | திரு. த. ஜெயபவான் | திருமதி க. தவமணி |
| திரு. கா. ஏரம்பமூர்த்தி | செல்வி செ. ஜெயரஞ்சி | திரு. க. துரைரத்தினம் |
| திரு. சு. அஜந்தன் | திரு. வை. காசிலிங்கம் | திரு. வி. சிவசுதன் |
| திரு. செ. மகேஸ்வரன் | திரு. வ. நவரத்தினம் | திரு. ம. வெற்றிவேல் |
| திரு. க. வீரசிங்கம் | திரு. சி. முகுந்தன் | திரு. க. செல்லத்துரை |
| திரு. சி. சிவரதன் | திரு. து. ரதன் | திரு. த. நந்தகுமார் |
| திரு. நா. பாலகுமார் | திரு. ஜெயக்குமார் | திரு. க. ரவி |

அமரர் திரு. ந. அப்புத்துரை.

**செல்லையா சிவபாலன்.**

நோற்பது கைவிடேல். - மகாகவி பாரதியார்

உ
சிவமயம்

# பன்னாலையில் ஆகிவந்த நூல்கள்

**வித்துவான் ச. சிவானந்தையர்**

அகப்பொருள் விளக்கம்
சனி துதி
புலியூர்ப்புராணம்
தசகாரியம்
நகுலமலைக் குறவஞ்சி
நவக்கிரக கவசம்
புலியூர் யகம அந்தாதி
தருக்க சங்கிரகம் உரை
நீதிநெறி விளக்கவுரை
நீதிவெண்பாவுரை
அன்னம்பட்டீயம் - உரைக்கு உரை.

**சித்தாந்த ஆசிரியர் வி. சங்கரப்பிள்ளை**

பிரணவக் கலை விளக்கு
சிவத்திருவடிவங்கள்

**இசையாசிரியர் பொன் தெய்வேந்திரன்**

சிலம்பின் செய்தி
விரத நிர்ணயம்

**சிறப்பு மலர்கள்**

திருவெம்பாவைக் கூட்டுப்பிரார்த்தனைச் சபைப் பொன்விழா மலர்
- ஷை - சபை வைர விழா மலர்
கணேச சனசமூக நிலைய வெள்ளி விழா மலர்
மயிலையம்பதி ஞானவைரவர் கும்பாபிஷேக மலர்

# சைவாலயங்கள்

1. **வரத்தலம் அருள்மிகு கற்பக விநாயகர் ஆலயம்**
கலாபூஷணம் பண்டிதர் சி. அப்புத்துரை
2. **அருள்மிகு கற்பகவிநாயகர் ஆலய வரலாற்றுடனான பின்னிணைப்பு**
திருமதி அமிர்தயோகேஸ்வரி முத்துக்குமாரசாமி
3. **அருள்மிகு கற்பகவிநாயகர் திருவூஞ்சல்**
அளவையூர் வே. கனகசபைப் புலவர்
4. **அருள்மிகு கற்பகவிநாயகர் இரட்டை மணிமாலை**
அளவையூர் கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை
5. **அருள்மிகு கற்பகவிநாயகர் திருப்பதிகம்**
அளவையூர் அருட்கவி சீ. விநாசித்தம்பி
6. **விநாயக பரத்துவ மாலை**
அளவையூர் அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர்
7. **பன்னாலை அருள்மிகு சிவபூதவராயர் ஆலயம்**
கலாபூஷணம் பண்டிதர் சி. அப்புத்துரை
8. **அருள்மிகு சிவபூதவராயர் திருவூஞ்சல்**
விழிசிட்டி பண்டிதர் சி. கதிரிப்பிள்ளை
9. **பன்னாலை திருசீச்சரம் அருள்மிகு பாலசுப்பிரமணியர் ஆலயம்**
கலாபூஷணம் பண்டிதர் சி. அப்புத்துரை
10. **திருசீச்சரம் அருள்மிகு பாலசுப்பிரமணியர் திருவூஞ்சல்**
ஆசிரியர் வ. நல்லப்பு
11. **திருசீச்சரம் அருள்மிகு ஸ்ரீவள்ளிமலைக் கந்தன் திருவூஞ்சல்**
சுன்னாகம் அ. குமாரசுவாமி புலவர்
12. **பன்னாலை மயிலையம்பதி அருள்மிகு ஸ்ரீஞானவைரவர் ஆலயம்**
கலாபூஷணம் பண்டிதர் சி. அப்புத்துரை
13. **மயிலையம்பதி அருள்மிகு ஸ்ரீஞானவைரவர் சுவாமி தோத்திரப் பாடல்கள்**
பன்னாலை கா. கதிர்காமத்தம்பி
14. **வல்லுவத்தை அருள்மிகு ஸ்ரீஞானவைரவர் ஆலயம்**
கலாபூஷணம் பண்டிதர் சி. அப்புத்துரை
15. **வல்லுவத்தை அருள்மிகு ஸ்ரீ கந்த ஞான வைரவர் திருவூஞ்சல்**
விழிசிட்டி பண்டிதர் வே. பொன்னம்பலவன்
16. **அட்டமட்டை அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயம்**
கலாபூஷணம் பண்டிதர் சி. அப்புத்துரை
17. **பன்னாலை அருள்மிகு புதுப்பிள்ளையார் ஆலயம்**
கலாபூஷணம் பண்டிதர் சி. அப்புத்துரை

நயம்பட உரை - *ஔவையார்*

உ
சிவமயம்

# பன்னாலை - வரத்தலம்
# அருள்மிகு கற்பக விநாயகர் ஆலயம்

கலாபூஷணம் பண்டிதர் : சி. அப்புத்துரை

## பூர்வீகம் :

யாருடைய கவனிப்புமின்றிப் பன்னாலை வரத்தலம் என்னுமிடத்து நின்றதொரு வன்னிமரநீழலில் அமர்ந்திருந்த விநாயகரை ஒரு மூதாட்டி நீண்டகாலம் தமக்குத் தெரிந்த முறையில் அர்ச்சித்து, வழிபட்டு வந்திருக்கின்றார். பெருமான் சந்நிதியிற் கண்ணப்பர் வழிநின்று, செய்யவேண்டிய, நடைபெறவேண்டிய கருமங்களையெல்லாம் குறையின்றி நிறைவுசெய்து வந்த அந்த அம்மையார் கற்பகம் என்னும் பெயரை உடையவர் என்று அறிகின்றோம். கற்பகம் என்னும் பெயரையுடைய அம்மையாரால் அர்ச்சிக்கப்பட்ட விநாயகர் கற்பகவிநாயகர் என அழைக்கப்பெற்றார் என்பதொரு கர்ணபரம்பரைக்கதை தொடர்ந்துகொண்டிருக்கிறது.

புராணங்களிற் கற்பகம் எனுஞ் சொல் விநாயகர் என்னும் பொருளிலும் பயன்படுத்தப்பட்டுளது. '**பரங்கிரிவாழ் கற்பகம்**' என்பது திருப்பரங்கிரிப் புராணத்திற் காணப்படும் ஒரு தொடர். தேவலோக கற்பக தரு போன்றதொரு நிலையை உணரவைக்கும் முறைமையைக் '**கற்பகம் என வினை கடிதேகும்**' என்னுந் திருப்புகழ்த் தொடர் எண்ணவைக்கின்றது. '**அற்புத நிறைந்த கற்பகக் களிறு**' எனும் விநாயகர் அகவற் பகுதியும் **தில்லைவனக் கற்பகக் குஞ்சரம்** எனும் சிதம்பரபுராணப்பகுதியும், **களிறு, குஞ்சரம்** எனுஞ் சொற்கள் விநாயக பரத்துவத்தை அடையும்வகை '**கற்பகம்**' முன்னே அடைமொழியாக்கப்பட்டதென்று உணர வைக்கின்றன. இன்னும், ஈழத்திற் பல விநாயகராலயங்கள் **கற்பகம்** எனுஞ்சொல்லை முன்னாகக் கொண்டு நிற்பதையும் அவதானிக்க முடிகின்றது. யாழ்மாவட்டம்: **கல்வளை ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம், ஈவினை கற்பக விநாயகர் ஆலயம், உடுப்பிட்டி கற்பகவிநாயகர் ஆலயம், உரும்பராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலயம், வரணி வடக்கு கற்பக விநாயகர் ஆலயம், முல்லைத்தீவு மாவட்டம்: குமுளமுனை கற்பக விநாயகர் ஆலயம், மன்னார் மாவட்டம்: கோயிற்குளம் கற்பகப்பிள்ளையார் ஆலயம், திருகோணமலை மாவட்டம்: கட்டைபறிச்சான் ஸ்ரீ கற்பகவிநாயகர் ஆலயம், மட்டக்களப்பு மாவட்டம்: தும்பன்கேணி ஸ்ரீ கற்பகப்பிள்ளையார் ஆலயம், வாகரை கற்பக விநாயகர்**

**ஆலயம், களுதாவளை கற்பகவிநாயகர் ஆலயம், குப்பிழான் கற்பகவிநாயகர் ஆலயம், அம்பாறை மாவட்டம்: சம்மாந்துறை கற்பகப்பிள்ளையார் ஆலயம், மொனறாகலை மாவட்டம்: மொனறாகல கற்பக விநாயகர் ஆலயம்** முதலாயின அவ்வகையின. இவ்வண்ணமாய பெயர்களுளொன்றாக வரத்தலம் கற்பக விநாயகர் ஆலயப் பெயரையும் சிந்திப்பது பொருத்தமானது.

மாருதப்புரவீகவல்லியால்[1] அமைக்கப்பெற்ற இரண்டாவது அமைப்பு இதுவென வரலாறு கூறுகின்றது.[2] இந்த இடத்து நின்றதொரு வன்னிமர நீழலில் ஆதியில் விநாயகர் பிரதிட்டை செய்யப்பட்டார் என அறிகின்றோம். இப்போதுள்ள கர்ப்பக் கிருகத்துக்குத் தென்கிழக்கில், மடைப்பள்ளிக்கு அண்மையாக, இப்பொழுது நிற்கும் வன்னிமரத்திற்குப் பக்கலிலேயே அந்த வன்னிமரமும் நின்றுளது. காலப்போக்கில் அது பட்டுவிட்டதென்றும் புதியதொன்று முளைத்து வளர்ந்துள்ளதென்றுஞ் சொல்லுகின்றார்கள். வன்னிமர நீழலிலமர்ந்த விநாயகரை இப்போதுள்ள இடத்திற்கு மாற்றஞ் செய்தவர் யாரென்றோ, எப்போது மாற்றஞ் செய்யப்பட்டதென்றோ, ஏன் மாற்றஞ் செய்யப்பட்ட தென்றோ தெரியவில்லை.

## வரத்தலப்பதி :

தெல்லிப்பளைச் சந்தியிலிருந்து மேற்கு நோக்கி அம்பனைச்சந்தியைக் கடந்து பிரதான வீதிவழி நானூறு மீற்றர்வரை செல்ல வீதியோரத்தில் வடக்குப்புறமாக ஒரு கிணறு இருக்கின்றது. அந்த இடத்தில் நின்று வடமேற்காக நோக்கின் வரத்தலப்பதி விநாயகராலயத்தைக் கண்டானந்திக்கமுடியும். அந்த இடத்திலிருந்து ஒரு சிறிய பாதை கோயிலை நோக்கிச் செல்கின்றது. கிணற்றடியிலிருந்து மேலும் இருநூறு மீற்றர்வரை மேற்கே செல்ல ஒரு அகலமான ஒழுங்கை வடக்குப்புறம் ஆலய மருங்கு செல்கின்றது. பன்னாலைக் கிராமசேவையாளர் பிரிவில் மருதநிலப்பாங்கரில் அமைந்திருக்கும் இந்த ஆலயம் பழம்பெருமை வாய்ந்தது.

## ஆலய அமைப்பு :

கிழக்கு நோக்கிய வாறமைந்திருக்கும் இந்த ஆலயம் கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், நிருத்த மண்டபம், தம்பமண்டபம், வசந்தமண்டபம் என்னும் மண்டபங்களை உடையது. மகாமண்டபத்தில் வடக்குப் புறத்தில் எழுந்தருளிக்கான

1. யாழ்ப்பாணம் அளவையம்பதி கும்பிளாவளை தோத்திரப்பிரபந்தத்திரட்டு. ஸ்ரீமான் க.வே. கந்தையாபிள்ளை பதிப்பு. ஸ்ரீமுக ஆவணி 1934, பக்கம்-5
2. -ஷ- பக்கம்-6

அமைப்பு உண்டு. தம்ப மண்டபத்தில் மூஷிகம், பலிபீடம், கொடிக்கம்பம் என்பன அமைந்துள்ளன. கொடிக்கம்பத்தின் முன்னே மூலாதார கணபதியைப் பார்க்கின்றோம். வெள்ளிக்கவசத்தையுடைய கொடிக்கம்பத்தின் வடக்கில், அண்மையாக நவக்கிரகப் பிரதிட்டை செய்யப்பட்டுளது. பிரதான வாயிலில் 36 அடி உயரமான ஒருவாயில் இராஜகோபுரம் கட்டப்பட்டுளது. 21 அடி உயரமான மணிக்கோபுரம் இராஜகோபுரத்தின் வடக்கிலுள்ளது. மணிக்கோபுரத்தின் கீழ்ப்பகுதியில் நாகதம்பிரானும், அதற்கு வடக்கே சந்தான கோபாலரும் தெற்கே வைரவரும் எழுந்தருளுகின்றனர். உள்வீதியின் தென்கிழக்கில் மடைப்பள்ளி களஞ்சிய அறை என்பனவும், வடகிழக்கில் வசந்த மண்டபம், யாகசாலை என்பனவும் அமைந்துள்ளன. திருமஞ்சனக் கிணறு கர்ப்பக்கிருகத்திற்கு வடகிழக்கில் அர்த்தமண்டபத்துக்கு அண்மையாக உளது. உள்வீதி வெளிவீதி பிரித்துக் காணும்வகை இடையே சுற்றுமதில் கட்டப்பட்டுளது. சுற்றுமதில், கர்ப்பக்கிருகம், முதலிய அமைப்புக்கள் சுண்ணாம்பு, மணல், சருக்கரை, கல் என்பன கொண்டு கட்டப்பட்டவை. 1977இல் சீமேந்தினாற் பூசி வண்ணவேலைகள் செய்து அழகுபடுத்தியுள்ளனர். தம்பமண்டபத் தளம் செப்பஞ் செய்யப்பட்ட கருங்கல் பதித்து நிறைவாக்கப்பட்டுளது. இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட கருங்கற்களே இத்தள அமைப்பிற்குப் பயன்படுத்தப்பட்டன என்று அறிகின்றோம். இரண்டாவது வீதியின் தென்கிழக்கில் உள்ள தலவிருட்சமான வன்னிமரத்தடியில் 1977இல் வைரவர்சூலம் ஒன்று தாபிக்கப்பட்டுளது. சிறியதொரு கோயிலமைப்பும் உண்டு. மகோற்சவ முடிபில் நடைபெறும் வைரவர் பொங்கல் இந்த இடத்திலேதான் நடைபெறுகின்றது.

### கும்பாபிஷேகம் :

1872இல் கர்ப்பக்கிருகம் அர்த்தமண்டபம் மகாமண்டபம் என்பன கட்டப்பட்ட நிலையில் முதலாவது கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. இந்த ஆலயத்தின் முதலாவது அர்ச்சகர்[3] என இதுவரை கிடைத்த தகவல்கள் உணர்த்தும் பிரம்ம ஸ்ரீ ம. பிள்ளையார் பட்டர் இத்திருப்பணி வேலைகளுக்கும் முதற் கும்பாபிஷேகத்திற்கும் தலைமை தாங்கியுள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. இரண்டாவது கும்பாபிஷேகம் 1912இல் நடைபெற்றுளது. இந்தியாவிலிருந்து வந்து வடலியடைப்பில் வாழ்ந்த பிரம்மஸ்ரீ அ. அருணாசலசாஸ்திரியார் இக்கும்பாபிஷேகத்திற்குத் தலைமைக்குருவாக இருந்திருக்கின்றார்கள். இந்தவேளை தம்பமண்டபம், இராஜகோபுரம் என்பவற்றின் திருப்பணி வேலைகளும் நிறைவுற்றிருந்தன. 1956.07.09 ஆனி புநர்பூச நட்சத்திரத்தில் மூன்றாவது கும்பாபிஷேகம் நடைபெற்றது. புத்தூர் சிவஸ்ரீ மார்க்கண்டேயக் குருக்கள்

3. பன்னாலை திருசீச்சரம் ஸ்ரீசுப்பிரமணியர் ஆலய புராண வசனம் 1963. பக்கம் 2

வைத்தியநாதக் குருக்கள் தலைமையில் கிரியைகள் நடைபெற்றுள்ளன. மீண்டும் நான்காவது முறையாகச் சுன்னாகம் சிவஸ்ரீ நாகேந்திரக் குருக்கள் சோமாஸ்கந்தக் குருக்கள் தலைமையில் 1977.04.06 நள வருடம் பங்குனி மாதம் 24ஆம் நாள்[4] சுவாதி நட்சத்திரத்தில் நடைபெற்றுளது.

**கொடியேற்றுவிழா :**

18 அடி உயரமான கொடிக்கம்பம் 1914இல் அமைக்கப்பட்டது. ஆனால் ஆலய நிர்வாகத்திற்கும் உள்ளூரவர்க்குமிடையே தோன்றிய கருத்துவேறுபாடு காரணமான மனக்கசப்பினால், கொடியேற்றுவிழாவோ உற்சவமோ நடைபெறவில்லை. தொடர்ந்து நைமித்திய விழாக்கள் நடைபெறுவதும் தடைப்பட்டது. அந்த ஆண்டில் மட்டும் ஒருமுறை மகோற்சவம் நடைபெற்றபின் தடை ஏற்பட்டதென்னுங் கருத்துமுண்டு.[5] 1997.09.02 பிங்கள வருடம் ஆவணி 17 வெள்ளிக்கிழமை இந்த ஆலய முதற் கொடியேற்றுவிழா[6] புத்தூர் சிவஸ்ரீ சோமாஸ்கந்தக் குருக்களாலேயே ஆரம்பித்து வைக்கப்பட்டது.

**நைமித்திய விழாக்கள் :**

ஆவணி அமாவாசைத் தினத்தைத்[7] தீர்த்தோற்சவமாகக்கொண்டு 12 தினங்கள் மகோற்சவம் நடைபெறும். பதினோராம் நாள் தேர்த்திருவிழா நடைபெறும். ஆவணி விநாயக சதுர்த்தி, ஐப்பசிச் சுக்கிரவாரங்கள், மார்கழித் திருவாதிரை, தைப்பூசம், ஆயவேளைகளிலும் சுவாமி வீதியுலா வருவதுண்டு. வருடப்பிறப்பு, ஆவணி ஞாயிறு, புரட்டாதிச்சனி, நவராத்திரி, விநாயக ஷஷ்டி, பெருங்கதை, திருவெம்பாவை, சிவராத்திரி என்னுங் காலங்களிலும் விசேட வழிபாடுண்டு. மகோற்சவ தீர்த்தத் தினத்தன்று நண்பகல் அன்னதானம் நடைபெறும் முறைமையுமுண்டு. இத்தேவையைக் கவனிக்கவென்று வைத்திலிங்கம் பொன்னையா தலைமையில் ஓரன்னதான சபை இயங்குகின்றது.

**மூர்த்திகள் :**

மூலமூர்த்தி விநாயகர் கருங்கல் விக்கிரகம். 18 தேவாங்குல உயரமுடையது. பத்மாசனத்தில் வீற்றிருப்பது போன்ற அமைப்பு. மாருதப்புரவீகவல்லியாற் பிரதிட்டை

4. பன்னாலை வரத்தலம் கற்பகவிநாயகர் பதிகம் 1977. பக்கம் 9
5. பன்னாலை திருசீச்சரம் பாலசுப்பிரமணிய சுவாமி ஆலய வரலாறு 1959. பக்கம் 2
6. பன்னாலை வரத்தலம் ஸ்ரீ கற்பக விநாயகர் இரட்டைமணிமாலை 1977. பக்கம் 2
7. இலங்கைத் திருநாட்டின் இந்துக் கோயில் பிரதேச அபிவிருத்தி இந்து கலாச்சார அமைச்சு வெளியீடு. 1984. பக்கம் 97

செய்யப்பெற்ற விக்கிரகம் பற்றிய விளக்கத்தைப் பெறமுடியவில்லை. பரிவார மூர்த்திகளாய வைரவர், நாகதம்பிரான், சந்தான கோபாலர், நவக்கிரகம் என்போருக்குத் தனித் தனி தூபிகளோடு கூடிய அமைப்புக்கள் உண்டு. கருங்கல்லில் வடிக்கப்பட்ட விக்கிரகங்கள் பதிரதிட்டை செய்யப்பட்டுள்ளன. பெரியதுஞ் சிறியதுமான இரண்டு எழுந்தருளிகள், பஞ்சமுகவிநாயகர் ஐம்பொன்னாலானவை.

**திருப்பணி, உபகரிப்புகள் :**

தம்பமண்டபம், கொடிக்கம்பம் என்பவற்றைத் தெல்லிப்பளை மகாதனை பூதப்பிள்ளை அண்ணாமலைப்பிள்ளையும், வசந்தமண்டப வாயிற் கொட்டகையைச் சுப்பிரமணியம் கார்த்திகேசு குடும்பத்தினரும், நவக்கிரகங்களையும் அதற்குரிய அமைப்பையும் வேலுப்பிள்ளை கந்தையாவும், சந்தான கோபாலர் விக்கிரகத்தையும் அமைப்பையும் வைத்திலிங்கம் சிவசங்கரப்பிள்ளையும், வைரவர் விக்கிரகத்தையும் அமைப்பையும் வைத்திலிங்கம் இரத்தினமும், பஞ்சகமுக விநாயகர் விக்கிரகத்தை சங்கரப்பிள்ளை நடராசனும், யாகசாலையை வேலாயுதர் சண்முகமும், தேரினை வைரமுத்து நமசிவாயமும், குடும்பத்தினரும், சகடையைக் கொல்லங்கலட்டி பழனி சுந்தரமூர்த்தியும் உபகரித்துள்ளனர். 1912க்கு முன்பாகப் பூதப்பிள்ளை நரசிங்கம் என்பவரால் இராஜ கோபுரங் கட்டுவிக்கப்பட்டுளது. ஆறுப்பிள்ளை நாகலிங்கம், ச. சின்னப்பு, நமசிவாயம் கனகராயர் என்போர் முறையே எலி, குதிரை, யானை வாகனங்களை உபகரித்துள்ளனர்.

**தர்மசாதனங்கள் :**

ஆலயத்தின் மேற்கில், தெற்கு வடக்காகச் செல்லும் ஒழுங்கையின் மேற்குப்புறமாகவுள்ள அந்தணப் பெருமக்கள் குடியிருக்கும் நிலங்கள், கோயில் அர்ச்சகராயுள்ள அந்தணர்கள் குடியிருப்பிற்கென்றே தர்மசாதனஞ் செய்யப்பட்டவை என அந்த நிலங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் சிவஸ்ரீ இரத்தினசாமிக்குருக்கள் சபாரத்தினக் குருக்கள், பிரம்மஸ்ரீ குமாரசாமிக் குருக்கள் மகேஸ்வரசர்மா என்போர் நிறைவுடைப் பெருமனதுடன் சொன்னார்கள். ஆலயம் அமைந்துள்ள பகுதி சுமார் 25 பரப்பு இருக்கலாம். இதுபற்றி எந்தவித கருத்துஞ் சொல்லமுடியவில்லை. ஆலய வெளி வீதியின் வடமேற்கில் தூர்ந்து கொண்டிருக்குங் கேணியொன்றுண்டு. கேணியின் ஒரு புறத்தே நீரிறைக்கக்கூடியதாகத் துலாவிருந்தது. மறுபுறம் இளைப்பாறுவதற்காய மண்டபமொன்றிருந்தது. கால்நடைகள் தாமாகச் சென்று நீர் குடிக்கக்கூடிய வசதி இருந்தது. பின்னர் இந்தக்கேணி நிலமும் தர்மசாதனமாக்கப்பட்டுளதென்று பலர் சொல்லக் கேள்விப்பட்டோம். அத்தர்மசாதனத்தைச் செய்தவர் அம்பலவாணர் சிற்றம்பலம் எனவுஞ்

செய்தி கிடைத்துளது. தெருவோரமாக உள்ள கிணற்றோரமுள்ள தென்னைகள் நிறைந்த அடைப்பாகக் காணப்படும் பகுதி திருசீச்சரம் சுப்பிரமணியர் ஆலயத் தர்மசாதனம் என்று சொல்லக்கேட்டதுண்டு.

**இசை-கலை-பாரம்பரியம் :**

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த மாணிக்கம் சோமு, நாதஸ்வரகலாநிதி நாகலிங்கம் கந்தசாமி பத்மநாதன், நாதஸ்வர கான வாருதி செல்லத்துரை சிதம்பரநாதன், இசைத்தென்றல் எம்.பி. பாலகிருஷ்ணன், இலயஞான குபேரபூபதியை உருவாக்கிய கார்த்திகேசு கணேசு, தவில்ஞானி அழகர் சின்னக்கணேசு, நாதஸ்வரவித்வான் அழகர் சுதந்திரன் என்போர் இந்த ஆலய விழாக்களின் போது மங்கல வாத்தியங்களை முழங்கி ஆனந்த அனுபவத்தை ஊக்குவிக்கும் முயற்சி ஆலய பாரம்பரிய நிகழ்வாக இருந்துவருகின்றது. மகோற்சவ காலங்களில் தொடர் சொற்பொழிவுகள் நிகழ்த்தியதன் மூலம் கௌரவிக்கப்படவேண்டிய நிலைமைக்குள்ளாய கவிஞர் செல்லையா கதிரேசர்பிள்ளை, சைவப்புலவர் சுப்பிரமணியம் செல்லத்துரை, சைவப் பேரறிஞர் கதிரிப்பிள்ளை உமாமகேசுவரன் என்போர் ஆதீனமுதல்வர்களுளொருவராய சிவஸ்ரீ இ. சபாரத்தினக்குருக்கள் அவர்களால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். சித்தாந்தவித்தகர் விஸ்வநாதர் சங்கரப்பிள்ளை, கவிஞர் செல்லையா கதிரேசர்பிள்ளை, ஓதுவார் கந்தையா திருநாவுக்கரசு, ஓய்வுபெற்ற அதிபர் வைத்திலிங்கம் பொன்னையா என்போர் ஒழுங்கான புராண படன நிகழ்விற்குக் காரணர்களாவர்.

**பக்தி இலக்கியம் :**

வரத்தலம் கற்பகவிநாயகர் திருவூஞ்சற் பாடல்களை மேற்படி ஆலய ஆதீன முதல்வராய வித்துவான் பிரம்மஸ்ரீ சபாபதிஐயர் சிவானந்தையர் அவர்கள் வேண்டுகோட்படி அளவெட்டி வேலுப்பிள்ளை கனகசபைப்புலவர் பாடியுள்ளார்கள். சைவசித்தாந்தத்துட்பொருளைப் பொதிந்து காப்புச் செய்யுளுடன் பதினொரு பாடல்களைக் கொண்ட இத்திருவூஞ்சலைப் பாடிய புலவர் சைவச்சூழலிற் பிறந்து சைவச்சூழலில் வாழ்ந்த கத்தோலிக்கராவர்.[8]

அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்கள் பாடிய வரத்தலம் ஸ்ரீகற்பகவிநாயகர் திருப்பதிகம், காப்புச் செய்யுளுடன் பதினொரு பாடல்களையுடையதும் கவிஞர்

8. ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரிதம். வித்துவான் பிரம்மஸ்ரீ சி. கணேசையர் 1939. பக். 62. (சிவஸ்ரீ இ. சபாரத்தினக் குருக்கள், பிரம்மஸ்ரீ கு. மகேஸ்வரசர்மா, சித்தாந்தவித்தகர் வி. சங்கரப்பிள்ளை, ஓய்வுபெற்ற அதிபர் வை. பொன்னையா, ஓய்வுபெற்ற அதிபர் ச. சண்முகநாதன், சு. ஏழூர்நாயகம் என்போர் தந்த செய்திகளுடன் நேரிற் கண்டறிந்த விடயங்களையும் தொகுத்து எழுதப்பட்டது.)

செல்லையா கதிரேசர்பிள்ளை இயற்றிய வரத்தலப்பதி ஸ்ரீ கற்பகவிநாயகர் இரட்டைமணிமாலை, காப்புச் செய்யுளுடன் இருபத்தொருபாடல்களை வெண்பாவுங் கட்டளைக் கலித்துறையுமாகக் கொண்டுளதும் அருட்கவி சீ. விநாசித்தம்பி பாடிய வரத்தலம் ஸ்ரீ கற்பக விநாயகர் பரத்துவமாலை, காப்புச் செய்யுளுடன் முப்பத்தேழு பாடல்களையுடையது.

**நிறைவு :**

ஆங்கிலமாத முதல் தொடக்கம் 15ஆம் திகதிவரை சிவஸ்ரீ இரத்தினசாமிக் குருக்கள் சபாரத்தினக் குருக்களும், 16ஆந் திகதி முதல் மாத இறுதிவரை பிரம்மஸ்ரீ குமாரசுவாமிக் குருக்கள் மகேஸ்வரசர்மா அவர்களும் அர்ச்சகர்களாகப் பணிபுரிவர். ஆதீனமுதன்மையும் அவர்களுக்குரியதே. மகோற்சவ பரிபாலனம் வருடத்திற்கொருவராகச் செய்யும் உடன்பாடுண்டு. அர்ச்சகர்கள் இருவரது பணியும் போற்றலுக்குள்ளாகியுளது.

**குறிப்பு : 1977ஆம் ஆண்டு நடைபெற்ற திருப்பணி வேலைகள், கும்பாபிஷேகம், நூல் வெளியீடு என்பன சிவஸ்ரீ இரத்தினசாமிக்குருக்கள் சபாரத்தினக் குருக்கள் அவர்கள் பெருமுயற்சியில் நடைபெற்றன என அறிகின்றோம்.**

**இந்த வரலாறு 1988இல் எழுதப்பட்டது.**

**பின்னிணைப்பு :**

1992 முதலாக நடந்த அரசியற் குழப்பங்கள் காரணமாக மக்கள் வெளியேறி மீள் குடியேற்றத்தின் பின் ஆலயம் முழுமையாகப் புனருத்தாரணம் செய்யப்பட்டு 2004.07.04இல் மகா கும்பாபிஷேகம் சிவஸ்ரீ இ. சபாரத்தினக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது. புதிய கட்டிடத்தில் தூபியின் பிற்பக்கத்தில் தெற்குமேற்காக கஜலட்சுமி கோயில் பன்னாலை தவசர் குடும்ப உபயமாகவும், வடமேற்கே முருகன் ஆலயம் ஓய்வுபெற்ற அதிபர் க. திருநாவுக்கரசு குடும்ப உபயமாகவும் புதிதாக அமைக்கப் பட்டுள்ளன. முன்புறம் வயிரவர் கோயிலுக்கு அருகாமை யில் இருந்த சந்தானகோபாலர் விக்கிரகம் தூபிக்குப் பின்னால் மேற்கே அமைதி பெறுகின்றது.

திருப்பணிச் சபை கோவிற் கட்டிடத்தைப் பொறுப்பேற்று உள்நாட்டு வெளிநாட்டு உதவிகளுடன் திருப்பணி வேலைகளைத் தொடர்ந்து கொண்டே இருக்கின்றனர். இப்போது ஆவணி மாதச் சதுர்த்தியில் கோயிற் கொடியேற்றம் நிகழ்கிறது. அமாவாசையில் தீர்த்தம் நிகழும்.

உ
சிவமயம்

# வரத்தலம் அருள்மிகு கற்பகவிநாயகர் ஆலய வரலாற்றுடனான பின்னிணைப்பு

## வறுத்தலை கற்பகப் பிள்ளையார் கோயில் :

வரத்தலம் கற்பக விநாயகர் ஆலயம் எனக் காலத்திற்குக் காலம் ஒரே பிள்ளையார் பல பெயர்களுடன் வழிபடப்படுகின்றார். எனினும் பன்னாலை வாழ் மக்களுக்கு அன்றும் இன்றும் கற்பகப் பிள்ளையார்தான்.

## ஆரம்பம் :

இக்கோயில் முதன் முதலில் எந்த ஆண்டில் பிரதிஷ்டை செய்யப்பெற்றது என வரலாற்றுக் குறிப்புகள் இல்லாவிட்டாலும் இவ்வாலயம் 18ம் நூற்றாண்டில் இருந்துள்ளது என்பதற்குச் சான்றுகள் உள்ளன.

## கற்பகநாயகி (கற்பகம்) என்பவர் பன்னாலையில் :

கைலாயபுலம் என்னும் பதியில் வாழ்ந்தவர்; எந்நேரமும் சிவநாமத்தையே உச்சரிப்பவர். சிதம்பரம் மதுரை காஞ்சி போன்ற புண்ணிய தலங்களுக்குச் சென்று வந்தவர். காசித்தீர்த்தம் எந்நேரமும் இவரிடம் இருக்கும். பயம் அச்சம் என்பவற்றை நீக்குதற்கும் நோய்வாய்ப்பட்டவர்களைக் குணப்படுத்துவதற்கும் இதனை விபூதியுடன் வழங்குவார்.

கைலாயபுலத்திற்கு வடக்கே 'வல்லுவத்தை'யில் உடுப்பிட்டியைச் சேர்ந்த 'ஆத்தை' என்பவர் காவல் தெய்வமான வைரவப் பெருமானை வைத்து வணங்கியதாகவும் கைலாயபுலத்தில் வசித்த (கற்பகநாயகி) 'கற்பகம்' என்பவர் தெற்கே வன்னி மரத்தின் நீழலில் இந்தியாவில் இருந்து கொண்டுவந்த பிள்ளையாரை வைத்து வணங்கியதாகவும் பல சான்றுகள் மூலம் அறியலாம். இன்றும் இவை கர்ண பரம்பரையாக வழி வழியாக வருகின்ற செய்திகளாகும்.

கற்பகநாயகி என்ற மூதாட்டி காலம் செல்லச் செல்லப் பிள்ளையாரை விட்டு விலகாமல் இருந்தார். இக்காலத்தில் இவரின் சகோதரியின் மகனான கனகசபைப்பிள்ளை இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் கப்பல் மூலம் வியாபாரத் தொழிலில் ஈடுபட்டிருந்தார். எனவே இந்தியாவிலிருந்து கோவிலுக்குத் தேவையான பொருள்களைக்

கொணர்ந்து பிள்ளையாருக்கு நிரந்தரமான கோவிலைக்கட்ட வேண்டும் என்னும் அவாவினால் கட்டவும் தொடங்கிக் கட்டினார்.

1875இல் மாருதப்புரவீகவல்லி இலங்கைக்கு வந்த சமயம் கற்பகப் பிள்ளையார் ஆரம்பத்தில் இருந்த இடத்திலிருந்து இன்று கர்ப்பக்கிருகம் இருக்கும் இடத்திவ் (கற்பகப்பிள்ளையாரை) பிரதிஷ்டை செய்தார். இன்று வைரவப் பெருமானின் சூலத்திற்கு அருகில் இருக்கும் வன்னி மரம் பிறிதொன்றாக இருக்கலாம்.

கனகசபைப்பிள்ளை தனது நிர்வாகத்தில் கோவிலுக்குத் தேவையான பொருள்களை வழங்கிப் பூசைக்குத் தேவையான திரவியங்களையும் வழங்கினார்.

கோவிலுக்கு நித்திய நைமித்தியப் பூசைகளை நிறைவேற்றுவதற்கு அந்தணர்களையும் நியமித்து அவர்களையும் ஆதரித்து வந்தார். வேண்டிய உதவிகளையும் செய்தார். அந்தணர்கள் குடியிருப்பதற்குக் காணிகளையும் வழங்கினார்.

**தீர்த்தக் கேணி :**

கோவிலை நிர்வகித்து வந்த சங்கரநாதர் கனகசபைப்பிள்ளை அவர்களால் நிர்மாணிக்க ப்பட்டுப் பின்னர் அவரது பரம்பரையினர் நிர்வகித்து வருகின்றனர்.

**கோவில் கிணறு :**

கந்தையாபிள்ளை திருநாவுக்கரசு (சுங்க உதவி ஆணையாளர்) என்பவர் அடியார்கள் தம்மைச் சுத்திகரிப்பதற்காகக் கோவிலின் வடக்கு மூலையில் அமைத்தார்.

இடையிடையே ஆலயத்தில் பூசை செய்துவந்த அந்தணர்கட்கும் நிர்வாகத்திற்குமிடையில் சிக்கல்கள் ஏற்பட்டன. இவ்வாறான சிக்கல்களினாற் கோயில் நித்திய நைமித்திய பூசைகட்கு இடையூறு ஏற்படாமல் இருக்க அந்தணர்களிடம் கோயில் நிர்வாகமும் பூசைகளும் கையளிக்கப்பட்டன.

தகவல் தருபவர் : **அமிர்த யோகேஸ்வரி முத்துக்குமாரசாமி.**

உ
சிவமயம்

# பன்னாலை அருள்மிகு வரத்தலம் கற்பக விநாயகர் திருவூஞ்சல்.

அளவையூர்
வே. கனகசபைப் புலவர்

## காப்பு

சீராரும் பலவளமுஞ் சிறந்த செல்வத்
தெல்லிநக ரெஞ்ஞான்றுஞ் செழிக்க வந்த
வேராரும் வரத்தலமாம் பதியில் வாழு
மேரம்ப மூர்த்திதன திசைகள் கூறிப்
பேராருஞ் தமிழூசல் பாட வந்தப்
பிரணவத்தி னுட்பொருளாய்ப் பெருமை சான்ற
காராருங் கரடதட விகட முக்கட்
கறையடிமா முகக்கடவுள் காப்ப தாமே.

## நூல்

சொல்லரிய நாதவிந்து கால்களாக
துவாதசாந் தத்தடியே விட்ட மாக
வல்ல அவ்வும் உவ்வுமே கயிற தாக
வாய்ந்தபிர ணவமதுவே பலகை யாகச்
சொல்லுமணி மந்திரமா மூச லேறிச்
செகதலமெப் பொழுதுநலஞ் சிறந்து வாழ
மல்லல்மத மாமுகனே யாடீ ரூசல்
வரத்தலம்வாழ் கற்பகமே யாடீ ரூசல் 1

இனியமது மலரளகத் தேவ நல்லா
ரிசைபெருகு மிதவூசல் வடந்தொட் டாட்ட
கனியுமிசைத் தும்புருநா ரதர்யாழ் பாடக்
கந்தருவர் கின்னரர்கள் கீதம் பாடப்
பனிமலர்மா மழைசொரிந்து களிப்பி னோடும்
பண்ணவர்தூ ரியமுழக்கிப் பாங்கி நூடே
வனிதைதிரு வலவைபங்கா வாடீ ரூசல்
வரத்தலம்வாழ் கற்பகமே யாடீ ரூசல் 2

அந்தணர்க ளிருக்காதி மறைகள் பாட
வாரணன்மா லதிசயித்து மதித்து நாடச்
சுந்தரமா மேருவில்லைத் திரித்து நக்குத்
தொல்புரங்க ளொருமூன்றுந் தொலைத்த முக்கட்
சந்திரசே கரனிமைய வல்லி யோடுந்
தருக்கியன்பு பெருக்கிமிசை சார்ந்து நோக்க
மந்திரத்தி னுட்பொருளே யாடீ ரூசல்
வரத்தலம்வாழ் கற்பகமே யாடீ ரூசல் 3

வானவர்கள் அருந்துயரந் தணிந்து வாழ
வனஞாட்பி னெதிர்ந்ததும்பி வதன னாகுந்
தானவனை யொருமருப்பாற் றடிந்த கொற்றத்
தற்பரனே யற்புதனே தந்தை யார்க்கும்
மேலனமா முதன்மையினைப் பெற்ற ஞான
வேதாந்தத் துட்பொருளே விமல நாதா
மானவர்க ளுய்மருந்தே யாடீ ரூசல்
வரத்தலம்வாழ் கற்பகமே யாடீ ரூசல் 4

செப்பரிய பரப்பொருளின் ஒருபா கத்திற்
சேர்ந்துலக சராசரங்க ளனைத்துந் தந்து
முப்பதின்மே லிரண்டறமும் வளர்த்த தாயா
முக்கணம்மை மேனாளில் மொழிந்த சாபந்
தப்பறவே பலித்திடவேங் கடலு ளாழ்ந்து
சஞ்சலங்கொண் டஞ்சலித்துத் தளர்ந்த மாலாம்
மைப்புயலைப் புரந்தபிரா னாடீ ரூசல்
வரத்தலம்வாழ் கற்பகமே யாடீ ரூசல் 5

அந்தரமா முகிறவளுஞ் சிகரச் சார
லருங்கிரியின் மருங்குதினைப் புனங்காத் துற்ற
சுந்தரமான் மகட்குமுன்பு துணைவ னாகுஞ்
சுடர்வடிவே லறுமுகத்துத் தோன்றல் வேண்டக்
கந்தடர்வெஞ் சிறுதறுகட் கும்ப நால்வாய்க்
கரடதட மதகயவாய் சுழித்துத் தோன்றும்
மந்தரனே ரம்புயனே யாடீ ரூசல்
வரத்தலம்வாழ் கற்பகமே யாடீ ரூசல் 6

துலங்கயிலைம் படைத்தடக்கைப் பச்சை மேனித்
துளபமணி மாலைமுடித் தோன்றல் வேண்ட
விலங்கலின்மிக் குயர்மதில்சூழ் திருக்கோ கன்ன
வீதியினந் தன்னுருவாய் வெளிப்பட் டாங்க
ணிலங்கையர்கோன் றனையெடுத்துப் பந்தே போல
வெறிந்துருட்டி யுரஞ்சிதைத்து வரத்தை மாய்த்த
வலங்குலவு வல்லவனே யாடீ ரூசல்
வரத்தலம்வாழ் கற்பகமே யாடீ ரூசல். 7

பிறைநிகர்வெண் ணிறத்தொருகோட் டிலகு பைம்பொற்
பேரெழிற்கிம் புரிமணிப்பூண் பிறங்கி யாடக்
குறைவறுசோ பிதச்சுடற்கே யூர மாடக்
கோலநவ மணிமகுட மதாணி யாட
நறைகமழ்செம் மலரிதழித் தொங்க லாட
நண்ணியசெந் தாட்கழல்கள் நரல வாட
மறைபுகழ்வான் பேரொளியே யாடீ ரூசல்
வரத்தலம்வாழ் கற்பகமே யாடீ ரூசல். 8

இலகுமொரு கொம்பெறிக்க வாடீ ரூசல்
இருகுழையு மசைந்திலங்க வாடீ ரூசல்
திலகநுத லினிற்கவின வாடீ ரூசல்
திரிவிழியு மிசைதுலங்க வாடீ ரூசல்
உலவுறுமைங் கரமொளிர வாடீ ரூசல்
ஒப்பில்மத முகம்விளங்க வாடீ ரூசல்
மலரனபொற் பதந்துலங்க வாடீ ரூசல்
வரத்தலம்வாழ் கற்பகமே யாடீ ரூசல் 9

மறையவர்கள் குலம்வாழி மன்னர் வாழி
வைசியர்கள் வாழிலங்கை மரபோர் வாழி
இறையவர்செங் கோல்வாழி மதிமும் மாரி
யெழிலிபொழிந் தென்னாளு மினிது வாழி
குறைவறுமா கமம்வாழி புராணம் வாழி
கோதில்மறை வாழிசைவம் குலவு மேன்மை
மறைவறவா ழியதெல்லி நகரம் வாழி
வரத்தலம்வாழ் தனிமுதல்வன் வாழி வாழி 10

ஆக்கம் : **அளவையூர் வே. கனகசபைப்புலவர்.**
புலவர் மறைவு : 1873.
ஊஞ்சல் 1873க்கு முன் பாடப்பட்டிருக்க வேண்டும்.
முதற் பதிப்பு 1910.
இரண்டாம் பதிப்பு 1956 (சிவஸ்ரீ இ. சபாரத்தினக் குருக்கள்.
மூன்றாம் பதிப்பு 2004.

உ
சிவமயம்

# பன்னாலை அருள்மிகு வரத்தலம் கற்பக விநாயகர் இரட்டைமணிமாலை

அளவையூர்
கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை

### விநாயகர் துதி
### வெண்பா

சீரார்ந்த பன்னாலை சேரும் வரத்தலம்வாழ்
பாரார்ந்த கற்பகப்பேர்ப் பண்ணவனை - ஏரார்ந்த
பைந்தமிழிற் பாப்புனைந்து பாடிப் பணிய அவன்
சந்தமலர்த் தாளே சரண்.

### நூல்
### வெண்பா

வாய்ந்தபன் னாலை வரத்தலத்துக் கற்பகப்பேர்
சார்ந்துறையும் ஆனைமுகத் தற்பரனைத் - தீந்தமிழில்
மன்னும் இரட்டைமணி மாலைபுனைந் தேத்தவவன்
பொன்னடியே காப்பாம் புகல். 1

### கட்டளைக்கலித்துறை

புகலாய் உயிர்கட் குறுதுணை யாயிருள் போக்கிநிற்கும்
பகலாய் வரத்தலம் வாழ்கற் பகப்பேர்ப் பரம்பொருளே
இகலாய் அடர்ந்தடர்ந் தின்ன லுறுத்தும் இருவினையின்
அகலா நிலைகடிந் தன்புடன் ஏற்றெனை ஆண்டருளே. 2

### வெண்பா

ஆண்டருள்வாய் கற்பகப்பேர் அற்புதனே வானவர்கள்
பூண்டதுயர் போக்கவந்து போர்மலைந்து - நீண்டபகை
காட்டுங் கயமுகனைக் காய்ந்தவனே என்பகையாய்
வாட்டும் வினையொழிப்பாய் வந்து. 3

### கட்டளைக்கலித்துறை

வந்தே வரத்தலம் மேவிக் கருணை மழைபொழிந்து
நொந்தே புலம்பும் அடியார் மிடியெனுந் நோயகற்றும்
சிந்தா மணியே சிவனருள் செல்வத் திருமகனே
எந்தாய் அடியேன் இரும்பவம் போக்க இரங்குவையே 4

### வெண்பா

இரங்கும் நினதுள்ளம் என்றுணர்ந்தே நின்பால்
வரங்கொள்வான் வாயிலிடை வந்தேன் - பரங்கருணை
கொண்டு வரத்தலம்வாழ் கொற்றவனே என்னிலைமை
கண்டுகுறை தீர்ப்பாய் கனிந்து. 5

### கட்டளைக்கலித்துறை

கனியும் பருப்பும் கரும்புறு கட்டியும் காதலுடன்
நனியுவந் தேற்றருள் நாயக னேயென் நலிவையெலாம்
இனியகன் றேயுன் இணைமலர்த் தாள்களை என்னகத்தே
புனையும் வழியுந் தெளிந்தேன் வரத்தலப் புண்ணியனே. 6

### வெண்பா

புண்ணியங்கள் செய்திலேன் பொற்புநிறை கற்பகப்பேர்
அண்ணால் வரத்தலத்தின் ஆண்டகையே - எண்ணியுனை
வந்திக்கா நெஞ்ச வலியகல என்னையுநீ
சிந்தித்தே நல்லருளைச் செய். 7

### கட்டளைக்கலித்துறை

செய்ய திருவடி சேரா நிலையிற் சிறுமையினேன்
நையும் வினையால் நலிந்தனன் என்றனை நாடியருட்
கையால் எடுத்துக் கடுந்துயர் போக்கிக் கருணைசெய்வாய்
துய்ய வரத்தலம் மேவி யுறைந்திடுந் தூமணியே. 8

### வெண்பா

தூமலரைத் தூவித் துதியே னெனினுமுனைப்
பாமலரால் ஏத்திப் பணிகின்றேன் - தீமையெலாம்
போக்கியெனை ஆள்வாய் புனித வரத்தலம்வாழ்
கோக்களிறே நின்கருணை கொண்டு 9

### கட்டளைக்கலித்துறை

கொண்ட விருப்புடன் வந்து நினதுபொற் கோயிலிலே
தொண்டு புரியும் அடியவர் வாழ்வு துளிர்த்திடுதல்
கண்டு தமியனும் நின்தாள் பரவுதல் காதலித்தேன்
மண்டு வினையொழித் தாள்வாய் வரத்தல மாகளிறே. 10

### வெண்பா

களிறே எனதுள்ளக் கந்திலுனைக் கட்டி
வெளியேற வொட்டாமல் வீக்கிப் - பழியேதும்
வாராது காப்பேன் வரத்தலத்து மாமணியே
தீராவென் வல்வினைகள் தீர். 11

### கட்டளைக்கலித்துறை

தீர்த்தன் சிவனார் திருமகள் சித்தியும் புத்தியுஞ்சேர்
மூர்த்தி வரத்தலம் மேவிடும் வேழ முகத்தனென்று
சேர்த்துநின் நாமப் புகழ்சொல்லி யென்றுந் திரியவைத்தே
ஆர்த்துப் பிணிகள் அடரா வகையெனை ஆளுவையே 12

### வெண்பா

ஆளும் பரம்பொருளே ஐந்து கரத்தோனே
நீளும் பவத்துயரை நீதுடைப்பாய் - நாளும்
வரத்தலத்தில் வாழ்வுகந்த மைந்தாவுமை பாலா
கரத்தலதில் ஏந்தியெனைக் கா. 13

### கட்டளைக்கலித்துறை

காவென்று வந்து கழலிணை தாழ்வோர் கடுவினையைப்
போவென் றகற்றும் புனிதனென் றுன்னைப் புகல்வதுகேட்
டாவென்று நோவ அழுத்தும் கொடுவினைக்காட் பட்டயான்
வாவென்ன வாராத தேனோ வரத்தலம் வாழ்பவனே. 14

### வெண்பா

வாழும் வகையறியேன் வாயிலிலே வந்துனது
தாளிற் பணிந்திடலும் சார்ந்திலேன் - நாளெல்லாம்
தீவினைகள் சேர்ப்பேனை தெய்வ வரத்தலத்தாய்
பாவமொழித் தாள்வாய் பரிந்து. 15

### கட்டளைக்கலித்துறை

பரிந்துன் பணிகள் பயின்றிடும் அன்பரிற் பற்றுமிலேன்
திருந்துஞ் செயலெனச் சொல்லும் எதனையுஞ் செய்துமிலேன்
புரிந்த கொடுமைச் சுமையால் நலிந்து புலம்புகின்றேன்
சொரிந்த கருணைதந் தாள்வாய் வரத்தலத் தூயவனே. 16

### வெண்பா

தூய பிரணவத்தின் தொல்லுருவந் தாங்கிவரு
சேயனென வைகுந் திருமணியே - நேயமிகும்
அன்பர்க்கு நல்வாழ் வருள்வோய் வரத்தலம் வாழ்
இன்புருவே தீர்ப்பாய் இடர். 17

### கட்டளைக்கலித்துறை

இடருற் றழுந்தும் இழிதக வேனை இனியுமந்த
விடருற் றழுந்த விடுதலென் னேவரும் விக்கினங்கள்
படருற்ற போதுன் னடியவர்க் காகப் பரிந்தகற்றும்
சுடருற்ற தெய்வ ஒளியே வரத்தலத் தொல்லிறையே 18

### வெண்பா

தொல்வினையின் பாசத் தொடக்கறுத்துத் தூய்மைசெய
வல்லோனே முத்தியருள் வாரணமே - சொல்தமிழின்
பாவுரைக்கும் மைந்தனெனைப் பாராய் வரத்தலத்துக்
காவலனே தாராய் கதி. 19

### கட்டளைக்கலித்துறை

கதிகாட்டு கென்று கனித்தமிழ் பாடிக் கசிந்துருகும்
துதிகேட்டும் என்றன் துயர்தீர்க்க ஏனோ துணிந்திலைநீ
விதிகாட்டு வாழ்வினைத் தீர்ப்பாய் வரத்தலம் மேயவநின்
மதிகாட்டு வாயரன் மாமக னாய்வந்து வாய்ந்தவனே. 20

முதற்பதிப்பு 1977. ஆதீனமுதல்வர்களுள் ஒருவராய சிவஸ்ரீ இ. சபாரத்தினக் குருக்கள் அவர்களாற் பதிப்பிக்கப்பெற்று முதற்றுவஜாரோகண வெளியீடாக 1977.09.02இல் கலாநிதி சிவஸ்ரீ சி.நா. சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்களால் ஆலயத்தில் வெளியிடப்பட்டது.

இரட்டைமணிமாலை: பவளமும் முத்தும் ஆகிய இருவேறு மணிகள் மிடைந்த மாலைபோல வெண்பாவும் கட்டளைக் கலித்துறையும் அந்தாதியாக அமையவும், ஈறும் முதலும் மண்டலிக்கவும் இருபது செய்யுட்களாற் பாடப்பெறும் பிரபந்தம் - ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு (திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து வெளியீடு. 1961 பக்கம் 125) இந்தநூல் 'வாய்ந்த' எனத்தொடங்கி 'வாய்ந்தவனே' என முடிவது காண்க.

உ
சிவமயம்

# பன்னாலை அருள்மிகு வரத்தலம் கற்பக விநாயகர் திருப்பதிகம்

அளவையூர்
அருட்கவி சீ. விநாசித்தம்பி

அருணபிர ணவருப வாதிபர மேஸ்வரனே
தருணமுகி லேமறைநூல் தருமகிப னேபரவி
வருமடியர் உளங்குளிர வளமிகுபன் னாலைமிளிர்
கருணைவரத் தலமேவுங் கற்பகவி நாயகரே 1

அண்டரொடு முனிவரெலாம் அடிபணிந்து தோத்திரிக்கப்
பண்டுகிரி மேலெழுதும் பரமனருண் மாமகனே
தொண்டுறுமா ருதவல்லி. துரகமுகந் தீர்த்துநலம்
கண்டவரத் தலமேவுங் கற்பகவி நாயகரே 2

அண்ணலகத் தியமுனிவர் அருங்கலத்துக் காவிரியை
மண்ணகத்து மாட்சிதர வைத்தசிறு வேதியனே
பண்ணமைத்துன் புகழ்பாடப் பக்குவம னந்தருவாய்
கண்ணின்வரத் தலமேவுங் கற்பகவி நாயகரே 3

அமலனுட னம்பிகையாள் அணைத்தவிக்கி நேஸ்வரனே
நமனுலகக் கணக்கழித்து நயமெழுதுங் கணபதியை
குமரனொடு கனிக்குவந்த குஞ்சரக்கன் றேதிருவாழ்
கமலவரத் தலமேவுங் கற்பகவி நாயகரே 4

அவவினைக ளடியவர்மேல் அடையாதங் குசபாசம்
தவளமருப் பொடுபொலியும் தற்பரதுப் பார்மேனிச்
சிவகுமர னேதவமா செல்வமருள் வாய்சுரரைக்
கவரும்வரத் தலமேவுங் கற்பகவி நாயகரே. 5

அந்தமுட னாதியிலா அருள்விகட நாடகனே
சந்திரனைத் தடிந்தளித்த சதுர்த்தியர னேகருவில்
முந்திவரு மிருளறுப்பாய் மூலமுத லேசுருதிக்
கந்தவரத் தலமேவுங் கற்பகவி நாயகரே 6

அருகுவரு குறமகளை அடையவரு கெனவழைக்கப்
பொருகளிறு புரையவரும் பூரணப ராபரனே
திருகுமனங் குவியவொரு திறமருளு வாயடியார்
கருதுவரத் தலமேவுங் கற்பகவி நாயகரே 7

அமரரிடர் தீர்த்தருளி யடுமசுர மூஷிகமேல்
அமருமொரு பரபதியே ஆகமபு ராணமுறைத்
தமரமணிக் கழலருள்வாய் சைவநெறி தழுவுதமிழ்
கமழுவரத் தலமேவும் கற்பகவி நாயகரே 8

அனலிமணி யரவுதரம் அசைத்தகில சரவசர
இனமலரு நெறியருளும் எந்தாயே இகபரமா
தனமுதவு கண்ணுதலே சாந்தவெளி நிழலருள்வாய்
கனகவரத் தலமேவுங் கற்பகவி நாயகரே 9

அழகுமிகு குலமறிவா லறியுமறி வதிககலை
பழகுநிதி மனைமகவு பயிலுமுயர் வாழ்வும்பர்
தொழுவணையும் வீடுமருள் சுந்தரநின் பதந்தருவாய்
கழனிவரத் தலமேவுங் கற்பகவி நாயகரே 10

**பயன்**

அரும்புமலர் அறுகுபுனைந் தவல்பருப்புத் தேன்படைத்து
விரும்பிடுகுட் டொடுபணிவார் வேதனைகள் தீர்த்தருள்வான்
பெரும்பவன குண்டலியாய்ப் பிறங்கிநினை வார்க்கிரங்கிக்
கரும்புவரத் தலமேவுங் கற்பகவி நாயகரே 11

முதற்பதிப்பு : 1977. ஆதீன முதல்வர்களுள் ஒருவராய சிவஸ்ரீ இ. சபாரத்தினக் குருக்கள் அவர்களாற் பதிப்பிக்கப்பட்டுக் கும்பாபிஷேகதினமாகிய 1977.04.06இல் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியால் வெளியிடப்பெற்றது.

பதிகம் : சிறு நூல் வகையிலொன்று. நான்கடி முதல் எட்டடிவரையுள்ள வெண்பாவை முன்வைத்து ஆசிரியத்துறை, ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், அகிய செய்யுட்களால் பத்துப் பாட்டுக்களாலாயினும் இருபது பாட்டுக்களாலாயினும் பாடுவது (கலைக்களஞ்சியம் தொகுதி 6; பன்னிருபாட்டியல் இனவியல் 197) இது பதினொரு விருத்தப்பாக்களையுடையது. நட்டபாடைப்பண்ணிற் பாடப்படவேண்டிய தென்னுங் குறிப்புண்டு. தேவாரத்திருப்பதிக அமைப்பு முறையை ஒத்த பதிக அமைதியை உடையதென எண்ண இடமுண்டு. நூலகத்துள்ள சமர்ப்பணப் பாடல் இங்கே தரப்படுகின்றது.

அற்புத மூர்த்தி யாகி அழகுயர் வரத்த லத்துக்
கற்பகக் கணேசன் தந்த கருணையின் வந்த இந்நூல்
பொற்புயர் அடியார்க் கின்பம் பொலிந்தருள் பெருக அன்னான்
நற்கழற் றாம ரைக்கே நலந்தரச் சமர்ப்பித்தேனே.

உ
சிவமயம்

# விநாயக பரத்துவ மாலை

அளவையூர்
அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர்.

### காப்பு

முன்னைப் பழம்பொருளே மூலக் கணபதியே
அன்னை உமைதழுவு மானைமுகா - நின்னைப்
பரத்துவ பாமாலை பாடிப் பரவ
வரத்தலத்தே வந்தருள்வாய் வாக்கு.

### நூல்

### விநாயக மூர்த்தி

அத்தனோர் களிறாய் அம்பிகை பிடியாய்த்
தத்துவ சித்திர சமஷ்டி வியஷ்டி
முத்திரை தழுவ முதன்மக னாய்த்தரும்
வித்தக விநாயக விமலனே போற்றி.

### கயமுகாசுர சங்கார மூர்த்தி

மயலுறு விபுதையும் மாகத முனியும்
பயமுறத் தருமகன் பயில்பெருச் சாளியாய்
நயமுறக் கொண்டெமை நலம்பெற வைத்த
கயமுகா சுரசங் காரனே போற்றி.

### அனந்த சாபநிவாரண மூர்த்தி

வனந்தரு மாலிடை மாயவன் குருடாய்
மனந்தளர் வெய்திட வந்தருள் புரிந்தவன்
நினைந்திடு மார்கழி நிறைசஷ் டியில்வரு
மநந்த சாபநி வாரணா போற்றி.

### பிரணவ மூர்த்தி

வரவும் காப்பும் மறைவுட னொழிப்பும்
தரவும் அகரமும் சார்தரு முகரமும்
விரவும் மகரமும் விளங்கிடு மந்திரப்
பிரணவ மூர்த்திப் பிரானே போற்றி.

மௌட்டியந்தனைக் கொல். - மகாகவி பாரதியார்

### புராண பரிபாலன மூர்த்தி

வாதரா யணர்வாய் வந்திடு பதினெண்
ணோதுபு ராணநூற் குவந்தருள் புரிந்தங்
காதர வாலயத் தமர்ந்து புராணமா
பாதுகா வலனாய்ப் பயில்வாய் போற்றி

### பரமாசாரிய மூர்த்தி

பேர்கொள் சுயம்புவின் பெருவெண் ணெய்நல்
லூர்கொள் மூர்த்தியாய் உணர்சூர் ணிகையைச்
சீர்மெய் கண்டார் செவியறி வுறுத்திய
தார்கொள் பரமா சாரியா போற்றி.

### திருமுறைகண்ட மூர்த்தி

மருவிய நம்பியும் வளவன் அபயனும்
மருவடி வேண்டிய வகையுவந் தருளிப்
பெருகிய சிவகுலம் பேரருள் பொருந்தத்
திருமுறை காட்டிய செல்வனே போற்றி.

### வரம்பெறு மூர்த்தி

அருட்பதி கச்சியில் அநேகதங் காவதத்(து)
அருச்சித் தரனை அநேக பேச்சுரர்த்
திருப்பெயர் தாங்கி ஜெககண பதியெனும்
குருத்துவ வரம்பெறு கோவே போற்றி.

### விக்கினேஸ்வர மூர்த்தி

அமரரின் மந்தர மாழ்த்தி யவர்தொழும்
சமையத் துதவித் தவவழி பாடெமக்
கமைய விடர்புரி அணிவிக் கினேஸ்வர
எமதருட் கடலே எந்தையே போற்றி.

### அச்சறுத்தருண் மூர்த்தி

அச்ச மிகுத்த அசுரரோர் மூவரின்
நச்செயில் நகர்தமை நலிந்திட அரனார்
நிச்சயித் தேறிய நிறைமணி யிரத
வச்சிறுத் தருளும் ஆதியே போற்றி.

**மூலாதார மூர்த்தி**

மேலாம் குண்டலி விளங்குமுக் கோண
நாலிதழ் 'வசஷஸ' நறுங்கம லத்தே
கோலப் பிரணவக் கோபுர எழுத்துறை
மூலா தார மூர்த்தியே போற்றி.

**சர்வலோகநாயகப் பிரதட்சிண மூர்த்தி**

நலமுறு மாதுள நறுங்கனி தன்னைச்
சலமற வேல்விடு தம்பியை முந்தித்
தலமுயர் தந்தையே சர்வலோ கமெனும்
வலமுறை பெற்ற வரதனே போற்றி

**ஆபத்சகாய மூர்த்தி**

பணிவுறு வள்ளியைப் பனிவரைச் சுனையில்
மணிநெடு வேலோன் வதுவை புரிந்திட
அணிகளி றாய்வரும் ஆபத் சகாயனாய்த்
தணிகையில் மேவும் தற்பரா போற்றி.

**வலம்புரி விநாயக மூர்த்தி**

பலம்பெறு தேவரைப் பாற்கடல் நின்று
நிலந்தர வீசி நெடுமால் இறைஞ்ச
இலங்கும் கணபதி ஏந்திநின் றொலித்த
வலம்புரி வழங்கிய வள்ளலே போற்றி.

**விகடசக்கர விநாயக மூர்த்தி**

மிகநட மாடும் விடுவசே னன்றொழத்
திகழும் வெண்டலை சிரித்துமிழ்ந் ததைமறைத்
தகமகிழ் நடங்கண் டளித்தமா காஞ்சிவாழ்
விகட சக்கர விநாயகா போற்றி

**கூர்மசங்கார மூர்த்தி**

பேர்மிகு மமரர் பெருகுபாற் கடலிடை
ஓர்கடை மத்தாய் உயர்த்திய மந்தரம்
சீர்மிகச் சுமந்த திருமால் எனும்பெருங்
கூர்மசங் காரக் குருபரா போற்றி.

### சந்திர சிட்சாரட்சக மூர்த்தி

ஆவணிச் சதுர்த்தியில் ஐந்தொழி நடங்கண்(டு)
ஓவென நகைத்த ஒண்மதி நீசனாய்
மேவ விதித்து விண்ணவர் வேண்டிடும்
மாவர முதலிய மன்னவா போற்றி.

### இந்திரானுக்கிரக மூர்த்தி

வந்திடு மகத்தியர் வாங்கிய கமண்டலம்
தந்திடு பொன்னியைத் தண்கா விரியாய்
முந்திக் கவிழ்க்க முதுகொடி யாகி
இந்திரற் கருளிய ஏரம்பா போற்றி

### அகத்தியானுக்கிரக மூர்த்தி

குட்டத் துரத்திய குறுமுனி கையிற்
கிட்டிக் கிட்டாக் கிளர்விளை யாடல்
இட்டுப் பொலிந்த இபமுகங் காட்டி
இட்ட வரந்தரும் எம்பிரான் போற்றி.

### இராவண கர்வபங்க மூர்த்தி

இலங்கையி லமைக்க இறையவன் கொடுத்த
இலிங்கம் மகாபலர் எனக்கோ கர்ணத்(து)
இலங்கப் பதித்தங் கிராவணன் கர்வம்
கலங்க விலக்கும் கணேசா போற்றி.

### மகாபாரதலிகித மூர்த்தி

காரணி கிருஷ்ணன் கழறிய கீதைப்
பேரணி கண்டு பிறங்குயர் வாழச்
சீரணி வியாசர் செப்பிய வேதப்
பாரத மெழுதிய பரனே போற்றி

### விண்டுவிநாயக மூர்த்தி

மிண்டு மிரணியன் வியனுடல் பிளக்கப்
பண்டு நரஅரிப் பாங்குயர் படிவம்
கொண்டு வெல்கெனக் கொடையருள் வன்னிவாழ்
விண்டு விநாயக வீரனே போற்றி.

### சமிமந்தாரானுக்கிரக மூர்த்தி

முன்னிய அடியான் முனிபுரு சுண்டி
தன்னை நகைத்த சமிமந் தாரன்
வன்னிமந் தாரை மரங்களாய்ப் பொலிய
மன்னி யவைநிழல் வதிவாய் போற்றி.

### பாலச்சந்திர மூர்த்தி

ஆலக் கிரிநிகர் அணலா சுரனைச்
சால விழுங்கித் தருபூ சனையேற்(று)
ஓல மிடுசுரர்க் குளம்குளி ராக்கும்
பாலச் சந்திரப் பரம்பொருள் போற்றி.

### மயூரேச மூர்த்தி

நயமுய ரட்டமா நாகரின் சிறையில்
மயலுறு சடாயுவா மைந்தரை மீட்கத்
துயருறு விநதை தொழுதுது வண்ட
மயின்மிசை ஏறி வருவாய் போற்றி.

### புஜங்காபரண மூர்த்தி

முனைந்தவா சுகியின் முதிர்ச்சிரோ ரத்தினம்
சினந்து பறித்துச் சீறாதி சேடனைப்
புனைந்தரை ஞாணாய்ப் பூண்டு முனிவரர்
நினைந்த பேறருள் நிர்மலா போற்றி

## வல்லாள மூர்த்தி

சாத்திர பிரமன் சதுர்மறை யேட்டைக்
காத்திருந் தகற்றிய கமலா சுரனை
நீத்தருட் குரவாய் நிலைப்பொருள் உரைத்த மூத்தவல்
லாள முதல்வனே போற்றி

## வக்கிரதுண்ட விநாயக மூர்த்தி

படைப்பிடர்ப் பட்ட பங்கயன் வேண்டக்
கொடைச்சித்தி புத்தி குலவுமுன் தோன்றும்
தொடைத்தோள் வக்கிர துண்ட விநாயகா
கடைப்படு நாயனைக் காப்பாய் போற்றி.

## சித்தி புத்தி திருமண மூர்த்தி

சத்தினி பாதமும் தாங்குநாற் கதிகளும்
பத்தருக் குதவும் பராபர ஞான
சித்தி புத்தியைத் திருமணம் புரிந்த
அத்தி முகச்சுடர் அழகா போற்றி.

## சித்திவிநாயக மூர்த்தி

வித்தகம் பேசிய வியன்மது கைடவர்
சித்தங் கலங்கிடும் திறமெலாம் வனஜம்
ஒத்திடு கண்ணனுக் குவந்தினி தளித்த
சித்தி விநாயக தேவனே போற்றி.

## வல்லபகணேச மூர்த்தி

வல்ல மரீசி மகளாம் வல்லபை
புல்லும் மணங்கொளும் பொன்மறை யோனாய்
நல்ல வரங்கள் நயந்துல காண்ட
வல்லப கணேச மகேஸ்வரா போற்றி.

### ஔவைக்கருளிய மூர்த்தி

பொற்புய ரகவற் பொருணலம் வியந்து
முற்கிரி சேரும் முதன்மையும் பேறும்
சிற்பர தத்துவ சீலமும் கோலமும்
அற்புத ஔவைக் கருளினாய் போற்றி.

### இலிங்கப்பிரதிஷ்டா மூர்த்தி

சங்கா ரத்தால் தலம்சிவப் பாகிய
செங்காட் டங்குடி திகழ்கண பதீச்சுரச்
சிங்கார லிங்கம் தெரிந்துதா பித்த
சங்கீ தாகர சங்கரா போற்றி.

### மாமுகம்தீர்த்த வரத்தல மூர்த்தி

எண்ணரு பரத்துவம் இணையிலாக் களிறே
நண்ணிய மாமுக நங்கை நலம்பெறப்
பண்ணிய வேதப் பழமே வரத்தலப்
புண்ணியா போற்றிஓம் போற்றிஓம் போற்றிஓம்.

### வாழி

கருதுபன் னாலை மேவும் கவின்வரத் தலக்க ணேசன்
மருமல ரடிகள் வாழி வழிபடு மடியர் வாழி
குருமுறைப்பூசை செய்யும் குணமுயர் மறையோர் வாழி
தருமமும் சைவ நீதித் தவத்தரும் வாழி வாழி.

பூசனைத் தொண்டர் வாழி பொருந்திய விழாவெடுக்கும்
நேசமிக் குடையோர் வாழி நித்தியம் பஜனை பாடும்
வாசனை மனத்தார் வாழி வருமிந்நூல் பதித்து நல்கும்
ஆசான் மாகு கன்பே ரச்சகம் வாழி வாழி.

உ
சிவமயம்

# பன்னாலை அருள்மிகு சிவபூதவராயர் ஆலயம்

கலாபூஷணம் பண்டிதர் சி. அப்புத்துரை

**பதி :**

'சங்கரன் இறையோன் சம்பு சதாசிவன் பேயோடாடிப்
பொங்கரா அணிந்த மூர்த்தி புராந்தகன் பூதநாதன்'

என்னுஞ் சூடாமணி நிகண்டுப்பாடாலை நினைவுபடுத்தி அந்தப் பூதநாதனைத்தான் நாங்கள் வழிபடுகின்றோம், என்று ஒரு முதியவர் குறிப்பிட்ட செய்தியை மனத்துக்கொண்டு ஆலயத்தைத் தரிசித்தோம். சுன்னாகம் குமாரசாமிப் புலவர் அவர்களின்அன்புக்குரிய மாணவர்களுளொருவராய விழிசிட்டிப் பண்டிதர் சி. கதிரிப்பிள்ளை அவர்கள் இயற்றியுள்ள இத்தலத்திற்காய திருவூஞ்சற் பாடலும் முதியவரின் கருத்தினை உறுதிசெய்கின்றது. 'ஆறணி செஞ்சடையினரே ஆடீ ரூஞ்சல்', 'நீறணி பொன்மேனியர்', 'பிரமன் மாற்கரியவரே', 'கனகமன்றில் நடஞ்செய் பாதா', 'காலனைமுன் காய்ந்தருளுங் கயிலைவாசா', என்பன போன்ற பாடல்களில் மிகுதியும் விரவியுள்ள பகுதிகள் பூதநாதன்தான் சிவபூதவராயர் என்பதை மிகுதியும் வலிவுபெறச் செய்கின்றன.

தெல்லிப்பழைச் சந்தியிலிருந்து மேற்கு நோக்கி அம்பனைச் சந்தியைக் கடந்து பிரதான வீதிவழி 600 மீற்றர் வரை மேற்கே செல்ல ஓர் ஒழுங்கை வடக்குப்புறம் வரத்தலம் கற்பகவிநாயகராலய வீதியைச் சென்றடைகின்றது. அவ்விடத்திருந்து வடக்காக 200 மீற்றர் வரை செல்ல மேற்கு நோக்கி ஒரு பாதை பிரிந்து செல்கின்றது. அப்பாதை சிறிது தூரத்தில் தெற்கே திரும்புகின்றது. அந்த முடக்கின் வடக்குப்புறத்தே ஆலயத்தைத் தரிசிக்கின்றோம்.

**பூர்வீகம் - வளர்ச்சி :**

பன்னாலை நகரத்தஞ்சீமா என்னும் பெயரிய நிலப்பரப்பில் இற்றைக்கு 200 ஆண்டுகளின்முன் வாழ்ந்த பெத்தநன்னியர் எனும் பெரியார் தாம் குடியிருந்த நிலத்திற்குப் பக்கலிலிருந்த மாட்டுத்தொழுவத்தயனின்ற இலுப்பை மரத்தடியில் ஒருகல்லு வைத்து வழிபட்டு வந்தார். இடச்சுக்காரர் ஆட்சியின் இறுதிக்காலகட்டம் இது என்பது நினைவுகூர்தற்குரியது. அவ்வண்ணம் வழிபட்டுவருங்கால் ஓரகண்டாகாரமான

பூதவடிவம் அவர் கனவிற்றோன்றித் தாம் சிவபூதவராயர் என்னுங் குறிப்புங் காட்டி, தம்மைஇந்த இடத்திலே வழிபடலாம் என அருளி மறைந்தது. கிழக்கு வாயிலை உடையதாக அந்த இடத்திலே ஒரு கொட்டிலை அமைத்து வழிபாட்டினைத் தொடர்ந்தார் பெரியவர். வழிபடுவோர் தொகையும் பெருகியது. காலப்போக்கில் பெத்தநன்னியரின் பேரனான வைரவப்பிள்ளை என்பவர் மூலஸ்தானம் வேறு, வழிபடுவோர் நிற்குமிடம் வேறு என்ற வகையில் அமைந்த கட்டிடத்தை உருவாக்கினார். அவருக்குப்பின் அவர் மைந்தன் நாகமுத்து அவர்கள் சுண்ணாம்புச்சுதைகொண்டு சுவர்களையும் தூண்களையும் எழுப்பிக் கூரைக்கு ஓலைபோடச் செய்தார். வரத்தலம் கற்பக விநாயகர் ஆலய உரிமையாளர்களுள் ஒருவராய சிவஸ்ரீ பிள்ளையார்பட்டர் முத்துச்சாமிக்குருக்களை அர்ச்சகராகவும் நியமனஞ் செய்தார்கள்.

சிவபூதராயரின் கற்பனை உருவைத் திரைச்சீலை ஒன்றிலே வரைந்து அதனை, கர்ப்பக்கிருகத்திலே வைக்கப்பட்டுள்ள அரை மீற்றர் உயரமான கண்ணாடியில் விம்பம் விழக்கூடிய வகையிலே தொங்கவிட்டு வழிபாடு நடைபெற்றது. அபிஷேக ஆராதனையெல்லாம் விம்பத்திற்கே நடைபெற்றன. அந்தக்காலகட்டத்தில், இலுப்பை மரக்கிளையில் வருடப்பிறப்பு வேளையில் ஊஞ்சல் கட்டி ஆடும் வழக்கம் இருந்தது. ஒருநாளிரவு நடுநிசியில் யாரோ ஊஞ்சலாடிய சத்தம் கேட்டது. நாகமுத்து அவர்கள் எழுந்துசென்று பார்த்தபோது ஆளில்லாமலே ஆளிருந்து ஆடுவது போன்று ஊஞ்சல் அங்குமிங்கும் வேகமாகச் சென்று வ்ருவதை அவதானித்தார். மறுநாள் காலை வைரவப்பிள்ளை நாகமுத்துவின் உறவினரான திருமதி சின்னத்தம்பி வள்ளிப்பிள்ளை அணங்காட்பட்ட நிலையில் தாம் சிவபூதவராயரின் சக்தியென்றும், தமக்கோர் ஊஞ்சல் வேண்டுமென்றுங் கேட்டுக்கொண்டதற்கிணங்க கார்ப்பக்கிருகத்திற்கு நேரெதிராக இராட்டின ஊஞ்சலொன்று அமைக்கப்பட்டுளது. இந்தக் காலகட்டத்தில் திருமஞ்சனக்கிணறும் கர்ப்பக்கிருகத்திற்கு ஈசானத்தில் வெட்டப்பட்டது.

நாகமுத்து அவர்களின் மறைவின் பின் அவர் மகன் சுப்பிரமணியம் வைரக்கற்திருப்பணியை ஆரம்பித்தார். இரண்டாவது மூன்றாவது மண்டபங்கள் சீமேந்தினாற் கட்டப்பட்டு ஓடு போடப்பட்டுள்ளன. ஆகமவிதியமைதிக்குப் புறம்பான அமைப்புமுறை என்றுதான் சொல்லவேண்டும். கர்ப்பக் கிருகத்திற்கு நேரெதிராக மூன்றாவது மண்டப வாயிலிலுள்ள ஊஞ்சலின் வடக்குப்புறமாக 17 அடி உயரமான மணிக்கோபுரமும் அதற்கு வடக்குப் புறத்தில் நாகதம்பிரான் எழுந்தருளியுள்ள சிறிய அமைப்பும்,அதற்கு

வடக்காக வைரவர் எழுந்தருளியுள்ள சிறிய அமைப்பும் உண்டு. ஈசான மூலையில் வசந்தமண்டபத்தைப் பார்க்கின்றோம். தென்கிழக்கில் மடைப்பள்ளி களஞ்சிய அறை என்பன அமைந்துள்ளன. உள்வீதியைச் சுற்றி மதில் உண்டு. வெளிவீதியின் ஈசானத்தில் கைகால் சுத்தி செய்வதற்காகிய நீர்த்தாங்கி அமைக்கப்பட்டுளது. உள்வீதி நிலம் முழுமைக்கும் சீமேந்து போடப்பட்டுளது.

**நைமித்திய விழாக்கள் :**

பங்குனி அத்த நட்சத்திரத்தை முதலாகக் கொண்டு பதினைந்து தினங்கள் அலங்கார உற்சவம் நடைபெறும். சித்திரை வருடப்பிறப்பு, சித்திரைப்பூரணை, ஆனி உத்தரம், ஆடிப்பூரம், விஜயதசமி, திருவாதிரை என்னுந் தினங்களிலும் சுவாமி வீதியுலா வருவதுண்டு.

**உபகரிப்புக்கள் :**

திருமஞ்சனக்கிணறு விநாயகர்நாச்சன் என்பவராலும், வெளி மண்டப ஓடு, கந்தர் ஐயம்பிள்ளையாலும், மூலமூர்த்தி வைரவப்பிள்ளை இ. சின்னத்தம்பியாலும், நாகதம்பிரான் அமைப்பு வைத்தியநாதர் விஸ்வநாதராலும், கர்ப்பக்கிருகத்தூபி வைத்தியர் பூதப்பிள்ளை பொன்னம்பலத்தாலும், ஐம்பொன்னாலாய உற்சவமூர்த்தி அம்பலம் மாணிக்கம் மனைவி தெய்வானைப்பிள்ளை என்போராலும், மணிக்கோபுரம் சுப்பர் தம்பு, சுப்பர் சீனிவாசகம் சகோதரர்களாலும், திருவூஞ்சல் எருப்பிட்டி வைரவப்பிள்ளை தையற்பிள்ளை தம்பதியராலும், யானை வாகனம் காசிப்பிள்ளை முருகையா, அருணாசலங் குடும்பங்களினாலும், ஆட்டுக்கடா வாகனம் காக்கையன் குடும்பத்தாராலும், சகடை இந்திரன் என்பவராலும், நிவேதனப் பொருட் பாகசாலை வைத்தியர் பூதப்பிள்ளை பொன்னம்பலத்தாலும் உபகரிக்கப்பட்டுள. காசிப்பிள்ளை முருகையா, பொன்னம்பலம் செல்லத்துரை என்போர் வீதி விசாலிப்பிற்காக நிலம் உபகரித்துள்ளனர்.

**கும்பாபிஷேகம் :**

1948 வைகாசி திருவோண நட்சத்திரத்தில் மாவை சிவஸ்ரீ சாமிக் குருக்கள் சுப்பிரமணியக் குருக்கள் (இரத்தினக் குருக்கள்) தலைமையில் முதலாவது கும்பாபிஷேகம் நடைபெற்றதென அறிகின்றோம். 1982 பங்குனி அத்த நட்சத்திரத்தில் கீரிமலை குருசாமிக் குருக்கள் நகுலேஸ்வரக் குருக்கள் தலைமையில் இரண்டாவது கும்பாபிஷேகம் நடந்துளது.

**அர்ச்சகர் :**

வரத்தலம் கற்பக விநாயகர் ஆலயத்தைச் சேர்ந்த சிவஸ்ரீ பிள்ளையார்பட்டர் முத்துச்சாமிக்குருக்கள் முதலாவது அர்ச்சகராகப் பணிபுரிந்துள்ளார்கள். பின்னர் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ மணிஐயர் பணிபுரிந்துள்ளார்கள். இவரைத் தொடர்ந்து பிரம்மஸ்ரீ ந. நடேசசர்மா, விழிசிட்டியைச் சேர்ந்தவர் அர்ச்சகராக இருந்திருக்கிறார்கள். காலப்போக்கில் அராலி தெற்கைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ வைத்தியநாதசர்மா நடராசசர்மா அர்ச்சகராயினார். இப்பொழுது சிவத்திரு ------------ அவர்கள் அர்ச்சகராகவும், சிவஸ்ரீ இரத்தினசாமிக்குருக்கள் சபாரத்தினக் குருக்கள் ஆலய குருவாகவும் பணிபுரிகின்றனர்.

**மூர்த்திகள் :**

மூலமூர்த்தி சிவபூதராயர் இரு திருக்கரங்களை மட்டும் உடையவராகக் காணப்படுகின்றார். முத்தலைச் சூலம் ஒரு திருக்கரத்திலும், தாமரைப்பூ மற்றொரு திருக்கரத்திலுங் காணப்படுகின்றன. கருங்கற் சிலா விக்கிரகம் நிற்கும் நிலைக் காட்சியுடையது. நாகதம்பிரானுங் கருங்கற்சிலை, எழுந்தருளி சிவபூதவராயர், வைரவர் ஐம்பொன் வடிவுகள்.

**முகாமை :**

பெத்தநன்னியர் எனும் பெரியார் மரபினரான வைரவப்பிள்ளை என்பவரும் தொடர்ந்து வைரவப்பிள்ளை நாகமுத்து என்பவரும், பின்னர் நாகமுத்து சுப்பிரமணியமும், நாகமுத்துவின் சகோதரி திருமதி அம்பலம் மாணிக்கம் என்போரும் நிர்வாகத்தைத் திறம்பட நடாத்தி வந்தனர். 1982 பங்குனி அத்த நட்சத்திரத்தில் நடந்த கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து பதினைந்தாவது தினம் நடைபெற்ற வழிபடுவோர் சங்கத்தில் பரிபாலனசபை ஒன்று தெரிவாகியது. அதன்தலைவராகக் கந்தையா செல்லப்பா தெரிவு செய்யப்பட்டார்.

முக்கிய குறிப்பு : திரு. வை. பொன்னையா திரு. கந்தையா செல்லப்பா என்போர் தந்த தகவல்களுடன் நேரிற் கண்டவையுங் கொண்டு 1988இல் எழுதப்பட்டது.

பஞ்சகுண்ட பட்ச புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் 2001.06.03 விசுவருடம் வைகாசி மாதம் 20ஆம் திகதி சுவாதி நட்சத்திரத்தில் கொக்குவில் சிவஸ்ரீ நா. பத்மநாதக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

உ
சிவமயம்

# பன்னாலை அருள்மிகு சிவபூதவராயர் திருவூஞ்சல்

விழிசிட்டி
பண்டிதர் சி. கதிரிப்பிள்ளை

## காப்பு
## ஆசிரிய விருத்தம்

திருமேவு மீழவள நாட தென்னும்
செங்கமல மங்கைநுதற் திலக மென்ன
உருமேவு யாழ்ப்பாண தேயந் தன்னில்
உத்தரத்திற் குலவுகிரிக் கணித்தா யோங்கும்
மருமேவு தெல்லிநகர் தன்னி லோர்சார்
வளமேவு சொரிகுடைநற் பதியில் வாழும்
அருமேவு சிவபூத ராயர்க் கூசல்
அறையவைங் கரனடிகள் காப்ப தாமே.

## நூல்

சித்திரமாம் வித்துருமத் தூண்கள் நாட்டித்
திவ்வியமா ணிக்கரத்னச் சட்ட மோட்டிப்
பத்தரைமாற் றுப்பசும்பொன் வடத்தைப் பூட்டிப்
பருவயிரச் சலாகையினாற் பலகை மாட்டி
வித்தகமாய்ப் புரிந்ததிரு வூஞ்சல் மீதே
மேவியணி பூண்முலையார் விரும்பி யாட்டச்
சித்தர்புகழ் சொரிகுடையில் வாழ்வு செய்யும்
சிவபூத வராயரே யாடீ ரூஞ்சல் 1.

சந்திரசூ ரியர்கொற்றக் கவிகை தாங்கச்
சலபதியும் மருத்துவனுங் கவரி வீச
அந்தகனு மெரியுமணி வாழ்க்கை கொள்ள
அளகையர்கோ னடைப்பைதர அமரர் போற்ற
விந்தையுறு மகபதிசாந் தாற்றி யேந்த
வியனிருதி படிகமெடுத் தருகே நிற்பச்
செந்தமிழ்சேர் சொரிகுடையில் வாழ்வு செய்யும்
சிவபூத வராயரே யாடீ ரூஞ்சல் 2

சென்னியுறு மணிமகுட மிருளை யோட்டத்
தேவர்சொரி மலர்மழைவான் திசைகள் மூட
மின்னுமணிப் பூண்மடவார் விரும்பி யாட
விளம்புமயன் மான்முதலோர் வியந்தே யேத்த
மன்னுமுழ வாதியபல் லியங்க ளோங்க
மறைமுதலோர் வேதவொலி மல்கி யோங்கச்
செந்நெல்வயற் சொரிகுடையில் வாழ்வு செய்யும்
சிவபூத வராயரே யாடீ ரூஞ்சல். 3

வீசுமொளி விசயார்த்த வெற்பின் மீதே
மெய்ப்பதங்கள் தொழுதிடுவான் விழைந்து போந்த
வாசவனா ரகமருளப் பேர்வு தன்னில்
வந்தருளிப் பாரிடத்தின் வடிவங் காட்டி
மாசகலும் வச்சிரத்தின் வலிவை யொட்டி
வானவர்கோ னகந்தையினை மாய்த்த தேவே
தேசுலவு சொரிகுடையில் வாழ்வு செய்யும்
சிவபூத வராயரே யாடீ ரூஞ்சல். 4

மாமருவு மமரர்பொழி மலர்கள் வீழ
வயமருவு கணநாதர் மருங்கிற் சூழப்
பூமருவு செங்கமலக் கண்ணர் தாழப்
புகலரிய அடியர்மல விருள்கள் மானப்
பாமருவு கலைமடந்தைபணிந்து வாழப்
பதிமருவு பரிசனர்கள் பரிவுள் ளாழத்
தேமருவு சொரிகுடையில் வாழ்வு செய்யும்
சிவபூத வராயரே யாடீ ரூஞ்சல். 5

தும்புருநா ரதர்யாழிற்சுருதி பாடச்
செலுமடியர் மலரிறைத்தா னந்தங் கூட
உம்பருள நெகிழ்வினொடெம் பரத்தை மூட
உத்தமவெண் சங்கொலியே யெங்கு நீட
நம்புமடி யார்கள்வினை யாவு மோட
நற்றவத்தோ ருன்னடியை நாளுந் தேடி
செங்கமலை தங்குசொரி குடையில் வாழும்
சிவபூத வராயரே யாடீ ரூஞ்சல். 6

ஓங்குமுடி யாடவுயர் வலய மட
    ஒண்ணுதலிற் சுட்டியொளி விட்டே யாட
வீங்குபுயத் துத்தரியம் விரிந்தே யாட
    வியன்மார்பி னாரமொடு மதாணி யாடப்
பாங்குலவு திருவரைஞாண் மணிக ளாடப்
    பங்கயத்தாட் சிலம்பினொடு சதங்கை யாடப்
தேங்குபுகழ்ச் சொரிகுடையில் வாழ்வு செய்யும்
    சிவபூத வராயரே யாடீ ரூஞ்சல். 7

வான்மலியும் கனகமன்றில் நடஞ்செய் பாதா
    வடவாலின் கீழ்மறைகள் வகுத்த போதா
கான்மலியுங் கடுக்கையந்தார் புனையு மீசா
    காலனைமுன் காய்ந்தருளுங் கயிலை வாசா
ஆன்மலியைந் தாடியருள் அமர ரேறே
    அரம்பைபல வாமீரத் தின்கனி யுள்ளூறும்
தேன்மலியுஞ் சொரிகுடைவீற் றிருக்குந் தேவே
    சிவபூத வராயரே யாடீ ரூஞ்சல். 8

ஆறணிசெஞ் சடையினரே யாடீ ரூஞ்சல்
    அடியரிடர் களைபவரே யாடீ ரூஞ்சல்
நீறணிபொன் மேனியரே யாடீ ரூஞ்சல்
    நின்மலமாம் பரம்பொருளே யாடீ ரூஞ்சல்
பேறணியுங் கழலினரே யாடீ ரூஞ்சல்
    பிரமன்மாற் கரியவரே யாடீ ரூஞ்சல்
சீரணிநற் சொரிகுடையில் வாழ்வு செய்யும்
    சிவபூத வராயரே யாடீ ரூஞ்சல். 9

தெய்வமறை யந்தணரா னினங்கள் வாழி
    திருநீறுங் கண்டிகையுஞ் சிறந்து வாழி
மெய்தருமைந் தெழுத்தினொடு தருமம் வாழி
    வேதமுட னாகமமாங் கலைகள் வாழி
கைவருபூ சனைமுதல புரிவோர் வாழி
    காவலர்செங் கோல்வாழி முகிலும் வாழி
மைவருகட் பாவையர்கள் கற்பும் வாழி
    வளர்பூத ராயரருள் வாழி வாழி. 10

உ
சிவமயம்

# பன்னாலை திருசீச்சரம்
# அருள்மிகு பாலசுப்பிரமணியர் ஆலயம்

கலாபூஷணம் பண்டிதர் : சி. அப்புத்துரை

## பூர்வீகம் :

பல நூறு ஆண்டுகளுக்கு முன் பன்னாலை திருசீச்சரம் என்னும் பதியில் இப்பொழுது பாலசுப்பிரமணியர் ஆலயம் அமைந்துள்ள இடத்தில் ஒரு வன்னி மரம் நின்றிருக்கின்றது. வன்னியர் என்னுஞ் சேட்டைத்தேவர் அம்மரத்தை இடமாக் கொண்டிருந்திருக்கின்றார். தாமிருப்பது பற்றிய கவனமெதுவுமின்றிப் போவோர் வருவோர்க்குத் தொல்லை கொடுப்பதுதான் அவர் வேலை. அவரைப் பிரீதி செய்வதற்கென்றே பொங்கிப்படைத்து வழிபாடு செய்யும் மரபு இருந்திருக்கின்றது. அந்தக் காலகட்டத்தில் அவ்விடத்துலவிய துறவியொருவர் இவ்விடத்துப் பெரியதொரு ஆலயந் தோன்றும் என்று குறிப்பிட்டார் எனுஞ் செவிவழிச் செய்தியொன்றுண்டு. பாலசுப்பிரமணியரை இந்த இடத்துப் பிரதிட்டை செய்ததும் வன்னியர் இடம்பெயர்ந்து மற்றொரு வளவிலே தங்கியிருக்கின்றார் என்றும், அந்த இடத்துப் பொங்கல் பூசைகள் இப்பொழுதும் தொடர்கின்றன என்றும் சொல்கின்றனர்.

## தோற்றம் :

வரத்தலம் கற்பகவிநாயகர் ஆலய முதற் பூசகர் என்று கருதப்படும் ஸ்ரீபிள்ளையார்பட்டரின் மூத்த புதல்வர் சிவஸ்ரீ முத்துச்சாமிக் குருக்களாலேயே இந்த ஆலயம் தாபிக்கப்பட்டது. வரத்தலம் கற்பகவிநாயகர் ஆலயத்தில் வழிபாடு செய்வோருக்கும், நிர்வாகத்திற்குமிடையே ஏற்பட்ட மனவேற்றுமை காரணமாக விரக்தியடைந்த குருக்கள் பொறுப்புக்கள் எல்லாவற்றையும் மகனிடம் ஒப்படைத்துவிட்டுத் துறவுபூண்டு இந்தியா சென்று பல ஆண்டுகள் வாழ்ந்தார். சிதம்பரம், தில்லைவனம் என்னுமிடங்களில் வழிபாடு யோகாசனப் பயிற்சி என்பவற்றிற் காலங்கழித்தார். தில்லைவனத்தில் யோகாசனப் பயிற்சி செய்து கொண்டிருந்தவேளை ஒரு சந்நியாசி தோன்றி ஒரு யந்திரத் தகட்டினையும் அருள் நிறைந்த இரகசியப் பெட்டி ஒன்றினையும் கொடுத்து மறைந்தார். அன்று மாலை சுவாமி தரிசனத்திற்காகச் சிதம்பரஞ் சென்றவேளை சிவசிதம்பரப்பிள்ளை என்னும் பெயருடைய யாழ் நகரைச் சேர்ந்தவரைக் கண்டார்.

நடந்தவற்றை அவருக்குத் தெரிவித்ததன் மூலம் சுப்பிரமணியர் விக்கிரகம் மயிலின் அமைப்பு, பலிபீடம் என்பவற்றையும் பெற்றார். சிவசிதம்பரப்பிள்ளையின் உதவியுடன் விக்கிரகங்கள் முதலானவற்றைக் கொணடு வீடு வந்தார். அவ்வேளை முத்திரிஷி என்னுங் துறவு நாமத்தையும் பூண்டிருந்தார்.

கொண்டுவந்தனவற்றை வீட்டிலே வைத்துவிட்டுக் கொழும்பு மாநகர் சென்று ஆலயங்கட்டுவதற்கெனப் பணந்திரட்டினார்.[9] நாச்சியப்பன் செட்டியாரின் பேருதவி கிடைத்தது. பணத்துடன் வந்தவர் இப்போ ஆலயமுள்ள இடத்தில் நிலத்தை விலைக்குப் பெற்றுத் திருப்பணி வேலைகளை 1916ஆம் ஆண்டு ஆரம்பித்துத் தொடர்ந்தார். 1918இல் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட விக்கிரகங்கள் பிரதிட்டை செய்யப்பட்டன என்றும் முதலாவது கும்பாபிஷேகம் நடத்தப்பட்டதென்றும் சொல்வர்.

### திருசீச்சரம் :

தெல்லிப்பழை தென்மேற்கில் பன்னாலைக் கிராமத்தின் மேற்கில் திருவாலங்காடு என்னுங் குறிச்சியில் நன்னாச்சியோலை என்னும் நிலத்தில் இந்த ஆலயம் இருக்கின்றது. அம்பனைச் சந்தியிலிருந்து மேற்கு நோக்கிச் சென்று வரத்தலம் விநாயகரிடம் செல்லும் ஒழுங்கையைக் கடந்து மேலும் 200 மீற்றர் வரை மேற்கே செல்ல ஓரொழுங்கை வடக்கு நோக்கிச் செல்கின்றது. அது மேற்கு நோக்கித் திரும்பித் திரும்பவும் வடக்கு நோக்கி ஆலய வாயிலைச் சென்றடைகின்றது.

### சிவலிங்கமூர்த்தி :

சிவஸ்ரீ முத்துச்சாமிக் குருக்கள் (முத்திரிஷி) மீண்டும் இந்தியா சென்றார்கள். திருப்பாதிரிப்புலியூர் என்னுமிடத்தில் தேவர்களாலே பூசிக்கப்பட்டதொரு சிவாலயம் கவனிப்பாரற்றுக் கிலமடைந்து கிடந்தது. அந்த ஆலயத்தைத் தரிசித்த ஸ்ரீ முத்திரிஷி அவர்கள் அங்கிருந்த சிவலிங்கப் பெருமானாற் கவரப்பட்டார்கள். அவ்விடத்திய சிலரது உதவியுடன் சிவலிங்க மூர்த்தியையும் விநாயகர் விக்கிரகமொன்றையுங் கொண்டுவந்து 1924 இரத்தாட்சி வருடம் சித்திரைமாதம் 30ஆம் நாள் புதன்கிழமை ஸ்ரீ பாலசுப்பிரமணியர் ஆலயத்தில் பிரதிட்டை செய்தார்கள். கொடித்தம்பப் பிரதிட்டையும் அன்றைய தினமே நடைபெற்றிருக்கின்றது.

## மூர்த்திகள் :

மூலமூர்த்தி பாலசுப்பிரமணியர் கருங்கல் விக்கிரகம். இரு திருக்கரங்களை உடையவர். நிற்கும் நிலை. அதேகல்லில் வடிக்கப்பட்ட மஞ்ஞையின் தோற்றத்தையுங் காணமுடிகின்றது. இருவாலைக் குயத்தியர் இருபுறமுங் காட்சி தருகின்றனர். சிவலிங்கப் பெருமானார் நிலத்திருந்து சுமார் ஒரு மீற்றர் வரை உயரமானவர். இந்தச் சுற்றுவட்டத்தில் இவ்வளவு பெரிய சிவலிங்கமூர்த்தியை வேறு எங்குமே காணமுடியாது. சிவலிங்க மூர்த்திக்குத் தென்புறமாகப் பெரிய அளவிலான விநாயகப்பெருமான் கருங்கற்சிலை வீற்றிருப்பதைப் பார்க்க முடிகின்றது. முருகன் வள்ளி தெய்வயானை எழுந்தருளிகள், சிவகாசி அம்பாள் சமேத ஆனந்த நடராசர் ஐம்பொன் மூர்த்திகள், நவக்கிரகம், சந்தான கோபாலர் வைரவர் கருங்கற்சிலாவிக்கிரகம்.

## கும்பாபிஷேகம் :

1918இல் முதலாவது கும்பாபிஷேகம் நடைபெற்றிருக்கவேண்டும். 1959.03.25 விளம்பி வருடம் பங்குனி மாதம் 12ஆம் நாள் புதன்கிழமை அத்த நட்சத்திரத்தில் ஜீர்ணோத்தாரண மகா கும்பாபிஷேகம் மாவைக் குருக்கள்மார் உதவியுடன் நடைபெற்றுளது. இது இரண்டாவது கும்பாபிஷேகம்.

## நித்திய நைமித்திகம் :

காலை, நண்பகல், மாலை என மூன்று காலப் பூசை தினமும் நடைபெறுகின்றது. முதலில் விநாயகருக்கும், பின்னர் சிவலிங்கமூர்த்திக்கும் தொடர்ந்து மூலமூர்த்தி பாலசுப்பிரமணியருக்கும் பூசை நடைபெறும். வருடாந்த மகோற்சவம் கந்தஷஷ்டிக் காலத்தில் ஷஷ்டித்திதியிலே தேரும், ஸப்தமித் திதியில் தீர்த்தமும் வரக்கூடிய வகையில் பத்துத் தினங்கள் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறும் வருடப்பிறப்பு, சித்திரைப்பூரணை, நவராத்திரி, புரட்டாதிச் சனி, கந்த ஷஷ்டி, ஐப்பசி வெள்ளி, திருக்கார்த்திகை, திருவெம்பாவை, தைப்பொங்கல், தைப்பூசம், வைகுண்ட ஏகாதசி, மாசிமகம் என்னுந் தினங்களில் அபிஷேக ஆராதனையுடன் கூடிய விசேட வழிபாடு நடைபெறும். மாசி மகோதயத்தில் சுவாமி கீரிமலைக்கு எழுந்தருளித் தீர்த்தமாடி அருள்பாலிக்கும் முறைமை இப்போதும் நடைமுறையிலுண்டு.

**அமைப்பு :**

இந்த ஆலயத்தின் அமைப்புமுறை புதுமையானது. மற்றை ஆலயங்களின் அமைப்பிலிருந்து பலவழிகளில் வேறுபாடுகளை அவதானிக்க முடிகின்றது. கர்ப்பக்கிருகம் அர்த்தமண்டபம் இரண்டும் வைரக்கற்களாற் கட்டப்பட்டவை. அந்த மண்டபங்களின் அமைவிடம் நிலமட்டத்திலிருந்து சுமார் இரண்டு மீற்றர் உயரத்தில் ஆரம்பமாகின்றது. அந்தளவு உயரத்திற்கு நிலம் வைரக்கற்கட்டு மூலம் உயர்த்தப்பட்டுளது. அந்த உயரத்தில் அந்த இருமண்டபங்களையும் சுற்றிவரக்கூடியதொரு வீதியுமுண்டு. அந்த வீதியில் இரு மண்டபச் சுவர்களுடனும் பலிபீடங்கள் ஒவ்வொரு சுவர் அந்தத்திலும் அமைக்கப்பட்டிருப்பது சிறப்பானது. கர்ப்பக்கிருக முன்புறச் சுவர் ஒரு முழு வெள்ளை வைரக்கல்லாலாயது. வாயிலும் அதே கல்லில் கொத்துவேலை செய்து தோண்டி உண்டாக்கப்பட்டுளது. அர்த்தமண்டபத்தையும் மகா மண்டபத்தையும் சிறியதொரு வாயிலமைப்புத் தொடர்புபடுத்துகின்றது. மகாமண்டபம் முழுமையாகப் படிபோன்று நீளப்பக்கம் நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. வெள்ளை வைரக்கல் படி அமைப்பிற்கு உபயோகமாகியுள்ளது. மகா மண்டபத்தின் வடமேற்கில் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட அற்புதச் சிவலிங்கப் பெருமானைத் தரிசிக்க முடிகின்றது. சிவலிங்க மூர்த்தியின் பின்னே சுவர்ப்படியில் ஐம்பொன் மூர்த்திகளைக் கண்டு வழிபட முடிகின்றது. தென்மேற்கில் பாரததேயத்திலிருந்து கொண்டுவரப்பட்ட விநாயகப் பெருமானைக் கண்டானந்திக்க முடிகின்றது. மண்டபத்தின் நடுவே ஐம்பத்திரண்டு சுடர்களையுடைய திருவாசியுடன் ஆனந்த நடராசர் தெற்கு நோக்கி நடமிடப் பக்கலில் சிவகாமி அம்மையார் பார்த்து நிற்கின்றார். இந்த அமைப்பிற்குக் கிழக்கே பிரதான வாயிலுக்கண்மையாகக் கொடிக்கம்பமும் பலிபீடமும் நந்தியிடத்து மயூரமும் அமைந்துள்ளன. மரத்தால் மட்டும் ஆய சுமார் பதினொரு அடிவரை உயரமுடைய கொடித்தம்பத்தைச் சுற்றி ஐம்பொன்னாலாய கம்பி ஒன்று அடியிலிருந்து நுனிவரை செல்கின்றது. கம்பத்தின் முன்னே மூலாதார கணபதி வீற்றிருக்கின்றார். கொடித்தம்பத்தின் வடக்குப்புறம் நவக்கிரகப் பிரதிட்டை நடைபெற்றுளது. சிவலிங்கப்பெருமானுக்கு வடக்கே திருமஞ்சனக் கிணறுண்டு. பிரதான வாயிலின் தெற்குப் புறத்தில் இரண்டரை மீற்றர் உயரத்தில் கண்டாமணி வைக்கப்பட்டுளது. தென்கிழக்கில் குருக்கள்மார் தங்கும் அறை, மடைப்பள்ளி, வாகனசாலை என்பன அமைக்கப்பட்டுள்ளன. வடகிழக்கில்

சந்தானகோபாலர், வைரவர் என்போர் பிரதிட்டை செய்யப்பட்டுளர். உள்வீதி நிலம் முழுமையும் பொளிந்த வைரக்கல் பதிக்கப்பட்டுளது. வீதியைச் சுற்றி மதிலும் உண்டு.

**ஆதீன முதன்மை:**

ஆலயத்தை அமைத்த சிவஸ்ரீ முத்துச்சாமிக் குருக்கள் தமக்குரிய உரித்துக்களைத் தம் புதல்வரான சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்களிடம் ஒப்படைத்தார். ஆனால், தந்தையாருக்கு முன்பாகவே அவர் சிவபதம் அடைந்ததனால் தந்தையார் மகனுடைய மகனாகிய சிவஸ்ரீ முத்துச்சாமிக் குருக்களிடம் 1944ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14ம் திகதி 1070ஆம் இலக்க உறுதிமூலம் ஆலய உரிமையைக் கையளித்தார்களென அறிகிறோம். ஸ்ரீமுத்துச்சாமிக் குருக்கள் அவர்களே அர்ச்சகராகவும் பணிபுரிகின்றார்கள்.

**கலை - பக்தி இலக்கியம் :**

சைவப்புலவர் சுப்பிரமணியம் செல்லத்துரை, ஓய்வுபெற்ற அதிபர் காசிப்பிள்ளை கதிர்காமத்தம்பி, ஓய்வுபெற்ற அதிபர் வைத்திலிங்கம் பொன்னையா, ஓய்வுபெற்ற அதிபர் செல்லையா சிவசுப்பிரமணியம் என்போர் புராணபடன பாரம்பரியம் இங்கு தொடர்ந்து நிகழ உதவுகின்றனர். சுன்னாகம் ஸ்ரீமத் அ. குமாரசுவாமிப்புலவர் அவர்கள் இயற்றிய திருவூஞ்சற்பா இந்த ஆலயத்திற்கிருந்தது. காப்புச் செய்யுளுடன் மற்றும் மூன்று செய்யுள்கள் மட்டும் இப்போது கிடைக்கின்றன. பாடல்கள் வள்ளிமலைக்கந்தர் என்று பேசுவது சிந்தனைக்குரியது. பன்னாலை திருசீச்சரம் ஸ்ரீ பாலசுப்பிரமணியர் திருவூஞ்சல் ஆசிரியர் வ. நல்லப்பு இயற்றியது உண்டு. சிவஸ்ரீ கு. முத்துச்சாமிக் குருக்கள் வேண்டுகோட்படி கொழும்பு பழனியப்பச் செட்டியாரால் 1956இல் பதிப்பிக்கப்பட்டது. காப்புச் செய்யுள் நீங்கலாகப் பத்துச் செய்யுள்களை உடையது. இறுதிச் செய்யுள் வாழ்த்துக் கூறுகிறது.

மயில், குதிரை, யானை, ஆட்டுக்கடா முதலிய வாகனங்கள் இருக்கின்றன. சிறிய தேரொன்றும், சூரபத்மனுங்கூட உண்டு.

---

முக்கிய குறிப்பு : திரு. வை. பொன்னையா சிவஸ்ரீ முத்துச்சாமிக் குருக்கள் என்போர் கொடுத்த தகவல்களுடன் நேரிற் கண்டுகொண்டவற்றைச் சேர்த்து 1988இல் எழுதப்பட்டது.

2001.05.04 விசு வருடம் சித்திரை மாதம் 21 ஆம் நாள் வெள்ளிக்கிழமை உத்தர நட்சத்திரத்தில் சிவஸ்ரீ ராம. சண்முகநாதக் குருக்கள் தலைமையில் புஜாகீன அந்ரீதப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

உ
சிவமயம்

# பன்னாலை திருச்சரம்
# அருள்மிகு ஸ்ரீ பாலசுப்பிரமணியர் திருவூஞ்சல்

ஆசிரியர் : வ. நல்லப்பு.

## காப்பு

பூமாது வாழ்தெல்லிப் பதியின் மேற்பால்
புரைதீர்ந்த சுவேதவா ரணிய மேவுந்
தாமாரு நிகரற்ற தன்மை யான
தற்பரம்பா லசுப்பிர மணியர்மீது
நாமாது தருந்தமிழா லூஞ்சல் பாட
நம்பனருள் தும்பிமுகத் தெந்தை யாகும்
கோமான்றன் திருப்பாதப் போதெந் நாளுங்
குறைவறமெய் யன்புதவிக் காப்ப தாமே.

## நூல்

பாங்குறுமென் மலர்மரங்கள் கால்க ளாகப்
படர்ந்தசினை நனைகடளிர் பந்த ராகத்
தூங்குறுமா மதுத்துளிபன் னாணதாகத்
துலங்குசர வணப்பொய்கை பலகை யாகத்
தாங்குபெரு மிதவூஞ்ச றன்னின் மேவித்
தக்ககார்த் திகையறுவர் கரந்தொட் டாட்டத்
தீங்கிலநற் சுவேதவா ரணியம் வாழும்
திகழ்சுப்ர மணியரே யாட ரூஞ்சல் 1.

அரிபிரம இந்திரர்க ளடிகள் போற்ற
அமரர்மலர் மழைசொரிந்து களித்து நாட
அரிவையர்மே னகைமுதலோர் நடனமாட
வன்பர்கள்சா மரமசைப்ப வாக மீதிற்
பரிவுறுமா மதிகவிகை தாங்கி நிற்ப
பரிதிமுத லோர் குறித்த பணியி னிற்பப்
படர்தரு செஞ் சடைமுடியெம் பெருமா னல்கும்
பாலசுப்ர மணியரே யாட ரூஞ்சல். 2

காரூர்தி யுளத்தமைத்த கவலை யோட்டக்
கரியுரிபோர்த் திட்டகறைக் கண்ட னீயும்
பேரருளின் றிறத்தறுமா முகத்த ராகிப்
பிறங்குநுத லிற்பொறிக ளாறு நல்கச்
சீருறுநற் பொதிகளறு சிறுவ ராகித்
திகழ்ந்தசர வணத்தினிது திட்ப மாகப்
பாரூருந் திருவிளையாட் டயர்ந்த தெய்வப்
பாலசுப்ர மணியரே யாட ரூஞ்சல். 3

துலங்குமழு மானேந்து கரத்தரான
தூயபசு பதியுமலை நங்கை தானும்
நலங்கிளர்மால் விடையூர்ந்து நாடி யங்கு
நண்ணியநற் சிறுவர்தமை நயந்து நோக்கி
யிலங்குகர தலத்தணைக்க வுவந்து மேவி
யிருமூன்று சென்னியுமா றிரண்டு மொய்ப்பும்
பரந்தொளிரக் கந்தனென்னு நாமம் பெற்ற
பாலசுப்ர மணியரே யாட ரூஞ்சல். 4

பூங்கமலத் திசைமுகனைச் சிறையி லுய்த்துப்
பூதலத்தி லான்மலர்க்கஞ் சிருஷ்டி செய்து
தீங்கிலநற் புகணிறுவித் தேவர்க்காகத்
தேசுபெறு மேருகிரி தன்னி லோர்நாள்
தேங்குறுபே ருருவுதனைத் தெளியக் காட்டிச்
சிற்பரந்தா மென்பதனை யுலகோர்க் கன்று
பாங்குபெற நிலைநிறுத்துந் தேவனான
பாலசுப்ர மணியரே யாட ரூஞ்சல் 5.

அரவாப ரணமணிந்தி லங்கு மூர்த்தி
யன்புடன்வீற் றிருந்தருளு மாசில் வெள்ளிக்
கிரிசார்ந்த மருங்கந்த மலையி லோங்குங்
கிளரால யமாய்க்கொண் டினிது நாளும்
வருமாத வர்முனிவர் மகிழ்ந்து பூத்தூய்
வந்தனைகள் செய்யவுமை பங்க னான
பரமன்றன் விசேடதிருக் குமர ரான
பாலசுப்ர மணியரே யாட ரூஞ்சல். 6

சங்கரனல் விடையுதவத் தாமுட் கொண்டு
 தானவனாஞ் சூரபன்மன் தன்னை வீட்ட
சங்காதி வாச்சியங்கள் இனிதி னார்ப்ப
 சத்திமுதல் வியன்படைகள் கரத்திற் தாங்கி
யிங்கிதமா விரதவா ரூட ராகி
 யேகியமர் செய்துதொலைத் தமர ரானோர்
பங்கமுறு சிறையதனை மீட்சி செய்த
 பாலசுப்ர மணியரே யாடீ ரூஞ்சல். 7

தேவர்கோ னுளமகிழ்ந்து புதல்வி யான
 தெய்வயானை அம்மைதனைச் சிறந்து நல்கத்
தாவறுமா மறைப்படியே சடங்கு முற்றித்
 தமதுபே ரருணிலையாற் றயைகொண் டேநீ
பூவமர்செந் தினைப்புனத்தைப் போற்றல் செய்த
 புனிதமா தானவள்ளி யம்மை தன்னை
பாவலநா ரதர்வேண்ட முறையே கொண்ட
 பாலசுப்ர மணியரே யாடீ ரூஞ்சல். 8

ஆரணத்தி னுட்பொருளே யாடீ ரூஞ்சல்
 அமரர்சே னாபதியே யாடீ ரூஞ்சல்
காரணத்தின் காரியமே யாடீ ரூஞ்சல்
 கரிமுகவநற் கிளையவரே யாடீ ரூஞ்சல்
பூரணிதன் திருமகனே யாடீ ரூஞ்சல்
 பூங்கடம்ப மலர்மார்பீ ராடீ ரூஞ்சல்
பாருயிர்கள் உய்ந்திடவே யாடீ ரூஞ்சல்
 பாலசுப்ர மணியரே யாடீ ரூஞ்சல் 9

மன்னர்செங் கோல்வாழி மறையோர் வாழி
 மாநிலத்தில் வைசியரே ராளர் வாழி
முன்னுமதி மும்மாரி பொழிந்து வாழி
 முத்தமிழ்வே தாகமநற் புராணம் வாழி
தன்னிகரில் சைவநெறி தழைத்து வாழி
 தாரணியிற் சராசரம்வான் மாக்கள் வாழி
பன்னரிய முதுவிருஷி மரபோர் வாழி
 பாலசுப்ர மணியமுதல் வாழி வாழி. 10

சுபம்.

பதிப்பு : 1956. V.V. சங்கரப்பிள்ளை ஆசிரியரால் மேற்பார்க்கப்பட்டது.

உ
சிவமயம்

# பன்னாலை திருசீச்சரம் அருள்மிகு ஸ்ரீவள்ளிமலைக் கந்தன் திருவூஞ்சல்

சுன்னாகம்
ஸ்ரீமத் அ. குமாரசுவாமிப் புலவர்

## காப்பு

மணிகொண்ட யாழ்ப்பாண தேசங் தன்னில்
வரத்தலைசேர் விநாயகரா லயத்தின் மேற்கே
பணிகொண்ட வள்ளிமலைக் கந்தர் மீது
பாவினத்து லொன்றாகும் விருத்தந் தன்னால்
அணிகொண்ட வூஞ்சலிசை யினிது பாட
அடியரிடர் களைந்தருளே நாளுஞ் செய்யும்
கனிகொண்ட யானைமுக முன்னோ னான
கணபதிதன் செய்யகழல் காப்ப தாமே.

## நூல்

பொன்னெனுநன் மலைநிகருந் தூண்க ணாட்டிப்
புதியமர கதமணியால் விட்ட மோட்டிப்
பன்னரிய தரளமணிக் கயிறு பூட்டிப்
பத்தரைமாற் றுத்தங்கப் பலகை மாட்டி
நன்னரெழில் பெயவியற்று மூஞ்ச லேறி
நானிலத்தி லுயிர்களெலா மினிது வாழ
வண்ணமலி பொழில்செறியாழ்ப் பாண மேவும்
வள்ளிமலைக் கந்தரே யாடீ ரூஞ்சல் 1

ஆரணத்தி னுட்பொருளே யாடீ ரூஞ்சல்
அம்பிகையார் தருபொருளே யாடீ ரூஞ்சல்
காரணத்தின் காரணமே யாடீ ரூஞ்சல்
கங்கைக்கும் பாலகரே யாடீ ரூஞ்சல்
பூரணத்தி லுறைபவரே யாடீ ரூஞ்சல்
புராரிதரும் பாலகரே யாடீ ரூஞ்சல்
வாரணத்தின் றுணையினரே யாடீ ரூஞ்சல்
வள்ளிமலைக் கந்தரே யாடீ ரூஞ்சல் 2

களங்கமிலா அந்தணரா வினங்கள் வாழி
காவலர்செங் கோல்வாழி முகில்கள் வாழி
விளங்குதிரு நீற்றொடுகண் டிகையும் வாழி
வேதமுட னாகமசாத் திரங்கள் வாழி
துலங்குதிருப் பணிபூசை முதல செய்வோர்
துயரொருவிச் சித்திபெறீஇ நாளும் வாழி
வளங்குலவு யாழ்ப்பாண தேசம் வாழி
வள்ளிமலைக் கந்தரருள் தானும் வாழி 3

பன்னாலை திருசீச்சிரம் ஸ்ரீ பாலசுப்பிரமணியர் ஆலய புராண வசனத்தில் இந்த நான்கு பாடல்களும் காணப்படுகின்றன.

உ
சிவமயம்

## பன்னாலை - மயிலையம்பதி

# அருள்மிகு ஸ்ரீஞானவைரவர் ஆலயம்

**கலாபூஷணம் பண்டிதர் சி. அப்புத்துரை.**

பன்னாலை - கீரிமலை வீதியில் கம்பலைச் சந்தியில் இருந்து பிரிந்து வடக்கு நோக்கிச் செல்லும் பன்னாலை சேர். கனகசபை வித்தியாலய வீதியில் 100 மீற்றர் வரை சென்று பின் அதிலிருந்து மேற்கே பிரிந்து செல்லும் கைஒழுங்கையில் 75 மீற்றர் தூரத்தில் மயிலையம்பதியில் அருள்மிகு ஞான வைரவர் ஆலயம் அமைந்துள்ளது.

ஆதியில் உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட பூதர் என்பவர் பன்னாலை பருத்தி ஒல்லை (பருத்தியோலை) என்ற குறிச்சியில் வாழ்ந்த வள்ளர் என்னும் பெண்ணை விவாகஞ் செய்து வாழ்ந்து வந்தார். அவர்களுக்குச் சயம்புநாதர் என்ற ஆண் மகவும், இரு பெண் பிள்ளைகளும் பிறந்தனர். சயம்புநாதர் வளர்ந்து இளைஞர் ஆனதும் மயிலையம்பதியில் வாழ்ந்துவந்த வள்ளிப்பிள்ளை என்னும் பெண்ணை விவாகம் செய்த பின்னர் பருத்தியொல்லைக் காணியை விற்று மயிலையம்பதியில் வாழ்ந்து வந்தார். இப்பதியில் வாழ்ந்த வன்னித்தம்பி வயிரவி என்பவரும் சம்புநாதரின் மாமனாரும் இப்போதிருக்கும் ஆலயத்திற்குச் சிறிது கிழக்கில் உள்ள ஒரு மாலைதீவுத் தென்னம்பிள்ளை மரத்தடியில் ஒரு கல்லை வைத்து வைரவராகப் பாவித்துப் பொங்கிப் படைத்து வழிபட்டு வந்தனர். வன்னித்தம்பி வைரவி என்பவர் இறக்க அவரின் பிள்ளைகள் இவ்வழிபாடு நடந்துவந்த காணியைச் சயம்புநாதருக்கு விற்று வீட்டு வேறு இடம்நாடிச் சென்றனர். இவ்வாலய உற்பத்தி வரலாறு இதுவாயிருக்க இவ்விடத்தை மாற்றியமைக்க ஏதுவாயிருந்த வரலாற்றுப் பின்னணிச் செய்தியைக் குறிப்பிடுதல் அவசியமாகிறது.

பூதர் சயம்புநாதர் தம்மனைச் சங்கரப்பிள்ளையின் தந்தையார் சின்னத்தம்பி அவர்களின் மறுவம்புலவு நெற்காணிகளை மேற்பார்வை செய்து நெல்லையும், வைக்கோலையும் இரவு இரவாக வண்டிகளில் ஏற்றிவரும் நாட்களில் ஒருநாள் வண்டிவுக்கு முன்னால் ஒரு கறுப்பு நாய் வந்ததாகவும் வீடு வந்ததும் அந்த நாய் மறைந்துவிட்டதாகவும் சயம்புநாதர் சொன்ன கர்ணபரம்பரைக் கதையொன்று உளது. அந்த நாய் வைரவரின் வாகனமென்றும் வைரவரே தமக்குத் துணையாக வந்தவர் என்றும் நம்பிக்கை கொண்ட சயம்புநாதரும் மனைவியும் 1835இல் வைரவரை ஆதரித்து வந்த இடத்தை மாற்றித் தற்பொழுதுள்ள ஆலயத்தின் சமீபத்தில் உள்ள திருவாத்தி மரத்தின் கீழ் ஒரு சூலத்தை நாட்டி வழிபாடுசெய்து வந்தனர்.

வேதம் புதுமைசெய். மகாகவி பாரதியார்

சயம்புநாதருக்கு மீனாட்சிப்பிள்ளை, வைரமுத்து என்னும் இரு பிள்ளைகள் பிறந்து வளர்ந்துவருங் காலத்தில் சயம்புநாதர் இறக்க மீனாட்சிப்பிள்ளை வைரவரைப் பூசித்து வழிபாடாற்றி வந்தார். மீனாட்சிப்பிள்ளை வைரவப்பிள்ளையின் மகன் சிதம்பரப்பிள்ளையை மணஞ்செய்தார். வைரமுத்து பார்வதிப்பிள்ளை என்பவரை விவாகம் செய்தார். கொழும்பு கொம்பனித் தெருவில் வியாபார முயற்சியில் ஈடுபட்டுப் புகழ்பெற்று விளங்கிய வைரமுத்து, தன் சகோதரியின் தூண்டுதலால் ஆலயம் இப்போது அமைந்துள்ள இடத்தில் 1928இல் சுண்ணாம்புக் கல்லினால் இரண்டு சிறு மண்டபங்களைக் கொண்ட கட்டிடத்தை அமைத்து மூல மூர்த்தியாக ஒன்றரை அடி உயரமான ஐம்பொன்னாற் செய்யப்பட்ட சூலத்தை 1929இல் பிரதிட்டை செய்வித்தார். எனவே திரு. சயம்புநாதர் வைரமுத்து குடும்பமும் வைரவப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை குடும்பமும் இவ்வாலய உற்பத்தியிற் சம்பந்தமுடையோராவர் எனத் தெரிகிறது.

1929ஆம் ஆண்டு ஆனி மாதம் பூச நட்சத்திரத்தில் முதற் கும்பாபிஷேகம் நடைபெற்றது. சிவத்திரு சதாசிவபரம் தற்பரானந்தக் குருக்கள் அவர்கள் இக் கும்பாபிஷேகத்தை நிறைவேற்றி வைத்தார்கள். அந்தக்கால அர்ச்சகராகச் சிவத்திரு கந்தையா ஐயாத்துரை அவர்கள் விளங்கினார்கள். அவர் செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களில் பூசை செய்துவந்தார். சூழலிலுள்ள மக்களும் இவ்வாலயத்துடன் ஈடுபாடு கொண்டு வழிபாட்டை நழுவவிடாது விசேட தினங்களில் பொங்கிப் படைத்துப் பூசித்துவந்தனர். மீனாட்சிப்பிள்ளையும், வைரமுத்துவும் இறக்க மீனாட்சிப்பிள்ளையின் கணவர் சிதம்பரப்பிள்ளையும், வைரமுத்துவின் மனைவி பார்வதிப்பிள்ளையும் ஆலயத்தை நிர்வகித்து வந்தனர்.

1946இல் கர்ப்பக்கிருகத்தின் ஓடுகள் நீக்கப்பட்டுச் சீமெந்தினாற் கட்டப்பட்டுத் தூபி மூடுசாந்தினால் அமைக்கப்பட்டது. இவ்வாண்டிலே அர்த்த மண்டபமும், மகா மண்டபமும் பெருப்பித்து அழகுற அமைக்கப்பட்டன. கட்டிட ஸ்தபதியாக வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திரு. வெற்றிவேலு அவர்கள் செயற்பட்டார்கள். மண்டபத்தின் கூரை ஓட்டினால் வேயப்பட்டது. ஆலயத்தின் தெற்குப்பக்கமாக மடைப்பள்ளி சீமெந்தினாற் கட்டப்பட்டது. 1947ஆம் ஆண்டு தைப்பூசத் தினத்தில் இரண்டாம் கும்பாபிஷேகம் நடைபெற்றது. கும்பாபிஷேக முதன்மைக் குருவாகச் சதாசிவபரம் தற்பரானந்தக் குருக்களே நிறைவேற்றி வைத்தார்கள். இத்தினம் தொடக்கம் தினமும் ஒரு காலப்பூசை ஆகம முறைப்படி நடைபெறலாயிற்று. சிவத்திரு. அருணாசலம் பரமலிங்க ஐயர் அவர்கள் ஆலய அர்ச்சகராக நியமிக்கப்பெற்றுப் பூசைகள் சிறப்பாக நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டன.

திரு. வ. சிதம்பரப்பிள்ளையும் திருமதி வ. பார்வதிப்பிள்ளையும் முதுமையடைந்து நோய்வாய்ப்பட்ட நிலையில் வைரமுத்து இரத்தினமும் மனைவி செல்வநாயகியும்,

திரு. சுவாமிநாதர் பொன்னம்பலமும் மனைவி இராசம்மாவும் நிர்வாகப் பொறுப்பை ஏற்றனர். திரு. வ. இரத்தினம் அவரக்ளின் புதல்வர்களான பத்மநாதன், இராமநாதன், லோகநாதன் ஆகிய மூவரும் மாணவர்களாயிருக்கும் காலம் தொடக்கம் இவ்வாலயத்தின் வளர்ச்சியிலும் ஆலய நித்திய, நைமித்திய பூசை விடயங்களிலும் மிக ஈடுபாடு கொண்டுழைத்துத் தம்மை அர்ப்பணித்துவருவது கண்கூடு. 1962ஆம் ஆண்டு இம்மூவரும் எடுத்துக்கொண்ட பெருமுயற்சியினாலும் திரு. வினாசித்தம்பி சரவணமுத்து, திரு. சிதம்பரப்பிள்ளை சங்கரப்பிள்ளை ஆகியோரின் நிதி உதவியினாலும் சுற்றாடலிலுள்ள மற்றையோரின் உதவியினாலும் நிருத்த மண்டபம் அமைக்கப்பட்டது. இம் மண்டபக் கூரை ஓடு திரு. சிதம்பரப்பிள்ளை சங்கரப்பிள்ளை அவர்களால் உபகரிக்கப்பட்டது. திரு. கந்தப்பிள்ளை முத்துத்தம்பி அவர்களால் மூலமூர்த்திக்கு ஒரு திருவாசி உபகரிக்கப்பட்டது. 1964ஆம் ஆண்டு திரு. வைரமுத்து இரத்தினம் அவர்கள் தமது மூன்றாவது மகன் லோகநாதனின் நேர்க்கடனாக ஒரு நாய் வாகனம் செய்து உபகரித்துள்ளார். 1967ஆம் ஆண்டு திரு. முருகேசு சின்னத்தம்பி அவர்கள் தனது மகன் சிவநாதனின் நேர்த்திக்கடனாக 21 அடி உயரமுள்ள ஒரு மணிக்கோபுரமும் கட்டி ஒரு கண்டாமணியையும் உபகரித்துள்ளார். இம் மணிக்கோபுரம் நிருத்த மண்டபத்தின் வடக்கில் அமைந்துள்ளது.

1973ஆம் ஆண்டு ஆனிப் பூசத்தில் ஐம்பொன்னாற் செய்யப்பட்ட உற்சவமூர்த்தியைத் திரு. இரத்தினம் இராமநாதன் அவர்கள் உபகரித்துள்ளார். அத்தினத்தில் மூன்றாவது குடமுழுக்கு நடைபெற்றது. அதனைப் பண்டிதர் வித்துவான் சிவத்திரு. இ. நவரத்தினக் குருக்கள் நிறைவேற்றி வைத்தார். 1978ஆம் ஆண்டு மடைப்பள்ளி விசாலிக்கப்பட்டுக் கூரை தகரத்தால் வேயப்பட்டது. கூரை வேலையைச் செய்து தகரத்தையும் உபகரித்தவர். திரு. முருகேசு சின்னத்தம்பியாகும். 1979இல் உள்வீதிச் சுற்றுமதில் கட்டப்பட்டது. திரு. வினாசித்தம்பி சரவணமுத்து குடும்பத்தினரால் ஆலய வடகிழக்கு மூலையில் தொட்டி கட்டப்பட்டுக் குழாய் மூலம் நீர் வசதி அளிக்கப்பட்டது. ஆலய அர்ச்சகரான பரமலிங்க ஐயர் சிவபதமடைய அவரின் புதல்வர்களான சிவத்திரு. புவேந்திரராசா, சிவத்திரு. நரேந்திரராசா, சிவத்திரு. மகேந்திரராசா ஆகிய மூவரும் ஆலய அர்ச்சகராகப் பணியாற்றி வருகின்றனர். தலவிருட்சம் திருவாத்தி ஆகும்.

வருடப்பிறப்பு, சித்திரா பௌர்ணமி, வைகாசி விசாகம், ஆனிப்பூசம், நவராத்திரி, திருவெம்பாவை, தைப்பொங்கல், தைப்பூசம், சிவராத்திரி என்னும் புண்ணிய தினங்களில் விசேட விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. தைப்பூச விழா திரு. பொன்னம்பலத்தின் மனைவி இராசம்மாவின் உபயமாகவும், ஆனிப்பூச விழா திரு. இரத்தினம் இராமநாதன் குடும்பத்தினரின் உபயமாகவும், விஜயதசமி விழா சிதம்பரப்பிள்ளை சங்கரப்பிள்ளையின் உபயமாகவும், மார்கழித்

திருவாதிரை விழா திரு. இரத்தினம் பத்மநாதன் குடும்பத்தினரின் உபயமாகவும் விசேட அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெற்று வருகின்றன. மார்கழித் திருவாதிரைத் திருநாளன்று சுவாமி வீதியுலாவந்து காட்சி கொடுப்பார். வைகாசி மாத இறுதிச் செவ்வாய்க்கிழமையில் பொங்கல் பொங்கி மடை பரவி விசேட ஆராதனை நிகழ்வது வழக்கம். இந்நிகழ்ச்சியில் இவ்வாலயத்தில் ஈடுபாடுகொண்ட அயலவர்களும், ஊரவர்களும் கலந்து பங்குகொண்டு வழிபாடாற்றுவர். திருமதி மீனாட்சிப்பிள்ளை காலத்தில் தினமும் மாலையில் திருவிளக்கேற்றி வரும் வழக்கம் இருந்தது. அவர் செய்ய முடியாத காலங்களில் அவர் தன் பிள்ளைகளைக்கொண்டு விளக்கேற்றுவிப்பார். திருமதி மீனாட்சிப்பிள்ளை இறக்க திருமதி பார்வதிப்பிள்ளையாலும் அவரின் பின் திருமதி இரத்தினம் செல்வநாயகியாலும் இப்பணி நிறைவேற்றப்பட்டுவந்தது. 1973இல் திரு. சி. சங்கரப்பிள்ளை அவர்கள் சட்டவிளக்குச் செய்தமைத்து உபகரித்ததோடு இன்றுவரை இப்பணியைத் தொடர்ந்து செய்து வருகிறார். 91ஆம் ஆண்டில் இருந்து தைப்பூசவிழா திரு. க. திருநாவுக்கரசு குடும்பத்தினர் செய்து வருகின்றனர்.

பன்னாலையைச் சார்ந்த நல்லப்புச் சட்டம்பியார் அவர்களால் இயற்றப்பட்டுப் பிற்காலத்தில் பண்டிதர் சி. கதிரிப்பிள்ளை அவர்களாற் புதுப்பிக்கப்பட்ட ஊஞ்சற் பா திருவாதிரைத் தினத்தன்று படிக்கப்படும். இப்பாக்கள் நூல்வடிவில் இடம்பெற்றுள்ளன. அருட்கவி வினாசித்தம்பி அவர்கள் வைரவப் பெருமான் மீது பாடிய அருட்பாமாலை வெள்ளிக்கிழமைகள் தோறும் நடைபெறும் கூட்டுப்பிரார்த்தனையின் பின் படிக்கப்படும். 1964ஆம் ஆண்டு இவ்வாலயத்தில் பெரியபுராணப் பூர்த்தி விழாவும் சேக்கிழார் மாநாடும் இரு தினங்களாக விமரிசையாகக் கொண்டாடப்பட்டமை இவ்வாலயத்துடன் தொடர்புற்ற சிறப்பு நிகழ்ச்சி ஆகும்.

1938ஆம் ஆண்டு திரு. காசிப்பிள்ளை கதிர்காமத்தம்பி ஆசிரியர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட கூட்டு வழிபாடு வெள்ளிக்கிழமைகள் தோறும் சிறப்புற இன்றுவரை நடைபெற்று வருகின்றது. அவராற் சமயச் சொற்பொழிவுகளும் ஆற்றப்பட்டு வருகின்றன. திருமதி வை. பார்வதிப்பிள்ளை அவர்களின் தூண்டுதலால் கதிர்காமத்தம்பி ஆசிரியர் திருவாதவூரடிகள் புராண படனத்தை 1960ஆம் ஆண்டு மார்கழித் திருவெம்பாவைக் காலத்தில் ஆரம்பித்து வைத்தார். அப்புராணபடன நிகழ்ச்சி ஆண்டுதோறும் திருவெம்பாவைக் காலத்தில் நடைபெறும். இப்போது நாட்டில் நிலவும் வன்செயல் காரணமாகத் தடைப்பட்டுவிட்டது.

07.09.1989 ஆவணி மாதம் 22ஆந் திகதி வியாழக்கிழமை கும்பாபிஷேகம் நடைபெற்றது. இவ்வைபவத்தையொட்டி இவ்வாலயத்தில் மேலும் சீர்திருத்தங்களும், திருப்பணி வேலைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாலயத்தில் மேற்கு வீதியையும் வடக்கு வீதியையும்

விஸ்தரிப்பதற்காகத் திரு. ந. நடராசா, திரு. க. கந்தையா, திரு. சரவணமுத்து குடும்பமும் நிலம் உபகரித்துதவினர். இதுவரை காலமும் கோவிலுக்கென ஒரு திருமஞ்சனக் கிணறு இல்லை. இக்குறையை நிவர்த்திசெய்யும் முகமாக திரு. வைரமுத்து இரத்தினம் குடும்பத்தினரால் 10.04.89இல் திருமஞ்சனக் கிணறு ஆரம்பிக்கப்பட்டு, வேலைகள் யாவும் பூர்த்தியானபின் உரிய கிரியைகள் 08.06.89இல் நடைபெற்றன. முன்பு அமைந்திருந்த மடைப்பள்ளி களஞ்சிய அறையாக மாற்றப்பட்டுள்ளது. அதற்குக் கிழக்கே சகல வசதிகளும் கொண்ட மடைப்பள்ளியொன்று திரு. வினாசித்தம்பி நடராசா அவர்களால் அவர் மனைவி செல்வநாயகியின் நினைவாகக் கட்டி உபகரிக்கப்பட்டுள்ளது. இக்கும்பாபிஷேகத் தினத்தன்று இவ்வாலயத்துக்கு மூன்றாம் மண்டப வலது பக்கத்திற் கருங்கல்லாற் செதுக்கப்பட்ட விநாயகர் விக்கிரகம் முதன் முதலாகப் பிரதிட்டை செய்யப்பட்டது. அவ்விக்கிரகமும் அதற்கான கட்டிடமும் திரு. நவரத்தினம் நடராசா குடும்பத்தினரின் உபயமாக அமைகின்றன. இவ்வாலயத்தின் ஸ்தூபி வைரமுத்து இரத்தினம் குடும்பத்தினர் பொறுப்பேற்றுச் செய்து முடித்துள்ளார்கள். எழுந்தருளி விக்கிரகத்தின் வெள்ளித் திருவாசி திரு. சின்னத்தம்பி பாலசுப்பிரமணியத்தாலும் பூசைநேரங்களில் ஒலிசெய்யும் பஞ்சநாதமணி திரு. சின்னத்தம்பி வேலாயுதத்தாலும் மூலமூர்த்தியின் பீட வெள்ளிக் கவசம் திரு. நவரத்தினம் நடராசாவாலும் உபகரிக்கப்பட்டுள்ளன.

தற்போது வைரமுத்து இரத்தினம் குடும்பத்தினர் கோயிலை நிர்வகித்து வருகிறார்கள். அவர்களுக்கு உதவியாகத் திருவாளர்கள் வ.சி. சங்கரப்பிள்ளை, கா. கதிர்காமத்தம்பி ஆகிய இருவரையும் போஷகராகவும் (காப்பாளர்) திருவாளர்கள் சி. வேலாயுதம், த. பத்மநாதன், செ. குணரத்தினம், ந. நடராசா, வ. கனகசபாபதி, வ.சி. சுப்பிரமணியம், சி. அசோக்குமார், க. திருநாவுக்கரசு ஆகியோரை அங்கத்தவர்களாகவும் கொண்ட ஒரு சபை பணிபுரிந்து வருகிறது. 1991 ஆம் ஆண்டு தொடக்கம் ஆசிரியர் திரு. வ. சி. சுப்பிரமணியம் தலைமையில் எட்டுப்பேரைக்கொண்ட திருப்பணிச் சபை இயங்கி வருகிறது.

திரு. வ. சி. சுப்பிரமணியம் ஆசிரியரவர்கள் சிவநெறி மகளிர் சங்கமும், சிவநெறி இளைஞர் சங்கமும் அமைத்து அவர்கள் மூலம் ஞானவைரவர் ஆலயத் திருத்தொண்டுகள் யாவும் சிறப்பாக நடைபெறவேண்டிய ஒழுங்குகளுஞ் செய்துள்ளார்.

அருள்மிகு ஞானவைரவர் திருவடி போற்றுதும்.

உ
சிவமயம்

# பன்னாலை மயிலையம்பதி அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர்சுவாமி தோத்திரப்பாடல்கள்

பன்னாலை
கா. கதிர்காமத்தம்பி

காப்பு

தங்குபுகழ்ப் பன்னாலைச் சார்மயிலைத் தண்பதியில்
மங்களமாய் மேவுஸ்ரீ வயிரவனார் உ செங்கமல
நற்பதத்தைப் பாடுதற்கு ஞானவி நாயகமாந்
தற்பரனே நின்னருளைத் தா.

நூல்

பார்பூத்த பரம்பொருளின் பாலா - போற்றி
பக்தர்தமக் கருள்புரியும் பரனே - போற்றி
பேர்பூத்த மறைபுகழும் பிரானே - போற்றி
பேரண்டங் காக்கின்ற பெருமான் - போற்றி
கார்பூத்த நீலநிற முடையாய் - போற்றி
கனகசபைக் காளிமகிழ் கணவா - போற்றி
சீர்பூத்த பன்னாலை மயிலைமேவுஞ் -
சிவஞான வைரவச் செல்வா - போற்றி 1

உலகமெலாம் விளங்குசுடர் ஒளியே - போற்றி
உள்ளமெனுந் திருக்கோயில் உள்ளாய் - போற்றி
நிலையான பேரருளும் நிமலா - போற்றி
நெஞ்சணுகு சஞ்சலத்தை நீப்பாய் - போற்றி
மலமாயை வேரறுக்க வல்லாய் - போற்றி
மதிப்பவர்தம் பிணிதீர்க்கும் மருந்தே - போற்றி
திலகநிகர் பன்னாலை மயிலைமேவுஞ் -
சிவஞான வைரவச் செல்வா - போற்றி 2

பரவுதிருச் சடையுடைய ப்ரமா - போற்றி
பரமனது திருவுளத்தில் உதித்தாய் - போற்றி
பிரமனுயர் தலையறுத்த பெரியோய் - போற்றி
பெரும்பிச்சை தலையோட்டிற் பெற்றாய் - போற்றி
வருமறைநாய் வாகனத்தில் வருவாய் - போற்றி
வஞ்சனையைத் தீர்த்தருள வல்லாய் - போற்றி
திருமறைவாழ் பன்னாலை மயிலை மேவுஞ் -
சிவஞான வைரவச் செல்வா - போற்றி 3

கனலேறு திரிசூலக் கையா - போற்றி
கபாலமொடு துடிபாசங் கொண்டாய் - போற்றி
தனமைந்தர் சுகமெல்லாந் தருவாய் - போற்றி
தருக்கறுத்துத் துணைபுரியும் தலைவா - போற்றி
வினையகற்றும் மெய்ஞ்ஞான விளக்கே - போற்றி
மேலோங்கு முத்திதரும் விமலா - போற்றி
தினமெழிலார் பன்னாலை மயிலை மேவுஞ் -
சிவஞான வைரவச் செல்வா - போற்றி 4

பொங்கியமுக் கண்ணுடைய புனிதா - போற்றி
பொருந்தியநாற் கரமுடைய இறைவா - போற்றி
பங்குமகா தேவியுடன் பயில்வாய் - போற்றி
பாங்கான நடமாடும் பரதா - போற்றி
எங்குநிறைந் தெமைக்காக்கும் ஈசா - போற்றி
எண்ணுவன தந்தருளும் எந்தாய் - போற்றி
செங்கழனிப் பன்னாலை மயிலை மேவும் -
சிவஞான வைரவச் செல்வா - போற்றி 5

சிந்தனைத்தே னூறவருஞ் சிவமே - போற்றி
சிறியேங்கள் குறைபொறுக்கும் அப்பா - போற்றி
அந்தமுட னாதியிலா வழகா - போற்றி
ஆண் பெண்ணு மலியனைத்து மானாய் - போற்றி
வந்துசெறி படைபணியு மன்னா - போற்றி
வகரத்தாற் சிகர மருள் வரதா - போற்றி
செந்தமிழ்வாழ் பன்னாலை மயிலை மேவுஞ் -
சிவஞான வைரவச் செல்வா - போற்றி 6

பயன்

கதியுண்டு செல்வக் கலையுண்டு பண்பு கதித்தமைந்த
மதியுண்டு நல்ல நிதியுண்டு வாக்கு வளங்களுண்டு.
துதியுண்டு தூயபன் னாலைமயிலை தொழுபவரிற்
பதியுண்டு மேவிய வைரவனார்தாள் பணிபவர்க்கே

உ
சிவமயம்

## வல்லுவத்தை
# அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம்

கலாபூஷணம் பண்டிதர் சி. அப்புத்துரை.

**திருத்தலம் :**

தெல்லிப்பளைச் சந்தியிலிருந்து மேற்கே பிரதான வீதிவழி செல்கையில் வரும் அம்பனைச் சந்தியிலிருந்து வடக்கு நோக்கிச் சுமார் 250 மீற்றர்வரை செல்ல மேற்குப் புறம், வெள்ளம் பாய்வதற்குரியது போன்ற அமைப்பில் ஓரொழுங்கை களனை என்னுங் குறிச்சியூடாக வளைந்து வளைந்து செல்வதைப் பார்க்கலாம். அந்த ஒழுங்கையில் சுமார் 400 மீற்றர் தூரத்தில், இடதுபுறத்தில் புளிய மரங்கள் பல நிற்கும் ஒரு பெரிய நிலப்பரப்பினைப் பார்க்க முடியும். அந்த நிலப்பரப்பில் உள்ளதொரு பெரிய புளிய மரத்தடியில் ஞான வைரவப் பெருமான் இடங்கொண்டிருப்பதை அவதானிக்கலாம். பன்னாலையில் வல்லுவத்தை என்னும் பகுதியைச் சார்ந்தது இந்த இடம்.

**தோற்றம் :**

1805ஆம் ஆண்டளவில் குமரப்பா என்பவரும் அவர் மனைவியும் விவசாய நோக்கில் வன்னி சென்று திரும்புகையில், ஒரு தெய்வ உணர்வு மனைவியின் சிந்தனையிலே தாக்கத்தை விளைவிப்பதை உணர்ந்தனர். அவர் நோய்வாய்ப்பட்டார். மருந்துபயோகம் பயனற்றுப் போனது. சுழிபுரத்தைச் சேர்ந்த 'கந்தஞானி' என்னும் பெயருடைய பார்வையாளர் மூலம் அணங்காட்பட்டமையை அறிந்தனர். அத் தெய்வத்திற்குக் கோயில் அமைக்க வேண்டிய அவசியத்தையும் உணர்ந்தனர். குறித்த நிலத்தில் நின்றதோர் புளிய மரத்தடிதான் தமக்குரிய இடம் என அறிவுறுத்திய திருவருட் குறிப்பின்படி அந்தப் புளிய மரத்தடியை மக்கள் வழிபடத் தொடங்கினர். அருட்குறிப்பின் வழிநின்ற வழிபாடானமையின் 'தான்தோன்றீசுவரர்' என்று சூழலிலுள்ளோர் சொல்லுகின்றனர். பல ஆண்டுகள் புளிய மரத்தடியை எந்தவித குறியுமின்றி வழிபடும் வழக்கம் தொடர்ந்தது. வழிபடும் மக்கள் தொகையும் பெருகியது. நில உரிமையாளர் குமரப்பா அபிவிருத்திக்கு ஆதரவளித்தார்.

**அபிவிருத்தியும் கும்பாபிஷேகமும்:**

1817ஆம் ஆண்டளவில் மயில்வாகனம் செல்லத்துரை என்பவர் ஒரு சூலத்தை உபகரித்தார். அச்சூலம் வழிபாட்டுக்குரியதாயிற்று. பன்னாலை குமகுடை அப்பர்

உடையது விளம்பேல். - *ஔவையார்*

குடும்பத்தினரும் ஒரு பெரிய சூலத்தை உபகரித்தனர். முன்னையதற்குப் பக்கலில் இதனைப் பிரதிட்டை செய்து வழிபட்டனர். 1825ஆம் ஆண்டளவில் கிழக்கு வாயிலையுடைய கொட்டில் ஆலயம் அமைக்கப்பட்டது. 1827இல் நாகதம்பிரான் காளி வழிபாடுகளும் ஆரம்பமாயின. கோயிலுக்கென வடக்கு ஒழுங்கையிலிருந்து பாதையும் விடப்பட்டது.

நிலச் சொந்தக்காரரான குமரப்பா நிலத்தை மகன் சேனாதி பொறுப்பில் விட்டுவிட்டு வேறிடஞ் சென்று வாழ்ந்தார். சில வருடங்களின் பின் குத்தகைப் பராமரிப்பில் நிலம் வல்லிபுரம் சபாபதி என்பவரிடம் விடப்பட்டது. சுமார் அறுபது ஆண்டுகள் இவர் பராமரிப்பில் நிலம் இருந்தது. ஆலய வழிபாட்டாளர்க்கும் பேருதவியாயிருந்தனர். இந்தவேளை அமைக்கப்பட்ட பரிபாலன சபை பூதப்பிள்ளை ஆரூரையாவைத் தலைவராகக் கொண்டியங்கியது. கர்ப்பக்கிருகத்தை வைரக்கல்லினாற் கட்டுவித்தார்கள். தூபிக் கலசம் செல்வரத்தினம் சிவமலர் தம்பதியரால் உபரிக்கப்பட்டது. அர்த்த மண்டபம், மகா மண்டபம் என்பனவும் அமைக்கப்பட்டன. 1976 சித்திரை ரோகிணி நட்சத்திரத்தில் கீரிமலை சிவத்திரு சிதம்பரப்பிள்ளை ஐயம்பிள்ளைக் குருக்களைத் தலைமைக் குருவாகக் கொண்ட ஐந்து உறுப்பினர்கள் அடங்கிய குருக்கள்மார் சங்கமம் மகா கும்பாபிஷேகத்தை நிறைவாக்கியது. அன்று தொடக்கம் சித்திரைப் பரணியை முதலாகக்கொண்டு 12 தினங்கள் அலங்கார உற்சவம் வருடந்தோறும் நடைபெற்று வந்தது.

1971இல் காணிக் குத்தகை வடிவேலு பாலசிங்கம் கைக்கு மாறியது. திரு. திருநாவுக்கரசு இராசதுரை என்பவர் இக்காணிக்குள் தனது பழைய இரும்புகளைப் போட்டு வியாபாரஞ் செய்து வந்தார். காணிக் குத்தகையை வருடந்தோறும் திரு. பாலசிங்கம் பெற்று வந்தார். ஆலய நிர்வாகத்திலும் மாற்றங்கள் நிகழ்ந்தன. ஆலய வாசல் வடக்காகியது. அலங்கார உற்சவ காலத்திலும் மாற்றம் செய்யப்பட்டது. இந்த வேளை சின்னக்கண்டு மாசிலாமணி என்பவர் நிலத்தை விலைக்கு வாங்கிக் கொண்டார். அச்சமயம் திரு. தி. இராசதுரை இக்காணி முழுவதும் தனது ஆட்சியில் உள்ளது என மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்து விவாதித்துக் கொண்டிருக்கிறார். நித்திய நைமித்தியம் ஆலயத்தில் நடைபெறுவது தடைப்பட்டதுடன் வழிபடுவோருக்கும் அநுமதி மறுக்கப்பட்டது. அப்பொழுது சேவையிலிருந்த பரிபாலனசபை செய்தியைச் சமாதான நீதிச்சபைக்கு அறிவித்து நீதி கோரியது. நீதிச்சபையின் தீர்ப்பின்படி பூசைகள் வழிபாடுகள் தொடர்ந்தன.

1987 யூன் மாதம் நிகழ்ந்த ஸ்ரீலங்கா இராணுவ 'ஷெல்' தாக்குதலால் கர்ப்பக்கிருகம் தவிர்ந்த ஏனைய மண்டபங்கள் சின்னாபின்னமாக்கப்பட்டன. பன்னாலை திருநாவுக்கரசு இராசதுரை குடும்பத்தினர் கர்ப்பக்கிருகம் நீங்கலாக உள்ள கோயிலின் சகல புனரமைப்பு வேலைகளையும் மற்றவர்களின் உதவியின்றித் தனித்துச் செய்து முடித்தனர். அர்த்த மண்டபம் மகாமண்டபம் என்பனவும் நிறைவாகியுள்ளன. தெய்வீகம் பரிணமிக்கும் அற்புதமான வேலைப்பாடுகளை அங்கே காண்கின்றோம். 25 அடி உயரமான மணிக்கோபுரம் அழகுற அமைந்துள்ளது. கிழக்குப் புறத்தில் அர்த்தமண்டபத்திற்கு அண்மையாகத் திருமஞ்சனக்கிணறும் நிறைவாகியுள்ளது. வடகிழக்கில் மடைப்பள்ளி, களஞ்சிய அறை என்பனவும் நிறைவு கண்டுள்ளன. திரு. கணபதிப்பிள்ளை செல்லத்துரை என்பவர் நாய்வாகனம் ஒன்றைச் செய்வித்துக் கோவிலுக்கு உபகரித்துள்ளார். மற்றைய வாகனங்களெல்லாம் திரு. தி. இராசதுரை குடும்பத்தினரால் செய்துமுடிக்கப்பட்டன. தலவிருட்சமாயமைந்து தெய்வ உணர்வைத் தந்து நிற்கும் புளிய மரத்தையும் ஆலயச் சூழலையும் வலம் வரும்போது எம்மையறியாமலே ஒரு உணர்வு புளகாங்கிதமடைய வைக்கின்றது. பொருத்தமானதொரு வேளை பொருத்தமானதொரு செயற்கருஞ் செயலைச் செய்து கொண்டிருக்கின்ற திருநாவுக்கரசு இராசதுரை குடும்பத்தினர் எல்லோரதும் பாராட்டையும் பெறுகின்றனர்.

**அர்ச்சகர் :**

ஆலய அமைப்பு வருவதற்கு முன்பு தொடக்கம் சுமார் 40 ஆண்டுகாலம் அம்பனை சிவத்திரு. சிதம்பரப்பிள்ளை நீலகண்டையர் அர்ச்சகராகப் பணிபுரிந்திருக்கின்றார். அவரைத் தொடர்ந்து சிவத்திரு அருணாசலம் பரமலிங்கையர் நியமனம் பெற்றார். தொடர்ந்து மகன் பூவேந்திரராசா பணிபுரிந்துள்ளார். இவருடைய பூசைக் காலம் சிறப்பானது என்று பேசப்படுகின்றது. தொடர்ந்து சிவத்திரு பரமலிங்கையர் நரேந்திரையர் பூசைசெய்து வந்தார். 1990ஆம் ஆண்டிலிருந்து அளவெட்டி வடக்கைச் சேர்ந்த சிவத்திரு முருகையா ஜீவசங்கர் என்பவர் திரு. திருநாவுக்கரசு இராசதுரை குடும்பத்தினரால் அர்ச்சகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## கும்பாபிஷேகமும் விழாக்களும்:

1976க்குப்பின் 09.02.1989 தை ரேவதி நட்சத்திரத்தில் கீரிமலை ஸ்ரீரேணுகாச்சிரமம் பட்டத்தரசு டாக்டர் சிவஸ்ரீ சி. உருத்திரபுரேஸ்வரக் குருக்கள் பிரதம குருவாக அமர்ந்து மகா கும்பாபிஷேகம் நிறைவேற்றப்பட்டது. இக்கும்பாபிஷேகத்திற்குப் பின்னர்

வருடந்தோறும் தைமாதம் ரேவதி நட்சத்திரத்தை முதலாகக்கொண்டு 12 தினங்கள் அலங்கார உற்சவங்கள் நடைபெற்றுவருகின்றன. வருடப்பிறப்பு, சித்திராப்பூரணை, வைகாசி விசாகப்பொங்கல், நவராத்திரி, திருவெம்பாவை, தைப்பூசம் தைப்பொங்கல், மாதப்பரணி ஆகியகாலங்களில் விசேடவழிபாடு நடைபெற்றுவருகின்றன.

## மூர்த்திகள் :

மூலமூர்த்தி வைரவர், கருங்கற் சிலாவிக்கிரகமாகும். பூதப்பிள்ளை ஆரூரையாவால் உபகரிக்கப்பட்ட இவ்விக்கிரகம் 1976 கும்பாபிஷேகத்தின் போது பிரதிட்டை செய்யப்பட்டது. பரிவார மூர்த்திகளாகப் பிள்ளையார் காளி நாகதம்பிரான் என்போர் உளர். புளியமரத்தடியும் வழிபாட்டிடமாகவுள்ளது. பிள்ளையார், நந்தி, காளி, நாகதம்பிரான் ஆகிய மூர்த்திகளைத் திரு. திருநாவுக்கரசு இராசதுரை குடும்பத்தினரே உபகரித்துள்ளனர். இதில் நாகதம்பிரான்மூர்த்தி திரு. சி. துரைராசா குடும்பத்தினர் பங்களிப்புடன் உபகரிக்கப்பட்டுள்ளது.

## முகாமை :

நிலச் சொந்தக்காரர் எந்தக் காலத்திலாயினுஞ்சரி முகாமையை விரும்பவில்லை. 1974இல் பரிபாலனசபை அமைப்பு வருவதுவரை தொண்டர்கள் சிலரது மேற்பார்வையில் நிர்வாகம் நடைபெற்றது. சிவத்திருபரமலிங்கையர் பூவேந்திரராசா அர்ச்சகராகிய காலத்தில் பூதப்பிள்ளை ஆரூரையா தலைமையில் ஐவர் கொண்ட திருப்பணிச்சபை திருப்பணி வேலைகளைக் கவனித்தது. 1974இல் பூதப்பிள்ளை ஆரூரையா தலைமையில் பதினொருபேர் கொண்ட பரிபாலனசபை நிர்வாகத்தைப் பொறுப்பேற்றது. 1986.11.30 தொடக்கம் வல்லிபுரம் செனகரத்தினம் பரிபாலன சபைத் தலைமையை ஏற்றார். அவர் முயற்சி பாராட்டிற்குரியது. 1989ஆம் ஆண்டிலிருந்து திரு. திருநாவுக்கரசு இராசதுரை குடும்பத்தினர் நிர்வாகத்தைப் பொறுப்பேற்றுச் செவ்வனே நிர்வகித்து வருகின்றனர். இவர்களது தொண்டு பலரதும் பாராட்டுக்குரியதொன்றாகிறது.

## திருவூஞ்சற்பாடல் :

விழிசிட்டி பண்டிதர் வேலுப்பிள்ளை பொன்னம்பலவன் அவர்கள் ஆக்கமான திருவூஞ்சற்பாடலுண்டு. காப்புச்செய்யுளுடன் பதினொரு பாடல்களும் எச்சரீக்கை, பராக்கு பாடல்களும் இத்திருவூஞ்சலில் அடங்கியுள்ளன.

இந்த வரலாறு 1989இல் எழுதப்பட்டது.

உ
சிவமயம்

# பன்னாலை வல்லுவத்தை அருள்மிகு ஸ்ரீ கந்த ஞான வைரவர் திருவூஞ்சல்

விழிசிட்டி
பண்டிதர் வே. பொன்னம்பலவன்

## காப்பு

சீரோங்கு தெல்லிநகர் மேல்பா லாய
திருவோங்கு வல்லுவத்தைக் கோயில் மேய
ஏரோங்கு கருங் குதிரை ஏறுந் தேவாம்
எழில்மேய மூவிலைவேல் ஏந்து கையான்
வாரோங்கு தலைமாலை மார்பி லாலும்
வல்லுவத்தை வைரவர்மேல் ஊஞ்சல் பாடக்
காரோங்கும் ஒருதந்தி வதன மேயக்
கணபதிதன் இருசரணங் காப்ப தாமே.

## நூல்

ஓதரிய மறைநான்குங் கால்க ளாக
உயர்வேத அங்கமிளிர் விட்ட மாக
ஏதமிலாக் கலைகளெலாங் கயிற தாக
ஏத்துமுயர் பிரணவம்பொற் பலகை யாக
வேதமுறு சாகையெலாம் பொறிக ளாக
வேய்ந்திடுபொன் னூஞ்சல்மிசை விழைவோ டேறித்
தீதகலும் வல்லுவத்தைப் பதியில் மேய
திறல்மேய வைரவரே ஆடீ ரூஞ்சல் 1

வெண்படிகத் தாலிலகு தூண்கள் நாட்டி
மிளிர்பவளத் தாலொளிசேர் வளைகள் நீட்டி
எண்பெறுநல் மரகதத்தால் விட்ட மோட்டி
எழில்சேரும் முத்துவடக் கயிறு மாட்டி
தண்மையுறு மாமணியாற் பலகை பூட்டி
தகைபெறச்செய் யூஞ்சல்மிசை தயையோ டேறி
வண்மையுள்ள வல்லுவத்தைப் பதியில் மேய
வடிசூல வைரவரே ஆடீ ரூஞ்சல் 2

சந்திரனும் சூரியனும் குடைகள் தாங்கச்
சலதியுறை நீர்தூவுந் துருத்தி யேந்த
இந்திரனுஞ் சோமனுமார் கவரி வீச
எழில் நிருதி ஆலவட்டம் இனிதி னோச்ச
அந்தகனல் வேத்திரக்கை அமைதி காட்ட
அருமறையோர் வேதவொலி ஆசி கூற
இந்துநுதல் அரம்பையர்கள் நடன மாட
எழிலாரும் வைரவரே ஆடீ ரூஞ்சல். 3

அன்பினொடும் அடியவர்நின் அழகார் கோயில்
அடைந்தினிய மலர்தூவி அர்ச்சித் தென்றும்
என்பினொடு மனமுமனல் மெழுக தாக
ஏத்தொடுநின் னடிதனில்வீழ்ந் திறைஞ்சல் கண்டு
இன்பமுடன் அவர்துன்பம் எல்லாம் போக்கி
இகபரபோ கம்அருளும் ஏக மூர்த்தி
மின்பொலியும் வல்லுவத்தைப் பதியில் மேய
விறல் சேரும் வைரவரே ஆடீ ரூஞ்சல் 4

வானவர்கள் அகந்தைகளை வலிய தேவே
வஞ்சமிலார் துயர்களையும் வண்மை மேய
பானல்விழி உமையருளும் பாலன் நீயே
பரவைநிகர் வினைகளையும் பகவன் நீயே
தேனமருங் கொன்றைமலர் மாலை சூடி
திருக்கரத்தில் இறுதிபுரி சூல வேலாய்
கானமயில் வருமுருகன் துணைவன் நீயே
கணபதியின் பின்னவனே ஆடீரூஞ்சல். 5

பண்ணிசைகள் பாடகர்கள் கதியிற் பாட
பரவைநிகர் முனிவரர் பல்லாண்டு பாட
தண்ணுமையும் பேரிகையும் முகிலின் விம்ம
தாங்குகுழல் வீணையிசை தான தாக
விண்ணவர்நேர் வேதியர்கள் வேத மோத
விழையெழில்சேர் அரிவையர்கள் கீதம் பாட
மண்ணியபொன் னூஞ்சல்மிசை மகிழ்வி னேறி
வல்லுவத்தை வைரவரே ஆடீ ரூஞ்சல். 6

உலகினுள்ளார் செவ்வொளிசேர் உருவங் காணில்
உள்ளமிக வெருவுவரென் றோர்ந்து நிலக்
கலைமணவேய் கஞ்சுகமார் கருணை மூர்த்தி
கண்ணியவர் பயம் நீக்கிக் காக்குந் தீரா
அலகையெலாம் புனல்நீழல் அணுகா வண்ணம்
ஆஞ்ஞைபுரிந் தாருயிர்கட் கிரங்கு மாதி
உலகுபுகழ் வல்லுவத்தைப் பதியின் மேய
உயர்ஞான வைரவரே ஆடீ ரூஞ்சல் 7

செக்கர்புரை சடையுடனே பிறையு மாடத்
திருமார்பில் உபவீதந் திரைபோ லாடத்
தொக்கதலை மாலையணி அரவு மாடத்
துய்யகர வாளினொடு சூல மாடப்
பக்கமுறு மடியவர்கள் களிகொண் டோடப்
பார்வையினால் அடியவர்கள் வினைவிட்டோட
நக்கனென வல்லுவத்தைப் பதியில் மேய
நலமாகும் வைரவரே ஆடீ ரூஞ்சல் 8

ஓங்குநுதல் விழியுடையாய் ஆடீ ரூஞ்சல்
ஒருகையொளிர் தமருகத்தாய் ஆடீ ரூஞ்சல்
தாங்குகர சூலமுளாய் ஆடீ ரூஞ்சல்
சதகோடி தோற்றமுளாய் ஆடீ ரூஞ்சல்
தேங்குநதி புனைசடையாய் ஆடீ ரூஞ்சல்
சிரமாலை அசைமார்பா ஆடீ ரூஞ்சல்
பாங்குபெறு வல்லுவத்தைப் பதியின் மேய
பழமைபெறு வைரவரே ஆடீ ரூஞ்சல் 9.

நான்மறைநேர் அந்தணர்ஆன் இனமும் வாழி
நாவில்வேத நெறியுலகில் நண்ணி வாழி
வான்முகில்கள் மழைபொழிந்து மண்ணோர் வாழி
மன்னர்செங் கோலுலகில் மாண்பாய் வாழி
தேன்மொழியார் நிறையினொடு செல்வம் வாழி
தேவர்விழாப் பூசைசெய்து தேசம் வாழி
பான்மைதெரி வல்லுவத்தைப் பதியோர் வாழி
பரியேறு வைரவரும் வாழி வாழி. 10.

## எச்சரீக்கை

சீரார் மறைமுதலே அருட்டேவே எச்சரீக்கை
செங்கா லனநடையா ளுமைசேயே எச்சரீக்கை
ஏரா ரயிற்சூலக் கரத்திறைவா எச்சரீக்கை
இபமாமுகன் மகிழ்கூர்தரு மிளையோய் எச்சரீக்கை

## பராக்கு

திருமருவு பரியேறும் செல்வா பராக்கு
திங்களொடு கங்கையணி தேவா பராக்கு
பருமருவு மலர்க்கொன்றைத் தாராய் பராக்கு
வானவர்கள் சிரமாலை வாகாய் பராக்கு.

உ
சிவமயம்

# அட்டமட்டை அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயம்,

கலாபூஷணம் பண்டிதர் சி. அப்புத்துரை.

## ஆலயப்பதி :

கீரிமலைச் சந்தியிலிருந்து தெற்கு நோக்கிக் கருகம்பனை, பன்னாலை, பன்னாலை ஊடாகத் தெல்லிப்பளை செல்லும் வீதியிற் கீரிமலையிலிருந்து சுமார் ஒரு கிலோமீற்றர் தொலைவில் உள்ள மயிலங்கூடற் சந்தியிலிருந்து கிழக்கு நோக்கி 50 மீற்றர் தொலைவில் வீதியின் தென்மருங்கில் அட்டமட்டை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தைத் தரிசிக்க முடியும்.

## தோற்றம் :

இந்த இடத்தில் வாழ்ந்த திருமதி நாகமுத்து செல்வி என்பவரது உணர்வில் ஏற்பட்டதொரு தாக்கம் அம்மன் ஆலயத் தோற்றத்திற்கு வித்தாகியது. அம்பாள் வயப்பட்ட அந்த அம்மையின் விருப்பிற்கமைய 1940இல் ஓலைக்குடிசையொன்றமைத்து அதனுள்ளே கருங்கல் ஒன்றை வைத்து அம்மையாகப் பாவனை செய்து வழிபட்டு வந்தனர்.

## அபிவிருத்தி :

காலப்போக்கில் புனரமைப்பு வேலைகள் நடைபெற்றன. தவசி முருகன், மகன் நாகமுத்து, சகோதரர்கள் என்போர் இப்பணியிற் கலந்துகொண்டனர். கர்ப்பக்கிருகம் சீமேந்தினாற் கட்டப்பட்டு ஓட்டினால் வேயப்பட்டது. 1972இல் அர்த்தமண்டபம் மகா மண்டபம் என்பனவும் சீமேந்தினாற் கட்டப்பட்டு ஓட்டினால் வேயப்பட்டன. மகா மண்டபத்தின் வட கிழக்கில் 19 அடி உயரமான மணிக்கோபுரம் அமைந்துளது. தெற்கில் மடைப்பள்ளி உளது. உள்வீதியையும் வெளி வீதியையும் பிரித்துக்காட்டக்

கம்பிவேலி அமைக்கப்பட்டுளது. கிழக்கு நோக்கிய இந்த ஆலய மூலமூர்த்தி அம்பாள் கருங்கல் விக்கிரகம். பரிவாரமூர்த்தி நாகதம்பிரான் வடக்குப்புறம், உள்வீதியில், ஒரு சிறிய அமைப்பில் எழுந்தருளியுள்ளார். ஐம்பொன்னாலாய உற்சவமூர்த்தியும் உண்டு.

**நித்திய நைமித்தியம் :**

தினமும் ஒருவேளை பூசை நடைபெறுகிறது. வருடப்பிறப்பு, சித்திரைப்பூரணை, வைகாசி விசாகம், ஆடிப்பூரம், ஐப்பசி வெள்ளி, நவராத்திரி, தீபாவளி, திருவெம்பாவை, தைப்பொங்கல், தைப்பூசம், சிவராத்திரி ஆகிய தினங்களில் விசேட வழிபாடு உண்டு. திருவிழாக்களின் போது சிறுவர் நிகழ்ச்சிகள் இடம்பெறுவது வழக்கம். வருடப்பிறப்பு, விஜயதசமி திருவாதிரை நாள்களில் அம்பாள் வீதியுலா வருவார்.

குறிப்பு : ஆரம்பகாலத்திருந்து ஆலயம் பொதுச்சொத்தாக உளது. சின்னட்டியன் இராசதுரை என்பவரைத் தலைவராகவும் எண்மரை உறுப்பினராகவுங் கொண்ட பரிபாலனசபை உண்டு. கணபதி சூரியகுமார் அர்ச்சகராகப் பணிபுரிகின்றார். ஆலயத்திற் கென ஐந்தரைப்பரப்பு நிலம் உண்டு. முருகன் முத்தர், முருகன் கந்தர் என்போர் உபகரித்த சிங்க வாகனமும் உண்டு.

பரிபாலச சபைத் தலைவர் சி. இராசதுரை, ஓய்வுபெற்ற அதிபர் வை. பொன்னையா என்போர் தந்த தகவல்களுடன் நேரிற் பார்த்தறிந்தவற்றையுஞ் சேர்த்து 1988இல் எழுதப்பட்டது இக் கட்டுரை.

உ
சிவமயம்

# பன்னாலை அருள்மிகு புதுப்பிள்ளையார் ஆலயம்,

கலாபூஷணம் பண்டிதர் சி. அப்புத்துரை.

**பதி :**

பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலய மேற்கு வீதியின் மருங்கே வடக்கு நோக்கிச் செல்லும் ஒழுங்கையில், வரத்தலம் விநாயகர் ஆலயத்திருந்து சுமார் 60 மீற்றர் தொலைவில் ஒழுங்கையின் மேற்குப்புறத்தில் பன்னாலை புதுப்பிள்ளையார் ஆலயத்தைக் கண்டு வழிபட முடியும்.

**தோற்றம் :**

குழந்தைப் பேறுற்ற பெண்மணி ஒருத்தி பதினாறாம் நாள் ஆசௌசத்தைக் கழித்துக் கொண்டு கோயிலுக்கு வந்தவேளை, வரத்தலம் விநாயகராலயக் குரு தாயையும் குழந்தையையும் கோயிலுள்ளே ஏற்று விசேட பூசைசெய்து பிரசாதம் வழங்கினார்கள் பணம் எதையும் சாதிக்கும் என்பதற்குச் சான்றான நிகழ்ச்சி இது. இச்செயலினால் வெறுப்படைந்த மக்களும், அக்கால ஆலய உரிமையாளர்களுள் ஒருவராய பிரம்மஸ்ரீ கார்த்திகேயக் குருக்கள் பரமசாமி ஐயர் அவர்களும், தங்கள் ஒழுங்கான வழிபாட்டிற்குப் புனிதமான ஓரிடம் வேண்டுமென்னுங் கருத்துடன் இந்த இடத்தில் ஒரு விநாயகராலயத்தை அமைத்தனர்.

**வளர்ச்சி :**

இப்பொழுது ஆலயம் அமைந்துள்ள இடத்தில் நின்றதொரு வில்வ மரத்தடியிற் கட்டப்பட்ட கொட்டகையில், கருங்கல்லிற் செதுக்கப்பட்ட விநாயகர் விக்கிரகத்தை யந்திரத்தாபனஞ் செய்து பிரதிட்டை செய்தனர். இச்செயல் 1935க்கும் 1940க்கும் இடைப்பட்ட காலத்தில் நடைபெற்றதாக அறிகின்றோம். இவ்வகை இடம்பெற்ற முதற்கும்பாபிஷேக தலைமைக் குருவாகச் சிவஸ்ரீ மார்க்கண்டேயக் குருக்கள் விஸ்வநாதக்

குருக்கள் பணிபுரிந்துள்ளார்கள். பிரம்மஸ்ரீ கார்த்திகேயக் குருக்கள் பரமசாமி ஐயர் தினமும் ஒருவேளை பூசை செய்து வந்தார்கள். காலப் போக்கிற் கொட்டில் அழிந்தது. பிரம்மஸ்ரீ பரமசாமி ஐயரும் சிவபதமடைந்தார்கள். அவர் புதல்வர் சிவஸ்ரீ பஞ்சாட்சரக் குருக்கள், கர்ப்பக்கிருகத்தினைச் சீமேந்தினாற் கட்டி ஓலையால் வேய்ந்து கதவும் போட்டுத் தினப்பூசையைத் தொடர்ந்தார்கள். ஸ்ரீ பஞ்சாட்சரக் குருக்கள் சிவபதமடைய, பிரம்ம ஸ்ரீ பரமசாமி ஐயர் சிவானந்தையர் 1978ஆம் ஆண்டளவில் புனரமைப்பு வேலையிற் கவனஞ் செலுத்தினார். கர்ப்பக்கிருகத்தூபி சீமேந்தினாற் கட்டப்பட்டது. அர்த்தமண்டபமும் சீமேந்தினாற் கட்டப்பட்டு ஓடு போடப்பட்டது. அளவெட்டி கந்தையா முருகையா என்பவர் தூபி அமைப்பு ஸ்தபதியாகப் பணிபுரிந்துள்ளார். புத்தூர் சிவஸ்ரீ வைத்தியநாதக் குருக்கள் அவர்களே தூபி அபிஷேகத்தையும் நிறைவு செய்தார்கள்.

**நிறைவு :**

ஸ்ரீ சிவானந்தையர் அவர்களே தினமும் பூசை செய்து வருகின்றார்கள். ஸ்ரீ பரமசாமி ஐயரின் பிள்ளைகள் ஐவருக்கும் இந்த ஆலயத்தில் உரிமை உண்டு. தலவிருட்சம் வில்வம். ஒருபரப்புக்காணி இந்த ஆலயத்திற்குரியது. கிழக்கு நோக்கிய இந்த ஆலய வழிபாட்டாளர்கள் மெல்ல மெல்லத் தங்கள் முன்னைய ஆலயத்திற்குச் செல்லத் தொடங்கியமையால் இந்த ஆலயத்திற்கு வருவோர் தொகை குன்றியது. இப்போது புதுப்பிள்ளையாரிடத்தும் மக்கள் கவனம் திரும்பிக்கொண்டிருக்கின்றது. வழிபடுவோர் இப்போதைய நிகழ்ச்சிகளிற் கலந்துகொள்கின்றனர். நைமித்திய விழாக்கள் எதுவும் இங்கு நடப்பதில்லை.

சித்தாந்த வித்தகர் வி. சங்கரப்பிள்ளை, ஓய்வுபெற்ற அதிபர் வை. பொன்னையா, ஓய்வுபெற்ற அதிபர் பிரம்மஸ்ரீ ப. சிவானந்தையர் என்போர் தந்த செய்திகளுடன் நேரிற் கண்டறிந்தவையும் தொகுத்து 1988இல் எழுதப்பட்டது.

2004.06.06 தாரண வருடம் வைகாசி மாதம் 25ஆம் நாள் திங்கட்கிழமை சிவஸ்ரீ சோதிரத்தினக் குருக்கள் தலைமையில் நூதனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

# பன்னாலையில் குறியீடு பெறுவோர்

சித்தர்கள்

மகான்கள்

சமயப்பெரியார்கள்

அதிபர்கள்

வைத்தியர்கள்

பொறியியலாளர்கள்

கல்வியியலாளர்கள்

கலைஞர்கள்

சட்டத்தரணிகள்

அஞ்சலக அதிபர்கள்

நிர்வாகிகள்

பன்னாலை வாழ் ஏனைய பட்டதாரிகள்

# சித்தர்கள்

1. **பன்னாலைச் சின்னாச்சி**
   திருநாவுக்கரசு உதயகுமார்

2. **மகான் முத்துரிஷி**
   திருநாவுக்கரசு உதயகுமார்

3. **சிவஸ்ரீ பரமசாமி மஞ்சையர்**

உ
சிவமயம்

# பன்னாலைச் சின்னாச்சி

**கதை - 01**

ஒரு நாள் நண்பகல் பன்னிரண்டு மணி இருக்கும். சுவாமிகளின் சந்நிதானத்தில் சிலர் இருக்கும் போது எங்கோ ஒரு கிராமத்தில் இருந்து ஒரு வயது சென்ற பெண்மணி அங்கு வந்தாள். ஏழைக் குடும்பத்துப் பெண் போலத் தோன்றியது. வரும்போது ஒரு பெரிய பலாப்பழத்தைத் தனது, தலை மேற் சுமந்து கொண்டு வந்து, சுவாமியின் முன் வைத்துவிட்டு வந்த களைப்புத் தோன்ற அப்பாடி என்று பெருமூச்சு விட்டுக்கொண்டு சுவாமிகளின் முன்பு உட்கார்ந்தாள் இதையெல்லாம் ஒன்றும் பேசாது பார்த்துக்கொண்டு இருந்த சுவாமி, பெண்மணியை நோக்கி

இஞ்சாய், உனக்கென்ன பைத்தியமா? இந்த வெய்யிலுக்கை இவ்வளவு தூரதம் நடந்து இந்தப் பெரிய பலாப்பழத்தையும் சுமந்துகொண்டு ஏன் வந்தநீ என்றார்.

அது நானெல்லோ கொண்டு வந்தது. நீ ஏன் போட்டடிக்கிறாய் என்ரை ஆசைக்கு நான் கொண்டு. வந்தன். அதுக்கு உனக்கு என்ன? நீ ஒன்றும் எனக்குத் தரவேண்டாம் நான் கொஞ்ச நேரம் இருந்து ஆறிக்கொண்டு போறன் என்றாள் அந்தக் கிராமியப் பெண்.

நீ நல்லாய் இருந்திட்டுப் போ என்று சுவாமி கூறிவிட்டு எங்களைப் பார்த்து

பார்த்தியளா? இந்த மனுஷி என்ரை வாயை அடக்கியதை என்றார்.

சிறிது நேரத்தின் பின் அந்தப் பெண் எழுந்து நான் அப்ப போட்டு வாறன் நீ மகாராசனாய் இரு நான் வாறன் என்று முணுமுணுத்துக்கொண்டு வெளியேறினாள் அந்தப் பெண் வெளியேறிய பின் சுவாமி எங்களைப் பார்த்துச் சொன்னார்.

இந்த மனுஷி யார் தெரியுமா? இவள் தான் பன்னாலைச் சின்னாச்சி; நான் இங்கை இருந்து நினைக்க அதை அவள் அங்கை இருந்து கொண்டு வருவாள். அவளுக்குக்

கொடுக்கிறதிற்கு என்னிடம் ஒன்றுமில்லை. அவளுக்கு ஒன்றுமே வேண்டாம். மகாராசி வீடும் வேண்டா விறலினர் என்று பாடல் இருப்பது இவளைக் குறித்தது என்று தான் நான் சொல்லுவேன் என்றார்.

யோகர் சுவாமிகள் பற்றி என் நெஞ்சில் இடம்கொண்ட பெரியார் என்ற தலைப்பில் திரு. மு. வைரமுத்து அவர்கள் எழுதிய நூலில் இருந்து இந்நூலை வெளியிட்டவர் தெல்லிப்பளை மகாயனாக் கல்லூரித் தலைமைத் தமிழ் ஆசான் தொல்புரம் புலவர் நா. சிவபாதசுந்தரனார் அவர்கள்.

**கதை - 02**

ஒரு நாள் காலையில் சுவாமிகளின் சந்நிதானத்தில் நாங்கள் சிலர் சுவாமியைத் தரிசித்துவிட்டுப் பஜனை செய்துகொண்டு இருந்தோம் சுவாமி கண்களை மூடிக்கொண்டு தியானத்தில் இருந்தார். காலை 9.00 மணி இருக்கும் நாங்கள் வெளியேறுவதற்காக சுவாமியின் பாதங்களில் விழுந்து வணங்கி எழுந்தோம் தனது மூடிஇருந்த கண்களைத் திறந்து சுவாமிகள் எங்களைப் பார்த்து

பசியோடை ஏன் போறியள் பன்னாலை சின்னாச்சி பாலப்பம் கொண்டு வாறா இருங்கள் சாப்பிட்டுப் போகலாம் என்றார். நாங்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு நின்றோம். சுவாமி எங்களைப் பார்த்து

சுவாமிக்குக் கொண்டு வாற அப்பத்தை எங்கள் எட்டுப்பேருக்கு எப்படித் தரப்போறா என்றா யோசிக்கிறீர்கள்? சின்னாச்சி ஒரு பொல்லாத ஆள்; அவளுக்குத் தெரியும் நீங்கள் எட்டு பேர் இங்கு இருக்கிறியள் என்று பத்துப் பேருக்குக் காணக்கூடிய அப்பம் வருகிறது. நீங்கள் எட்டுப்பேர் நான், வீமன் பத்து பேருக்கும் கண்டு மிஞ்சும் என்றார். வீமன் என்று சுவாமி குறிப்பிட்டது சுவாமியின் ஆச்சிரம வாசலில் படுத்து இருக்கும் ஒரு செ[illegible] நாயை. ஒரு பெண் தலையில் ஒரு பெரிய பெட்டியைச் சுமந்துகொண்டு வந்து சுவாமியின் முன்னால் வைத்துவிட்டுத் தாவணித் தலைப்பால் தனது முகம், கழுத்து எங்கும் வடிந்து கொண்டு இருந்த வியர்வையைத்

துடைத்துக்கொண்டு இருந்தாள். சிறிது நேரம் அவள் களைப்பு ஆறியபின் சுவாமி அப்பெண்ணைப் பார்த்து

உதென்ன கொண்டு வந்தநி என்றார்.

நீ தானே பாலப்பம் வேணும் என்றாய் கொண்டு வந்தன் பேந்து ஏன் பூராயம் பேசிறாய்

என்று அந்தப் பெண் சொன்னாள்

நீ எனக்கெண்டு கொண்டு வந்து இருப்பாய் இங்கை எத்தனை பேர் இருக்கினை பார் இவை எல்லாருக்கும் அதை எப்படிக்கொடுக்கிறது சும்மா எடுத்துக்கொண்டு போ என்று சுவாமி சொல்ல.

அந்த வில்லண்டம் எல்லாம் உனக்கு ஏன் நீ எல்லோருக்கும் எடுத்துக்கொடு எல்லாரும் சாப்பிடட்டும் என்று சொல்லி விட்டு அந்தப் பெண் போய் ஆச்சிரமத்தின் தாழ்வாரத்தில் ஒரு பக்கத்தில் படுத்து உறங்கிவிட்டாள்.

நாங்கள் எட்டுப்பேரும் சுவாமியும் வயிறார உண்டோம். நாங்கள் உண்டபின் மிகுதியாக இருந்த அப்பத்தை வீமனுக்குப் போடும்படி சுவாமி சொல்ல அப்படியே செய்தோம் சுவாமி எங்களைப் பார்த்துச் சொன்னார்.

இப்ப உங்களுக்கு விளங்கிறதா யார் சுவாமி என்று? நீங்கள் சும்மா என்னட்டை வந்து நேரத்தை வீணாக்கிறியள்; சின்னாச்சியின் கால்த்தூசிக்குக் காணாதுநான். சின்னாச்சியிட்டை இருந்து உங்களால் எதையும் பெற முடியாது என்றார்.

*ப. இராசசேகரம் அவர்கள் எழுதிய யோகர் சுவாமி எனும் நூலில் இருந்து.*

**கதை - 3**

ஒருநாள் சுவாமி யாழ்ப்பாணப் பட்டினத்திலிருந்த எனது கடைக்கு வந்தார் ஒரு கதிரையில் அவரை அமரவைத்தேன். மழை தொடங்கியது. கொட்டு கொட்டென்று

கொட்டியது. றோட்டு ஒரு நாலு அங்குல வெள்ளத்தில் மூழ்கியது. அந்த மழையில் நனைந்தபடி காவித்துணியில் தைக்கப்பட்ட முழு அங்கியை அணிந்து ஒருவர் தெருவில் போய்க்கொண்டு இருந்தார். சுவாமி அவரைக் கண்டதும் கடையில் இருந்து கொட்டும் மழையில் றோட்டுக்குப் போய் வெள்ளத்தில் மூழ்கியிருந்த றோட்டில் அவரின் காலில் விழுந்து வணங்கினார். அவரோ சுவாமியின் தலை மயிரில் பிடித்து மேலுக்கு இழுத்துக்கொண்டு எழும்படா விசரா நான் யாரடா நீ விழுந்து கும்பிட சின்னாச்சி இப்ப வருவாள் அவளைக் கும்பிடடா. அவள் உனக்கு எல்லாம் தருவாள் என்று சொல்லிச் சுவாமியுடன் கடைக்குள் வந்து அமர்ந்திருந்து இருவரும் ஏதோ பேசிக்கொண்டு இருந்தனர். ஒரு கால் மணி நேரத்தில் ஒரு மனுஷி மழையில் நனைந்துதோய்ந்தபடி ஒரு மூடு பெட்டியுடன் கடைக்குள் வந்து சுவாமியைப் பார்த்து

> 'உன்னை எங்கையெல்லாம் தேடிறது? காலமை ஏழு மணிக்கு வீட்டில் இருந்து வெளிக்கிட்டனான் உன்னைத் தேசாதிதேசமெல்லாம் தேடிக்கொண்டு வந்து இப்பத்தான் உன்னைக் கண்டேன். இஞ்சை என்ன செய்துகொண்டு இருக்கிறாய்'

என்று கேட்டுக் கொண்டு தனது கண்களை அங்குமிங்கும் திருப்பிப் பார்க்கக் காவி அங்கி அணிந்தவரைக் கண்டாள். கண்டதும்

> 'உந்த விசரனும் இங்கை வந்திட்டானோ. அப்ப உங்கடை பாடு கொண்டாட்டம் தான் நீங்கள் கொண்டாடுங்கள். நான் போறன் பெட்டிக்கை கிடக்கிறதை எடு'

என்று கூறிவிட்டு மழையில் நனைந்தபடி அந்தப் பெண் சென்றுவிட்டா. அவ சென்றதும் சுவாமியைப் பார்த்து மற்றவர்

> பசி வயிற்றைப் பிடுங்குது பெட்டியைத் திற.
>
> சாப்பிடுவம்.

என்றார். சுவாமி பெட்டியைத் திறந்து பழுத்துச் சருகாகும் நிலையில் இருந்த வழையிலைத் துண்டுகள் மூன்றைப் பெட்டிக்குள் இருந்து எடுத்து மேசையில் மூன்று இடங்களில்

வைத்தார். பெட்டிக்குள் இருந்த தோசைகளை எடுத்து ஒவ்வொரு இலையிலும் இவ்விரண்டு வைத்தார். வைத்துவிட்டு மற்றவரைப் பார்க்க அவர்

'கீழே ஒரு தோசையிலை சம்பல் மடித்து வைத்திருக்கிறேன்' என்றார் அந்தச் சம்பலையும் சுவாமி எடுத்து ஒவ்வொரு இலையிலும் கொஞ்சம் வைத்துவிட்டு என்னைப் பார்த்து

'வாடா தம்பி சாப்பிடுவம்' என்றார் நான் தயங்க மற்றவர் சின்னாச்சி மூன்று பேருக்கும்தான் தோசை கொண்டுவந்தவள் வந்து சாப்பிடு என்றதும் மூன்று பேரும் சாப்பிட இலையிலிருந்த தோசை முடிய, பெட்டிக்குள் இருந்து தோசையை எடுத்து சுவாமி மீண்டும் பரிமாறினார். மூவரும் நன்கு சாப்பிட்டோம். சாப்பிட்டு முடிந்ததும் சுவாமி என்னைப் பார்த்து

> 'எங்களுக்கு நேரமாச்சு; நாங்கள் போகப்போறம் பெட்டிக்குள்ளை இரண்டு தோசை இருக்கு. கணபதி வருவான் குடு. பெட்டியை நாளைக்கு அங்கை கொண்டு வா.'

என்று சொல்லிவிட்டு இருவரும் மழையில் நனைந்தபடி ஒருவர் தோழில் ஒருவர் கைபோட்டபடி சென்றுவிட்டனர். அவர்கள் சென்றதும் பெட்டிக்குள் இருந்த தோசையைப் பார்த்தேன். இருந்தது இரண்டு தோசைதான். பெட்டிக்குள் இருந்த தோசையை எண்ணிப் பார்க்காது சுவாமி எப்படி இரண்டு தோசை இருக்கிறது. என்று சொன்னார்? அதிலும் எனக்கு வியப்புத் தந்தது கொட்டும் மழையில் பனைஓலை மூடிப் பெட்டிக்குள் வைத்துக்கொண்டு வந்த தோசைகள் நனையாது இளகிப்போகாது வெண் சூட்டுடன் எப்படி இருந்தன என்பதுவே. வெகுநாட்களுக்குப் பின்னர்தான் காவி அங்கியுடன் வந்தவர் முத்துரிசியாலும் சுவாமியாலும் குருவாக மதிக்கப்படும் பன்னாலைச் சின்னாச்சி அம்மையார் என்றும் நான் அறிந்துகொண்டது.

ப. இராசசேகரம் எழுதிய யோகர் சுவாமி எனும் நூலில் இருப்பது.

இந்த மூன்று குறிப்புக்கள் மட்டும் தான் பன்னாலைச்சின்னாச்சி பற்றிக் கிடைத்தவை.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி ஸ்தாபக அத்தியார் அருணாசலம் என்பவர். இவர் வருமானவரி அலுவலகத்துக்கு அனுப்பியிருந்த இவரின் சொத்து விபரத்தில்

இவரது ஒரு காணி பன்னாலைச் சின்னாச்சி வளவு என்று இருப்பதைக் கண்டேன். பன்னாலைச் சின்னாச்சி பற்றி வாசித்திருக்காதவையும் பன்னாலையில் சின்னாச்சி பற்றி எந்தத் தகவலும் என்னால் பெறமுடியாது இருந்ததையும் எண்ணிப்பார்த்தேன். அருணாசலம் அவர்களை அணுகி ஏதாவது தகவல் பெறுவதற்காக முயற்சித்தேன் அருணாசலம் அவர்கள் என்னை அறியார். அவருக்கு அறிமுகமாய் இருந்த ஒருவர் என்னைக் கூட்டிச் சென்று நீர்வேலியில் அருணாசலம் அவர்களுக்கு அறிமுகம் செய்து எனது விருப்பத்தையும் கூறினார். இது நடந்தது 1954ம் ஆண்டு. அருணாசலம் அவர்கள் கூறியவை:

'இவரின் பெயர் சின்னாச்சிப்பிள்ளை; தெல்லிப்பழையில் உள்ள பன்னாலையைச் சேர்ந்தவர். நீர்வேலி கந்தையா என்பவர் இவரின் கணவர். இவர்களின் காணிதான் பன்னாலைச் சின்னாச்சி வளவு என்பது; இவர்கள் இருவரும் எவருக்கும் உதவி ஒத்தாசை செய்வதில் முன்னிற்பவர்கள். அதனால் நீர்வேலிக் கிராமத்தில் எல்லோராலும் மதிக்கப்பட்டு வந்தனர் இவர்களுக்குப் பிள்ளைகள் இல்லை; கந்தையா இறந்த பின் இவர் தனித்து வாழ்ந்து வந்தார். எவரிடமும் எதையும் கைநீட்டிப் பெறாமல் சுயமாக வாழ்ந்தவர். இவரிடமும் ஒரு காலத்தில் ஒரு சக்தி இருந்ததை அவதானிக்க முடிந்தது. ஆனால் அதை ஒருவரும் விளங்கிக் கொள்ள முடியவில்லை. பன்னாலை முத்தையா என்பவர் விசர்பிடித்துத் திரிந்தபோது ஒருநாள் நீர்வேலிக்கு வந்தார். நான் சின்னாச்சி வளவில் சின்னாச்சியுடன் கதைத்துக்கொண்டு நின்றேன். தெருவால் போன முத்தையர் சின்னாச்சியைக் கண்டதும் சின்னாச்சி நின்றிருந்த இடத்துக்கு ஓடிவந்து அவரின் காலில் விழுந்து கும்பிட்டார். உடனே சின்னாச்சி முத்தையரின் முகத்தில் இரண்டு பலத்த அடி கொடுத்து 'எழும்படா நான் ஆராட! நீ கும்பிடுவதற்கு எழும்பிப் போடா' என்று சப்தமிட்டார். ஐயரும் எழும்பிப் போய்விட்டார். இன்னொரு நாள் என்னுடைய வீட்டில் ஒரு கொண்டாட்டம் நடந்துகொண்டு இருந்தது. அங்கே வந்த சின்னாச்சி 'கனக்கக் குலுக்காதையுங்கோ. அழப்போறியள்' என்று என்னிடம் சொன்னா. எனக்குச் சரியான கோபம் வந்தது. 'ஏன் கோபிக்கிறாய் அருணாசலம் நான் பிறகு வாறன் மற்ற அலுவல்களைப் பார்க்க' என்று கூறிவிட்டுப் போய்விட்டா. இரண்டு மணி நேரத்தில்

எனது மகள் இறந்தசெய்தி வந்தது. இன்னொருநாள் ஒரு பெட்டியைக் கொண்டுவந்து என்னிடம் தந்து 'இதுக்குள்ளை இருக்கிற அப்பத்தை நீ தின்' கொழும்புத்துறையான் அப்பம் கேட்பான் சுட்டனான்; உனக்கும் அதிலை தந்தன்' என்று சொல்லி விட்டுப்போய்விட்டா. ஒரு நாள் யோகர் சுவாமி வந்தார்; சின்னாச்சி வளவில் நிற்கும் வேப்பமர நிழலில் ஒரு கல்லின் மேல் அவர் இருக்கிறார். சின்னாச்சி இவரைத் திரும்பியும் பார்க்காமல் தன்னுடைய வேலைகளில் இருந்தா; நானும் என்ன நடக்குது என்று எனது காணிக்குள் நின்று கவனித்துக்கொண்டு இருந்தேன். திடீரென யோகர் சுவாமி இருந்த இடத்துக்கு வந்த சின்னாச்சி,

> 'உன்னை ஆரடா இங்கை வரச்சொன்னது. இங்கை வந்தால் நீ கேட்கிறதை நான் தருவேன் என்று நினைக்கிறியோ. இங்கை வாரதை; விட்டிட்டு முத்தையரின் காலிலை விழடா; அவன் தன்னட்டை இருக்கிற எல்லாத்தையும் உனக்குத் தான் தருவானடா; எனக்கும் ஆரிருக்கினம். நானும் ஒரு நாள் அவனுக்குத்தான் குடுப்பன். அவனும் ஒருநாள் உன்னட்டைத் தந்துவிட்டுத்தான் போவான் என்றா.

இன்னொரு நாள் திடீரென எனது வீட்டுக்கு வந்தா இங்கை என்னோடை வாடா என்று என்னைக் கூட்டிக்கொண்டு போய் இப்போ எனது பள்ளிக்கூடம் இருக்கும் காணிக்குள் இரண்டு மூன்று இடங்களில் நிலத்தில் ஏதோ கீறினா; இந்தக் காணிக்குள்ளே ஒரு நல்ல பள்ளிக்கூடம் வரப்போகிறது. நீதான் அதைக் கட்டப்போறாய்; காசுக்கு யோசிக்காதை, எல்லாம் தானாய் வரும். அதைப் பார்க்க நான் இருக்கமாட்டேன்' என்றா நான் பள்ளிக்கூடம் கட்டுவதென்பதை என்ரை காலத்தில் இது நடந்தது; அவசொன்னது போலப் பள்ளிக்கூடம் கட்டிய காலத்தில் அவ இல்லை.

இன்னொரு நாள் என்னிடம் வந்து ஒரு உறுதியைத் தந்து இது என்ரை காணி உறுதி; பிறக்கிறாசியிட்டை இதைக்கொண்டுபோய் இந்தக் காணியை நான் உனக்கு எழுதித்தந்துவிட்டதாக எழுதிக்கொண்டு பிறக்கிறாசியைக் கூட்டிக்கொண்டு வா; நான் கையடையாளம் இட என்று சொன்னா. நான் இது எல்லாம் இப்போ என்று கேட்க

இன்னும் நாலு நாள்களில் நான் செத்துப்போவன்; அதற்கிடையில் இதைச் செய்ய வேணும்; என்ரை சவத்தைக் கொண்டுபோய் எரித்துப்போடு' என்றா; நாங்கள் பேசிக்கொண்டு இருக்கும் போது முத்தையா வந்தார். முத்தையர் விசர்மாறி அமைதியாக இருந்த காலம் அது. வந்த முத்தையா 'நல்ல ஒழுங்கு செய்து போட்டாய் சின்னாச்சி, நான் சும்மா வந்தனான் என்ன இருக்கு சாப்பிட' என்றார். சின்னாச்சி ஐயருக்குச் சாப்பாடு எடுப்பதற்கு வீட்டுக்குள்ளே போக ஐயர் என்னைப் பார்த்து நாளைக்கே எழுதி முடித்துப் போடுங்கள் மறந்திடப்படாது என்றார். முத்துரிஷி என்ற முத்தையர். என்னுடன் கதைத்து இதுவே முதலும் கடைசியுமாகும். நாங்கள் கதைத்துக்கொண்டு இருக்க ஒரு பெட்டியில் ஏதோ சாப்பாட்டுடன் வந்த சின்னாச்சி அதை ஐயரின் கையில் கொடுக்கும்போது அவனுக்கும் எல்லாம் தெரியும் என்றா. அவனுக்கும் என்று அவ குறிப்பிட்டது யோகர் சுவாமியை என்று நான் நினைக்கிறேன். அடுத்த நாள் மாலை 3 மணியளவில் எழுதிய உறுதியில் சின்னாச்சியின் கையடையாளம் இட்டு முடிந்தது. அதற்கு அடுத்த நாள் சின்னாச்சியில் ஒரு வித்தியாசம் தெரிந்தது. வாய்பிதற்றத் தொடங்க அவர் மகாராசன் அங்கை இருந்துகொண்டு சொல்லுறார் நான் செய்தது சரியாம். அவனுக்கும் பசிக்கிறது என்று அங்கையிருந்து நினைக்க நான் இங்கையிருந்து சாப்பாடு கொண்டு போறன். இந்த வளவுப்பழங்கள் எல்லாம் திண்டது அவன் தானே. பரதேசிப் பயல். இப்ப இங்கை வரமாட்டான். முத்தையன் வந்துவிட்டுப் போறான். இவனுக்குத்தான் வரமுடியவில்லை இப்படி ஒருநாள் முழுவதும் பிதற்றினா. அடுத்த நாள் அறிவு நினைவற்ற நிலை. அதற்கு அடுத்த நாள் காலை 6 மணியளவில் யோகர் சுவாமி வந்தார்; நேராக அவ படுத்திருந்த இடத்துக்குப் போனார். அங்கு நின்றிருந்த நாங்கள் சிலரும் உள்ளே போனோம். சின்னாச்சியின் கால்மாட்டில் சாஸ்டாங்கமாக விழுந்த யோகர் சுவாமியின் பாதங்களை இரண்டு கைகளினாலும் பிடித்துக்கொண்டிருக்க அவரின் கண்களில் இருந்து கண்ணீர் வடிந்து கொண்டு இருந்தது. சிறிது நேரத்தால் சுவாமிகள் எழுந்து நின்று கொண்டு எங்களைப் பார்த்து வழிவிட்டு நில்லுங்கள் முத்துரிஷி வருகிறார் என்றார். நாங்களும் விலகி நிற்கச் சிறிது நேரத்தில் முத்துரிஷி வந்தார். முத்துரிஷி நேராகச் சின்னச்சியின் தலை மாட்டுக்குப் போய் அருகில் நின்று கொண்டு எடியே சின்னாச்சி கண்ணை முழித்துப் பாராடி; கொழும்புத்துறையான் வந்து அழுதுகொண்டு நிக்கிறனடி; என்றார். சின்னாச்சியின் கண்கள் திறந்தன. ஐயரையும் சுவாமியையும்

மாறி மாறிப் பார்த்த சின்னாச்சி யோகர் சுவாமியை வரும்படி விரலை ஆட்டினார். சுவாமி அவரின் முகத்தடிக்குப் போனதும் நிலத்தில் இருந்து குனிந்து தனது முகத்தைச் சின்னாச்சியின் முகத்தருகே கொண்டு போகத் தனது நடுங்கும் கையால் சுவாமியின் தாடியைத் தடவி மகராசனாய் இரு என்றார். முத்துரிஷி அவரின் முகத்தடிக்குப் போகத் தனது நடுங்கும் ஒரு கையினால் முத்துரிஷியின் காலைத் தொட்டுத் தன்கண்ணில் ஒன்றினா. அவரின் கண்களில் நீர் நிறைந்தது. முத்துரிஷி குனிந்து உரத்த குரலில் சின்னாச்சி உனக்கு ஒருகுறையும் இல்லை. நான் உன்னோடை எப்பவும் பேசிக்கொண்டிருப்பேன் என்றார். நீ சொன்னால் சரிதான் எனச் சின்னாச்சி ஈனக்குரலில் முணுமுணுப்பது கேட்டது. அவரின் தலை ஒருபக்கம் சரிந்தது; அவவின் ஒரு கை முத்துரிஷியின் காலைத்தொட்டபடி இருக்க முத்துரிஷியும் அசையாது அப்படியே நின்று கொண்டிருந்தார். சிலநிமிடங்கள் செல்ல யோகர் சுவாமி முத்துரிஷியைத் தட்டி எல்லாம் முடிந்த காரியம் என்றார். முத்துரிஷி அப்பால் நகரச் சுவாமி என்னைப் பார்த்துச் செய்யவேண்டிய காரியங்களைச் செய்யுங்கள் என்று சொல்லிவிட்டு இருவரும் போய்விட்டனர். அடுத்த நாள் காலை சவத்தைச் சுடலைக்குக் கொண்டு போய்க் கிரியைகள் முடித்துக்கொள்ள வைக்கும் நேரம் அங்கு வந்த யோகர் சுவாமி சவத்தின் கால்மாட்டில் நின்று தேவாரங்கள் பாடிக்கொண்டிருக்க முத்துரிஷியும் வந்து சேர்ந்தார். வந்து முத்துரிஷி தலைமாட்டில் நின்று சவத்தைப் பார்த்துக்கொண்டு நின்றார். கால் மாட்டில் நின்ற யோகர் சுவாமி சின்னாச்சியின் கால்களைத் தனது கைகளால் தொட்டுத் தனது கண்களில் ஒற்றினார். தலைமாட்டில் நின்றிருந்த முத்துரிஷி சின்னாச்சியின் நெற்றியில் தனது கையால் தொட்டுக்கொண்டு உனக்கு ஒரு குறையும் இல்லையடி சின்னாச்சி என்றார். இப்படிக் கூறிவிட்டு என்னைப் பார்த்து ஆகட்டும் என்றார். நான் கொள்ளியை வைத்தேன் சுவாலை விட்டு எரியும் வரை இருவரும் நின்றிருந்தனர்.

எனக்கு அன்னம் இட்டகை வேகுதேயடா என்று யோகர் சுவாமி சொன்னார் முத்துரிஷி நீயாரடா அவள் யாரடா நான் யாரடா வாடா போவம் என்று சொல்லிக்கொண்டு தனது ஒரு கையை யோகர் சுவாமியின் தோழிற்போட யோகர் சுவாமியும் தனது ஒருகையை முத்துரிஷியின் கையில் போட்டுக்கொண்டு இருவரும் அங்கிருந்து போனார்கள். இதுதான் நான் அறிந்த சின்னாஞ்சியின் கதை.

**தகவல்த் தொகுப்பு - திருநாவுக்கரசு உதயகுமார்.**

உ
சிவமயம்

# மகான் முத்துரிஷி

யோகர் சுவாமிகளாலே கண்டுகொள்ளப்பட்டவர்; கௌரவிக்கப்பட்டவர்; முத்துரிஷி என்று பெயர் சூட்டப்பட்டவர் முத்துக்குமாரசுவாமிக் குருக்கள். அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் பன்னாலை வரத்தலம் விநாயகர் ஆலய அர்ச்சகரது மகளைத் திருமணஞ் செய்தவர். அதனால் கோவில் பூசனையில் அரைவாசிக்காலம் அவருக்காயது. ஊர்ப் புரோகிதத் தொடர்பும் கிடைத்தது.

நல்ல ஆங்கில மொழியறிவு பெற்றிருந்தவர் முத்துரிஷி. கிராம மக்கள் அவரை முத்தையர் என்றே அழைப்பர். சிறியதொரு பாடசாலைக் கட்டிடத்தை உருவாக்கி மாணவர்களுக்கு ஆரம்ப ஆங்கில அறிவை ஊட்டி வந்தார். இந்த முயற்சிக்காக எந்தவித ஊதியத்தையும் யாரிடமிருந்தும் அவர் பெற்றது கிடையாது. இந்தப் பாடசலையிற் படித்தவர்கள் பிற்காலத்தில் வைத்திய கலாநிதிகளாயும், நீதவான்களாயும், சட்டத்தரணிகளாயும் விளங்கினர் என்பது குறிப்பிடத்தக்கது. **பன்னாலையிலிருந்த ஒரேயொரு பாடசாலை** இதுதான் என்பது முக்கிய குறிப்பு.

முத்தையர் போக்கில் மாற்றம் ஏற்பட்டது. பூணூலை அறுத்தெறிந்தார். அந்தணர் கோலத்தைத் துறந்தார். காவி நிறத்திலான நீண்ட சட்டை அணியத் தொடங்கினார். உறவினரைத் துறந்தார். பற்றற்ற வாழ்வு அவருடையதாயிற்று. அந்த வேளைதான் யோகர் சுவாமிகளைச் சந்திக்க நேர்கிறது. **முத்துரிஷி என்ற நாமகரணமும் நிகழ்கின்றது.** முத்துரிஷி சித்துக்கள் பல நிறைந்த துறவியாகக் காட்சி தருகின்றார்.

திருசீச்சரம் சுப்பிரமணியர் கோயிலைக் கட்டுவித்தவர் முத்துரிஷி என்னுந் துறவியே. அந்த ஆலய அமைவிற்கான பணத்தை யாழ்ப்பாண வணிகர்களும் செட்டியார்களுமே வழங்கினர். முதலிற் சுப்பிரமணியரைத் தேரில் வலம் வரச் செய்த பெருமை முத்துரிஷி அவர்களையே சாரும்.

தெல்லிப்பளை பண்டத்தரிப்பு வீதியருகே பன்னாலை வயற்கரையில் சமாதியென்ற பெயரால் அமைந்துள்ள சிறிய கட்டிடம் முத்துரிஷி அமைத்தது. சிலவேளைகளில் அந்தக் கட்டிடத்துள்ளே துறவி நிட்டையில் இருந்துவிடுவார். சுமார் பத்து ஆண்டுகள் வரை அவர் இப்படி வாழ்ந்துள்ளார் என்று தெரிகிறது.

**தகவல்த் தொகுப்பு - திருநாவுக்கரசு உதயகுமார்.**

# மகான்கள்

1. **சேர் அம்பலவாணர் கனகசபை**
   திருமதி அமிர்தயோகேஸ்வரி முத்துக்குமாரசாமி

2. **நீதிபதி பூதப்பிள்ளை வைத்திலிங்கம்**
   திருமதி அமிர்தயோகேஸ்வரி முத்துக்குமாரசாமி

3. **BVS சிங்கம்**
   திருநாவுக்கரசு உதயகுமார்

4. **கனகசபைப்பிள்ளை ஸ்ரீசுந்தரமூர்த்தி (ஆரூரர்)**

5. **வித்துவான் சிவானந்தையர்**
   புலியூர்ப்புராண நூலாசிரியர் வரலாற்றிலிருந்து

உ
சிவமயம்

# சேர் அம்பலவாணர் கனகசபை

1856 - 1928



பன்னாலை அம்பலவாணர் மைந்தன் கனகசபை 1856இற் பிறந்தவர். உள்ளூரிலுள்ள பாடசாலையில் ஆரம்பக் கல்வி இடைநிலைக் கல்வி என்பவற்றை நிறைவு செய்துகொண்ட கனகசபை தமிழ் நாடு சென்று பச்சையப்பன் கல்லூரியில் உயர்தரக் கல்வியைத் தொடர்ந்து நிறைவு கண்டார்.

இலங்கை அரசாங்க சபையில் தமிழ் மக்களின் பிரதிநிதியாகவிருந்து சைவமும் தமிழும் விருத்தியடைய அயராது உழைத்தார். 1918இல் ஏற்பட்ட பெருவெள்ளப் பெருக்கில் யாழ்ப்பாணம் பாரிய விளைவுகளைச் சந்தித்தது. தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக் கட்டிடங்களெல்லாம் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டன. அந்தக் கல்லூரியைப் புனரமைக்க வேண்டி அரசினரின் உதவியைப் பெற்றுக்கொடுத்தவர் கனகசபை. தென்மராட்சிப் பகுதியில் குறிப்பாக எழுதுமட்டுவாள், சாவகச்சேரிப் பிரதேசங்களில் தமிழ்ப் பாடசாலைகளை ஆரம்பித்து வைக்கப் பெரிதும் உழைப்பு வழங்கினார். நன்றி மறவாத அப்பிரதேச மக்கள் அவர் ஆக்கிய பாடசாலைகளுக்கு அவர் பெயரையே சூட்டியுள்ளனர். அவர் பிறந்த பன்னாலையிலும் அவர் பெயரால் ஒரு பாடசாலை இயங்குகிறது.

அப்புக்காத்துப் பரீட்சையிற் திறமைச் சித்திபெற்ற கனகசபை அரசிற்கான சட்ட திட்டங்களை ஆக்குஞ் சபைக்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்கிக்கொண்டிருந்தார். ஆட்சியாளர் டொனமூர் இவர் செயற்றிறனை, நாட்டுப்பற்றைத் தமது அறிக்கையிற் குறிப்பிட்டுள்ளார். இவர் பெயராற் பன்னாலை இன்றும் ஒளிருகின்றது. அம்பலவாணர் கனசபை, அரசினரால் சேர் பட்டம் கொடுத்துக் கௌரவிக்கப்பட்டவர்.

அம்பலவாணர் கனகசபை ஒரு சைவசித்தாந்தி. **சிவம்பெருக்கும் வாழ்வு அவர் வாழ்வாக அமைந்தது.** திருமுறைகளிலும் சைவ சித்தாந்த சாத்திரங்களிலும் மிகுந்த புலமை கொண்டவராகிய அவர் முடிந்தவரை மற்றையோரும் அதைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென விரும்பினார். 1928இல் இவ்வுலக வாழ்வை நீத்தவர்.

தகவல் தந்தவர் : **திருமதி அமிர்த யோகேஸ்வரி முத்துக்குமாரசாமி.**

உ
சிவமயம்

# நீதிபதி பூதப்பிள்ளை வைத்திலிங்கம்

1872 - 1957

பன்னாலை சேர் கனகசபையின் மருமகன் இவர். 1872இல் பூதப்பிள்ளை மங்கையர்க்கரசி தம்பதியர்க்குத் தவப்புதல்வராகப் பிறந்தவர். ஆரம்பக் கல்வியைப் பரமேஸ்வரக் கல்லூரியிலும் இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் கற்றவர். யாழ்ப்பாணக் கல்லூரியிலிருந்து கல்கத்தாப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டதாரி மாணவனாகிக் கலைமாணிப் பட்டம் பெற்ற முதன் மாணவர் இவரே என்று கல்லூரியின் அதிபர் கல்லூரி விழாவிலே குறிப்பிட்ட செய்தி எமது நினைவுடனாக வேண்டியது.

இவர் அப்புக்காத்தாகப் பல ஆண்டுகள் பணிபுரிந்துள்ளார். அந்தவேளை அவர் வாதத் திறமையை பல நீதிபதிகளும் சட்டவல்லுநர்களும் பாராட்டியுள்ளனர். தொடர்ந்த சில மாதங்களுள் நீதிபதியாக நியமனம் பெற்ற இவர் பருத்தித்துறை, பாணந்துறை, மட்டக்களப்பு என்னுமிடங்களிற் பணியாற்றியுள்ளார். தமது ஐம்பத்தைந்தாவது வயதில் சேவையினின்றும் ஓய்வுபெற்றுவிட்டார்.

ஓய்வுபெற்ற பின் சமய வாழ்வில் மிக ஈடுபாடுடையவரானார். யோகர் சுவாமி அடிக்கடி அவரிடம் வந்து போகும் நிலைமை இருந்தது. சுவாமிகளுடனான தொடர்பு நெருக்கமானதாக மாதாமாதம் சந்திப்பதாகக் காணப்பட்டது. இருவரும் கீரிமலைச் சிறாப்பர் மடத்திலிருந்து சைவசித்தாந்தக் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வார்கள். திருமூலர் திருமந்திரம், சிவஞானபோதம், சிவஞான மாபாடியம் என்னும் நூல்கள் ஆய்விற்குரியனவாக அங்கு எடுத்தாளப்படும்.

தம்மை நாடி வருவோருக்குச் சிறந்த அறிவுரைகள் கூறுவார். **அறவுரைகளும் கூறுவார்.** வேண்டிய உதவிகளும் செய்தனுப்புவார். நல்ல ஆலோசனைகள் கூறத் தயங்கவும் மாட்டார். இளைப்பாறிய பின் அவர் J.P.U.M. ஆகப் பணிபுரிந்தவர். அவர் பெயரால் பன்னாலை இன்று பரிமளிக்கின்றது. மூன்று பிள்ளைகளின் தந்தையாகிய வைத்திலிங்கம் 1957 யூலை மாதத்தில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

தகவல் தந்தவர் : திருமதி அமிர்த யோகேஸ்வரி முத்துக்குமாரசாமி.

அனத்தல் ஆடேல் - *ஔவையார்*

உ
சிவமயம்

# BVS சிங்கம்

பன்னாலை வைரவப்பிள்ளை மீனாட்சிப்பிள்ளை தம்பதியர் குழந்தைதான் BVS சிங்கம் அவர்கள். பெற்றோர் அவருக்கு இட்ட பெயர் சபாரத்தினம் என்பது. அவர் தமது முப்பத்தைந்தாவது வயதிற் சபாரத்தின காராளசிங்கம் எனத் தமது பெயரை மாற்றிக்கொண்டார். வைரவப்பிள்ளை சபாரத்தின காராளசிங்கம் என்ற நீளமான பெயரை BVS சிங்கம் என்று குறுக்கிக் கொண்டார். பின்னர் அவர் பெயர் BVS சிங்கம் என்றே நிலைத்துவிட்டது.

தெல்லிப்பழை அமெரிக்கன் மிஷன் ஆங்கில பாடசாலையில் தெயிலர் துரையப்பாபிள்ளை தலைமை ஆசிரியராக இருந்த வேளையில் ஆங்கிலக் கல்வியைப் பெறுவதற்காகச் சபாரத்தினம் அங்கு மாணவரானார். சில நாள்களிலேயே தன்னை மாணவர் தலைவனாக எல்லோரும் அங்கீகரிக்கவும் வைத்தார்.

1910இல் மிஷனரிமாரின் தொடர்பை விலக்கிக்கொண்டு தெயிலர் வெளியேறிய போது சில ஆசிரியர்களும் அவருடனாகி வெளியேறினர். சபாரத்தினமும் தம்முடனாகிய சில மாணவர்களுடன் வெளியேறித் துரையப்பாபிள்ளை தம்வீட்டில் நடத்தத் தொடங்கிய சைவாங்கில பாடசாலையிற் சேர்ந்துகொண்டார். அவ்வளவிற்குத் துணிச்சல் மிகுந்தவர் சபாரத்தினம். அந்த மாணவர்கள்தான் மகாஜனாவின் முதன் மாணாக்கர் எனலாம். சபாரத்தினம் அவர் நண்பர்கள் துணிச்சல் துரையப்பாபிள்ளையின் துணிச்சலை விட எந்த வகையிலும் குறைந்தது என்று சொல்ல முடியாது என்பர் நிலைமையைக் கண்ணுற்றோர்.

இலங்கையில் மட்டுமன்றி இந்தியா, மலேஷியா, கொங்கொங், சீனா முதலான நாடுகளுடனுந் தொடர்பை உண்டாக்கி அங்கு சென்று வாழ்ந்து வணிக முயற்சிகளையும் மேற்கொண்டார். சீனப் பிரதமர் **சூ என் லாயுடன்** கூட

ஒட்டிப்பழகும் வாய்ப்பேற்பட்டது. இரண்டாவது உலக மகா யுத்த வேளையில் இடதுசாரிகள் அனைவரையும் அரசு சிறையிலடைத்தது. அந்தவேளை இரகசியமாகச் சிங்கம் அவர்களை வெளிக்கொணர்ந்து நாடு கடத்தி மறைத்துவிட்டார்.

குதிரைப்பந்தயத்தில் ஈடுபட்டுப் பெருஞ் சாதனை படைத்துக் குதிரைப் பந்தய மன்னன் என்றும் பெயர் பெற்றவர். இப்படி உலகளாவிய நிலையிற் சாதனைகள் படைத்தவர் BVS சிங்கம் அவர்கள்.

**திருநாவுக்கரசு உதயகுமார்.**

உ
சிவமயம்

# கனகசபைப்பிள்ளை ஸ்ரீ சுந்தரமூர்த்தி (ஆரூரர்)



தனது கல்வியைச் சென்னையில் பெற்றவர். தனது சகோதரியின் கணவர் வன்னித்தம்பி அப்பர்சுவாமி காலமானதைத் தொடர்ந்து பன்னாலைப் பாடசாலை முகாமைத்துவத்தை ஏற்று நடத்தினார்.

அரசாங்கப் பாடசாலையைச் சுவீகரிக்க முன்னர் தாமாகவே இப் பாடசாலையை அரசாங்கத்திடம் கையளித்தார். பன்னாலை வரத்தலம் கற்பகப் பிள்ளையார் கோவில் கேணியை அமைத்துப் பராமரித்து வந்தார். இவரது மகள் ஏகபுத்திரி திருமதி நீலாயதாட்சி மூளாயைச் சேர்ந்த சிற்றம்பலத்தை மணமுடித்தார்.

இவர்களின் மகள் பராசக்தி லம்போதரன் தற்பொழுது லண்டனில் வாழ்கிறார்.

உ
சிவமயம்

# வித்துவான் சிவானந்தையர்

1873 - 1916

தெல்லிப்பழையைச் சேர்ந்த பன்னாலையில் அந்தணர் குலத்திற் சபாபதி ஐயருக்கு அருந்தவப் புதல்வராக 1873இல் சிவானந்தையர் பிறந்தார். தம்மூர்ப் புலமையாளர் ஒருவரிடம் ஆரம்பக் கல்வியைப் பெற்ற இவர் ஏழாலையில், சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் தலைமையில் நடைபெற்ற சைவ வித்தியாசாலையிற் சேர்ந்து கற்றார். புலவரிடம் வடமொழி தென்மொழி என்பவற்றைக் கேட்டுக் கற்றுக்கொண்டார். சிவானந்தையரின் நுண்மதித் திறனைக் கண்டுகொண்ட புலவர் அந்த வித்தியாலயத்தை விட்டுத் தாம் நீங்கிய பின்பும் அவரை வீட்டுக்கு வரச்செய்து தருக்கம், வியாகரணம், சப்தம் முதலியவற்றையும், சைவசித்தாந்த சாஸ்திரங்களையும் நயம்படச் சொல்லிக் கொடுத்தார்.

பின்னர் இந்தியா சென்ற சிவானந்தையர் அங்குள்ள வியாகரண பண்டிதர்களிடம் தாம் கற்ற வடமொழி நூல்களில் தமக்குண்டான ஐயங்களைக் கேட்டுப் போக்கிக்கொண்டார். திருவாவடுதுறை ஆதீனஞ்சென்று அங்குள்ள புலவர் பெருமக்களால் உபசரிக்கப்பட்டார். இவர் வாக்குவல்லபம், கவிதா சாமர்த்தியம், வடமொழிப் பாண்டித்தியம் என்பவற்றை அறிந்துகொண்ட **ஆதீனத்தார் இவருக்கு வித்துவான் எனுங் கௌரவப்பட்டத்தை வழங்கினர்** என்றுங் கூறுவர். இராமநாதபுரம் சென்று அச்சமஸ்தானாதிபதியிடம் சன்மானமும் பெற்றுள்ளார்.

தமிழ்நாடு பச்சையப்பன் கல்லூரியில் நீண்டகாலம் ஆசிரியப் பணி புரிந்துள்ளார். அந்தவேளை இவரது இல்லற வாழ்வு பற்றி இவர் தந்தையார் கடிதமெழுதினமையால் யாழ்ப்பாணத்திற்கு மீண்டவர் தந்தை விருப்பப்படி திருமணஞ் செய்துகொண்டார்.

அக்காலத்தில் தருக்க சங்கிரகத்தின் உரைகளாகிய நியாயபோதினி, பதகிருத்தியம் என்பனவும் அன்னம்பட்டீயம் என்னும் உரைக்குரையாகிய நீல கண்டீயமும் இவரால் புதிதாக மொழிபெயர்க்கப்பட்டன.

சட்ட நூலறிஞர் க. தம்பையாபிள்ளை அவர்கள் இவர் அருமை நண்பர். புலியூர்ப்புராண அவையடக்கத்துள் இதுபற்றிய குறிப்புண்டு. இருவரதும் ஆழ்ந்த புலமையே இந்த நட்புக்குக் காரணம் என்பர். புலியூர்யமகஅந்தாதி, புலியூர்ப்புராணம், சனிதுதி, நகுலமலைக் குறவஞ்சி, நவக்கிரகதோசம் என்னும் இலக்கிய நூல்களைச் செய்த ஐயர் திருக்குறள் முதல் பத்ததிகாரத்திற்கு. உரையும் எழுதியுள்ளார். திருக்குறள் முதலதிகார விருத்தியுரை அகப்பொருள்விளக்கம் தசகாரியம் என்பவற்றையும் எழுதியுள்ளார். இவர் தமது நாற்பத்து மூன்றாம் வயதில் 1916 நளவருடம் மார்கழி மூன்றாந் தேதி இவ்வுலக வாழ்வை நீத்தார்.

**- புலியூர்ப்புராண நுலாசிரியர் வரலாற்றிலிருந்து.**

# சமயப் பெரியார்கள்

1. சிவத்திரு சுந்தரமூர்த்தி ஏழூர்நாயகம்
2. சிவத்திரு விஸ்வநாதர் சங்கரப்பிள்ளை
   சிவத்திரு வி. சங்கரப்பிள்ளை
3. சிவத்திரு சரவணமுத்து விநாயகரத்தினம்
   க. திருநாவுக்கரசு.
4. திரு. கா. கதிர்காமத்தம்பி
5. திரு. வை. பொன்னையா
6. திரு. சி. சிவபாலசுப்பிரமணியம்
7. திரு. நித்தியானந்தன் நித்தியகரன்
8. திரு. சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம்

உ
சிவமயம்

# சிவத்திரு சுந்தரமூர்த்தி ஏழூர்நாயகம்

தெல்லிப்பளை பரியாரியார் வளவைச் சேர்ந்த சுந்தரமூர்த்தி சரஸ்வதி தம்பதியினரின் இளைய புதல்வனே ஏழூர்நாயகம் அவர்கள்; இவர் தனது ஆரம்பக் கல்வியினைத் தெல்லிப்பளை சைவப்பிரகாச வித்தியாசாலையில் பெற்றுக்கொண்டபின், தொடர்ந்து மகாஜனக்கல்லூரியில் பயின்றுள்ளார். பின்னர் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் தொடர்ந்துள்ளார். இவர் மகாஜனக் கல்லூரியில் கல்வி பயின்ற காலத்தில் பேச்சு, இசை, நாடகத்துறைகளில் மிகுந்த ஆர்வங்கொண்டவராக இருந்துள்ளார். பல போட்டிகளில் பங்குபற்றிப் பரிசுகளும் பெற்றுள்ளார். இவர் உடற்பயிற்சிக் குழுவின் தலைவராக இருந்ததோடு அக்குழு தேசியமட்டத்தில் இரண்டாம் இடம்பெறக் காணரமாக இருந்தார்.

1962ல், தமது 21 வயதில் சுகாதார ஏழுதுவினைஞராக யாழ்ப்பாணம் தேசிய வைத்தியசாலையில் தனது முதல் நியமனத்தைப் பெற்றுக்கொண்டார். அதன் பின் பதுளை, களுத்துறை, கொழும்பு தெற்கு, தெல்லிப்பளை முதலிய அரசினர் வைத்தியசாலைகளிலும் மாகாண சுகாதாரத் திணைக்களத்திலும் வேலைபார்த்துள்ளார். எழுதுவினைஞர் சேவையின் உயர்தரமான சுப்ரா (Supra) தரத்தினை எய்திய இவர் நிர்வாக உத்தியோகத்தராக (யனஅிைளைவசயவ வளைந ழுகககைஉநச) பணிபுரிந்து 2001.09.10இல் இளைப்பாறினார்.

தற்போது அரசசார்பற்ற நிறுவனத்தின் அனுசரணையுடன் இயங்குகின்ற சாந்திகம் என்ற உளவளத்துணை நிலையத்தில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமை ஆற்றிக்கொண்டிருக்கிறார். தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராகவும் விளங்குகிறார்.

இளவயதில் இருந்தே சமயப்பற்றுமிக்கவராகக் காணப்பட்ட இவர், இன்றும் சமயத் தொண்டில் ஈடுபட்டு வருகிறார்; தெல்லிப்பளை துர்க்கை அம்பாள் தேவஸ்தான நிர்வாக சபையில் உதவிப் பொருளாளராக விளங்குகின்றார். மேலும் தெல்லிப்பளை கிழக்கு குருநாதர் சுவாமி கோயில், வயலிருப்பை வைரவர் கோயில் நிர்வாக சபைகளின் பொருளாளராகவும் பணியாற்றி வருகின்றார். பன்னாலை ஆலயங்களிலும் சுற்றுவட்டாரங்களிலுள்ள ஆலயங்களிலும் திருமுறை ஓதுதல், புராணபடனந் செய்தல் போன்றவற்றில் ஈடுபட்டுத் தனது பொழுதைத் தவப்பொழுதாகக் கழித்து வருகிறார்.

பன்னாலை கனகசபை காமாட்சியம்மா தம்பதியின் மகள் பாக்கியலட்சுமியை மணமுடித்து மூன்று புதல்விகளுக்குத் தந்தையாக உள்ளார்.

உ
சிவமயம்

# சிவத்திரு விஸ்வநாதர் சங்கரப்பிள்ளை



இளவாலை விஸ்வநாதர் பன்னாலை இளையபிள்ளை தம்பதியர்க்கு 1914.11.07 ஆந் தேதி புதல்வராகத் தோன்றிய சிவத்திரு சங்கரப்பிள்ளை அவர்கள் அளவெட்டி சீனன் கலட்டி ஞானோதய வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வியை ஆரம்பித்து நான்காவது வகுப்பிலிருந்து விழிசிட்டித் தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் தொடர்ந்தார். இந்த விழிசிட்டித் தமிழ்க் கலவன் பாடசாலையே பின்னர் விழிசிட்டிச் சிவஞான வித்தியாலயம் என்றும் பெயர் மாற்றம் பெற்றது. இங்கேதான் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர வகுப்பு வரை சங்கரப்பிள்ளை அவர்கள் கற்றார்கள். ஆறாவது வகுப்புத் தொடக்கமாக ஆயுள்வேத வைத்தியக் கல்வியையும் அவர்கள் கற்றுள்ளார்கள்.

1932 ஏப்ரல் தொடக்கமாகத் தாம் கற்ற கல்வி நிலையத்திலேயே ஆசிரியப் பணியையும் ஏற்றுக்கொண்டார்கள். 1935 இல் நொத்தாரிஸ் பரீட்சையிலும் தேறிய இவர் மட்டக்களப்புக் காரைதீவில் வேலை கிடைத்தும் அதனை ஏற்கவில்லை. ஆயுள்வேத வைத்தியத் தகைமை பெற்றிருந்தும் அதனையுந் தவிர்த்துக்கொண்டார். ஆசிரியப் பணியின் புனிதத்தைப் போற்றி அதனையே விரும்பி ஏற்றுக்கொண்டார்.

முதலாந்தர ஆசிரியர் தராதரம், பாலபண்டிதர், விளையாட்டுடனாகிய சிரமப் பயிற்சி, சித்திர ஆசிரியர் தராதரம், முஷ்டிப் பயிற்சி (Boxing) என்பவற்றிலும் ஆசிரியர் தராதரப் பத்திரம் பெற்றிருந்த இவர் ஈற்றில் உபஅதிபராகவிருந்து 1971.01.01இல் சேவையினின்றும் ஓய்வுபெற்றார்.

பன்னாலைப் பொன்னம்பலம் மகள் சௌந்தரநாயகியை 1948.02.11இல் வாழ்க்கைத் துணைநலமாக ஏற்றுக்கொண்டவர் இரண்டு குழந்தைச் செல்வங்களுக்குத் தந்தை ஆயினார்.

ஸ்ரீகணேச சனசமூக நிலையத் தலைவராக ஐந்து ஆண்டுகள் செவ்வனம் சேவையாற்றிய இவர் பின்னர் நம்பிக்கைப் பொறுப்பாளர் (Trustee) மூவருள் ஒருவராக இன்றுவரை பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

ஏழாலை மகான் அருளானந்தசிவம் என்ற சிவப்பெருமகனிடம் சைவசித்தாந்த அறிவை வளர்த்துக்கொண்டவர் அதனைப் பலருக்கு ஊட்டியுள்ளார். சிவத்திருவடிவங்கள், பிரணவக் கலை விளக்கு என்னும் நூல்களின் ஆசிரியராகிய இவரது சிவஞானபோதத் தெளிவுரை, சிவாலயமும் சிவாலயக் கிரியைகளும், சைவநற் சிந்தனை என்னும் நூல்கள் வெளிவரவுள்ளன.

தகவல் தந்தவர் : **சிவத்திரு வி. சங்கரப்பிள்ளை**
கட்டுரை ஆக்கம் : **க. நடராசர்.**

உ
சிவமயம்

# சிவத்திரு சரவணமுத்து விநாயகரத்தினம்

சரவணமுத்து தையல்நாயகம் தம்பதியர்க்கு 1937.08.01இல் பிறந்த புதல்வனே விநாயகரத்தினம் அவர்கள். பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்திற் சேர்க்கப்பட்ட விநாயகரத்தினம் தமிழ்மொழி மூலமான சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சை, க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை என்பவற்றிற் சித்தி எய்தியபின் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியிற் சேர்ந்து ஆங்கில மொழிமூலமான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையிற் சித்திபெற்றார். தொடர்ந்து ஆசிரியப் பயிற்சியுடையவரானார்.

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இரண்டு வருடங்கள் பெற்ற அனுபவங்களுடனாக யோகாசனப் பயிற்சி, முதலுதவிப்பயிற்சி, சாரணர் பயிற்சி என்னும் ஆற்றல்களையும் வளர்த்துக்கொண்டார். கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடைபெற்ற இந்து சமய விசேட பயிற்சியும் பெற்றவர். சைவ சமய முதன்மை ஆசிரியர் பயிற்சியிலுங் கலந்துகொண்டவர்.

சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாலயம், போகவந்தலாவ ஹோலி றோசறி சிரேஷ்ட பாடசாலை, அட்டன் கைலண்ட்ஸ் கல்லூரி, தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி என்னுங் கல்வி நிலையங்கள் இவர் சேவையைப் பெற்றுள்ளன. ஆசிரிய ஆலோசகராகவும் இவர் பணிபுரிந்துள்ளார்.

சிவநெறிக்கழக அமைப்பாளராகிய இவர் அதன் செயலாளராகவும் பணிபுரிந்துள்ளார். தெல்லிப்பளை இந்து சமய அபிவிருத்திச் சபை உறுப்பினராகவும், தெல்லிப்பளை துர்க்கை அம்பாள் ஆலய சிர்வாக சபை உறுப்பினராகவும் பணிபுரிகின்றார்.

இறைபணிச் செம்மல், சிவநெறித் தொண்டர்மணி என்னும் கௌரவ விருதுகள் இவர் பெயரை அலங்கரிக்கின்றன.

இறைபணிச் செம்மல் தந்த தகவல்களைக்கட்டுரை ஆக்கியவர்:
**க. திருநாவுக்கரசு.**

# அதிபர்கள்

1. **அதிபர் பண்டிதர் பரமசாமிஐயர் சிவானந்தையர்**

2. **அதிபர் காசிப்பிள்ளை கதிர்காமத்தம்பி**
   கா. கதிர்காமத்தம்பி நினைவு மலரிலிருந்து

3. **அதிபர் வைத்திலிங்கம் பொன்னையா**
   வைத்திலிங்கம் பொன்னையா நினைவு மலரிலிருந்து

4. **அதிபர் சுப்பிரமணியம் மாணிக்கம்**
   சுப்பிரமணியம் மாணிக்கம் நினைவு மலரிலிருந்து

5. **அதிபர் கந்தையா திருநாவுக்கரசு**
   கந்தையா திருநாவுக்கரசு.

6. **அதிபர் செல்லையா வரதராசப்பெருமாள்**
   செல்லையா வரதராசப்பெருமாள் நினைவு மலரிலிருந்து

7. **அதிபர் அமிர்த யோகேஸ்வரி முத்துக்குமாரசாமி**
   திருமதி அமிர்தயோகேஸ்வரி முத்துக்குமாரசாமி

8. **அதிபர் சுந்தரமூர்த்தி சிவபாதரத்தினம்**
   சுந்தரமூர்த்தி சிவபாதரத்தினம்

9. **அதிபர் முருகேசு கந்தையா**

10. **அதிபர் எஸ். நடராசா**

11. **உப அதிபர் பொன்னம்பலம் செல்லத்துரை**
   பொன்னம்பலம் செல்லத்துரை நினைவு மலரிலிருந்து

கேள்வி முயல் - *ஔவையார்*

உ
சிவமயம்

# அதிபர் பண்டிதர் பரமசாமிஐயர் சிவானந்தையர்
1914 - 1994



தெல்லிப்பளை தென்மேற்கு பன்னாலைப் பதியில் பரமசாமி ஐயர் செல்லம்மா தம்பதியர்க்கு இளைய புதல்வராக 1914ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 29ஆம் திகதி பிறந்தவரே சிவானந்தையர். அளவெட்டி சீனன்கலட்டி ஞானோதய வித்தியாலயத்தில் தமது கல்வியை ஆரம்பித்த ஐயர் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையிற் சித்தியெய்தித் திருநெல்வேலிச் சைவாசிரிய காலசாலையிற் பயிற்சிக்குரகத் தெரிவுசெய்யப்பட்டார். பயிற்றப்பட்ட ஆசிரியராக வெளியேறிய அவர் கொல்லங்கலட்டிச் சைவவித்தியாசாலையில் 1932.10.10இல் உதவியாசிரியர் பதவியைப்பெற்றுப் பணியை ஆரம்பித்தார். அந்தவேளையிலும் அவர் தமது கல்வியைத் தொடரத் தவறவில்லை.

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கப் பாலபண்டித பரீட்சையிலும், மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டித பரீட்சையிலும், சைவ சித்தாந்த பண்டித பரீட்சையிலும், சைவசித்தாந்த மகா சமாசம் நடத்தும் சைவப்புலவர் பரீட்சையிலும் பணியுடனாகிய காலத்துச் சித்தியெய்தியுள்ளார். ஆங்கில ஆற்றலை வளர்த்துக்கொண்ட ஐயர் அம்மொழி மூலமான G.C.E. சாதாரணதரப் பரீட்சையிலும் சித்திபெற்றுள்ளார்.

கொல்லங்கலட்டிச் சைவ வித்தியாலயத்திலேயே தலைமையாசிரியராகப் பதவி உயர்வு பெற்ற ஐயர் உதவியாசிரியர்களுடன் மிக அன்பாக நடந்து எல்லோரது பாராட்டையும் பெற்றுக்கொண்டார். அவர் காலத்தில் வித்தியாலயம் உயர்வுகண்டு விளங்கியது என்பது குறிப்பிடத்தக்கது. 1971.01.01இல் ஐயர் சேவையினின்றும் ஓய்வுபெற்றுக்கொண்டார்.

கவிதைகளை ஆக்குவதிற் திறமையாளராக விளங்கிய சிவானந்தையர் ஓய்வுபெற்றபின் புகழார்ந்த அர்ச்சகராக ஆலயங்களிற் பணிபுரிந்துள்ளார்.

மாவையாதீனம் இரத்தினக் குருக்களின் மூத்த மருகர் அரிகரக் குருக்களின் கனிஷ்டபுதல்வி பகவதி அம்மாவை 1942.08.31இல் திருமணஞ் செய்து ஆறு குழந்தைச் செல்வங்களுக்குத் தந்தை ஆகி ஒளிர்ந்தார். அன்னார் 1994.03.08 ஆந் தேதி இவ்வுலக வாழ்வை நீத்தார்.

உ
சிவமயம்

# அதிபர் காசிப்பிள்ளை கதிர்காமத்தம்பி

1914 - 2004



பொற்பதி பன்னாலை வரு காசிப்பிள்ளை வள்ளிப்பிள்ளை தம்பதியரின் நான்காவது மகவாக 1914.02.24இற் பிறந்தவர்தான் அதிபர் காசிப்பிள்ளை கதிர்காமத்தம்பி அவர்கள். ஐந்தாவது வயதில் பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்தில் கல்விபெறும் நோக்குடன் சேர்க்கப்பட்ட கதிர்காமத்தம்பி அவர்கள் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப்பத்திரப் பரீட்சை நிறைவெய்துவது வரை அங்கேயே பயின்றார். 1931 தொடக்கம் 1933 வரை திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலையிற் பயின்று பயிற்றப்பட்ட ஆசிரிய தராதரப் பத்திரத்தைப் பெற்ற கதிர்காமத்தம்பி அவர்கள் தான் கல்வி பயின்ற சேர் கனகசபை வித்தியாலயத்திலேயே 1936இல் உதவியாசிரியராகச் சேர்ந்துகொண்டார்கள். 1959 இலிருந்து பதவி உயர்வு பெற்று அவ்வித்தியாலயத்தின் அதிபராகப் பணிபுரியத் தொடங்கினார்கள். 1971ஆம் ஆண்டு தமது ஐம்பத்தேழாவது வயதில் ஓய்வுபெறுவது வரை அங்கேயே சேவையாற்றியுள்ளார்கள்.

பன்னாலை வைரமுத்து விசாலாட்சி தம்பதியரின் மகள் வரதலட்சுமி என்னும் மங்கை நல்லாளை 1938இல் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொண்டவர் நான்கு குழந்தைகளுக்குத் தந்தை ஆயினார்.

வழிபாட்டு முயற்சிகளில் ஈடுபாடு மிக்குடையவராகிய இவர் கூட்டுப்பிரார்த்தனை முறைமையை 1938இல் முதன் முதலாகப் பன்னாலை மயிலையம்பதி ஞானவைரவர் ஆலயத்தில் ஆரம்பித்து வைத்த பெருமைக்குரியவர். பின்னர் மற்றைய ஆலயங்களுக்கும் இது விரிவுபடுத்தப்பட்டது. 1939 மார்கழியில் திருவெம்பாவைக் கூட்டுப்பிரார்த்தனைச் சபையை ஆரம்பித்தவர் வருடா வருடம் எல்லா ஆலயங்களுடனாகிய இடங்களிலும் நடைமுறைப்படுத்தி 1989இல் சபையின் பொன் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடியவர்.

1961 தொடக்கம் பன்னாலை அருள்மிகு ஞான வயிரவர் ஆலயத்தில் வெள்ளிக்கிழமை தோறும் அறுபத்துமூவர் பற்றிய தொடர் சொற்பொழிவாற்றி 1964இல் சேக்கிழார் விழாவைக் கொண்டாடிய பெருமை அதிபர் கதிர்காமத்தம்பி அவர்களையே சாரும். அன்னார் 2004.02.28 அன்று இவ்வுலக வாழ்வை நீத்துக்கொண்டார்கள்.

**-கா. கதிர்காமத்தம்பி நினைவு மலரிலிருந்து**

உ
சிவமயம்

# அதிபர் வைத்திலிங்கம் பொன்னையா

## 1926 - 2000



பழம்பெரும்பதி பன்னாலை வாழ் வைத்திலிங்கம் வள்ளிப்பிள்ளை தம்பதியர்தம் இரண்டாவது மகவாக அதிபர் பொன்னையா அவர்கள் 1926.07.05இற் தோற்றினார்கள். உரியபோது வித்தியாரம்பஞ் செய்விக்கப்பெற்ற பொன்னையா அவர்கள் ஐந்தாவது வயதில் பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்திற் சேர்க்கப்பட்டார்கள். அங்கு சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையை நிறைவு செய்தவர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் ஆங்கில மொழிமூலமான கல்வியைத் தொடர்ந்தார். இந்தவேளை ஆசிரிய தராதரப் பத்திரப் பரீட்சைக்குத் தோற்றி அதிலும் வெற்றிகண்டார். பலாலி அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைப் புகுமுகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டு 1950 - 1951 இல் ஆசிரியப் பயிற்சி பெற்று வெளியேறினார். பன்னாலை சிவத்திரு வி. சங்கரப்பிள்ளை அவர்கள் நடத்திய சிவஞான சித்தியார், சிவஞானபோத வகுப்புக்களிலும் பயின்று சைவசித்தாந்த அறிஞரானார். சிவனடியே சிந்திக்கும் சிவஞானச் சிந்தையராகவும் விளங்கினார். பூசும் நீறுபோல் உள்ளும் புனிதரானவர்.

அன்னையின் பணிப்புடனாகிப், பயிற்சிபெறு முன்னரே கொக்குவில் நாமகள் வித்தியாலயத்திலும், இளவாலை மெய்கண்டான் வித்தியாலயத்திலும் ஆசிரியராகப் பணிபுரிந்துள்ளார். ஆசிரியப் பயிற்சியின் பின் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிற் பணிபுரிந்து கொண்டிருந்த வேளை அதிபர் தரப் பதவி உயர்வு பெற்று மலையகத்திலும், குரும்பசிட்டிப் பொன்பரமானந்தாவிலும் பணியாற்றித் தாம் கல்வி பயின்ற தம்மூர்ச் சொந்தப் பாடசாலைக்கு வந்து சேர்ந்தார். 1986.07.04 இல் ஓய்வுபெறுவதுவரை அங்கேயே பணிபுரிந்தார்.

பன்னாலையைச் சேர்ந்த கந்தையா சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் மகள் வள்ளியம்மையைத் திருமணஞ் செய்து கொண்ட பொன்னையா அவர்கள் மூன்று புதல்வர்களின் தந்தையாவார்.

கல்வி நிலையங்களுக்குப் புறம்பான அமைப்புக்கள் மூலம் சைவசமயக் கல்வியைப் பெற்றவர் அதிபர் பொன்னையா அவர்கள். அதனை மனத்துக்கொண்டு தமக்கு அண்மையாகவுள்ள மாணவர்களைத் தமது வீட்டிற்கழைத்துத் தமிழ்மொழி இலக்கண இலக்கியம் என்பவற்றைக் கற்பித்தவர். அன்னார் 2000.04.13 தமிழ்ப் புத்தாண்டுத் தினவேளையில் இலண்டன் விம்பிள்டன் சித்திவிநாயகரை வழிபட்டுத் திரும்பிச் சில நிமிடங்களில் அவன் திருவடி நீழலை அடைந்துள்ளார்.

**- வைத்திலிங்கம் பொன்னையா நினைவு மலரிலிருந்து**

உ
சிவமயம்

# அதிபர் சுப்பிரமணியம் மாணிக்கம்

## 1924 - 2001



பன்னாலை சுப்பிரமணியம் இளையபிள்ளை தம்பதியரின் மூத்த மகன்தான் அதிபர் மாணிக்கம் அவர்கள். 1924.06.30இற் பிறந்த மாணிக்கம் அவர்கள் வித்தியாரம்பத்திற்குரிய வயதில் பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்திற் சேர்க்கப்பட்டார். அங்கே சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையிற் சித்தியெய்திய பின் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிற் சேர்ந்து ஆங்கில மொழி மூலமான கல்வியைத் தொடர்ந்தார்.

இந்த வேளையில் ஆசிரிய தராதரப் பத்திரப் பரீட்சையில் தேர்ச்சி பெற்று எட்டியாந்தோட்டையில் ஆசிரியப் பணியில் ஈடுபட்டார். தொடர்ந்து கிடைத்த பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைப் பயிற்சியுடன் ஆசிரியராக நிரந்தர நியமனம் பெற்றுக்கொழும்பு; இளவாலை மெய்கண்டான், கீரிமலை நகுலேஸ்வரா என்னும் பாடசாலைகளில் ஆசிரியப் பணிபுரிந்து 1978இல் அதிபர் தர உயர்வு பெற்றார். தையிட்டிக் கணேச வித்தியாலயம், அளவெட்டி வடக்கு அமெரிக்கன் மிஷன் பாடசாலை என்பவற்றைத் தம் அதிபர் பதவிக் காலத்தில் வளர்த்தெடுக்க முயன்றார்.

தந்தை காலமானதைத் தொடர்ந்து குடும்பச் சுமையைத் தாங்கிய இவர் தங்கை பொன்னுப்பிள்ளையை நல்லதம்பி கதிராசிப்பிள்ளை தம்பதியரின் மூத்த புதல்வன் விசுவலிங்கத்திற்கும், அன்னப்பிள்ளையை மலேசியாவில் பதவி வகித்த அவர்தம் தம்பி அப்புத்துரைக்கும் திருமணஞ் செய்துவைத்துத் தானும் நான்காவது புதல்வி திருநிறைசெல்வி ஆசைப்பிள்ளை என்பவரைத் திருமணஞ் செய்து ஆறு குழந்தைச் செல்வங்களின் தந்தை என்னுந் தகுபதவி பெறுகின்றார்.

1984.06.30இற் சேவையிலிருந்து ஓய்வுபெற்றார். சுமார் இருபத்தைந்து ஆண்டுகளாகத் தெல்லிப்பழைக் கூட்டுறவுச் சங்கப் பன்னாலைக் கிளையின் தலைவராகவிருந்து பலரும் போற்றப் பணிபுரிந்துள்ளார். பன்னாலைச் சனசமூக நிலையத்தின் காப்பாளராகவும் பணிபுரிந்தவர். எல்லோருக்கும் இனியவர் மாணிக்கம். அமைதியானவர்; அடக்கம் நிறைய உடையவர். உற்றார், உறவினர், மற்றோர் அனைவர்க்கும் உதவுபவர். முதுபெரும் உழைப்பாளி. மாணிக்கமாகவே வாழ்ந்த அவர் தமது எழுபத்தேழாவது வயதில் 2001.04.10ஆந் தேதியன்று இயற்கை எய்தினார்.

**- சுப்பிரமணியம் மாணிக்கம் நினைவு மலரிலிருந்து**

உ
சிவமயம்

# அதிபர் கந்தையா திருநாவுக்கரசு

1930 -



கந்தையா சிவகாமிப்பிள்ளை தம்பதியர்க்குப் பன்னாலையில் 1930.09.05 ஆந் தேதி மூத்த பிள்ளையாகப் பிறந்தவர் திருநாவுக்கரசு. ஆரம்பக் கல்வியைப் பெறும்பொருட்டுப் பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்தில் உரியபோது சேர்க்கப்பட்ட அவர் ஐந்தாவது வகுப்பிற்கு மேல் இடைநிலைக் கல்வியை எதிர்நோக்கித் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியிற் சேர்க்கப்பட்டார்.

1952இல் கண்டி உடத்தலவின்ன அரசினர் பாடசாலையில் தமது ஆசிரியப்பணியை ஆரம்பிக்கின்றார். உயர்கல்வியைப் பெறவேண்டுமென்னும் விருப்பினால் தமிழ்நாடு சென்று சென்னை லோயலாக் கல்லூரியில் 1955 தொடக்கம் 1959 வரை கற்றுக் கலைமாணிப் பட்டம் பெற்றார்.

தமிழ்நாட்டினின்றுந் திரும்பியவர் கொழும்பு ஸாஹிராக் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி என்பவற்றில் உதவியாசிரியராகப் பணிபுரிந்தார். 1981இல் வீமன்காமம் மகா வித்தியாலயத்தில் உபஅதிபராக இருந்த பொழுது கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தர வகுப்பிற்குப் பொறுப்பாசிரியராக இருந்தது மட்டுமன்றி அளவையியல் பாடத்தினைத் திறம்படக் கற்பித்துச் சிறந்த பெறுபேறுகளை மாணவரிடை காண வைத்தார். 1982இல் அதிபர் தரம் பெற்றுத் தெல்லிப்பழை வீமன்காமம் மகாவித்தியாலயம், அளவெட்டி சீனன்கலட்டி ஞானோதய வித்தியாலயம் என்பவற்றிற் பணியாற்றி 1990.09.04ஆந் தேதி ஓய்வுபெறுகின்றார்.

நான்கு குழந்தைகளுக்குத் தந்தையான திருநாவுக்கரசு அவர்கள் கீரிமலை நகுலேஸ்வர தேவஸ்தான அன்னதான சபைச் செயலாளராகவும் வரத்தலம் கற்பக விநாயகர் ஆலய அன்னதான சபைப் பொருளாளராகவும் தொண்டு புரிந்துள்ளார்.

வலி வடக்கு ஓய்வூதியர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கச் செயலாளராகவும் தெல்லிப்பளை தென்மேற்குக் குடும்பநலச் சங்கத் தலைவராகவும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தெல்லிப்பழைக் கிளைத் தலைவராகவும் இருந்து பொது நலச் சேவை புரிவதிலும் விருப்புடன் ஈடுபடுபவர். கிராமசேவையாளருடன் இணைந்து கிராமத்து இணக்கசபையில் தனது பணியைச் சிறப்பாகச் செய்துகொண்டிருக்கின்றார்.

செய்தி தருபவர் : **கந்தையா திருநாவுக்கரசு.**

உ
சிவமயம்

# அதிபர் செல்லையா வரதராசப் பெருமாள்

1927 - 1986



அதிபர் செல்லையா வரதராசப்பெருமாள், பன்னாலை திரு செல்லையா அவர்களுக்கு நான்காவது மகவாக அவர்தம் துணைவியார் சின்னாச்சிப்பிள்ளை அம்மையார் வயிற்றில் 1927.06.24இற் பிறந்தவர். கல்விப் பயிற்சிக்காக ஐந்தாவது வயதிற் பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்திற் சேர்க்கப்பட்டார். சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையை அங்கு நிறைவுசெய்தவர். ஆங்கில மொழித் தேர்ச்சிக்காகத் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியிற் சேர்க்கப்பட்டார். 1949இல் ஆங்கில மொழிமூலமான சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையை நிறைவுசெய்த அதேகால கட்டத்தில் ஆசிரியர் தராதரப் பத்திரப் பரீட்சையிலும் நிறைவுகண்டார். 1950 - 1951 காலகட்டத்தில் பலாலி அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியப் பயிற்சிக்குள்ளானார்.

தலவாக்கொல்லை அரசினர் பாடசாலையில் ஆசிரியப் பணியை 1952.10.01இல் ஆரம்பித்து இறாகலை அரசினர் பாடசாலை, கொழும்பு இசிப்பத்தன மகா வித்தியாலயம், மல்லாகம் ஆங்கில மகா வித்தியாலயம், தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி என்னுமிடங்களிலும் தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருந்தார்.

மலைநாட்டில் அவர் பணிபுரிந்த பாடசாலைகளில் தமிழ்ச் சிறார்களின் பின்தங்கிய நிலைகண்டு வருந்தி அவர் உயர்விற்காக உழைத்தார். ஒரே பாடசாலையிற் கற்கும் இருவேறு இனத்தவருள் ஒருசாரார் அனுபவிக்கும் அனுபவங்களைத் தம்மினப் பிள்ளைகள் பெறவில்லையேயென்று துன்புற்றார். எல்லோரும் ஒரே மாதிரியான வசதிகளையே அனுபவிக்க வேண்டுமென வாதாடினார். அதனாற் பல துன்பங்களை அனுபவித்தார். இடமாற்றங்களுக்குள்ளானர்.

தக்க பருவத்தில் ஆசிரியர் வரதராஜப்பெருமாள் அவர்கள் கருகம்பனை நரசிங்கம் நாகமுத்து தம்பதியர் புதல்வி சிவதேவியை மணந்து ஆறுகுழந்தைச் செல்வங்களுக்குத் தந்தை ஆயினார்.

1972.03.22இல் அதிபர் எனப் பதவி உயர்வுபெற்றவர் மகாஜனக் கல்லூரியின் கனிஷ்ட நிலை அதிபராகப் பணியாற்றினார். பின்னர் அளவெட்டி வடக்கு அமெரிக்கன் மிஷன் வித்தியாலயத்திலும் தையிட்டிக் கணேச வித்தியாலயத்திலும் அதிபராகப் பணிபுரிந்துள்ளார். நல்லியல்பாலும் நற்பண்பாலும் நாட்டின் பல பாகங்களிலுமிருந்து பெரியோர் பலரின் சேர்க்கையும் நட்பும் பெற்ற இவர் இறுதியாகப் பணிபுரிந்த கல்வி நிலையமாகிய தையிட்டிக் கணேசவித்தியாலயத்திற்குச் சென்று திரும்பி வரும்போது நடைபெற்ற அநியாய அழிப்பிற்குள்ளாகி 1986.01.23இல் தெருவில் இயற்கை எய்தினார்.

**- செல்லையா வரதராசப் பெருமாள் நினைவு மலரிலிருந்து**

உ
சிவமயம்

# அதிபர் அமிர்தயோகேஸ்வரி முத்துக்குமாரசாமி



பன்னாலையைச் சேர்ந்த சண்முகத்தின் மகளாகிய அமிர்தயோகேஸ்வரி உரிய வயதில் முத்துக்குமாரசாமியைத் திருமணஞ் செய்து கொண்டவர். இல்லறத்தில் மிகுந்த ஈடுபாடுடையவராகி நின்ற இவர் தெய்வ பக்தி பதிபக்தி குருபக்தி என்பவற்றிலும் நிறைவுடையவராகி வையத்து எல்லோராலும் மதிப்பிற்குரியவராகி வாழ்ந்தார். ஆரம்பக்கல்வியைப் பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியைக் கொழும்பு பிறெஸ்பிற்றேறியன் பெண்கள் கல்லூரியிலும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலும் பட்டப்படிப்பைப் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் பயின்று நிறைவாக்கியவர்.

ஆசிரியப்பணியை 1970 இல் மன்னார்ப் பிரதேசப் பாடசாலைகளில் ஆரம்பித்தார். தன் அறிவுத் திறத்தாலும் சூழலிலுள்ளோரைக் கவரும் இயல்பாலும் அப்பிரதேச மக்களின் அன்பைப் பெற்றுக்கொண்டவர். பெரியவர்களின் அனுசரணையை அடைந்தின்புற்றவர். 1976இல் பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்திற்கு மாற்றம்பெற்று வந்தார்.

இலங்கைப் பல்கலைக் கழகத்தின் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பரீசையைச் சிறப்பாக நிறைவுசெய்தார். ஆங்கிலத்திலுஞ் சிறப்புச் சித்திபெற்ற இவர் 1989இல் அதிபர் தரத்திற்கான போட்டிப் பரீட்சையிற் சித்திபெற்றார். பன்னாலை சேர்கனகசபை வித்தியாலயத்தில் உப அதிபராக இருந்த அவர் 1991இல் அளவெட்டி சீனன்கலட்டி ஞானோதய வித்தியாலயத்தின் அதிபராகப் பணியை ஏற்றுக்கொண்டார். இராணுவப் பாதுகாப்பு அரணுள் இருந்த இப் பாடசாலையை மீண்டும் பழைய இடத்தில் நிர்மாணிப்பதற்கு உறுதுணையாக இருந்தவர் புதிய அதிபர் திருமதி அமிர்தயோகேஸ்வரி அவர்களே. (அளவெட்டி சீனன்கலட்டி வரலாறு. ஆக்கம்: அ. அமிர்தலிங்கம் 2000.01.27) பின்னர் அமிர்தயோகேஸ்வரி யா/ மான்ஸ் மகா வித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டார்.

எல்லோர்க்கும் இனியவர்; அமைதி அடக்கம் என்பவற்றின் உறைவிடமானவர். வேண்டியோர்க்கு வேண்டியாங்கு உதவுபவர். இப்பொழுது திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய வளாகத்தில் சமூகவிஞ்ஞானப் பட்டதாரிப் படிப்புப் பிரிவிலும் முன்பள்ளிப் பிரிவிலும் விரிவுரையாளராகப் பணிபுரிகின்றார்.

- செய்தி தருநர் : **திருமதி அமிர்தயோகேஸ்வரி முத்துக்குமாரசாமி**

உ
சிவமயம்

# அதிபர் சுந்தரமூர்த்தி சிவபாதரத்தினம்

1949

பன்னாலை சுந்தரமூர்த்தி தையல்நாயகி தம்பதியருக்கு 1949.05.17அந் தேதி பிறந்தவர் அதிபர் சிவபாதரத்தினம். ஆரம்பக் கல்வியைப் பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்திற் பெற ஆரம்பித்த அவர் க.பொ.த. சாதாரண தரம் வரை அங்கேயே கற்று நிறைவு செய்து கொழும்பகம் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் 1976.03.01 தொடக்கம் 1977.12.31 வரை சுமார் இரண்டு வருட காலம் ஆசிரியப் பயிற்சி பெற்றுள்ளார்.

பயிற்சி நிறைவாகியதும் கண்டி ரெம்பிள் ஸ்ரோல் தமிழ் வித்தியாலயம், கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலயம் என்னும் வித்தியாலயங்களில் உதவியாசிரியராகப் பணிபுரிந்துள்ளார். 1996.12.10 தொடக்கம் பதவி உயர்வு பெற்று அதே பாடசாலையில் அதிபராகப் பணிபுரிகின்றார்.

சாரணர் தொழிற்பாடுகளில் மிக ஈடுபாடு கொண்ட இவர் பாடசாலைச் சாரணர் தலைவராக, மாவட்டச் சாரணர் தலைவராக, உதவி மாவட்டச் சாரணர் ஆணையாளராக, மாவட்டச் சாரணர் ஆணையாளராக எல்லாம் பணிபுரிந்தவர். பணிபுரிந்துகொண்டேயிருக்கிறார்.

பன்னாலை ஆலயங்களில் நடைபெறும் விழாக்களுக்கு முன்னின்று உதவுபவர். கூட்டுப்பிரார்த்தனை ஒழுங்காக நடைபெற வேண்டுவனவெல்லாம் செய்பவர். இளைஞர்களுடன் தாமும் ஒருவராகி நின்று செயற்படுபவர். பன்னாலைத் திருவெம்பாவைக் கூட்டுப்பிரார்த்தனைச் சபையின் உறுப்பினராகிப் பிள்ளைகளின், மக்களின் உயர்விற்காக உழைப்பினை வழங்கிக்கொண்டே இருப்பவர்.

பன்னாலை கணேச சனசமூக நிலையத்தின் உறுப்பினராகி அதன் வளர்ச்சிக்காகப் பாடுபட்டுக்கொண்டிருப்பவர். தெல்லிப்பளைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக் குழு உறுப்பினராகிப் பின்னர் தலைமையை ஏற்றுச் சேவை செய்துகொண்டிருப்பவர். இவ்வண்ணம் கிராம அபிவிருத்தி முயற்சிகளில் முன்னின்று உதவுபவர். இப்பொழுது கிளைக் குழுவின் உறுப்பினராய் அதன் வளர்ச்சியிற் பங்குபற்றிக் கொண்டே இருக்கின்றார்.

– செய்தி தருபவர் : **சுந்தரமூர்த்தி சிவபாதரத்தினம்**

உ
சிவமயம்

# உபஅதிபர் பொன்னம்பலம் செல்லத்துரை

1925 - 2003



தெல்லிப்பழையைச் சார்ந்த பழம் பெரும்பதி பன்னாலையில் பொன்னம்பலம் பொன்னுப்பிள்ளை தம்பதியர்க்கு நான்காவது மகவாக 1925.06.18ஆந் தேதி பிறந்தவர்தான் உப அதிபர் செல்லத்துரை அவர்கள். கல்வியைப் பெறவேண்டிய வயதில் பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்தில் சேர்க்கப்பட்ட இவர் சிரேஷ்ட பாடசாலை தராதரப் பத்திரப் பரீட்சை நிறைவெய்துவது வரை அங்கேயே பயின்று கொண்டிருந்தார். அப்பாடசாலை ஆசிரியர் வி. சங்கரப்பிள்ளை அவர்களிடம் குத்துச் சண்டை (Boxing) பயின்று போட்டிகள் பலவற்றிற் பங்குகொண்டு பல பரிசில்களையும் பெற்றுள்ளார். கிளித்தட்டு விளையாட்டிலும் திறமையுள்ளவராக விளங்கியுள்ளார். குடும்பநிலை இவரது மேற்படிப்பிற்கு வாய்ப்பளிக்காமையால் 1968.07.03இல் இறம்பொடை அரசினர் பாடசாலையில் ஆசிரியப் பணியை ஏற்றார்.

1970-1971 என்னும் ஆண்டுகளில் நல்லூர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் ஆசிரியராகப் பயிற்சி பெறும் வாய்ப்புக் கிடைத்தது. பயிற்சி நிறைவாகியதும் நாவற்காடு அரசினர் கலவன் பாடசாலை, பூநகரி நல்லூர் அரசினர் பாடசாலை, வீமன்காமம் மகா வித்தியாலயம் என்பவற்றிற் கல்வி பயிற்றி இறுதியில் தன் சொந்தக் கிராமப் பிள்ளைகளுக்குத் தம் அறிவை வழங்க விரும்பி- அவர்களைப் பயிற்றி வளர்க்க விரும்பிப்- பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்தை வந்தடைந்தார். 1985.06.17இல் ஓய்வுபெறுவதற்கு முன்பாக இரண்டு ஆண்டுகள் அங்கு உபஅதிபராகவும் பணிபுரிந்துள்ளார். ஓய்வு பெறுவது வரை பாடசாலை அபிவிருத்திக்காகப் பேருழைப்பு வழங்கியுள்ளார்.

பொன்னம்பலம் செல்லத்துரை அவர்கள் பன்னாலையைச் சேர்ந்த சுப்பிரமணியம் மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் புதல்வி கனகேஸ்வரியைத் திருமணஞ் செய்து நான்கு குழந்தைகளுக்குத் தந்தை ஆயினார். இல்லறத்தை நல்லறமாகக் கொண்டு வாழ்ந்த அவர் தெய்வபக்தி, குருபக்தி என்பவற்றிலும் உயர்ந்து நின்றவர். வையத்து வாழ்வாங்கு வாழ்ந்தவர். அன்னார் 2003.12.07 இல் இறைவன் திருவடி இணையை எய்தி இன்புற்றார்.

**பொன்னம்பலம் செல்லத்துரை நினைவு மலரிலிருந்து.**

# வைத்தியர்கள்

1. **ஆயுள்வேத வைத்தியர் வைத்தியநாதர் விசுவநாதர்**
   கந்தையா திருநாவுக்கரசு
2. **வைத்தியகலாநிதி மயில்வாகனம் அருமைநாயகம்**
3. **வைத்தியகலாநிதி கந்தையா நாகலிங்கம் M.O.H**
   திருமதி அமிர்தயோகேஸ்வரி முத்துக்குமாரசாமி
4. **வைத்தியகலாநிதி வயரவப்பிள்ளை சிவஞானவேல்**
   வயிரவப்பிள்ளை சிவஞானவேல்
5. **வைத்தியகலாநிதி சிவபாதநாயகி கனகசபை**
6. **வைத்தியகலாநிதி சிவபாலரத்தினம் ராம்மனோகர்**
7. **வைத்தியகலாநிதி சிவநேஸ்வரி சிவானந்தா**
   திருமதி இராஜேஸ்வரி சண்முகரத்தினம்
8. **வைத்தியகலாநிதி உதயராணி குணதயாளன்**
   கந்தையா திருநாவுக்கரசு
9. **வைத்தியகலாநிதி சிவரதி கேதீஸ்வரன்**
10. **வைத்தியகலாநிதி கலைச்செல்வி முரளீதரன்**
11. **வைத்தியகலாநிதி சொக்கலிங்கம் செந்தில்மோகன்**
12. **வைத்தியகலாநிதி சிவரூபி செல்வநாதன்**
    சிவசங்கரப்பிள்ளை ஏரம்பமூர்த்தி
13. **வைத்திய கலாநிதி சண்முகநாதன் சிறிபவானந்தராசா**
    கந்தையா திருநாவுக்கரசு
14. **வைத்தியகலாநிதி சொக்கலிங்கம் செந்திற்குமரன்**

15. வைத்தியகலாநிதி நளாயினி சோமசுந்தரம்

16. வைத்தியகலாநிதி சுபாஜினி செந்தில்மோகன்

17. வைத்தியகலாநிதி சிவஸ்ரீ சபாரத்தினக்குருக்கள் கணேசானந்தன்
சிவ. இ. சபாரத்தினக்குருக்கள்

18. வைத்தியகலாநிதி சபாரத்தினம் கணேசன்

19. வைத்தியகலாநிதி இராஜகௌரி பஞ்சலிங்கம்

20. வைத்தியகலாநிதி கௌரிமனோகரி தெய்வேந்திரன்

21. வைத்தியகலாநிதி திருவாதவூரர் இரத்தினகோபால்

22. வைத்தியகலாநிதி திருவாதவூரர் விஜயகோபால்

23. வைத்தியகலாநிதி சிவாநந்தினி உதயகுமார்

24. வைத்தியகலாநிதி ஆனந்தரூபி ஏரம்பமூர்த்தி

25. கலைவாணி செல்வரத்தினம்

26. வைத்தியகலாநிதி பார்வதிதேவி சிவானந்தம்

27. வைத்தியகலாநிதி இராசரத்தினம் பவானந்தன்

28. வைத்தியகலாநிதி செல்லையா சின்னத்தம்பி

29. வைத்தியகலாநிதி கதிர்காமத்தம்பி துரைசிங்கம்

30. வைத்தியகலாநிதி முருகேசு குணரத்தினம்

31. வைத்தியகலாநிதி செல்லையா சின்னத்தம்பி

32. வைத்தியகலாநிதி கலாரஞ்சினி ஆறுமுகம்

சையனத் திரியேல் - *ஔவையார்*

உ
சிவமயம்

# ஆயுள்வேத வைத்தியர் வைத்தியநாதர் விசுவநாதர்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் பன்னாலையில் வாழ்ந்த வைத்தியநாதர் தம்பதியர்க்கு அருமைப் புதல்வராகப் பிறந்தவர் விசுவநாதர். மிக மகத்தான வைத்திய சேவையைத் தமதாகக் கொண்டவர் இவர். வாதம், சன்னி, விஷகடி எனும் முத்துறைகளிலும் தெளிவான அறிவைப் பெற்றவராக இவர் இருந்தமை பன்னாலைக் கிராமத்திற்கு மட்டுமன்றி அயற்கிராம மக்களான அளவெட்டி, இளவாலை கீரிமலை, மாவிட்டபுரம், தெல்லிப்பழை போன்ற ஊர்களில் உள்ளவர்களுக்கும் பெரும் வரப்பிரசாதமாயது. மிகத் தூரத்துள்ள நோயாளிகளும் எந்தவேளையும் வந்து குவிந்தவண்ணமே இருப்பர். வைத்தியர் விசுவநாதர் ஆற்றிய பணியால் பன்னாலை பெருங் கௌரவம் பெற்றது. இந்த வைத்தியத்துறைப் பயிற்சியுடனாகித் தொழில் புரியும் வாய்ப்பை வளஞ் செய்யக்கூடிய மரபினர் யாருஞ் சந்திக்காதது நந்தவக்குறைவே.

-தகவல் தந்தவர் : கந்தையா திருநாவுக்கரசு

உ
சிவமயம

# வைத்தியகலாநிதி மயில்வாகனம் அருமைநாயகம்



மயில்வாகனம் இளையபிள்ளை தம்பதியர்க்கு மூத்த புதல்வராகப் பன்னாலையில் 1943.07.04ஆந் தேதி பிறந்தவரே அருமைநாயகம் அவர்கள். அவர் தமது ஆரம்பக் கல்வியைப் பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்தில் ஆரம்பித்துத் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் இடைநிலைக் கல்வியைத் தொடர்ந்து உயர்கல்வி பெறுவதற்காகக் கொழும்புப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு 1964இல் தெரிவாகித் தொடர்ந்து கற்றவர் 1969இல் மருத்துவக் கல்வியை நிறைவுசெய்து யாழ்ப்பாணம் மட்டக்களப்புப் பிரதேசங்களில் ஏழு ஆண்டுகள் சேவையாற்றி இங்கிலாந்து சென்று D.P.M., M.R.C.P பரீட்சைகளில் தேர்ச்சி பெற்று மனநோய் வைத்திய ஆலோசகராகப் பணிபுரிந்து இப்போது சேவையினின்றும் ஓய்வுபெற்றுள்ளார்.

சேரிடம் அறிந்து சேர் - *ஔவையார்*

உ
சிவமயம்

# வைத்திய கலாநிதி கந்தையா நாகலிங்கம் M.O.H
1905 - 1957

வட்டுக்கோட்டையில் கந்தையா செல்லம்மா தம்பதியர்க்கு 1905இல் தோன்றியவர் தான் வைத்திய கலாநிதி கந்தையா நாகலிங்கம் அவர்கள். ஆரம்பக் கல்வியைத் தமது ஊர்ப் பாடசாலையில் பெற்றுக்கொண்டவர். இடைநிலைக் கல்வியை யாழ். இந்துக் கல்லூரியில் நிறைவுசெய்துகொண்டார் மருத்துவக் கல்வியைக் கொங்கொங் சர்வகலாசாலையிற் படித்து முடித்து அக்கரைப்பற்று அரசினர் மருத்துவமனையில் 1938இல் வைத்திய சேவையில் ஈடுபட்டார். பன்னாலை வாழ் நீதவான் வைத்திலிங்கம் புதல்வி ஞானாம்பிகையை 1939இல் திருமணஞ் செய்துகொண்டார்கள். திருமணத்துடன் இங்கேயே நிரந்தரமாக வாழத் தொடங்கினார்கள். மட்டக்களப்பிற் சேவையை ஆரம்பித்தவர் யாழ்ப்பாணத் தொகுதிக்கு 1948இல் அவர் விருப்பிற்குப் புறம்பாகவே மாற்றப்பட்டார்கள்.

1951இல் இலண்டன் பல்கலைக்கழகத்திற்கு இலங்கை அரசினரின் உபகாரநிதி பெற்று விசேட பயிற்சிபெறச் சென்றவர் மீண்டுவந்து யாழ்ப்பாணத்தில் M.O.H ஆகப் பணிபுரியத் தொடங்கினார். அதேவேளை பலாலி விமான நிலைய மருத்துவப் பரிசோதகராகவும் பணிபுரிந்தார். பல இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் மருத்துவத்துறையிற் பயிற்சி அளித்து அவர்களுக்கு வேலை வாய்ப்பும் கிட்டச்செய்தார். இடைக்கால வகுப்புக்களையும் போட்டிப் பரீட்சைகளையும் வைத்து அவர்களை ஊக்குவித்தார்.

தெல்லிப்பழையில் தமது அலுவலகத்தை வைத்துக்கொண்டவர் வலிகாமம் பகுதியில் பல மருத்துவ நிலையங்கள் தோன்றுவதற்குங் காரணரானார். பொது மலகூடங்களை அமைக்க உதவியது மூலம் சூழல் மாசடையாவகை பார்த்துக்கொண்டார். மக்களின் தூய வாழ்விற்கு வேண்டுவன எல்லாஞ் செய்து கொடுத்தார். மலேரியாக் காய்ச்சல் பரவாத வகை நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த ஆவன செய்தார். சுகாதாரக் கட்டுப்பாட்டுடனாகிய புனித வாழ்விற்குத் தம்மால் முடிந்த உதவிகளைச் செய்தவர் அவர். இவர் சேவையை முன்னாள் கௌரவ சுகாதார அமைச்சர் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கா புகழ்ந்து பாராட்டியுள்ளார். அன்னார் 1957இல் இவ்வுலக வாழ்வை நீத்தார்கள்.

- செய்தி தருநர் : **திருமதி அமிர்தயோகேஸ்வரி முத்துக்குமாரசாமி.**

உ
சிவமயம்

# வைத்திய கலாநிதி வயிரவப்பிள்ளை சிவஞானவேல்



பன்னாலை வயிரவப்பிள்ளை சின்னத்தங்கம் தம்பதியர்க்கு 1937.11.12இற் பிறந்தவராகிய வைத்தியகலாநிதி சிவஞானவேல் அவர்கள் ஆரம்பக் கல்வியைப் பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்தில் ஆரம்பித்துத் தொடர்ந்து தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் இடைநிலைக் கல்வியை நிறைவுசெய்து கொழும்புப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானார். அங்கு மருத்துவத் துறைக் கல்வியைத் தொடர்ந்து M.B.B.S. என்னுந் தரத்துடனாகி வெளியே வந்தார்.

இங்கே வைத்தியகலாநிதியாகிப் பணிபுரியும் வேளையிற் பட்ட மேற்படிப்புக்களாய M.R.C,P. முதலான தரங்களை இங்கிலாந்து ஸ்கொட்லண்ட் என்னும் நாடுகளின் மருத்துவப் பல்கலைக்கழகப் பரீட்சைகளுக்குத் தோற்றியதன் மூலம் அணுகி உயர்ந்து நின்றார்.

ஈழநாட்டின் பல்வேறு பாகங்களிலும் வேலை செய்து மிக உயர்ந்த தரத்திலான வைத்தியர் என்ற பாராட்டையும் பெற்றுக்கொண்டார். போர்க் காலச் சூழ்நிலையில் நாட்டிலேற்பட்ட அசம்பாவிதங்கள் காரணமாக நாட்டை விட்டு வெளியேறிய வைத்தியகலாநிதி இப்போது இலண்டனில் தம் சேவையைத் தொடருகின்றார்.

இளவாலையைச் சேர்ந்தவருங் கல்லூரி அதிபருமாய சிவராசாவினது மகள் வைத்திய கலாநிதி சாரதாவைத் திருமணஞ் செய்து பெற்றெடுத்த பிள்ளைகள் மூவரும் வைத்திய கலாநிதிகளாகவே திகழுகின்றனர்.

தமிழரசுத் தந்தை ஐ.து.ஏ. செல்வநாயகம் அவர்கள் இறுதிக் காலத்து நிகழ்ந்த உடல் தாக்கத்திற்கு வேண்டிய சிகிச்சை அளித்து, உயிர் பிரியும் வேளை எந்த வித துன்பமும் இல்லாது அமரத்துவமெய்த வழிசமைத்த பெருமையை இன்றும் மனமுருகி நினைவு கூர்பவர் வைத்தியகலாநிதி சிவஞானவேல் அவர்கள்.

தகவல் தந்தவர்: **வயிரவப்பிள்ளை சிவஞானவேல்**

உ
சிவமயம்

# வைத்தியகலாநிதி சிவபாதநாயகி கனகசபை



பன்னாலை கனகசபை தங்கப்பிள்ளை தம்பதியர்க்கு 1944 இற் புதல்வியாகப் பிறந்தவர்தான் திருமதி சிவபாதநாயகி கனகசபை அவர்கள். ஆரம்பக் கல்வியைப் பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்திற் பெற்ற இவர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் இடைநிலைக் கல்வியைப் பெற்றார். அங்கிருந்து பேராதனைப் பல்கலைக்கழக மருத்துவத்துறைக்குத் தெரியப்பட்டுப் பயிற்சி பெற்று வைத்திய கலாநிதியாகி 1974இல் வெளியேறினார். இலங்கையின் பல பாகங்களிலும் சேவை செய்த இவர் இறுதியில் யாழ் போதனா வைத்தியசாலையிற் சிறுவர் பகுதிச் சிரேஷ்ட வைத்திய அதிகாரியாகப் பணிபுரிந்தார். 2002இல் சேவையினின்றும் ஓய்வுபெற்றுள்ளார்.

# வைத்தியகலாநிதி சிவபாலரத்தினம் ராம்மனோகர்

சிவபாலரத்தினம் தம்பதியர்க்கு 1966ஆம் ஆண்டு பன்னாலையிற் பிறந்த பிள்ளைதான் ராம்மனோகர் அவர்கள். அவர் தமது இடைநிலைக் கல்வியைத் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிற் கற்றவர். கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையை யாழ்ப்பாணம் புனித ஜோண்ஸ் கல்லூரி மூலம் நிறைவுசெய்தவர். 1989இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டார். 1995இல் மருத்துவக் கல்வியை நிறைவு செய்து வெளியேறியவர் இலங்கையின் பல பாகங்களிலும் வேலை செய்தார். 2002இல் இலண்டன் சென்று M.R.C.P. பரீட்சையிற் சித்திபெற்று அங்கேயே சேவை செய்கின்றார்.

உ
சிவமயம்

# வைத்திய கலாநிதி சிவநேஸ்வரி சிவானந்தா

MBBS (SL) FAAP (USA)



வைத்திய கலாநிதி திருமதி சிவனேஸ்வரி சிவானந்தா 1949ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14ந் திகதி பன்னாலை விநாயகமூர்த்தி, சரஸ்வதியம்மா தம்பதியர்க்கு இரண்டாவது புத்திரியாகப் பிறந்தார்.

இவர் தமது ஆரம்பக் கல்வியை நான்காம் வகுப்புவரை கொழும்பிலும் பின்னர் தெல்லிப்பழை; மகாஜனக் கல்லூரியிலும் கற்றுக் க.பொ.த. (உ.த) பெறுபேற்றின் அடிப்படையில் 1969ஆம் ஆண்டு ஒக்டோர் மாதம் கொழும்புப் பல்கலைக்கழக வைத்திய பீடத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டார்.

இவர் 1994ஆம் ஆண்டு வைத்திய கலாநிதிப் பட்டம் பெற்று 1994 தொடக்கம் 1995 வரை ஓராண்டு காலம் யாழ். மாவட்ட வைத்தியசாலையிலும் 1995 ஆம் ஆண்டு முதல் 1996ஆம் ஆண்டு வரை புங்குடுதீவு மாவட்ட வைத்தியசாலையிற் பொறுப்பாளராகவும் சேவையாற்றினார். 1996ஆம் ஆண்டு முதல் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேவை புரிந்தார்.

இவர் 1979ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வறணி மாணிக்கவாசகர் தம்பதியின் சிரேஷ்ட புதல்வனும், சிறப்புப் பொறியியலாளருமான சிவானந்தாவைத் திருமணம் செய்து கீர்த்தனா, வருணன் ஆகிய இரு பிள்ளைகளுக்கு அன்னை ஆகினார்.

மனித இனவியலில் கலாநிதிப் பட்டப் படிப்பை இவர் 1990ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய இராச்சியத்தில் ஐந்து வருட மேலதிக படிப்பை மேற்கொண்டு குழந்தை வைத்தியத்திலும், அதனைத் தொடர்ந்து நரம்பியலிலும் நிபுணத்துவம் பெற்றார். அதன் பின்னர் ஆறு மாதங்கள் கனடாவிலும், தொடர்ந்து அமெரிக்க ஐக்கிய இராச்சியத்திலும் வைத்திய நிபுணராகச் சேவையாற்றி வருகின்றார்.

தகவல் தந்தவர் : **திருமதி இராஜேஸ்வரி சண்முகரத்தினம்**

உ
சிவமயம்

# வைத்திய கலாநிதி உதயராணி குணதயாளன்



பன்னாலை திருநாவுக்கரசு சிவபாக்கியம் தம்பதியர்க்குப் புதல்வியாக 1960.12.29இல் பிறந்தவரே திருமதி உதயராணி குணதயாளன் என்பவர். பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியை ஆரம்பித்துத் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் இடைநிலைக் கல்வியை வளர்த்த அவர் க.பொ.த. உயர்தரத்தை அங்கேயே நிறைவுசெய்து கொழும்புப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்குத் தெரிவானார். 1978இல் மருத்துவ பீடப் பயிற்சியுட் புகுந்தவர் 1984இல் பயிற்சியை நிறைவுசெய்து வெளியேறி ஈழத்தின் பல பாகங்களிலும் சேவைசெய்தார். யாழ்ப்பாணம் உவில்லியம் ஹாபே மருத்துவமனையிற் பொறுப்பதிகாரியாகவும் வடஇலங்கை மருத்துவ பீட மாணவர்களுக்குப் போதனாசிரியராகவுந் திகழ்ந்தார். இப்பொழுது கனடாவில் தன் கணவன் பிள்ளைகளுடனாகிய சேவையைப் பெரிதாக மதித்து வாழ்ந்துகொண்டிருக்கிறார்.

தகவல் தந்தவர் : **கந்தையா திருநாவுக்கரசு.**

# வைத்திய கலாநிதி சிவரதி கேதீஸ்வரன்

(Dental Surgeon)

1973.09.15ஆந் தேதி பன்னாலை சிவபாலன் மகேஸ்வரி தம்பதியர்க்குப் புதல்வியாகப் பிறந்தவர் சிவரதி அவர்கள். தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் கல்வி பயிலத் தொடங்கிய இவர் 1996இல் பேராதனை மருத்துவபீடப் பற் சிகிச்சைப் பிரிவிற்குத் தெரிவாகி உயர்கல்வி பெற்று 2001இல் தமது கல்வியை முடித்துக்கொண்டு வெளியேறினார்.

சங்கீதம், வீணை வாசித்தல், நடனம் என்பவற்றிலும் தேர்ச்சிபெற்ற சிவரதி கல்லூரியிற் பயின்ற காலத்திற் பல பரிசில்களும் பெற்றுள்ளார். உள்ளூர் ஆலயங்களில் பஞ்சபுராணம் பாடி அனைவரையும் மெய்மறக்கச் செய்பவர்.

கருகம்பனையைச் சேர்ந்த பொன்மயிலைநாதன் புதல்வன் கேதீஸ்வரனை அவுஸ்திரேலியாவிற் திருமணஞ் செய்து அங்கேயே வாழ்ந்துகொண்டிருக்கின்றார்.

உ
சிவமயம்

# வைத்தியகலாநிதி கலைச்செல்வி முரளீதரன்



பன்னாலை சோமசுந்தரம் தவமணிதேவி தம்பதியர்க்குப் புதல்வியாக 1971இற் பிறந்தவரே கலைச்செல்வி அவர்கள். பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியைப் பெறத் தொடங்கிய கலைச்செல்வி தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியிலும் வேம்படி மகளிர் கல்லூரியிலும் இடைநிலைக் கல்வியைத் தொடர்ந்து 1994இல் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் உயர்கல்வி பெறுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 2000இல் தமது மருத்துவக் கல்வியை நிறைவுசெய்தவர் கொழும்பு தேசிய மருத்துவமனை, மாவனல்லை அரசினர் மருத்துவமனை என்பவற்றிற் பணிபுரிந்தவர். திரு. முரளீதரன் என்பவரை 2001இல் திருமணஞ் செய்தவர் இங்கிலாந்து சென்று புவோளி (Purley) மருத்துவமனையிற் பணிபுரிகின்றார்.

# வைத்தியகலாநிதி சொக்கலிங்கம் செந்தில்மோகன்

பன்னாலை சொக்கலிங்கம் இராசலட்சுமி தம்பதியர்க்குப் புதல்வராகப் பிறந்தவர் செந்தில்மோகன். தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் தமது கல்வி முயற்சியை ஆரம்பித்த செந்தில்மோகன் தமிழ்நாடு மதுரை சென்று மருத்துவக் கல்வியைப் பூர்த்திசெய்தார். பன்னாலையைச் சேர்ந்த இளையதம்பி ஜெகதீஸ்வரி தம்பதியர் தம் தனிப்பெரும் புதல்வி வைத்தியகலாநிதி சுபாஜினியை 1995ல் திருமணஞ் செய்துகொண்டவர் மனைவியுடன் கனடா சென்று பட்டப்பின் படிப்பை நிறைவுசெய்து Emergecy Physician ஆக அங்கு பணிபுரிந்துகொண்டிருக்கிறார்.

உ
சிவமயம்

# வைத்திய கலாநிதி சிவரூபி செல்வநாதன்



பன்னாலை ஏரம்பமூர்த்தி தம்பதியர்க்குப் பிள்ளையாக 1971.04.14ஆந் தேதி பிறந்தவரே திருமதி சிவரூபி செல்வநாதன் அவர்கள். ஆரம்பக் கல்வி இடைநிலைக் கல்வி என்ற வகையில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் நிறைவுசெய்துகொண்டு சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் உயர்கல்வியைப் பெற்று 1994 இல் யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்குத் தெரிவானார். 2000இல் மருத்துவ பீடத்தினின்றும் வெளியேறியவர் நாவலப்பிட்டி மருத்துவமனையிற் சேவை புரிந்து இப்பொழுது கொழும்பு பொது வைத்தியசாலையிற் பணியைத் தொடருகின்றார்.

தகவல் தந்தவர் : **சிவசங்கரப்பிள்ளை ஏரம்பமூர்த்தி**

# வைத்திய கலாநிதி சண்முகநாதன் சிறிபவானந்தராசா

சண்முகநாதன் சரஸ்வதி தம்பதியர்க்கு 1960.07.18ஆம் தேதி பன்னாலையிற் புதல்வர் சிறிபவானந்தராசா பிறந்தார். பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்திற் சேர்ந்து கற்கத் தொடங்கிய சிறிபவானந்தராசா தொடர்ந்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிற் பயின்றார். வைத்திய கலாநிதி சிறிபவானந்தராசா இப்பொழுது யாழ். போதனா வைத்தியசாலையிற் பணிபுரிகின்றார்.

தகவல் தந்தவர் : **கந்தையா திருநாவுக்கரசு.**

துன்பத்திற்கு இடம்கொடேல் *ஔவையார்*

உ
சிவமயம்

# வைத்தியகலாநிதி சொக்கலிங்கம் செந்திற்குமரன்

பன்னாலை வாழ் சொக்கலிங்கம் இராசலட்சுமி தம்பதியர்க்கு மூத்த புதல்வராகப் பிறந்தவரே வைத்தியகலாநிதி செந்தில்குமார் அவர்கள். தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் தமது கல்வியை ஆரம்பித்த செந்தில்குமார் அவர்கள் திறமை அடிப்படையிற் கொழும்புப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்குத் தெரிவாகி அங்கு உயர் கல்வியைத் தொடர்ந்தார். மருத்துவக் கல்வியை நிறைவுசெய்ததும் சிலகாலம் இலங்கையிலேயே பணியாற்றினார். பின்னர் மேற்படிப்பிற்காக இங்கிலாந்து சென்றவர் படிப்பை முடித்த பின்னும் அங்கேயே பணியாற்றுகின்றார்.

# வைத்தியகலாநிதி நளாயினி சோமசுந்தரம்



பன்னாலை சோமசுந்தரம் தவமணிதேவி தம்பதியர்க்குப் புதல்வியாக 1973.10.01இற் பிறந்தவரே செல்வி நளாயினி சோமசுந்தரம் அவர்கள். தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் தமது கல்வியை ஆரம்பித்த நளாயினி யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் தொடர்ந்து 1996இல் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு உயர்கல்வித் தேர்ச்சியின் பொருட்டுத் தெரிவாகினார். 2002இல் மருத்துவக் கல்வியை நிறைவுசெய்து கொண்டவர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேவையை ஆரம்பித்து இப்போது புத்தளம் மருத்துவமனையிற் சேவைசெய்கின்றார்.

# வைத்தியகலாநிதி சுபாஜினி செந்தில்மோகன்

பன்னாலை இளையதம்பி ஜெகதீஸ்வரி தம்பதியர்க்குத் தனிப்பெரும் மகவாக 1970இல் பிறந்தவரே சுபாஜினி அவர்கள். பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியைக் கற்கத் தொடங்கிய சுபாஜினி தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் இடைநிலைக் கல்வியைத் தொடர்ந்தார். இந்தியாவில் தமது மருத்துவக் கல்வியைத் தொடர்ந்து நிறைவு செய்தவர் பன்னாலை சொக்கலிங்கம் இராசலட்சுமி தம்பதியர் புதல்வன் வைத்திய கலாநிதி செந்தில்மோகன் என்பவரைத் திருமணஞ்செய்து கொண்டு கனடாவில் வைத்திய சேவையுடனாகி வாழுகின்றனர்.

உ
சிவமயம்

# வைத்தியகலாநிதி சிவஸ்ரீ சபாரத்தினக்குருக்கள் கணேசானந்தன்



1966.08.20ஆம் தேதி பன்னாலை சோதிடகலாநிதி சிவஸ்ரீ இ. சபாரத்தினக் குருக்கள் மைந்தனாகி வந்த கணேசானந்தன் அவர்கள் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் தமது கல்வி முயற்சியை ஆரம்பித்து க.பொ.த. சாதாரணதரம் வரை கற்றார். க.பொ.த. உயர் கல்வியை யாழ்ப்பாணம் புனித ஜோண்ஸ் கல்லூரியில் நிறைவுசெய்து யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்குத் தெரிவானார். யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் 1986 - 1994 காலப் பகுதியிற் பயிற்சி பெற்று வெளியேறி 1995இல் கொழும்பு தேசிய மருத்துவ மனையில் உள்ளகப் பயிற்சியை நிறைவாக்கி மொனறாக்கல அரசினர் மாவட்ட மருத்துவமனையிற் சேவையை ஆரம்பித்துக் கொழும்பு டி சொய்சா மருத்துவமனையில் தொடர்ந்தார். 2001இல் '**பிரசவமும் பெண் நோயியலும்**' என்னும் பயிற்சி நெறிக்குத் தெரிவாகி 2002 - 2004 காலப்பகுதியிற் கொழும்பு காசல்வீதி அரசினர் போதனா மருத்துவமனை, றாகம அரசினர் போதனா மருத்துவமனை என்பவற்றிற் பயின்று பட்டப்பின் படிப்புப் பரீட்சையிற் சித்தி எய்தினார். இப்போது பேராதனைப் போதனா வைத்தியப் பல்கலைக்கழகப் பிரிவில் Senior Registar in obstetrics and Gynaecology ஆகப் பணிபுரிகின்றார். 2005 ஆம் வருட இறுதியில் '**பிரசவமும் பெண் நோயியலும்**' என்னுந் துறையில் உயர் கல்வி கற்பதற்காக வெளிநாடு செல்லவுள்ளார் என்பதுங் குறிப்பிடத்தக்கது.

தகவல் தந்தவர் :சிவ **இ.சபாரத்தினக்குருக்கள்**

# வைத்தியகலாநிதி சபாரத்தினம் கணேசன்



சபாரத்தினம் மகேஸ்வரி தம்பதியர்தம் மூத்த புதல்வனாகி 1969.06.21ஆந் திகதி பிறந்தவரே கணேசன் அவர்கள். தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் தமது கல்வி முயற்சியை ஆரம்பித்த கணேசன் புலமை பரிசிற் பரீட்சையிற் சித்தியடைந்து யாழ். இந்துக் கல்லூரியில் படிப்பைத் தொடர்ந்து யாழ். சித்த மருத்துவத்துறைக்குத் தெரிவாகி அங்கு சிறப்புத் தேர்ச்சி பெற்று மூன்று ஆண்டுகள் அங்கு உதவி விரிவுரையாளராகப் பணிபுரிந்தார்.

பின்னர் கரவெட்டி மத்திய ஆயுள்வேத மருந்தகத்தின் வைத்தியப் பொறுப்பு அதிகாரியாக நியமனம் பெற்றார். இப்போது கிளிநொச்சியிற் பணிபுரிகின்றார்.

சாயிபாபா மெடிக்கல் கிளினிக் என ஒரு தாபனத்தை ஆரம்பித்துத் தனது வைத்திய சேவையைக் கடந்த ஐந்து ஆண்டுகளாக நெறிப்படுத்தி வருகின்றார். சமய சமூகப் பணிகளிலும் தமது உழைப்பை நல்கிவரும் வைத்தியகலாநிதி கணேசனது பணிகள் தொடர இறையருளை வேண்டுதல் செய்வோம்.

# பொறியியலாளர்கள்

1. **பொறியியலாளர் நடராசா தனபாலன்**
   நடராசா தனபாலன்

2. **பொறியியலாளர் நடராசர் சடகோபன்**
   கனகசபை நடராசர்

3. **பொறியியலாளர் வேலுப்பிள்ளை நந்தீஸ்வரன்**

4. **பொறியியலாளர் சிவபாலன் பகீரதன்**
   செல்லையா சிவபாலன்

5. **பொறியியலாளர் திருநாவுக்கரசு உதயகுமார்**
   திருநாவுக்கரசு உதயகுமார்

6. **பொறியியலாளர் சண்முகரத்தினம் இராஜீவன்**
   திருமதி இராஜேஸ்வரி சண்முகரத்தினம்

7. **பொறியியலாளர் திருநாவுக்கரசு செந்திற்குமரன்**
   கந்தையா திருநாவுக்கரசு

8. **பொறியியலாளர் தம்பையா சுதாபரன்**

9. **பொறியியலாளர தங்கராசா பகீரதன்**

10. **பொறியியலாளர இரத்தினம் ரமணன்**

11. **பொறியியலாளர இரத்தினம் ரோகிதன்**

12. **பொறியியலாளர இரத்தினம் ரஞ்சிதன்**

13. **பொறியியலாளர செல்லத்துரை கிருபானந்தன்**

14. **பொறியியலாளர சண்முகம் தில்லைநடராசா**

உ
சிவமயம்

# பொறியியலாளர் நடராசா தனபாலன்

(B.Sc Electrical Engineering)



பன்னாலை நடராசா செல்வநாயகி தம்பதியரின் மைந்தன் தனபாலன் அவர்கள் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் தமது கல்வி முயற்சியை ஆரம்பித்தவர் கொழும்பு இறத்மலானை இந்துக் கல்லூரியிற் தொடர்ந்து மொறட்டுவ பல்கலைக்கழகப் பொறியியல் பீடத்திற்குத் தெரிவாயினர். அங்கு பயிற்சி நிறைவெய்தியதும் 1974 - 1975 காலப்பகுதியில் அதே பீடத்தில் தற்காலிக விரிவுரையாளராகப் பணியாற்றினார்.. பின் பொறியியலாளராகப் பலவிடங்களிலும் பணியாற்றியவர் 1994 இல் பட்டயப் பொறியியலாளர் என்னும் பட்டம் பெற்றார். 1982இல் I.L.O., Turin, Italy புலமைப்பரிசில் பெற்றுச் சென்றார். 1984 - 1990 காலப்பகுதியில் வடக்கு மாகாண நிர்மாணக் கட்டமைப்புப் பொறியியலாளராகக் கடமை ஆற்றினார். 1994இல் பிரதம பொறியியலாளராகப் பதவி உயர்வுபெற்றவர் 2000ஆம் ஆண்டிலிருந்து இலங்கை மின்சார சபையின் கிழக்குப் பிராந்தியப் பிரதிப் பொது முகாமையாளராகப் பணிபுரிகின்றார்.

இவர் கருகம்பனை கதிர்காமத்தம்பி மகள் ஜெயக்குமாரியைத் திருமணஞ் செய்து மூன்று குழந்தைச் செல்வங்களுக்குத் தந்தை ஆயினார் என்பது குறிப்பிடத்தக்கது.

தகவல் தந்தவர் : **நடராசா தனபாலன்**

# பொறியியலாளர் நடராசர் சடகோபன்



பன்னாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட சடகோபன் அவர்கள் அவ்வூர் நடராசர் சரோஜினி தேவி தம்பதியர்தம் இரண்டாவது மைந்தன் என்பது குறிப்பிடத்தக்கது. ஆரம்பந் தொடக்கம் க.பொ.த. உயர்தரம் வரை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிற் கற்றவர் ஆவர். அங்கிருந்து மொறட்டுவ பல்கலைக்கழக பொறியியல் பீடத்திற்குத் தெரிவாகிப் பயிற்சி பெற்று வெளியேறிக் கொழும்பில் 1996 முதல் 1998 வரை சேவைசெய்தார். பின் சிங்கப்பூர் சென்று சிறிது காலம் அங்கே சேவைசெய்தவர். கனடா ஒன்ராறியோ சென்று அங்கு பொறியியலாளராகிப் பணிபுரியத் தொடங்கி அந்த இடத்தை வாழ்விடமாக்கிக் கொண்டார். இப்பொழுது குடும்பத்துடன் அங்கேயே வாழ்ந்துகொண்டிருக்கிறார்.

தகவல் தந்தவர் : **கனகசபை நடராசர்**

உ
சிவமயம்

# பொறியியலாளர் வேலுப்பிள்ளை நந்தீஸ்வரன்

(Civil Engineer)



வேலுப்பிள்ளை செல்லம் தம்பதியர்க்கு 1949.01.18இற் பிறந்த மைந்தன் நந்தீஸ்வரன். பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்திற் கல்வியை ஆரம்பித்த இவர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியைத் தொடர்ந்து பேராதனைப் பல்கலைக்கழகம் பொறியியல் பீடத்தில் 1969 - 1973 காலப் பகுதியிற் பயின்று 1974 இல் வெளியேறி இலங்கையின் பல பாகங்களிலும் சேவை செய்து 1978 - 1982 காலப் பகுதியில் யாழ் மாவட்டப் பொறுப்பதிகாரியாகப் பணிபுரிந்தவர். 1982 - 1986 காலப் பகுதியில் மலேசியாவில் (Reginal Engineer for Development Project) பிரதேச கிராம அபிவிருத்தித் திட்டத்திற்கு ஐந்து ஆண்டுகள் பொறுப்பதிகாரியாக இருந்தார். 1986 - 1992 காலப் பகுதியில் நியூசிலாந்திலும், 1992 - 1993 காலப் பகுதியில் கனடா (Municipality of Markham) மார்க்காம் மாநகரசபையிலும் பணி புரிந்தவர். 1994 முதல் (Qualified code officer) உத்தியோக பூர்வப் பொறியியலாளராக ஒன்ராறியோவிற் பணிபுரிந்து கொண்டிருக்கின்றார்.

பன்னாலை கணேச சனசமூக நிலையத்திற்கு நிதி திரட்டித் தேவையான கட்டிடம் அமைக்க முன்னின்றுழைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பொறியியலாளர் சிவபாலன் பகீரதன்

(Civil Engineer)



1972.04.26ஆந் தேதி பன்னாலை சிவபாலன் மகேஸ்வரி தம்பதியர்க்குப் புதல்வராகத் தோற்றியவர்தான் பகீரதன் அவர்கள். தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியிலே இவர் தமது கல்வியை ஆரம்பித்து 1994இல் பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியல் பீடத்திற்குத் தெரிவாகி அங்கு உயர்கல்வியை 2000ஆம் ஆண்டு நிறைவுசெய்து வெளியேறியவர் கொழும்பிற் சில நிறுவனங்களில் சேவைசெய்தார். இசைப்பயிற்சி மிருதங்க வாத்தியப் பயிற்சி என்பவற்றிலும் தேர்ச்சிபெற்றவராக விளங்குகின்றார். மிருதங்க வாத்திய அரங்கேற்றம் நிகழ்ந்ததுமுண்டு. ஆலயங்களில் திருமுறைப் பாடல்களைக் கேட்பவர் மனமுருகும்படி பாடிப் பாராட்டும் பெற்றவர்.

தகவல் தந்தவர் : **செல்லையா சிவபாலன**

உ
சிவமயம்

# பொறியியலாளர் திருநாவுக்கரசு உதயகுமார்

(Electrical Engineer)



திருநாவுக்கரசு சிவபாக்கியம் தம்பதியர் 1963.05.28இற் பெற்ற மூத்த புதல்வனே உதயகுமார். பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்திற் கல்வியை ஆரம்பித்தவர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் தொடர்ந்து மொறட்டுவப் பல்கலைக்கழகப் பொறியியல் பீடத்திற்கு 1981இல் தெரிவாகி மின் பொறியியல் துறையிற் கற்றவர். 1983இல் நாட்டிலேற்பட்ட கலவரத்தால் அங்கு தொடர்ந்து கற்க வாய்ப்பேற்படவில்லை. பின்னர் 1984 இல் தமிழ்நாடு கோயம்புத்தூர் பொறியியற் கல்லூரியில் தொடர்ந்து கற்று 1988இற் பட்டப்படிப்பை நிறைவு செய்து வெளியேறியவர். ஸ்ரீலங்கா கட்டளை நிறுவனத்தில் மேற்பார்வை உத்தியோகத்தராக இன்றுவரை பணிபுரிந்து வருகின்றார். ஜெயவர்தன பல்கலைக்கழகத்தில் இவர் முதுமாணிப் பட்டம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இவர் Electrical Electronic Engineering துறைசார்ந்த கல்வியைப் பயின்றவர்.

தகவல் தந்தவர் : **திருநாவுக்கரசு உதயகுமார்**

# பொறியியலாளர் K.S. இராஜீவன்

Meng(Enu) BSc Eng (Civil) (Hons) AMIE (SL)



பன்னாலை சண்முகரத்தினம் இராஜேஸ்வரி தம்பதியின் புத்திரராக 1973.12.23இல் இராஜீவன் பிறந்தார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை யா/ மகாஜனக் கல்லூரியிலும் பின்னர் மூன்று ஆண்டுகள் சீசெல்ஸ் நாட்டிலும், தொடர்ந்து க.பொ.த. (சா.த) வகுப்புவரை யா/ மகாஜனக் கல்லூரியிலும் க.பொ.த. (உ.த) கல்வியை யா/ இந்துக் கல்லூரியிலும் கற்று 1993ஆம் ஆண்டுப் பரீட்சையில் பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியல் பீடத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார். இக்காலகட்டத்தில் NIBM கணனி டிப்ளோமா கற்கைநெறியில் அதி விசேட சித்திபெற்றார்.

பாடசாலையில் கல்வி கற்கும் காலத்தில் கல்வி, விளையாட்டு, பேச்சு, பண்ணிசை, கர்நாடக சங்கீதம் ஆகியவற்றில் சிறந்து விளங்கிப் பல பரிசில்களைப் பெற்றார். யா/ மகாஜனக் கல்லூரியிற் கல்வி கற்கும் போது 1989இல் 17 வயதிற்குட்பட்ட துடுப்பாட்ட அணிக்குத் தலைமை தாங்கி மிகச்சிறந்த சகலதுறைத் துடுப்பாட்ட வீரருக்கான விருதையும், காற்பந்தாட்ட அணியிற் பங்குபற்றி மிகச்சிறந்த காற்பந்தாட்ட வீரருக்கான விருதையும் பெற்றார். பல்கலைக்கழகத்திலும் கொக்கி, துடுப்பாட்டம், காற்பந்தாட்டம் ஆகியவற்றில் முன்னணியில் திகழ்ந்து, விருதுகள் பெற்றதோடு 1999இல் பல்கலைக்கழகக் காற்பந்தாட்ட அணிக்குத் தலைமை வகித்தார். காற்பந்தாட்டத்தில் தொடர்ந்து 1996, 1997, 1998, 1999 என்னும் ஆண்டுகளுக்கான விருதுகளையும், கொக்கியில் 1998, 1999 ஆம் ஆண்டுகளுக்கான விருதுகளையும் பெற்றார்.

இவர் 2000 ஆம் ஆண்டு யூலை மாதம் பொறியியலாளராகச் சிறப்புச் சித்திபெற்று அவ்வருடத்திற்கான E.O.E பெரேரா விசேட பரிசையும் பெற்றார். பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியற் பீடத்தில் ஆறு மாதங்கள் போதனாசிரியராகவும் பின்னர் தொடர்ந்து 2001ஆம் அண்டு யூன் மாதம் வரை உதவி விரிவுரையாளராகவும் சேவையாற்றினார். 2001 ஆம் ஆண்டு யூன் மாதம் முதுமாணிப் பட்டப்படிப்புக்குப் புலமைப் பரிசில் பெற்றுச் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டம் பெற்றார். 2003ம் ஆண்டு யூலை மாதம் தொடக்கம் இன்றுவரை உதவி விஞ்ஞானியாகப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த உயர்தர நீர்வள தொழில்நுட்ப நிலையத்தில் சேவையாற்றுகின்றார்.

இவர் 2003.11.05இல் கொல்லங்கலட்டி ஜெகதீசன் தம்பதியின் கனிஷ்ட புத்திரியும், கணனி சிறப்புப் பட்டதாரியுமான சுகந்தினியை மணம் முடித்துச் சிங்கப்பூரில் வாழ்கிறார். இவர் AMIE (SL) இன் அங்கத்தவருமாவார்.

தகவல் தந்தவர்: **திருமதி இராஜேஸ்வரி சண்முகரத்தினம்**

தோற்பன தொடரேல் - *ஔவையார்*

உ
சிவமயம்

# பொறியியலாளர் திருநாவுக்கரசு செந்திற்குமரன்

(Electrical Electronic Engineer)



திருநாவுக்கரசு சிவபாக்கியம் தம்பதியர்க்கு 1969.10.18இல் பிறந்த புதல்வனே செந்தில்குமரன். பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்தில் தமது கல்வி முயற்சிகளை ஆரம்பித்த செந்தில் குமரன் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிற் சேர்ந்து க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றுப் பேராதனைப் பல்கலைக்கழகத்துப் பொறியியல் பீடத்திற்குத் தெரிவாகி 1991 - 1995 காலப் பகுதியிற் பயிற்சி பெற்று வெளியேறினார். 1996ஆம் ஆண்டு ஒரு வருடம் மட்டும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகச் சேவை செய்தார். 1997இற் கொழும்பில் சில நிறுவனங்களிற் கணக்காய்வு செய்யும் முயற்சிகளில் தொடர்புகொண்டார். 1998இல் சிங்கப்பூர் சென்று கணனி நிறுவனமொன்றில் வேலை செய்தார். இப்போது 2005இல் அவுஸ்திரேலியா சென்று சேவை செய்கின்றார்.

தகவல் தந்தவர் : **கந்தையா திருநாவுக்கரசு.**

# பொறியியலாளர் தம்பையா சுதாபரன்



பன்னாலைத் தம்பையா பார்வதியம்மா தம்பதியர்தம் புதல்வராக 1971.07.04ஆந் தேதி பிறந்தவரே சுதாபரன் அவர்கள். அவர் அன்னையின் ஊராகிய கரவெட்டியிலுள்ள விக்னேஸ்வராக் கல்லூரியில் கல்விப் பயிற்சியை ஆரம்பித்தவர் எட்டாவது வகுப்பின் பின் மல்லாவி மகா வித்தியாலயத்தில் தொடர்ந்தார். போர்க் காலச் சூழ்நிலை காரணமாக மல்லாவியில் வாழ்ந்தவர் க.பொ.த. உயர்தரப் பரீட்சையிற் சித்திபெற்று மல்லாவி மகா வித்தியாலயத்திலிருந்து மொறட்டுவப் பல்கலைக்கழகப் பொறியியல் பீடத்திற்குத் தெரிவாகிய முதல் மாணவன் என்ற பெயருடன் 1993இல் உயர் கல்வியைத் தொடர்ந்தவர் 1997இல் நிறைவுசெய்து வெளியேறி மூன்று ஆண்டுகள் கொழும்பில் தனியார்துறை நிறுவனமொன்றில் உற்பத்தித்துறைப் பொறியியலாளராகப் பணிபுரிந்தார்.

பின் கனடா சென்றவர் ரொறன்ரோ மாகாணத்தில் ஒரு தொழிற்சாலையில் உற்பத்திப் பிரிவுப் பொறியியலாளராகச் சேவையைத் தொடர்கின்றார். பன்னாலை சண்முகலிங்கம் லீலா தம்பதியர் தம் மூத்த புதல்வி தேவகியைத் திருமணஞ் செய்து ஒரு குழந்தைக்குத் தந்தையாகியவர் கனடாவிலேயே வாழ்ந்துகொண்டிருக்கிறார்.

# கல்வியியலாளர்கள்

1. தில்லைநாயகம் வேலாயுதம்
   திருநாவுக்கரசு உதயகுமார்

2. திருமதி வானதி காண்டீபன்
   கனகசபை நடராசர்

3. என். சுந்தரலிங்கம்

4. ஏரம்பமூர்த்தி லகிதரன்

5. கந்தையா சண்முகரத்தினம்

6. சாந்தரூபி ஏரம்பமூர்த்தி
   கனகசபை நடராசர்

7. முத்துக்குமாரு நடராசா

8. சிவப்பிரியா ஜீவரத்தினம்

உ
சிவமயம்

# தில்லைநாயகம் வேலாயுதம்

தில்லைநாயகம் சின்னத்தங்கம் தம்பதிகளின் இரண்டாவது புத்திரராக 1935ம் ஆண்டு பிறந்தவர் வேலாயுதம். சி.பா.த. வரை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலும் உயர்தரக் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் கற்றார். பின்பு சென்னை தாம்பரம் கிறிஸ்தவக் கல்லூரியில் விஞ்ஞான பட்டதாரியாகப் பட்டம் பெற்றார். ஆரம்பத்தில் கண்டி அம்பிட்டிய கல்லூரியில் ஆசிரியராகத் தொழில்புரிந்து, புலமைப் பரிசில் பெற்று இங்கிலாந்து சென்று கலாநிதிப் பட்டம்பெற்றார். பின்பு சிறிது காலம் யாழப்பாணம் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகக் கடமையாற்றினார். மீண்டும் புலமைப் பரிசில் பெற்று இங்கிலாந்து சென்று பேராசிரியராகக் கடமைபுரிந்தார். 1984ஆம் ஆண்டு பிஜி நாட்டில் பேராசிரியராகப் பணிபுரிந்து தற்பொழுது பசுபிக் நாடுளில் உள்ள சர்வகலாசாலைகளில் Visiting Proffessor ஆகப் பணிபுரிகின்றார்.

தகவல் தந்தவர் : **திருநாவுக்கரசு உதயகுமார்.**

உ
சிவமயம்

# திருமதி வானதி காண்டீபன்



பன்னாலை ஏழூர்நாயகம் பாக்கியலட்சுமி தம்பதியர் புதல்வி வானதி ஆரம்பந் தொடக்கம் க.பொ.த. உயர்தரம் வரை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிற் கற்றவர். அங்கு பயின்ற காலத்தில் வட இலங்கைச் சங்கீத சபையின் கர்நாடக இசைக்கான சான்றிதழ் பெற்றுள்ளார். வீணை வாத்தியத்தில் ஆசிரியத் தரம் பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட வானதி வருடா வருடம் ஞாபகார்த்தப் பரிசில்களைப் பெற்றதுடன் இறுதித் தேர்வில் பல்கலைக்கழகக் கமலாதேவி வித்தியானந்தன் ஞாபகார்த்தப் பரிசிலையும் பெற்றுள்ளார். அத்துடன் தமிழ் சிறப்புப் பிரிவில் முதலாம் வகுப்பிற் சித்தி பெற்றுள்ளார்.

இந்து சமய கலாசார அமைச்சு 1990இல் நடத்திய அகில இலங்கைக் கட்டுரைப் போட்டியில் முதலாம் இடத்தையும் 1998இல் அதே அமைச்சு நடத்திய வாத்திய இசைப் போட்டியில் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளார். லேக்ஹவுஸ் நிறுவனம் நடத்திய பேராசிரியர் கைலாயபதி ஞாபகார்த்த ஆராய்ச்சிக் கட்டுரைப் போட்டியிலும் முதலாம் இடம் பெற்றவர்.

இப்போது மஹரகம தேசிய கல்வி நிறுவகத்தில் உதவிச் செயற்றிட்ட அலுவலராகப் பணிபுரியுமிவர் ஒருவருட புலமைப் பரிசில் பெற்று வட அயர்லாந்து அல்ஸ்ரா பல்கலைக்கழகத்தில் கல்வியியல் முதுமாணிப் பட்டம் பெற்றுள்ளார். பன்னாலையின் ஆங்கில மொழி மூலமான கல்வியில் முதுமாணிப் பட்டத்தைப் பெற்ற முதற் பெண்மணி இவரென்பது குறிப்பிடத்தக்கது.

பன்னாலையைச் சேர்ந்த மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்டத்தரணி ந. காண்டீபனின் வாழ்க்கைத் துணைவி இவரென்பதும் இரண்டு குழந்தைகளின் அன்னையாகியவர் என்பதும் குறிப்பிடக்கூடியவை.

தகவல் தந்தவர் : **கனகசபை நடராசர்**

# கலைஞர்கள்

1. **இசைமணி பொன் முத்துக்குமாரன்**
   இசைமணியின் பவளவிழா மலரிலிருந்து

2. **இசைச்செல்வர் கந்தையா திருநாவுக்கரசு**
   சு. ஏழூர்நாயகம்

3. **சினிமா இயக்குநர் திருவருள் விஜயசிங்கம்**

4. **நாதஸ்வர வித்துவான் பெரியசாமி பாலகிருஷ்ணன்**

5. **இசையாசிரியர் பொன். தெய்வேந்திரன்**
   சைவப்புலவர் சுப்பிரமணியம் செல்லத்துரை

6. **கலாபூஷணம் சரஸ்வதி கோபாலசாமி**
   சரஸ்வதி கோபாலசாமி

7. **கலைமாமணி கனகேஸ்வரி மயில்வாகனம்**
   சரஸ்வதி கோபாலசாமி

8. **செல்வி கார்த்திகா இரகுநாதன்**

9. **செல்வி சித்திராங்கி பாலகிருஸ்ணன்**

உ
சிவமயம்

# இசைமணி பொன் முத்துக்குமாரன்

1920 - 1994



பன்னாலை பொன்னம்பலம் பொன்னுப்பிள்ளை தம்பதியரின் மூத்த ஆண் மகவுதான் இசைமணி பொன் முத்துக்குமாரன் அவர்கள். 1920.07.26இற் தோற்றிய இசைமணி அவர்கள் ஐந்தாவது வயதில் **பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயம் எனப் பின்னர் பெயர் மாற்றம் பெற்ற விழிசிட்டிச் சிவஞான வித்தியாலயத்திற்** கல்வி பயில ஆரம்பித்துச் சிரேட்ட பாடசாலை விடுகைத் தராதரப் பத்திர வகுப்பு வரை பயின்றார். பின் தெல்லிப்பழைச் சைவப்பிரகாச வித்தியாசாலையிற் சேர்ந்து நிறைவுகண்டார்.

இசைத்துறையில் நாட்டங்கொண்ட அவர் மாவிட்டபுரம் உருத்திராபதி, இணுவில் சின்ன உருத்திராபதி, மூர்த்தி ஐயர், புத்துவாட்டி சோமசுந்தரம், குப்பிழான் செல்லத்துரை, கொக்குவில் குமார சுவாமிப்புலவர் என்போரிடம் கர்நாடக இசை பண்ணிசை என்பவற்றைப் பயின்றுள்ளார். இந்தவேளை சட்டத்தரணி நொத்தாரிசு கந்தையா இலங்கைநாயகம் தம்பி அவர்களிடம் எழுதுவினைஞராகப் பணிபுரிந்துகொண்டிருந்தார். திடீரெனத் தம்பி அவர்கள் அமரத்துவம் எய்தச் சட்டத்தரணி நொத்தாரிசு சிதம்பரநாதனிடம் எழுதுவினைஞர் பதவி ஏற்றார். பொன்மனச் செம்மல் தெல்லிப்பளைச் சிதம்பரநாதன் உதவியுடன் சிதம்பரம் அண்ணாமலை இசைக்கல்லூரியிற் பயிலும் வாய்ப்பைப் பெற்றார். அங்கு திருவனந்தபுரம் சங்கீதபூஷணம் கிருஷ்ணஐயர், லயஞான மாமேதை சுப்பிரமணியபிள்ளை, மன்னார்குடி ராஜகோபாலபிள்ளை என்று பல அறிஞர்களிடம் கர்நாடக இசை பயிலும் வாய்ப்பைப் பெற்றார். பண்ணிசைச் சுப்பிரமணிய தேசிகரிடம் பயிற்சியை முடித்தார். இப்பயிற்சிகள் மூலம் இசைமணியாகி 1949இல் யாழ்ப்பாணம் திரும்பியவர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் அரங்கேற்றத்தினை எதிர்கொண்டார். S.J.V. செல்வநாயகம் Q.C. தலைமையில் அரங்கேற்று விழா நடைபெற்றது. வயலின் சித்திவிநாயகர் அவர்கள், மிருதங்கம் தங்கம் அவர்கள் இருவரும் அன்றைய முன்னணி வாத்தியக்காரர் என்பது குறிப்பிடத்தக்கது. கச்சேரி ஓகோ என்று பரிமளித்தது. சபையினரின் கரகோசத்துடன் சிறந்த **இரசிகரான S.J.V.யின் மனமுவந்த பாராட்டும் கிடைத்தது.** இந்தக் கச்சேரியைத் தொடர்ந்து பலாலி அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் பதவியையும் பெற்றார்.


1953இற் புன்னாலைக்கட்டுவன் அம்பலவாணர் செல்லம்மா தம்பதியர் மகள் தங்கமலரை வாழ்க்கைத் துணைவியாக ஏற்று ஐந்து குழந்தைகளுக்குத் தந்தை ஆகினார். 1980 ஓகஸ்ற் மூன்றாந் தேதியுடன் பலாலி பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் பதவியினின்றும் ஓய்வுபெற்றவர் 1998.12.31இல் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

**- இசைமணியின் பவளவிழா மலரிலிருந்து**

நெல் பயிர் விளை - *ஔவையார்*

உ
சிவமயம்

# இசைச்செல்வர் கந்தையா திருநாவுக்கரசு



இவர் பன்னாலையில் கந்தையா பகவதி தம்பதியர்க்கு 1919 தை மாதம் பிறந்தார்.இயல்பாகவே இசைத்திறமையும், நல்ல சாரீரமும் உடையவராக வளர்ந்தார்.பன்னாலை சேர். கனகசபை அ.த.க. பாடசாலையில் கல்விபயின்றார்.கமத்தொழிலையே தனது வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டார்.எந்த நேரமும் புன்னகை பூத்த முகமும், கலகலப்பான கதையும் உடையவர். இவர் பாடும் இசை எவரையும் கவரவல்லது.பண்ணிசை, புராண படனம், கோயிலில் பஞ்சபுராணம் பாடுதல், பஜனை என்பவற்றில் ஈடிணையற்றவராக மிளிர்ந்தார்.1980 தைமாதம்திடீரென ஏற்பட்ட நெஞ்சுவலியால் இறைபதம் சேர்ந்தார்.

தகவல் தந்தவர் : சு. ஏழூர்நாயகம்

# சினிமா இயக்குநர் திருவருள் விஜயசிங்கம்



திருவருள் சின்னத்தங்கம் என்னும் பன்னாலை வாழ் தம்பதியர் மலேசியாவில் வாழ்ந்த காலத்தில் 1938.12.20ஆந் தேதி பிறந்தவரே விஜயசிங்கம் அவர்கள். அப்புக்கண்டு என்றும் அவரைச் செல்லமாக அழைப்பர். அவர் தமது கல்வியைப் பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்தில் 'ஆரம்பித்துத் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியிலே தொடர்ந்தார். கல்வி பயிலுங் காலத்தே கல்லூரி நாடகங்களிலே மிக ஈடுபாடுடையவராகக் காணப்பட்டார். இந்த நாடகத்துறைத் தொடர்பு பிற்காலத்தில் அவர் சினிமாத்துறையில் பிரபலம் பெறுவதற்குப் பேருதவியாகவிருந்தது.

கல்லூரிப் படிப்பை 1960இல் நிறைவு செய்துகொண்டு இந்தியாசென்ற விஜயசிங்கம் தேவர் பிலிம்ஸ் அமைப்பில் சேர்ந்து நடிகராகியவர் சில நாள்களுள் உதவி இயக்குநராகவும் பணியாற்றத் தொடங்கிவிட்டார். பணம் பத்தும் செய்யும், பிறந்தேன் வளர்ந்தேன், எல்லாம் பணத்திற்காக ராஜா எங்க ராஜா, கிளி ஜோசியம், பஸ் கொண்டக்டர் என்னும் ஆறு படங்களைத் தன் சொந்த முயற்சியில் தயாரித்து வெளிவரச் செய்தார். இவைதான் அவர் புகழை மேன்மேலுயர்த்தக் காரணமாயின. தேவர் பிலிம்ஸ் சின்னப்பா தேவர், இயக்குநர் திருமுகம் என்போர் இவரிடம் பெரு மதிப்பு வைத்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பிரபல நடிகர்கள் எல்லோருமே இவரிடம் பெரும் கௌரவத்துடன் நடந்துகொண்டனர்.

1973இல் மல்லாகம் அதிபர் முருகையா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வி லீலாவதியை வாழ்க்கைத் துணைவியாக ஏற்று மூன்று குழந்தைச் செல்வங்களுக்குத் தந்தை ஆயினார். பிள்ளைகள் மூவருமே பொறியியலாளர்களாகிப் பணிபுரிகின்றனர் என்பது மகிழ்ச்சிக்குரியது. விஜயசிங்கம் அவர்கள் இப்பொழுதும் குடும்ப உறுப்பினர்களுடன் சென்னையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

உ
சிவமயம்

# நாதஸ்வர வித்துவான் M.P. பாலகிருஷ்ணன் -1930 -



பன்னாலையில் வாழ்ந்துகொண்டிருக்கும் நாதஸ்வர வித்துவான் M.P. பாலகிருஷ்ணன் நெல்லியடி M. பெரியசாமி பார்வதி தம்பதியர்க்குப் புதல்வராகி 1930.11.01ஆந் தேதி பிறந்தவர். ஏழு வயதான காலத்திருந்தே வாய்ப்பாட்டும் நாதஸ்வரமும் பயின்ற பாலகிருஷ்ணன் அவர்கள் பத்தாவது வயதிற் கச்சேரி செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பதினைந்தாவது வயதில் நாதஸ்வர மாமேதை N.K. பத்மநாதனுடனாகிப் பத்து ஆண்டுகள் தொடர்ந்து நாதஸ்வரம் வாசித்துப் புகழ்பெற்றவர். தவில் மேதை லயஞான குபேர பூபதி தெட்சணாமூர்த்தி அவர்கள் **கர்நாடக சங்கீத நாதஸ்வர இசைச்செல்வர்** என்ற கௌரவ விருதை இவருக்கு வழங்கி மகிழ்ந்தார். அன்றைய நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் சுவாமிநாத ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் **நாதஸ்வர மதுர கான பூஷணம்** என்றும், சுன்னாகம் கதிரமலைச் சிவன் தேவஸ்தான குரு சிவஸ்ரீ சோமாஸ்கந்தக் குருக்கள் **லலிதஸ்வர நாதபூபதி** என்றும் கௌரவ விருதுகளை வழங்கியுள்ளனர்.

அமெரிக்கா, கனடா, இலண்டன், சுவிஸ்லாந்து, ஜேர்மனி, பிரான்ஸ், மலேஷியா, சிங்கப்பூர் என்னும் நாட்டினரும் அங்கு நாதஸ்வரக் கச்சேரி நடத்தியது சார்பாகப் பல கௌரவ விருதுகளை வழங்கிக் கௌரவித்துள்ளனர். விருதுகளுக்கேற்ற வகை பாலகிருஷ்ணன் அவர்களும் இசையுலகில் உயர்ந்து ஒளிர்கின்றார்.

# இசையாசிரியர் பொன். தெய்வேந்திரம்



பன்னாலை பொன்னம்பலம் பொன்னுப்பிள்ளை தம்பதியர்க்குக் கனிஷ்ட புதல்வராகப் பிறந்தவரே தெய்வேந்திரம் அவர்கள். அமைதி அடக்கம் ஆற்றல் முதலியவற்றை உள்ளடக்கிய ஆளுமையை முழுமையாகக் கொண்ட தெய்வேந்திரம் ஒரு பட்டதாரி ஆசிரியர். ஆங்கில மொழியிலும் திறமை உள்ளவராக விளங்கினார்.

இசை வல்லாராகிய இவர் சங்கீத பாடத் திட்டங்களை உருவாக்கியவர். சங்கீதக் கல்வியில் தரச்சிறப்பு ஏற்படும் வண்ணம் பாடசாலைக் கலைத்திட்டச் செயற்பாடுகளை வளர்க்க வேண்டுமென்று எண்ணுபவர். திருமுறைகளின் சிறப்புக்களைப் பழகு தமிழில் வழக்குபவர். சங்கீத கலாட்சேப வல்லுநர்.

உதவியாசிரியராகிப் பணியாற்றிய இவர் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் உப அதிபராகவும் இருந்து ஓய்வுபெற்றவர்.

சைவப்புலவர் பட்டமும் பெற்றவர். இசைக் கச்சேரி, இலக்கியச் சொற்பொழிவு, பண்ணிசை, நாடகம் என்னுந்துறைகளிலும் உயர்ந்து விளங்கியவர்.

விர நியதிகள், கண்ணகி என்னும் நூல்களின் ஆசிரியருமாவர்.

தகவல் தந்தவர் : **சைவப்புலவர் சுப்பிரமணியம் செல்லத்துரை.**

நைவினை நணுகேல் - *ஔவையார்*

உ
சிவமயம்

# கலாபூஷணம் சரஸ்வதி கோபாலசாமி



பன்னாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட கலாபூஷணம் சரஸ்வதி கோபாலசாமி அவர்கள் தும்பளையைப் புகுந்தகமாகக் கொண்டவர். இசைக்கலைஞர் கர்நாடக இசை, பண்ணிசை, நாட்டார் பாடலிசை என்பவற்றில் வல்லவர். ஓய்வுபெற்றுள்ள இந்த வேளையிலுங்கூடத் தாம் பாடுவதிலும் இசை அமைப்பதிலும் இசையைக் கற்பிப்பதிலும் வல்லவராகத்தான் காணப்படுகின்றார்.

இவர் கணவர் இப்பொழுது ஓய்வுபெற்றிருக்கும் அஞ்சலக அதிபர் தும்பளையைச் சேர்ந்தவர் கணபதிப்பிள்ளை மகன் கோபாலசாமி. துணைவியாரது இசையுடனான முயற்சிகளுக்குப் பேராதரவு வழங்குபவர். இசையாசிரியர் சரஸ்வதி இசையரசி, பண்ணிசைத் திலகம் என்னும் இசைத்துறையுடனான கௌரவ விருதுகளைப் பெற்றவர். கலைச்செல்வி கனகேஸ்வரி மயில்வாகனம் இவர் தங்கை. அதனால் இவர்களது சொந்த ஊரவர்கள் பண்ணிசைச் சகோதரிகள் என்று கௌரவமாக அழைப்பர். கலாவித்தகர், கலாபூஷணம் என்னுஞ் சாதனை விருதுகளும் சரஸ்வதி கோபாலசாமிக்குக் கிடைத்துள்ளன. பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலைமன்ற ஆலோசகராகவும் வடமராட்சி வடக்குப் பிரதேச சபைக் கலாச்சாரப் பேரவை ஆயுட்கால நிர்வாக உறுப்பினராகவும் இருந்து பணியாற்றுபவர். நடனத் துறையிலும் ஈடுபாடுள்ள இவர் தாம் வாழும் பிரதேச சமய, கலை, வளர்ச்சிக்காகப் பெரிதும் உழைப்பு வழங்குபவர்.

தகவல் தந்தவர் : **சரஸ்வதி கோபாலசாமி**

# கலைமாமணி கனகேஸ்வரி மயில்வாகனம்



பன்னாலையைச் சொந்த இடமாகக் கொண்ட கலைமாமணி கனகேஸ்வரி மயில்வாகனம் அவர்கள் நுண்கலைப் பிரிவின் இசை நடனம் என்னும் இரு துறைகளிலும் நிறைந்த ஆற்றல் பெற்றவராக விளங்கியவர். 1959இல் தமிழ்நாடு சென்று சென்னை Music Acadamyயில் மூன்று வருடங்கள் பயின்று சங்கீதத் தராதரம் பெறுவதற்குக் காரணராக விளங்கியவர் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அதிபர் தெ.து. ஜெயரத்தினம் அவர்கள். H.S.C.யிற் பயின்று கொண்டிருந்த காலத்தில் நுண்கலைத் துறையில் கனகேஸ்வரிக்கிருந்த ஆற்றலை அவதானித்த மகாஜன அதிபர் அவரை இந்தியா சென்று பயிற்சி பெறும்படி உற்சாகப்படுத்தினார். அந்த ஊக்குவிப்பின் வெளிப்பாடே கலைமாமணி 1963இல் நர்த்தன திலகம் பாலசரஸ்வதியிடம் பரதக்கலை பயின்றமை. டிப்ளோமா தேர்விற் சிறந்த சித்திபெற்று நல்ல பெயருடன் ஈழந் திரும்பினார்.

1969இல் ஆங்கில ஆசிரியராக நியமனங் கிடைத்தது. 1970இல் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடன விரிவுரையாளரானார். 1974 - 1975இல் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடன ஆசிரியர்க்கான பயிற்சி பெற்றார். மீண்டும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிற் பணியைத் தொடர்ந்தார். பல நூற்றுக்கணக்கான நடன ஆசிரியர்களைப் பயிற்றி எங்கள் கல்வி நிலையங்களுக்கு வழங்கிய பெருமை அவரையே சாரும்.

தகவல் தந்தவர் : **சரஸ்வதி கோபாலசாமி.**

# சட்டத்தரணிகள்

1. வன்னித்தம்பி அப்பர்சுவாமி
2. சட்டத்தரணி சொக்கலிங்கம் சண்முகலிங்கம்
   சொக்கலிங்கம் சண்முகலிங்கம்
3. சட்டத்தரணி நடராசர் காண்டீபன்
4. சட்டத்தரணி அம்பலவாணர் கனகசபை
5. சட்டத்தரணி சிதம்பர உடையார் கனகசிங்கம்
6. சட்டத்தரணி திருமதி யோகமலர் இந்திரகுமார்
7. சட்டத்தரணி திரு. நா. குணபாலசிங்கம்

உ
சிவமயம்

# வன்னித்தம்பி அப்பர்சுவாமி

## சட்டத்தரணியும் பிரசித்திபெற்ற நொத்தாரிசு



பிரசித்த சட்டத்தரணியாக விளங்கியவர், அவரது காலம் 1878 - 1938. சென்னையில் தனது பட்டப்படிப்பை மேற்கொண்டவர்.

சட்டத்தரணியான இவர் யாழ்ப்பாண நீதிமன்றில் தனது தொழிலை ஆரம்பித்தார். பிரசித்த நொத்தாரிசாகவும் விளங்கினார். (N.P)

பன்னாலை சேர் கனகசபை வித்தியாசாலை ஸ்தாபகரின் மகள் சிவகாமசுந்தர நாயகியை மணந்தவர். பாடசாலை முகாமையாளராகவும் இருந்த இவர் சிவபதம் எய்த இவரது மனைவியின் சகோதரர் க.ஸ்ரீ. சுந்தரமூர்த்தி (ஆரூரர்) பாடசாலைப் பொறுப்பை ஏற்று நடத்தினார். பிள்ளை ஏகபுத்திரி திருமதி சோமசுந்தரநாயகி. இவர் இருபாலை கோப்பாயைச் சேர்ந்த வேலாயுதர் சண்முகத்தை விவாகம் செய்தார்.

# சட்டத்தரணி சொக்கலிங்கம் சண்முகலிங்கம்



சொக்கலிங்கம் காமாட்சிபிள்ளை தம்பதிகளின் 2வது மகனாக 1944ம் ஆண்டு சித்திரை மாதம் பன்னாலையில் பிறந்தவர் சண்முகலிங்கம்.

ஆரம்பக் கல்வியைப் பன்னாலை சேர் கனகசபை வித்தியாசாலையிலும், கல்விப் பொதுத் தராதரம், உயர்தரம் வரை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலும் கற்றார்.

பின்பு 1967இல் இலங்கை சட்டக் கல்லூரியில் அனுமதி கிடைத்து 1971ஆம் ஆண்டு சட்டத்தரணியாகச் சித்தியடைந்து 1972ம் ஆண்டு சட்டத்தரணியாக உயர் நீதிமன்ற நீதியரசர்கள் முன்பாகப் பதவிப் பிரமாணம் எடுத்தார். பன்னாலையின் முதல் சட்டத்தரணியாகவும் திகழ்ந்தார்.

1976ஆம் ஆண்டில் மக்கள் வங்கியின் சட்ட ஆலோசகராக, யாழ்ப்பாணம், நுவரெலியா, கொழும்பு ஆகிய இடங்களில் கடமையாற்றினார். 1990ஆம் ஆண்டு சமாதான நீதவானாகவும் உத்தியோகப் பற்றற்ற நீதவானாகவும் நியமனம் பெற்றார்.

தகவல் தந்தவர் : **சொக்கலிங்கம் சண்முகலிங்கம்.**

உ
சிவமயம்

# சட்டத்தரணி நடராசர் காண்டீபன்



பன்னாலை நடராசர் காண்டீபன் அவர்கள் தமது ஆரம்பக் கல்வியைத் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலே ஆரம்பித்து க.பொ.த. சாதாரண தரத்துடன் வெளியேறி யாழ் இந்துக் கல்லூரியில் க.பொ.த. உயர்தரத்தை நிறைவுசெய்தார். 1993இல் கொழும்பு உணவு ஆணையாளர் திணைக்களத்தில் எழுதுவினைஞராக நியமனம் பெற்றவர் திறைசேரி சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு மாற்றம் பெற்றுப் பணிபுரிந்தார்.

1998இல் இலங்கை சட்டக்கல்லூரியில் மாணவர்களைச் சேர்த்தற்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையிற் சித்தியடைந்து தமது சட்டப்படிப்பைப் பூர்த்திசெய்ததன் விளைவாக எழுது வினைஞர் பதவியை இராஜிநாமாச் செய்து 2002ஆம் ஆண்டு டிசம்பரில் சட்டத்தரணியாகச் சத்தியப் பிரமாணஞ் செய்து கொண்டார். 2001ஆம் ஆண்டு சட்டக்கல்லூரியில் தமிழ் மன்றத் தலைவராகவும் அவ்வாண்டின் மன்ற வெளியீடான நீதிமுரசின் ஆசிரியராகவும் செயற்பட்டுள்ளார். அத்துடன் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பத்திரிகைத் துறைக்கான டிப்ளோமாக் கற்கை நெறிப் பரீட்சையையும் பூர்த்திசெய்து சான்றிதழும் பெற்றுக்கொண்டார்.

இப்போது ஜனாதிபதி சட்டத்தரணி ஏ.ஆர். சுரேந்திரன் அவர்களின் அநுசரணையின் கீழ் கனிஷ்ட சட்டத்தரணியாகிக் கொழும்பு மாவட்ட நீதிமன்றம் மேன்முறையீட்டு நீதிமன்றம் என்பவற்றில் தமது தொழிலை மேற்கொண்டு வருகின்றார்.

இவர் பன்னாலையைச் சேர்ந்த ஏழூர்நாயகம் பாக்கியலட்சுமி தம்பதியர்தம் மூத்த புதல்வி வானதியை மணந்து இப்போது இறத்மலானையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

- தகவல் தந்தவர் : **கனகசபை நடராசர்**

# அஞ்சலக அதிபர்கள்

1. அஞ்சலக அதிபர் சின்னப்பு சின்னத்தம்பு
   நினைவொளி எனும் மலரிலிருந்து பெறப்பட்டது.

2. அஞ்சலக அதிபர் கந்தையா சோமசுந்தரம்

3. அஞ்சலக அதிபர் சிவசங்கரப்பிள்ளை ஏரம்பமூர்த்தி
   சிவசங்கரப்பிள்ளை ஏரம்பமூர்த்தி

4. அஞ்சலக அதிபர் செல்லையா நாகரத்தினம்

5. அஞ்சலக அதிபர் செ. முருகையா

6. அஞ்சலக அதிபர் எஸ். தில்லைநாயகம்.

உ
சிவமயம்

# அஞ்சலக அதிபர் சின்னப்பு சின்னத்தம்பு

## 1907 - 1990



பன்னாலை சின்னப்பு சிவகாமிப்பிள்ளை தம்பதியர்க்கு 1907.08.02இல் கனிஷ்ட புதல்வராகத் தோற்றியவரே சின்னத்தம்பு அவர்கள். செல்லமாகக் கண்மணி என்றும் இவரை அழைப்பர். பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்திற் தமது கல்வி முயற்சியை ஆரம்பித்த சின்னத்தம்பு அவர்கள் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியிலும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் தொடர்ந்து பயின்றார்.

1927.03.01இல் நடைபெற்ற எழுதுவினைஞர் பரீட்சையில் தேர்ச்சி பெற்றவர் 1927.03.01 தொடக்கமாக மாத்தறையில் தபால்துறை எழுது வினைஞராகப் பணியாற்றத் தொடங்கினார்.

1931இல் கந்தையா முத்துப்பிள்ளை தம்பதியர்தம் புதல்வியும் மைத்துனியுமாகிய காமாட்சிப்பிள்ளையைத் திருமணஞ் செய்து இரு குழந்தைகளுக்குத் தந்தையாயினார்.

அஞ்சலக ·அதிபராகப் பதவி உயர்வுபெற்றவர் கொழும்பு பிரதம அஞ்சலகம், தெல்லிப்பளை, அநுராதபுரம், மகோ, யாழ்ப்பாணம் என்னும் தபாலகங்களிலும் பணிபுரிந்துள்ளார். 1963.12.01இல் ஓய்வுபெற்றுக் கொண்ட அவர் கிராம அபிவிருத்திப் பணிகள் பலவற்றில் ஈடுபாடு கொண்டிருந்தார். அவரைச் சமாதான நீதிபதி என அரசினர் கௌரவித்தனர். 1990.03.18இல் அவர் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

-நினைவொளி எனும் மலரிலிருந்து பெறப்பட்டது.

# அஞ்சலக அதிபர் கந்தையா சோமசுந்தரம்



அஞ்சலக அதிபர் சோமசுந்தரம் பன்னாலைக் கந்தையா அவர்கள் மைந்தனாகி 1948.12.29ஆந் தேதி பிறந்தவர். பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்தில் தமது கல்வியை ஆரம்பித்த சோமசுந்தரம் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் தொடர்ந்து கொழும்பு பல்கலைக்கழகச் சட்டத்துறையுட் புகுந்து 1979இல் L.L.B. தகைமை பெற்றார்.

அஞ்சலக அதிபராகப் பதவி வகிக்கத் தொடங்கிய சோமசுந்தரம் அவர்கள் கொழும்பு மத்திய தபாலகம், C.T.O. தந்திப் பரிவர்த்தனை நிலையம், G.P.O. சுன்னாகம், நெடுந்தீவு, வவுனியா, செங்கலடி, நுகேகொடை, கொழும்பு நீதிமன்றம் எனும் இடங்களிலெல்லாம் வேலைசெய்து 1989.09.28 தொடக்கம் முதலாந்தர அஞ்சல் அதிபராகி Mount Lavinia இல் பிரதம தபாலதிபராகப் பணிபுரிகின்றார்.

சுன்னாகத்தைச் சேர்ந்த இந்திராணியைத் திருமணஞ் செய்துகொண்டவர் மூன்று பிள்ளைகளுக்குத் தந்தையாகவும் இருக்கின்றார்.

பீடுபெற நில் - *ஔவையார்*

உ
சிவமயம்

# அஞ்சலக அதிபர் சிவசங்கரப்பிள்ளை ஏரம்பமூர்த்தி

பன்னாலை கம்பலையில் வாழ்ந்த சிவசங்கரப்பிள்ளை பார்வதிப்பிள்ளை தம்பதியர்க்கு இளையமகனாக 1942.03.15ஆந் தேதி பிறந்தவர்தான் ஏரம்பமூர்த்தி அவர்கள். இவர் தமது ஆரம்பக் கல்வியைப் பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்திலே உரியவேளை ஆரம்பித்தவர். 1951 ஜனவரி மாதத்திலிருந்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் தொடர்ந்தார். 1957இல் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரத்தை நிறைவுசெய்தவர். உயர்கல்வி நோக்கிய H.S.C வகுப்பிற் பயின்று கொண்டிருந்தார். 1959இல் எதிர்பாராது நிகழ்ந்த தந்தையின் மறைவு அவர் கல்வியிற் குழப்பம் விளைவித்தது.

1960ஆம் ஆண்டு யூன் மாதத்தில் பதினெட்டாவது வயதில் தபாலதிபர் பதவி கிடைத்தது. சிங்கள மொழிச் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையிலும் விசேட சித்திபெற்றார். தொடர்ந்து குறுகிய காலத்துள் வத்தளைத் தபாலகத்திற்குப் பதிற் பொறுப்பதிகாரியாக அனுப்பப்பட்டேன். நான்கு ஆண்டுகளுக்குப்பின் 'மோர்ஸ்' தந்திமுறையிலும் கம்பியில்லாத் தந்தி முறையிலும் பயிற்சிபெற்றேன். 1965இல் சுன்னாகம் தபாற் கந்தோருக்கும், 1970இல் வவுனியாத் தபாலகத்திற்கும், பதவியுயர்வுடன் பதவியா தபாலகததிற்கும் அனுப்பப்பட்டார்.

சீர்திருத்த வேலைகள் நோக்கி மாங்குளம் தபாலகத்திற்கும் முதலாம்தர அஞ்சலக அதிபர் என்ற தரத்துடன் 1977 இல் பண்டத்தரிப்புத் தபாலகத்திற்கும் அனுப்பப்பட்டார். 1981இல் கெப்பிற்றிக்கொலாவ தபாலகத்திற்கும் அனுப்பப்பட்டதுண்டு. நுண்ணாய்வுப் பரிசோகதர் பரீட்சையில் தேறினமையால் கொழும்பு திருகோணமலை, யாழ்ப்பாணம் என்னும் இடங்களில் நுண்ணாய்வுப் பரிசோதகராகக் கடமையாற்றினார். மலேஷியா, சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகளுக்குப் புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் அவரை அரசு பயிற்சிக்கு அனுப்பியது. 1992இல் இளைப்பாறியவர் சமாதான நீதவானாகக் கௌரவிக்கப்பட்டவர் 2000த்தில் நொத்தாரிசு பரீட்சையிலும் சித்தியடைந்தார்.

சுன்னாகம் தபாலகத்திற் பணிபுரிந்த காலத்தில் சுழிபுரம் சிவஞானவதியைத் திருமணஞ் செய்து நான்கு குழந்தைகளுக்குத் தந்தை ஆயினார்.

இப்போது கொழும்பில் வெள்ளவத்தை Mrdi Clinic என்னும் தாபனத்தின் பொது முகாமையாளராகப் பணிபுரிந்துவருகின்றார்.

தகவல் தந்தவர் : **சிவசங்கரப்பிள்ளை ஏரம்பமூர்த்தி.**

# நிர்வாகிகள்

1. சங்கரநாதர் கனகசபைப்பிள்ளை
   திருமதி அமிர்தயோகேஸ்வரி முத்துக்குமாரசாமி

2. சோமசுந்தரம் அம்பலவாணர்
   திருமதி அமிர்தயோகேஸ்வரி முத்துக்குமாரசாமி

3. வேலாயுதர் சண்முகம் (மெத்தை வீட்டுச் சண்முகம்)

4. அம்பலவாணர் சிற்றம்பலம்
   திருமதி அமிர்தயோகேஸ்வரி முத்துக்குமாரசாமி

5. கனகசபை நடராசர்
   கனகசபை நடராசர்

6. கந்தையா சண்முகலிங்கம்
   கந்தையா சண்முகலிங்கம்

7. வயிரவப்பிள்ளை பாலசுப்பிரமணியம்

8. நமசிவாயம் சொக்கலிங்கம்
   திருநாவுக்கரசு உதயகுமார்

9. சுப்பிரமணியம் சிவசம்பு
   கந்தையா திருநாவுக்கரசு

10. கந்தையா சண்முகரத்தினம்
    திருநாவுக்கரசு உதயகுமார்

பூமி திருத்தி உண் - *ஔவையார்*

உ
சிவமயம்

# சங்கரநாதர் கனகசபைப்பிள்ளை

பன்னாலை சேர் கனகசபை பாடசாலையின் தாபகரான சங்கரநாதர் கனகசபைப்பிள்ளை சிறந்தவோர் வர்த்தகராகவும் விளங்கியவர். காலிக்கும் தூத்துக்குடிக்குமிடையில் தனியார் கப்பல் சேவையை இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் நடத்தியவர். இந்தியாவிலிருந்து சாடிகள், துணிவகைகள் எனப் பலவிதமான பொருள்களையும் இறக்குமதி செய்வித்தவர். 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிற் பிறந்தவர். வ.உ. சிதம்பரம்பிள்ளைக்கு முன்னர் கம்பலோட்டிய தமிழனாகிப் பன்னாலையிற் திகழ்ந்தவர் கனகசபைப்பிள்ளை அவர்களே!

வ.உ.சி. கப்பல் கட்டுவதற்கு உதவியவர் என்ற பெருமை கனகசபைப்பிள்ளை அவர்களையே சாரும். அந்தக் காலத்தில் பெரிய நிலச்சுவாந்தாராகவும் பரோபகாரியாகவும் வாழ்ந்த அவர் பன்னாலை கற்பகப்பிள்ளையார் கோயிலுக்கும் நிலம் வழங்கியவர். வேண்டிய சகல உதவிகளையுங் கூடச் செய்தவர். பூசைக்கு வந்த பூசகர்களுக்கு அனுசரணையாக இருந்தவர். இவரைப்போன்ற பரோபகாரியைப் பன்னாலை காண்பதரிது.

- தகவல் தருநர் : **திருமதி அமிர்தயோகேஸ்வரி முத்துக்குமாரசாமி.**

# சோமசுந்தரம் அம்பலவாணர்



சோமசுந்தரம் அம்பலவாணர் ஆரம்பக் கல்வியைத் துரையப்பா பிள்ளையிடங் கற்றவர். உயர் கல்வியை மானிப்பாய் இந்துக் கல்லூரியில் தொடர்ந்தவர். பட்டம்பெற்றுத் தபால் தந்தித் திணைக்களத்தில் எழுதுவினைஞராகப் பணிபுரிந்தவர். காலப் போக்கிற் பல பதவி உயர்வுகளைக் கண்டு கடைசியில் CAS ஆக உயர்வு பெற்றார். தொலைத் தொடர்புத் தூதுவராகச் சேவையாற்றிய காலத்து இங்கிலாந்து, இந்தியா, அவுஸ்திரேலியா, பாகிஸ்தான், பங்காளதேஷ் முதலிய நாடுகள் சென்றுள்ளார். ஓய்வுபெற்றிருந்த காலத்தில் ஐக்கிய நாணய சங்கத் தலைவராகவும், தெல்லிப்பழை தென்மேற்குச் சிவகுருநாதர் ஆலய தர்மகர்த்தாவாகவும் சேவைசெய்துள்ளார். இவர் ஒரு சமாதான நீதவான் என்பது குறிப்பிடத்தக்கது.

- தகவல் தருநர் : **திருமதி அமிர்தயோகேஸ்வரி முத்துக்குமாரசாமி.**

பெரியாரை துணைக்கொள் - *ஔவையார்*

உ
சிவமயம்

# வேலாயுதர் சண்முகம் (மெத்தை வீட்டுச் சண்முகம்)

1901 - 1999



1901 வைகாசி மாதம் 1ஆம் திகதியைத் தோற்றத்தினமாகக் கொண்ட இவர் இளமையிலேயே அன்னையை இழந்தமையால் யாழ் புனித ஜோன்ஸ் கல்லூரி விடுதியில் இருந்து கல்விகற்றார். இங்கு சமயக் கல்வி புகட்டப்படாமையால் யா; இந்துக்கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்தார். நு.ஞு.டு.ஊ பரீட்சையில் சித்தியடைந்ததும் சுங்கத்திணைக்களத்தில் வேலைக்கு அமர்ந்தார். 1946இல் உதவிப் பொருள் விலைமதிப்பீட்டாளராகப் பதவி உயர்வுபெற்றுப் பின் திணைக்களத்தின் உயரதிகாரியாகப் பணிபுரிந்து 1960ஆம் ஆண்டு இளைப்பாறினார்.

திருக்கேதீஸ்வர ஆலயபுனருத்தாரண சபையில் ஆரம்ப காலத்திலிருந்தே பணிபுரிந்தவர். பன்னாலை சனசமூக நிலையத்திற்குக் காணி கொள்வனவு செய்வதில் பெரும் பணியாற்றியவர். இதன் தர்மகார்த்தா சபையில் ஓர் அங்கத்தவராவர்.

சட்டத்தரணியும் பன்னாலை சேர் கனகசபை வித்தியாசாலை முகாமையாளருமாகிய திரு. வன்னித்தம்பி அப்பர்சுவாமி அவர்களினதும் சிவகாமசுந்தர நாயகியின் ஏகபுத்திரி சோமசுந்தர நாயகி வழிவந்த முறைப்பெண்ணைத் திருமணம் செய்தவர். நான்கு பிள்ளைகளின் தந்தை ஆவர்.

# அம்பலவாணர் சிற்றம்பலம்

அம்பலவாணர் சிற்றம்பலம் நிர்வாக சேவையில் கூட்டுறவு உதவி ஆணையாளராகப் பணிபுரிந்தவர். வடக்குக் கிழக்கின் பல பாகங்களிலும் பணிபுரிந்தவர். சேர் கனகசபை வித்தியாலய முன்னாள் முகாமையாளர் க.ஸ்ரீ. சுந்தரமூர்த்தி அவர்களின் மருமகன் இவர்.

- தகவல் தருநர் : **திருமதி அமிர்தயோகேஸ்வரி முத்துக்குமாரசாமி.**

உ
சிவமயம்

# கனகசபை நடராசர்



வலிகாமம் வடக்கு, உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றி 1994.03.01இல் அரசசேவையிலிருந்து இளைப்பாறியிருக்கும் கனகசபை நடராஜர் அவர்கள் தமது சேவைக்காலத்தில் ஒரு சிறந்த நிர்வாகி என்று உயர் அதிகாரிகள் பலராலும் பாராட்டுப்பெற்றவர். இவர் பன்னாலை கனகசபை, காமாட்சி அம்மாள் தம்பதியர்க்கு மகனாக 1936.06.05ம் திகதி பிறந்தவர். சேர் கனகசபை வித்தியாசாலையில் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்றுத் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரயில் உயர்கல்வியை முடித்துக்கொண்டவர்.

1955.09.20ம் திகதி அரசாங்க எழுதுவினைஞராக நியமனம் பெற்றுப் பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்திலும் பின்னர் இரத்தினபுரி, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் செயலகங்களிலும், பிரதேச செயலகங்களிலும் கடமையாற்றியுள்ளார்.

1994.05.13ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக 2001.09.30ஆம் திகதி வரை ஒப்பந்த அடிப்படையில் மீள்நியமனம் பெற்றுத் திருகோணமலை, வடக்கு கிழக்கு மாகாணத்தின் பல்வேறு அமைச்சுக்களிலும் பணிபுரிந்துள்ளார். 2002, 2003ஆம் ஆண்டுகளில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகரின் யாழ் கிளையிலும் சேவையாற்றியுள்ளார்.

மல்லாகம், பாடசாலை ஒழுங்கை, கனகராயர், செல்வநாயகி தம்பதியரின் இரண்டாவது புதல்வி சறோஜினிதேவியை 1964.04.15ஆம் திகதி மணம் முடித்துப் பகீரதன், சடகோபன், காண்டீபன், தமயந்தி ஆகியோரை நன்மக்களாகப் பெற்றுள்ளார்.

1984, 87 காலப்பகுதியில் இவ்வூர் இணக்கசபை உறுப்பினராகவும், 2003ஆம் ஆண்டு முதல் மல்லாகம்/ தெல்லிப்பழை லயன்ஸ் கழக உறுப்பினராகவும், 2004ஆம் ஆண்டு முதல் வலிகாமம் வடக்கு ஓய்வூதியர் நலன் புரி கூட்டுறவுச் சங்கத் தலைவராகவும் பதவிகள் வகித்துச் சேவையாற்றிவருகிறார்.

தகவல் தந்தவர் : **கனகசபை நடராசர்**

உ
சிவமயம்

# கந்தையா சண்முகலிங்கம்



கந்தையா சொர்ணம் தம்பதியர் 1945இற் பெற்றெடுத்த புதல்வன்தான் சண்முகலிங்கம் அவர்கள். அவர்தம் கல்வி முயற்சியைப் பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்தில் ஆரம்பித்துத் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் தொடர்ந்து பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டப் படிப்புடன் நிறைவுசெய்தார். 1966 – 1969 காலப்பகுதியில் அவர் உயர் கல்வித் தேர்வு, அதாவது பட்டப்படிப்பு நடைபெற்றது. 1971இல் இலங்கை நிர்வாக சேவைப் போட்டிப் பரீட்சையிற் சித்திபெற்று இந்து கலாச்சாரப் பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளராகப் பணிபுரிந்தார். தொடர்ந்து வடக்குக் கிழக்கு மாகாணக் கூட்டுறவு ஆணையாளராகவும் பணிபுரிந்தவர். பின்னர் கல்வி விளையாட்டுத்துறை பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளராகவும் பணிபுரிந்தவர். இளைப்பாறும் வேளை கொழும்பு புனர்வாழ்வு புனரமைச்சின் மேலதிகச் செயலாளராகவும் இருந்தவர். பன்னாலை கணேச சனசமூக நிலையத்தின் செயலாளராகவும் இருந்தவர்.

- தகவல் தருநர் : **கந்தையா சண்முகலிங்கம்**

# வயிரவப்பிள்ளை பாலசுப்பிரமணியம்

வயிரவப்பிள்ளை பாலசுப்பிரமணியம், பன்னாலை வயிரவப்பிள்ளை சின்னத்தங்கம் தம்பதியருக்கு 1931.08.17ஆம் தேதி பிறந்த முதலாவது பிள்ளை. இந்தக் குழந்தை தன் ஆரம்பக் கல்வியைப் பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்தில் ஆரம்பித்தார். இடைநிலைக் கல்வியைத் தொடரவேண்டித் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியிற் சேர்ந்துகொண்டார். சிரேஷ்ட பாடசாலைப் பத்திரப் பரீட்சையை அங்கு நிறைவு செய்ததும் எழுதுவினைஞராக அரசினர் அலுவலகத்தில் வேலைசெய்ய ஆரம்பித்தார். பல இடங்களில் பல திணைக்களங்களில் வேலைசெய்த அவரது திறைமை காரணமாகக் கொழும்பு இறைவரித் திணைக்களத்தில் பத்து ஆண்டுகள் தொடர்ந்து பதவி உயர்வுடன் வேலை செய்துள்ளார். தம்மை நாடி வருவோர்க்கு மனிதாபிமான நேயத்துடன் உதவியுள்ளார். அதனால் பொதுமக்களது பேரபிமானத்திற்கு உரியவராகி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

உ
சிவமயம்

# நமசிவாயம் சொக்கலிங்கம்

நமசிவாயம், தையல்பிள்ளை தம்பதிகளின் நான்காவது பிள்ளையாக 1911ம் ஆண்டு கார்த்திகை மாதம் பன்னாலையில் பிறந்தவர் சொக்கலிங்கம் அவர்கள். பாடசாலைக் கல்வியைத் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் கற்றார். மற்றிக்குலேசன் பரீட்சையிற் சித்தியடைந்து அரசாங்க சேவையில் இலிகிதராகச் சேர்ந்து யாழ்ப்பாணம், கொழும்பு, அவிசாவலை இரத்தினபுரி ஆகிய இடங்களில் நீதிமன்றங்களிற் சேவைபுரிந்தார். பின்பு கமத்தொழில் இலாகாவில் கமத்தொழில் உதவி ஆணையாளராக நியமனம் பெற்று 1966ஆம் ஆண்டு அரச சேவையில் இருந்து ஓய்வுபெற்றார்.

தகவல் தந்தவர் : **திருநாவுக்கரசு உதயகுமார்.**

# திரு. சுப்பிரமணியம் சிவசம்பு




இவர் பன்னாலையில் 'கம்பனை' என்ற இடத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் கதிராசிப்பிள்ளை தம்பதியர்க்கு அருந்தவப் புதல்வராக மூன்றாவது இடத்து 1908ஆம் ஆண்டு ஆனி மாதம் 4ம் திகதி பிறந்தவர். ஆரம்பக்கல்வியைப் பன்னாலை சேர். கனகசபை வித்தியாலயத்தில் கற்றார். இவரது கூரிய மதியையும், சீரிய பண்பையும் கண்ட சிறிய தந்தை இளவாலை விதானையார் வ. கந்தையா அவர்கள், இளவாலை புனித சென். கென்றியரசர் கல்லூரியில் இவரைக் கல்விகற்க அனுப்பினார். ஆங்கிலம் E.S.L.C சித்தியடைந்தார்.

1928ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 1ஆம் திகதி சுங்க இலாகாவில் உதவிச் சிறாப்பராகப் பதவிபெற்றார். 1945ஆம் ஆண்டு ஆவணி மாதம் 25ஆம் திகதி எழுதுவினைஞராகப் பதவி உயர்வுபெற்றார். 1948ஆம் ஆண்டு கொல்லங்கலட்டியில் கந்தசாமி மகள் பரமேஸ்வரியை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றார். தான் பெறாப் பிள்ளைகளைத் தன் பிள்ளைகளைப் போல மதித்து உரிய காலத்தில் வேண்டிய உதவிகள் செய்தார். கல்விகற்க, நோய் நீக்க, திருமணம் செய்யப் பொருள் உதவி பெருமளவில் செய்தார். 1958ஆம் ஆண்டு முதற்தர எழுதுவினைஞராகப் பதவி உயர்வுபெற்றார். 1963ஆம் ஆண்டு தன் கடமையில் இருந்து இளைப்பாறினார். எல்லோரிடமும் அன்புடையவராக விளங்கினாலும் டாக்டர் மயில்வாகனம் அருமைநாயகம் இவரது விசேட அன்பைப்பெற்று இருந்தார். இவர் 1971.03.08 அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

தகவல் தந்தவர் : **கந்தையா திருநாவுக்கரசு**

உ
சிவமயம்

# கந்தையா சண்முகரத்தினம்



கந்தையா கதிராசிப்பிள்ளை தம்பதிக்குப் புத்திரராக 1936ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3ந் திகதி பன்னாலையில் பிறந்தவர் சண்முகரத்தினம் அவர்கள். இவர் பன்னாலை சேர் கனகசபை வித்தியாசாலையில் ஆரம்பக் கல்வியை இரண்டாம் வகுப்பு வரை கற்றுப் பின்னர் மகாஜனக் கல்லூரியில் 1944ம் ஆண்டு தொடக்கம் 1956ஆம் ஆண்டு வரை கற்றுக், கொழும்புப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டார்.

விஞ்ஞானப் பட்டதாரிப் படிப்பை முடித்து 1960ஆம் ஆண்டு இராமநாதன் கல்லூரியிற் பௌதிக ஆசிரியராக நியமனம் பெற்றார். ஏழு வருடங்கள் இராமநாதன் கல்லூரியில் சேவையாற்றிய பின் 1967ஆம் ஆண்டு தொடக்கம் 1972ஆம் ஆண்டு வரை வேம்படி மகளிர் கல்லூரியிலும், 1972ஆம் ஆண்டு தொடக்கம் 1980ஆம் ஆண்டு வரை மகாஜனக் கல்லூரியிலும் சேவையாற்றினார். பின் 1980 தொடக்கம் 1983 தொண்டமனாறு வெளிக்கள நிலையப் பணிப்பாளராகவும், 1983 தொடக்கம் 1996 வரை பலாலி ஆசிரியர் கல்லூரியிற் கணித விஞ்ஞான விரிவுரையாளராகவும் பணிபுரிந்தார். 83.10.01 தொடக்கம் நான்கு வருடங்கள் சீசெல்ஸ் நாட்டின் கல்வி அமைச்சில் பௌதிகப் பாடநெறி அபிவிருத்தி அலுவலராகக் கடமையாற்றினார். 1991 மார்ச் மாதம் தொடக்கம் பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரிப் பிரதியதிபராகக் கடமையாற்றி 1996ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஓய்வுபெற்றார்.

மகாஜனக் கல்லூரியில் உதைபந்தாட்ட முதலாம், இரண்டாம் பிரிவுகளுக்கு முறையே 1953ஆம், 1955ஆம் ஆண்டுகளில் தலைமை தாங்கினார். பல்கலைக்கழகத்தில் உதைபந்தாட்ட, கரப்பந்தாட்ட அணிகளில் பங்குபற்றி 1959 - 1960ஆம் ஆண்டுகளுக்கான விருதுகளைப் பெற்றார்.

உதைபந்தாட்ட, மெய்வல்லுனர் மத்தியஸ்தராகக் கடமையாற்றியதோடு யாழ். உதைபந்தாட்ட, மத்தியஸ்தர் சங்கத்தினதும் மெய்வல்லுனர் சங்கத்தினதும் உப தலைவராகவும் கடமையாற்றினார்.

1969.01.28 இல் பன்னாலை விநாயகமூர்த்தி சரஸ்வதியம்மா தம்பதியின் சிரேஷ்ட புத்திரி இராஜேஸ்வரியைக் கரம் பிடித்து ராஜீவதனி, ராஜீவன் என்னும் பிள்ளைகளுக்குத் தந்தையானார்.

இவர் தனது சேவையிலிருந்து ஓய்வுபெற்றபின் பீவர் சர்வதேச கல்லூரியில் உயர்தர வகுப்புக்குப் பௌதிகவியல் ஆசிரியராகக் கடமையாற்றுகிறார். அத்துடன் உயர் கல்வி மேம்பாட்டுக்கு உதவும் இலங்கை கல்வி முன்னேற்றச் சங்கத்தில் (SLAAED) அங்கத்தவராக இருந்து மாணவ சமுதாயக் கல்வி வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்கிறார்.

தகவல் தந்தவர் : திருநாவுக்கரசு உதயகுமார்.

மனம் தடுமாறேல் - ஔவையார்

உ
சிவமயம்

# பன்னாலை வாழ் ஏனைய பட்டதாரிகள்

1) திரு. நடராஜா முகுந்தன் (விஞ்ஞான முதுமாணி (பௌதீகம்)
2) திரு. நடராசா வைகுந்தன் (முகாமைத்துவ மாணி)
3) திருமதி நிதர்சினி நாதரூபன் (விசேட கலை மாணி (புவியியல்)
4) திரு. நடராசா சிவபாலன் (விவசாய விஞ்ஞான மாணி)
5) திருமதி சிவசக்தி சயந்தன் (கலை மாணி, கல்வி டிப்ளோமா)
6) செல்வி சுதாஜினி விசுவலிங்கம் (கலை மாணி)
7) செல்வி நந்தினி நடராசா (கலை மாணி)
8) செல்வி ரஞ்சினி கணபதிப்பிள்ளை (கலை மாணி)
9) செல்வி சுரேந்தினி திருநாவுக்கரசு (கலை மாணி)
10) திருமதி மோகனரஞ்சினி சண்முகானந்தன் (வணிக மாணி)
11) செல்வி ஞானகலா சாரங்கபாணி (கலை மாணி)
12) திருமதி ஜெயந்தினி துஸ்யந்தன் (விஞ்ஞான மாணி)
13) திருமதி சிவனேஸ்வரி பாக்கியகுமார் (விஞ்ஞான மாணி)
14) திருமதி யோகேஸ்வரி (விஞ்ஞான மாணி, கல்வி டிப்ளோமா)
15) செல்வி நாகேந்திரராணி தங்கராசா (கலை மாணி)
16) செல்வி யசோதினி இரத்தினம் (கலை மாணி)
17) செல்வி சசிகலா சண்முகசுந்தரம் (வணிக மாணி)
18) செல்வி ஜனிதா சண்முகலிங்கம் (H.N.D.A)
19) செல்வி சுகந்தினி செல்வரத்தினம் (கலை மாணி)
20) செல்வி வினோதினி விஜயரத்தினம் (கலை மாணி)
21) செல்வி சிவசுகி குமாரசாமி (கலை மாணி)
22) செல்வி துஸ்யந்தி முத்துத்தம்பி (கலை மாணி)
23) செல்வி கலைவதனி தங்கராசா (கலை மாணி)
24) செல்வி இரத்தினேஸ்வரி இராசேந்திரம் (வணிக மாணி)
25) திரு. கனகரத்தினம் வசந்தரூபன் (கலை மாணி)
26) செல்வி ஜெயகலா சண்முகசுந்தரம் (கலை மாணி)
27) திரு. நல்லதம்பி நல்லையா (கலை மாணி)

மாற்றானுக்கு இடங் கொடேல் - *ஔவையார்*

28) திரு. பொன்னையா குகனேயன் (விஞ்ஞானமாணி)
29) திருமதி சுபாஜினி அசோக்கேந்திரா (விவசாய விஞ்ஞானமாணி)
30) செல்வி ஜெயரஞ்சினி சுப்பிரமணியம் (கலைமாணி)
31) செல்வி சிறீரஞ்சினி சுப்பிரமணியம் (விஞ்ஞானமாணி)
32) திரு. செல்லத்துரை கதிர்காமத்தம்பி (கலைமாணி)
33) திரு. கந்தையா திருஞானசசந்திரன் (விஞ்ஞானமாணி)
34) திருமதி சிவபூரணம் சுந்தரலிங்கம் (விஞ்ஞானமாணி)
35) திரு. கந்தையா செல்வக்குணச்சந்திரன் (விஞ்ஞானமாணி)
36) திருமதி தேவகி சுதாகரன் (கலைமாணி)
37) செல்வி கிருஷாந்தி சண்முகலிங்கம் (கலைமாணி)
38) திரு. செல்வஸ்கந்தநாதன் சதீஸ்குமார் (நுண் உயிரியல் விஞ்ஞானமாணி - Micro Biology)
39) திரு. அருளானந்தமூர்த்தி கார்த்திகைக்குமார் (விடுதி முகாமைத்துவம் - Hotel Management)
40) திரு. சண்முகலிங்கம் ஐங்கரன் (விடுதி முகாமைத்துவம்)
41) திரு. சம்பந்தமூர்த்தி மனோகரன் (கணனி பட்டதாரி)
42) திருமதி பானுமதி முகுந்தன் (H.N.D.A)
43) திருமதி சாந்தினி வரதரத்தினம் (கலைமாணி)
44) திரு. நாகரத்தினம் மயில்வாகனம் (கலைமாணி)
45) திரு. செல்லையா சபாரத்தினம் (கலைம்மாணி)
46) திரு. செனகரத்தினம் நேமிநாதன் (விஞ்ஞானமாணி)
47) திரு. தம்பு குணரத்தினம் (கலைமாணி)
48) திரு. வைத்தீஸ்வரன் தயாளன் (விஞ்ஞான முதுமாணி)
49) திருமதி தமயந்தி கணேசானந்தன் (கலைமாணி)
50) செல்வி கோமதி பாலரட்ணம் (உணவு விஞ்ஞானமாணி)
51) திரு. பாலரட்ணம் கிருபானந்தன் (நில அளவையாளர்)
52) திரு. வைத்தீஸ்வரன் ரஞ்சன் (நில அளவையாளர்)
53) திரு. சின்னத்தம்பி சிவனேசன் (நில அளவையாளர்)
54) செல்வி சிவரஞ்சினி ஜீவரத்தினம் (கலைமாணி)
55) திரு. கே. முத்துக்குமாரசாமி (கட்டிட மேற்பார்வை அலுவலர்)
56) திரு. விமலநாதன் குலன்.

உ
சிவமயம்

## பன்னாலை
## திரு. திருமதி க. திருநாவுக்கரசு சிவபாக்கியம்
## தம்பதியரின்
# பவளவிழாவும்
# பார்புகழும் பதி பன்னாலை நூல்வெளியீடும்

காலம் : 05.09.2005 திங்கட்கிழமை
மாலை 4.00 மணி, மங்கல விளக்கேற்றல்
கடவுள் வணக்கம்
விழாத் தம்பதியர்க்கு மாலை சூட்டலும் ஆலத்தி எடுத்தலும்

வரவேற்புரை : திரு. சு. ஏழூர்நாயகம் அவர்கள்
இளைப்பாறிய நிருவாக அலுவலர்

தலைமையுரை : திரு. க. சண்முகலிங்கம் (இளைப்பாறிய மேலதிகச் செயலாளர் புனர்வாழ்வு புனரமைப்பு அகதிகள் அமைச்சு) அவர்கள்

ஆசியுரைகள்: ராஜராஜஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள் அவர்கள்
(நகுலேஸ்வர ஆதீன கர்த்தா)
மகாராஜஸ்ரீ சு.து. ஷண்முகநாதக் குருக்கள் அவர்கள்
(மாவை ஆதீனகர்த்தா)
சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

விழாத் தம்பதியர்களைக் கௌரவித்தல்

வாழ்த்துப் பாமாலை : சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள்

நூல் வெளியீட்டுரை: சட்டத்தரணி சோ. சண்முகலிங்கம் அவர்கள்

நூல் அறிமுகவுரை: செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் அவர்கள்


பாராட்டுரைகள்: திரு. மாவை. சோ. சேனாதிராசா (பா.உ.) அவர்கள்
அரிமா திருமதி கலாதேவி பொன்னம்பலம் அவர்கள்
திரு. க. நடராஜர் அவர்கள்
திரு. சி. சிவமகாராசா (தெல்.ப.நோ.கூ.ச. தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும்) அவர்கள்

விழாநாயகர் ஏற்புரை

நன்றியுரை : திரு. தி. செந்தில்குமரன்

கடவுள் வாழ்த்து

மீதூண்விரும்பேல் - ஔவையார்



கஜலட்சுமி கோவில்
கற்பக விநாயகர் ஆலயம்
சந்தான கோபாலர்
பஞ்சமுகப் பிள்ளையார் தூபி
பின்பக்கத் தூபி
முருகன் கோவில்
வசந்த மண்டபத் தூபி